| பிரகீர்ணகம் ... ... | ஒழிபு ... | கடன்கோடன் முதலானவைகளிற் சொல்லாதுவிட்டவைகள். |

## விவகாரபேதங்கள்.

காத்தியாயனர்.

மேற்கூறப்பட்ட பதினெண்வகைப் பதங்களையுடைய விவகாரமானது பிரதிக்கினை-உத்தரம்-பிரமாணவிசாரணை-நிச்சயமென்னு நான்கு பாதங்களையுடையது.

பலமுனிவர். நாரதர்.

அப்பாதங்க ளொன்றினுள் நிச்சயபாதமானது தருமநிச்சயம்-விவகாரநிச்சயம்-சரித்திரநிச்சயம்-இராச சாசன நிச்சயமென நால்வகைப்படும். அவையும். } நான்கு பாதங்கள்.

சத்தியத்தினாலே பண்ணப்படு நிச்சயம்-தருமநிச்சய மெனவும், பிரதிக்கினை முதலானவைகளாற் பண்ணப்படு நிச்சயம் விவகாரநிச்சய மெனவும், தேசவழக்கங்களெழுதப்பட்டிருக்கின்ற புத்தகத்தி லெழுதியபடி பண்ணப்படுநிச்சயம் சரித்திர நிச்சயமெனவும், அரசனுடைய ஆக்கினையினாலே பண்ணப்படு நிச்சயம் இராசசாதன நிச்சயமெனவுஞ் சொல்லப்படும். இந்தச் சத்தியமுதலான நான்குமே } நான்கிடமாம்.

| | |
|---|---|
| மேலும் அவ்விவகாரம் சாம- தான - பேத - தண்ட மென்னும் | நான்கு சாதனங் களை யுடையது. |
| நான்கு வருணங்களையும் ஆச்சிரமங்களையுங் காப்பதால் அது | நான்கினுக்கு இதமாகும். |
| கருத்தா - சான்றினர்-சபையினர்- அரசன்- இவர்களை பாவபுண்ணிய வழியால் காற்காற் கூறு க வியாபிக்கையால் அது | நான்கு வியாபியாகும். |
| அறம்-பொருள்-புகழ் - மாந்தர்- விருப்பென் னும் நான்கினை பிறப்பித்தலால் அது | நான்கினைச் செய்கின்றது. |
| அரசன்-அதிகிருதன்-சபையினர்-சாத்திரம்- கணகலேக்கர்-பொன்-அனல்-புனலென்னும் முன் னர்க்காட்டிய | எட்டங்கங்களை யுடையது. |
| முன்னர்காட்டிய | பதினெண் பதங் களையும் நூறு கி ளைகளையுமுடை யது. |
| காமம்-கோபம் - உலோப மென்னு மூன்றி டத்திற் பிறக்கின்றதால் | அது மூன்றுபிற ப்பிடங்களை யுடையது. |
| சங்காபியோகம்-தத்துவாபியோகமென்னும் | இரண் டபியோகங்களை யுடையது. |
| பக்கம் எதிர்ப்பக்கமென்னும் | இரண்டு வாயில்களை யு டை ய து. |
| பூதமும் சலமுமாகிய | இரண்டு வழிகளை யுடை ய து. |

மேற்கூறிய அபியோகங்க ளிரண்டினுள், சங்காபியோகம்-ஐயத் துடன் கூடியது. தத்துவாபியோகம் - நிச்சயத்துடன் கூடியது.

காத்தியாயனர்.

அந்தத் தத்துவாபியோகம் - விதியும் - விலக்குமென விருவகை ப்படும்; விதியாவது - அனியாயஞ் செய்கிறானென்பது.

உதாரணம்.

இவன் - என்னுடைய நிலமுதலானவைகளை யபகரிக்கிறான். விலக்காவது - நியாயஞ்செய்ய விரும்பவில்லை யென்பது.

உதாரணம்.

இவன் கொடுக்கவேண்டியபொருளைக் கொடுக்கவில்லை.

## விவகாரநிச்சயஞ் செய்பவர்.

பிரகற்பதி.

அரசனும் - பிராட்டு விவாகனும் - விவகார நிச்சயஞ்செய்பவர்.

பலமுனிவர்.

பிராட்டு விவாகனானவன் - அந்தணன் - சத்திரியன் - வைசியன் இவர்களி லொருவனும் - மறையோதல் - மீமாஞ்சைக் கேள்வி யிவற்றையுடையவனும், இலக்கணமுதலிய கருவி நூல்கள் - பதினெண் விவகாரபதங்கள் - அவற்றி னெண்ணுயிரம் பேதங்க ளிவற்றை யுணர்ந்தவனும் - பொறுமை - குலமேன்மை - நடுவுநிலைமை முதலான குணங்கள் - மதிநுட்பமிவற்றை யுடையவனுமா யிருப்பவன்.

பிராட்டுவிவாகன் - மந்திரி - புரோகிதன் - நியுத்தர் - அனியுத்தரிவர்களும் - விவகாரவிசாரணையிற் கேட்டுக்கொண்டிருக்கும்படி நற்குல வைசியரும் - சோதிட நூலில் வல்லமையுடைய - கணகனும் - சொல்லிலக் கணமுந்திருந்திய வெழுத்துமுடைய இலேக்கனும்-வாதி-எதிர்வாதி - சான்றினர் - முதலாயினவர்களை யழைத்தன் முதலானவை செய்தற்கும் சாத்தியப்பொருளைக் காத்தற்கு மிருக்கின்ற திறமுடைய சாத்தியபாலனும் - அரசனாலே நியமிக்கப்படத் தக்கவர்கள்.

நியுத்தர்கள் - அரசனால் பொருள்கொடுத்தன் முதலான வுபகாரங்கள் செய்யப்பட்டவர்களாகி விவகாரவிசாரணை செய்தற்பொருட்டு-சபையிலிருக்கின்ற பண்டிதர்கள்.

அநியுத்தர்கள் - மேற்சொல்லியபடி - நியமிக்கப்படாதவர்கள்.

பிருகு

விவகார நிச்சயத்தானங்கள் பதினைந்து

அவற்றுள்

முதலாவதிடம்,—ஆரணியர் - அவர்களிலுண்டான விவகாரத்திற்கு அவர்களாலே நிச்சயம்.

இரண்டாவதிடம்,—வணிகக் கூட்டத்தார்- அவர்களிலுண்டான விவகாரத்திற்கு அவர்களாலே நிச்சயம்.

மூன்றாவதிடம்,—சேனைக்கூட்டத்தார்- அவர்களிலுண்டான விவகாரத்திற்கு அவர்களாலே நிச்சயம்.

நான்காவதிடம்,—ஒரு கிராமத்திற் கிருமருங்கு மடுத்திருக்கின்ற கிராமத்தாராகிய-உபயவாதிகள் அவர்களாலே நடுக்கிராமத்தினிலைமைக் குடிகளினுடைய விவகாரத்திற்கு நிச்சயம்.

ஐந்தாவதிடம்,—கிராமத்திலேனும் - பட்டணத்திலேனு மிருக்கும் வணிகரும், குலிகருமாகிய வுபயவாதிகளாலே விரும்பப்பட்ட பஞ்சாயத்தார் - அவர்களாலே அவ்வுபயவாதிகளினுடைய விவகாரத்திற்கு நிச்சயம்.

ஆறாவதிடம்,—கிராமத்தார்.

ஏழாவதிடம்,—பட்டணத்தார்.

எட்டாவதிடம்,—கணத்தினர்.

ஒன்பதாவதிடம்,—சிரேணியர்.

பத்தாவதிடம்,—துருக்கமுதலான நான்கு வித்தை யுணர்ந்த வித்வான்கள்.

பதினோராவதிடம்,—வருக்கத்தார்.

பன்னிரண்டாவதிடம்,—குலத்தினர்.

பதின்மூன்றாவதிடம்,—குலிகர்.

பதினான்காவதிடம்,—நியுத்தரோடுகூடியபிராட்டுவிவாகன்.

பதினைந்தாவதிடம்,—நிருபன்.

## சபை.

### பிரகற்பதி.

சபையானது - அப்பிரதிட்டிதை யெனவும் - பிரதிட்டிதை யெனவும் - முத்திரிதை யெனவும் - சாத்திரிதை யெனவும் - நால் வகைப்படும்.

அவற்றுள்,

அப்பிரதிட்டிதை - நிலையிடமில்லாமற் சஞ்சரிக்கின்ற ஆரணியர் முதலான மூன்றிடத்துச் சபையாம்.

பிரதிட்டிதை-உபயவாதிகள் முதலானபத்திடத்துச் சபையாம்.

முத்திரிதை - பிராட்டுவிவாகனிருக்கின்ற சபையாம்.

சாத்திரிதை - அரசனிருக்கின்ற சபையாம்.

மேற்கூறப்பட்ட ஆரணியர் முதல் பஞ்சாயத்தார் வரையான ஐந்திடங்களும் அவ்வவ்விடத்தாருக்கே யுரிய தானங்களாம்.

மற்றுறைக்கிராமத்தார் முதலான பத்திடங்களும் எல்லாருக்கும் பொதுவான தானங்களாம்.

கிராமத்தில் விசாரிக்கப்பட்ட விவகாரம் பட்டணத்தை யடையும். பட்டணத்தில் விசாரிக்கப்பட்ட விவகாரம் இராசசபையை யடையும்.

அரசனால் விசாரிக்கப்பட்ட விவகாரம் - அவ்விடத்திற்றானே முடியும்; அது மீட்டுந் தோன்றாது.

அப்பிரதிட்டிதை யென்னுஞ் சபைக்கும் - பிரதிட்டிதையென்னுஞ் சபைக்கும் இட நியமமில்லை; அச்சபையினர் வேண்டிய நல்விடத்திருந்து விவகாரநிச்சயமாத்திரஞ் செய்க.

## சபையின் மேவுதல்.

### பிரகற்பதி.

துருக்கத்தி னடுவிலே அகழி சூழ்ந்ததாகவும், எல்லா விலக்கணங்களு முடையதாகவு நிருமித்த - அரசனுடைய அரண்மனைக்குக் கிழக்குத் திசையில் கிழக்கு முகமாக வாயில் விட்டு மங்கலவிலக்கணத்தையும், மலர்மாலை தூபம் - ஆசனம் - விதை - நவமணிகள் - பிரதிமைகளாகப் பண்ணப்பட்டும் சித்திரங்களாக வெழுதப்பட்டுமிருக்கின்ற தேவதைகள் - நெருப்பு - நீர் - இவைகளையுமுடையதாக நிருமித்த தருமசபை நடுவில் - அரசனானவன் நீராடன் முதலான நித்திய நியமம்முடித்து - சுத்தியும் - தேவபத்தியுமுடையவனாகி நறுமலர் அணிந்து ஆடை புனைந்து குரு - புரோகிதன் - உத்தம வேதியரிவர்கள் முதலானவர்களை அன்போடு பூசித்து இனிய கோலமும் இனிய முகமுமுடையவனாகி மந்திரியரோடுமேவி உலகபாலரை வணங்கி தருமாசனத்தில் கிழக்குமுகமாக அமர்க.

சபாசதர்கள் வடக்கு முகமாகவும் - கணகன் - மேற்கு முகமாகவும் - இலேக்கன் - தெற்குமுகமாகவும் அமர்க.

அரசனும் - பிராட்டு விவாகனும் - சபாசதர்களும்-மிருதியும் - கணகனும் - இலேக்கனும் - பொன்னும் - நெருப்பும் - நீரும் - சாத்தியபாலனும் - தசாங்கமென்று சொல்லப்படுவார்கள்.

| சபையினுடைய—அவயவங்கள். | | அவற்றின் செய்கை. |
|---|---|---|
| அரசன் ... ... | சிரம் ... ... | பொருட்டண்டமும் - உடற்றண்டமுஞ் செய்வித்தல். |
| பிராட்டுவிவாகன் ... | முகம் ... ... ... | உபயவாதிகளுடைய வாய்மொழி கேட் டாராய்ந்து அரசனுக் குரைத்தலும், வாக்குத்தண்டமும் திக்காரதண்டமுஞ் செய்தல். |
| சபாசதர்கள் ... ... | தோள் ... .. ... | காரியபரிசோதனஞ் செய்தல். |
| மிருதி ... ... | கை ... ... ... | செயமும் - தானமும்-தண்டமுங் காட்டல். |
| கணக லேக்கர் ... | கணைக்கால்கள் ... | திரவியத்தை யெண்ணிக்கொள்ளுதலும் - வாக்குவாத முதலானவைகளை யெழுதுதலுஞ் செய்தல். |
| பொன் நெருப்பு நீர் ... | கண்கள் ... ... ... | பிரமாணங்களாயிருத்தல். |
| சாத்தியபாலன் ... | பாதம் ... ... ... | சான்றினர்-சபையினர்- உபயவாதியர்-இவர்களை யழைத்தலும், சாத்தியபொருளைக் காத்தலுஞ் செய்தல். |

பலமுனிவர்.

அரசனனவன் - மேற்கூறிய - இலக்கணமுடைய சபைநடுவில் சபாங்கங்களோடு கூடியிருந்து, கோபமும்-உலோபமும் - பகையும் - அழுக்காறும் - நீங்கிளவனுகி, அறநூலையும்-அறநூலுக் குட்பட்டதும் இராசநீதியை யுணர்த்துகின்றதுமாகிய பொருணூலையுந் தழுவி விவகாரவிசாரணை செய்க.

பிதாமகன்.

அறநூலாவன:—ஒழுக்கம - வழக்கு - தண்டமென்னு மூன்றினையு முணர்த்துகின்ற வேதம் - வேதாங்கம் - மீமாஞ்சை - மிருதி - புராணம் - நியாயநூல் இவைகளாம்.

பவிடிய புராணம்.

பொருணூலாவன:— பொருத்தல் - போர்-போர்க்குச் செல்லுதல் இருக்கை - பிரித்தல்-நட்பு என்னும் அறுவகைக் குணங்களையும்,

பிரபுசத்தி-மந்திரசத்தி - உச்சாகசத்தியென்னு மூவகைச் சத்திகளை யும் இவற்றினைப் பிரயோகித்தலையும், சாம - பேத-தான - தண்டமெ ன்னு நால்வகை யுபாயங்களில் ஒவ்வொன்றையேனும் அவைகளெல் லாவற்றையுமேனும் காரியப்பெருமை நோக்கிப் பிரயோகித்தலையும் அதிகாரிகளை நியமித்தலையும் இன்னார் பகைவரென்பதையும் உணர்த் துகின்ற நூல்களாம்.

பலமுனிவர்.

அறநூல் - பொருணூலிரண்டும் ஒன்றோடொன்று மாறுபடாத விடத்தில் அவ்விரண்டுந் தழுவத்தக்கனவாம்.

மாறுபட்டவிடத்தில் - அறநூலை தழுவத்தக்கதாம்.

எப்படியென்னில்,

ஒரு விவகாரத்தில் ஒருவனுக்கு வெற்றியை நிச்சயிக்கும் பொ ழுது பொருணூலிலே முக்கியமாகச் சொல்லியநட்புப்பயனையெண்ணி வெற்றிநிச்சயஞ்செய்தால் அச்செய்கை அறநூலை விரோதிக்கின்றது. அறநூலிற்சொல்லியபடிவெற்றியை நிச்சயஞ்செய்தால்-நட்புப்பயன் கெடுகின்றது. இப்படி நேரிட்டவிடத்தில் பொருணூற்பயனை யெண் ணாமல் அறநூற்படியே நிச்சயஞ்செய்க.

ஆகையால் பொருணூலினும் - அறநூல் வலியுடையது.

யாஞ்ஞவற்கியர்.

அறநூலுள்ளும் ஒரு விடயத்திலே யிரண்டு வசனமொன்றோ டொன்று மாறுபடுமளவில் யுக்திக்கு ஒத்திருக்கும் வசனமே வலி யுடையது.

யுக்தியாவது காரணத்தையும் பிரயோசனத்தையு மாலோசிப் பதாகிய பெரியோர் வழக்கமாம்.

எப்படியென்னில்,

பல பொருளைக் குறித்த அபியோகத்தில் சாதனங்களினாலே சாதிக்கப்பட்ட பொருளெவ்வளவோ அவ்வளவே கிடைக்குமென் றுரைத்த காத்தியாயனர் வசனத்திற்கும் அவ் வபியோகத்திற்றானே சாதனங்களினால் ஏகதேசஞ் சாதிக்கப்பட்டாலும், அபியோகப்பொ ருளெல்லாவற்றையுங் கொடுப்பிக்க வேண்டுமென்ற யாஞ்ஞவற்கிய வசனத்திற்கும் விரோதம் வந்தபடியால் அப்படிப்பட்ட விடயத்தில் யுக்தியினாலே யூகித்துக் காரியத்தின் வலிமையும், வலியின்மையையும் அறிந்து தருமவிரோத முறாமல் நிச்சயஞ்செய்க.

உண்மை நிச்சயத்தை விரையாமற்செய்க.

நாரதர்.

விரைந்து செய்யின் ஆகாயம் பூமிபோலவும், மின்மினி நெருப்புப்போலவுங் காணப்படுமாறுபோல உண்மையல்லாதது உள்ளதுபோலக் காணப்படும்.

திருடனல்லாத மாண்டவ்வியனென்னுமுனியைக்குறித்து உண்மைவிசாரணை செய்யப்படாமையால்-அம்முனிக்கு உயிர்க்கிறுதி நேரிட்டதுபோலத் துன்பநேரிடும்.

பலமுனிவர்.

ஆகையால், வேடனானவன் பாணத்தினாலெய்யப்பட்ட மிருகஞ் சேர்ந்தவிடத்தை இரத்தமுதலான குறிகளா லறிவதுபோல, அரசனானவன் வாதிமுதலானவர்களிடத்தில் வெளிப்படையாகக் காணப்படுகின்ற வாய்தடுமாறல் முகநிறமாறல் - கீழ்ப்பார்வை - நெற்றிவெயர்த்தல் - மயிர்ப்புளக மிவைமுதலான துற்குணங்களினாலே துட்டனென்றும் இக் குணங்களையே அச்சமுதலானவைகளா லேனும் இயற்கையா லேனும் அடைந்திருக்கின்றவர்களை நல்லோனென்றும் மதிநுட்பத்தால் வருந்தியேனும் ஆராய்ந்தறிந்து விவகார நிச்சயஞ் செய்க.

சான்றின னில்லாதவிடத்தில் அடிக்கப்பட்ட விடயத்தில் புண் முதலான குறிகள் காணப்படுதலினாற்றானே நிச்சயஞ் செய்க.

நாரதர்.

எதனாலெனில், ஒருவன் பகையினா லொருவனைத் துன்பப்படுத்தும்பொருட்டுத் தானே தன்னுடம்பிற்புண்முதலிய குறிகளை யுண்டாக்குவான், ஆகையால், அவ்விடயத்தில் அருத்தாபத்தி அனுமானம் - பிரயோசனம் - இருவருமடுத்திருத்தல் - முன்னுண்டான கலகம் - இவைகளை ஆராய்ந்து நிச்சயஞ்செய்க.

அரசனானவன் விசாரணைக்காலத்தில் உபயவாதிகள் சோர்வினாலேசொன்ன உண்மையல்லாத மொழிகளைத்தள்ளி உண்மையான மொழிகளைத்தழுவி விவகாரகாரியத்தை நடத்துக.

மனு.

சாத்திரங்களிலே காணப்படுகின்ற இலிங்கிதமுதலான மானுடப் பிரமாணங்களையும், அவ்வவ்தேசங்களில் சுருதிகளுக்கும் மிருதிகளுக்கும் விரோதமின்றி வழங்கிவருகின்ற தேசாசாரங்களையும் குலா

சாரங்களையுந் தழுவிக் காரியநிச்சயஞ்செய்க. ஆனால் இவ்விருவகையுள்-சாத்திரங்களிலே காணப்படுகின்ற பிரமாணங்களில்லாதபோது தேசங்களிலே காணப்படுகின்றஆசாரங்களைத்தழுவி நிச்சயஞ்செய்க.

காத்தியாயனர்.

சாத்திரப் பிரமாணங்களிருக்கும்போது தேசாசாரங்களைத் தழுவி விவகாரநிச்சயஞ்செய்யற்க; செய்தவனுக்கு இகபரப் பிரயோசனங்களைக் கெடுக்கின்ற பாவமுண்டாகும்.

தேசாசாரங்களும் - குலாசாரங்களும் - புத்தகத்தி லெழுதப்பட்டு இராசாமுத்திரா யிடப்பட்டுச் சாத்திரங்கள்போல முயற்சியினாலே காக்கத்தக்கனவாம்.

பிதாமகன்.

கிராமத்தார் - கோட்டத்தார் - நகரத்தார் - சிரேணியர் - வணிகக் கூட்டத்தார் - சேனைக்கூட்டத்தார் - இவர்களுக்கு தங்களிலுண்டான விவகாரத்திலே சரித்திரத்தினாலும் தங்களுக்கு வேறானவர்களோடுண்டான விவகாரத்திலே-அறநூலினாலும்நிச்சயஞ்செய்க.

எவ்விதத்தினும் நிச்சயஞ்செய்வதற் கொவ்வாததாகவும் - சந்தேகமுடையதாகவும் - நேரிடும் விவகாரங்களிலே மேற்சொல்லிய பிரமாணங்க ளொன்றேனுமில்லாதபோது - அரசனுடைய வசனமே பிரமாணமாம்.

நாரதர்.

அரசனானவன் எல்லாருந் தன்வசப்பட்டிருப்பதை யெண்ணி பொருளாசையினாலே விவாதப்படாம லிருக்கிறவர்களுக்கு விவகாரத்தை யுண்டாக்கற்க.

பலமுனிவர்.

அரசனானவன் ஒருவனாலே தனக்கறிவிக்கப்படாதவிவாதத்தை நட்பு-உலோபம்-கோபம் இவற்றாற் கொள்ளற்க.

நாரதர்.

அரசனாணை கடத்தல் - பெண்கொலைசெய்தல் - வருணங்கலத்தல் - அயலவன் மனைவியைச்சேர்தல் - திருடல் - கணவனின்றிக்கருத்தாங்கல் - சொற்கொடுமை - தண்டக்கொடுமை - சொல்லத்தகாத சொற்சொல்லுதல் - கருவழித்தல் இப்பத்தும் - அபராதங்களாம்.

பிதாமகன்.

பயிரையழித்தல் - நெருப்பிடுதல் - கிடைத்தநிதியைமறைத்தல் - இவை முதலான விருபத்திரண்டும்-இராசபதங்களாம்.

வழியைக்கெடுத்தல் - இறைப்பொருளுக் கிடையூறுசெய்தல் - அரசனுடைய வுட்புளாயை வெளிப்படுத்தல்- இவை முதலானவைம்பதும் சலங்களாம்.

இம் மூவகைக் குற்றங்களுள் எதனையேனுஞ் செய்தவனை அரசன் தானேவிசாரணை செய்க.

அரசனானவன், அட்டமி - சதுர்த்தசி - பூரணை - அமாவாசை - இந்நாட்களொழிந்த நாட்களிலே காலையின் மூன்றேமுக்கால் நாழிகைக்குமேல் பதினைந்து நாழிகைவரையும் சபையில் விவகாரவிசாரணைசெய்க.

நாரதர்.

சபையில் விவகாரம் வந்தபோது முதலில் வாதி வாய்மொழியைக்கேட்டு பின்னர் விவகாரமின்னதென் றறிந்து பதத்திற் சேர்த்துப் பின்னர் பிரதிக்கினை - உத்தரம் - பிரமாணம் இவைகளை யாராய்ந்து பின்னர் வெற்றிநிச்சயஞ்செய்க.

## தகைவு.

நாரதர்.

வாதியானவன் தன்னாற்சொல்லத்தக்க காரியத்திலே நில்லாமலேனும் அக்காரியத்தைக் கேட்டுக் கடந்தேனும் போகின்ற-எதிர்வாதியை அரசனாணையினாலே தகைவுசெய்க; அத்தகைவு - இடத்தகைவும் - காலத்தகைவும் - பயணத்தகைவும்-செய்கைத்தகைவுமென நால்வகைப்படும்.

அவற்றுள்,

இடத்தகைவாவது :—வீடு-கோயிலிவைமுதலானவிடம்விட்டுப் போகுத லொழிவாயாகவென்று தடுத்தலாம்.

காலத்தகைவாவது:—இன்ன தினத்திலே நீ கீர்ணப்படுவாயாக இல்லாவிடில் -அரசனாணை கடந்தவனாவா யென்பதாம்.

பயணத்தகைவாவது - பயணம் போகுதலொழிவாயாக வென்று தடுத்தலாம்.

செய்கைத்தகைவாவது:—புண்ணியம் பாப்புதன் முதலான காரியஞ்செய்யா தொழிவாயாகவென்று தடுத்தலாம்.

இப்படிசெய்யப்பட்ட தகைவைக் கடந்தவன் தண்டிக்கப்படுவான்.

## பிறிதுவிதி.

பலமுனிவர்.

பிரவாகநதியைக் கடக்கும்பொழுதும், துட்டரும் - திருடரும்-புலிமுதலானவைகளு மிருக்கின்ற பொல்லாதவிடத்திலும், பகைவருடையபடைமுதலானவைகளினாலேநேரிட்ட ஆபத்துக்காலத்திலும் தகையப்பட்டவன்-அத்தகையைக் கடந்தால் குற்றமுடையவனல்லன்.

மலை - யானை - குதிரை - தேர் - ஓடம் - இவைகளின்மேலேறியிருக்கிறவர்களும், திருடன் முதலானவர்களாலெல்லாப்பொருளுங்கவரப்பட்டவன் - நோயால் வருத்தப்படுகிறவன்- துக்க முற்றவன் - மத்தன் - உன்மத்தன் - இளமையன் - விருத்தன் - மூடன்-தப்பாமல் வருவேனென்று பிரதிக்கினை செய்துபோகின்றவன் - யாகம் - கலியாணமுதலானவைகளுக்கு முயற்சிசெய்கிறவன் - அயலவனால் விவகாரஞ் சுமத்தப்பட்டவன்.

அரசன்-காரியத்திலிருக்கிறவன்-தூதன்-விரதஞ் செய்கிறவர்களும், விதை விதைக்கும்பொழுதும் - பயிர் முயற்சிசெய்யும்பொழுதும் - உழவர்களும் - நீர்கொண்டு வருதற்கு முயற்சிசெய்கிறவனும் - போர்க்குச் செல்லும்பொழுதும்-போரடுத்திருக்கும்பொழுதும் - சேனையோரும் - மாதுடன் கூடியிருக்கிறவனும் - பண்ணியங்கள் விற்கும்பொழுது வணிகனும் தடைசெய்யத்தக்கவர்களல்லர்.

அவர்களைத்தடுத்தவன் - தண்டிக்கப் படுவான்.

## விவகாரவிசாரணை யாரம்பம்.

பலமுனிவர்.

அரசனானவன் மேற்சொல்லியபடி சபையிலிருக்கும்பொழுது காரியத்தை வேண்டிவந்து - எதிரேவணங்கி நிற்கின்றவனை நோக்கி உனக்கொருவன் கொடுக்கவேண்டியபொருளைக்கொடுக்கவில்லையோ- அல்லது பீடைநேரிட்டதோவென்று - பொருளையும் பீடையையுங் குறித்து எவனால் எவ்விடத்து-எப்பொழுது எதனாலென்றுஇந்நான்கு கேள்வியினாலே - அஞ்சாமற் சொல்லென்று கேட்க.

அப்படி யரசனாற் கேட்கப்பட்டவன் சொல்லத்தக்கன வெல்லாவற்றையும் - அவ்வரசனுக்கறிவிக்க.

ஆனால் காரியமுடையவனே யறிவிக்கவேண்டுமென்று நிச்சயமில்லை.

பிதாமகன்.

அவனுடைய தந்தையேனும் அண்ணனேனும் தம்பியேனும் நண்பினனேனும் தாயை - தந்தையை - அவனைச்சார்ந்த சுற்றத்தாரேனும் மற்றைச்சுற்றத்தாரேனும் அவனாலேநியமிக்கப்பட்டவனேனு மறிவிக்கலாம்.

எதிர்வாதியும்-தான் கொடுக்கவேண்டிய உத்தரவைக்குறித்தும்-அப்படியே செய்யலாம்.

காத்தியாயனர்.

மேற்கூறப்பட்ட தந்தைமுதலானவர்களி லொருவனுமல்லாதவனாகிய வொருவன் மற்றொருவனுடைய விவகாரத்தைப் பேசினால் அவன் தண்டிக்கப்படுவான்.

மேலறிவிக்கலாமென்று கூறப்பட்டவர்களாலே நடப்பிக்கப்பட்ட விவகாரத்திலுண்டான வெற்றியும் தோல்வியும் அவர்களை நியமித்த வுபயவாதிகளையே யடையும்.

வாதி சொன்னவைகளெல்லா மெழுதப்பட்ட பின்னர் அவைகளொப்பாயிருந்தால் எதிர்வாதியை யிராசமுத்திரை முதலானதினாலழைப்பிக்க.

பலமுனிவர்.

எதிர்வாதியர் - சபையிலழைப்பிக்கத்தகாத பிணியாளன் விருத்தன் - உன்மத்தன் - மத்தன் - துக்கமுற்றவனிவர்கள் முதலானவர்களும் - மாதருமானால் அவர்களை தேசம் - காலம் - காரியமிவற்றின் வலியையும் வலியின்மையையு மறிந்தழைப்பிக்க.

காத்தியாயனர்.

அழைப்பிக்கப்படுகையில் வலியுடையவொருவன் செருக்கினாலே அரசனாணையைத் தள்ளினால் அவனுக்கு அத்தள்ளுஞ்செய்கை சிறிதாயிருந்தால் பண மைம்பதுக்கும், நடுவாயிருந்தால்-நூற்றிற்கும், பெரிதாயிருந்தால்- ஐஞ்ஞூற்றிற்குங் குறையாமல் முறையேதண்டம் விதிக்கப்படும்.

வியாசர்.

மேற்சொல்லிய தள்ளுஞ்செய்கை பிணியாலேனும்- அற்பகாலத்திலேனும்-தேசம் பகைவன் படையினாலே கெடுக்கப்பட் டிருக்கும் பொழுதேனும் எதிர்வாதியினாற் செய்யுப்பட்டால் தண்டமில்லை.

ஆரீதர்.

அப்பிணி முதலானவை உண்மையல்லனவானால் அவனைத்தண்டித்துப் பின்னர் அக்காரியத்தில் மேவும்படிச் செய்க.

அழைப்பிக்கப்பட்டுச் சபையில்வந்த எதிர்வாதிக்கு வாதியினுடைய அபியோகத்தை அறிவித்து அவ்வெதிர்வாதியானவன் தன்னுடைய காரியத்திற்கு உதவியாகச் சொல்லவேண்டிவைகளை யெல்லாம் அவன் வாய்மொழியாற்றானே சொல்லும்படிச் செய்க.

## பிணை.

யாஞ்ஞவற்கியர்.

மேல் உபயவாதிகளிடத்திலும் - விவகாரநிச்சயப் பயனாகிய கொடுக்கத்தக்கபொருள் - தண்டப்பொருளிவற்றைக் கொடுப்பதைக் குறித்து ஐயந்தோற்றினால் அவர்களிடத்திற் பிணைவாங்குக.

## பிணைக்குரியரல்லாதார்.

காத்தியாயனர்.

தலைவன்-தலைவனுக்குட்பட்டவன் - பகைவன் - சிறையில் வைக்கப்பட்டவன் - தண்டம் வாங்கப்பட்டவன் - குற்றஞ்செய்தவனென்று சொல்லப்பட்டவன் - தாயாதன் - நண்பினன் - நயிட்டிகப் பிரமசாரி - அரசன் காரியத்திலே நியமிக்கப்பட்டவன் - சன்னியாசி - கொடுக்கத்தக்கபொருளுந் தண்டப்பொருளுங் கொடுக்கத் திறமில்லாதவன் இன்னானென் றறியப்படாதவன் ; இவர்கள் முதலானவர்கள் பிணையினராகக் கொள்ளற்குரியரல்லர்.

பிணைகொடாதவனைசாத்தியபாலன் காக்க.

காக்கப்பட்டவன் - தன்னைக் காத்ததற்காகத் தினந்தோறும் சாத்தியபாலனுக்கு சாயங்காலத்திற் படிப்பணங்கொடுக்க ; அல்லது பிணைக்கொடாதவன் விவாதப்பொருளை நடுவினரிடத்தில் வைக்க.

## பிரதிக்கினைப்பாதம்.

எல்லா விவகாரங்களிலும் வாதியே பிரதிக்கினையைக் கொடுக்க.

பிரகற்பதி.

ஆனால் - எந்தவிடயத்தில் உபயவாதிகளும் சாதிக்கத்தக்க பொருளினுடைய பேதத்தினாலே நான்வாதி - நான்வாதியென் றொருகாலத்தில் வருவாராயின், அவ்விடத்தில் பீடையேனுங் காரியமேனு

மிகுதியாயிருப்பதையும் அவ்விரண்டுமொத்திருந்தால் வருணத்தையுங் குறித்துப் பூருவபக்கங் கொடுப்பிக்கத் தக்கது.

யாஞ்ஞவற்கியர்.

வாதியானவன் முன்னர்ச் சுருக்கமாகச்சொன்ன பக்கத்தை எதிர்வாதிக் கெதிரே யெழுதுவிக்க.

பலமுனிவர்.

பக்கமாவது:—ஆண்டு- இருது - மாதம் - அதிற் பாதியாகிய பக்கம் - திதி யிவற்றையும் உபயவாதிகளினுடைய பெயரையும், அவர்களிருக்குமிடத்தையும், அப்பொழுதிருக்கு மிடத்தையும், சாதியையும், அவர்களுடைய தந்தை- பாட்டன்-முற்பாட்ட னிவர்கள்பெயரையும் உருவம் - வயது- குறி யிவற்றையும் தனக்குநேரிட்ட துன்பத்தையும் முன்னிருந்த மன்னவர்கள் பெயரையும், விவாதவிடயமான நன்செய் - புன்செய் - தோட்டம்- வீடு முதலானவைகளையும், நிறையளவு - படியளவு - கோலளவுமுதலான அளவுகளையும் பொருளின் றொகையையும், கொடுத்தவனையும், ஏற்றவனையும், தானமுதலான ஆகமசாதனங்களையும், தானியம் - ஆடை - ஆசனம் - படுக்கை - வாகனமிவற்றையும், இரும்பு- செம்பு- வெண்கலம்- வெள்ளி- பொன் - முத்து - பவளம் - வயிரம் - மாணிக்கம் - கல்லு - இவை முதலானவைகளையும், விளக்குவதாகியும், எழுத்துச்சுருக்கம்- எழுத்தையமின்மை - சொற்பொருட்பெருக்கம்- சொற்பொருளையமின்மை வேறுபொருளுணர்த்துஞ் சொல்லின்மை - சொலலெச்சமின்மை - துணிவு - மிகுவிரிவின்மை- முன்னோடு பின் மலைவின்மை-வாதிமுன் சொன்னதற்கு வேறுபடாமை - தேசம் - நகரமிவைகட்கும்- அரசன் பிராட்டுவிவாக னிவர்கட்கும்- சான்றினன் முதலான பிரமாணங்கட்கும் விரோதமின்மை இவற்றோடு கூடியதாகியு மிருப்பதாம் ; அது கொள்ளத்தக்கது.

இப்படி பக்கத்திற்குக்காட்டிய ஆண்டு முதலான விசேடணங்களை கடன்கோடன் முதலானவைகளில் அந்தந்த விவகாரவிடயங்கட்கு முக்கியமாக வேண்டியவைகளை யறிந்து பிரயோகஞ்செய்க.

பக்கப்போலி.

பக்கப்போலியாவது-பக்கத்திற் கிலக்கணமாகக்காட்டிய ஆண்டு முதலானவைகளுக்கு விரோதமாய் முயற்கொம்பாற் செய்யப்பட்ட எனது வில்லினை யிவன் கொடுக்கவேண்டுமென்னும் அசாத்திய முத

வான குற்றங்களோடு கூடியிருப்பதாம் ; அது பக்கமாகக்கொள்ளத் தக்கதன்று.

காத்தியாயனர்.

பிராட்டுவிவாகன் - வாதியினு லியல்பாகச் சொல்லப்பட்ட பக்கத்தினை மாக்கல்லினுலே பலகை முதலானவைகளி லெழுதும்பொழுது மிகுதியான சொற்களைத்தள்ளியும், குறைவானசொற்களை நிரப்பியும்- பொருளான தெவ்வளவிலே செவ்விதாகாணப்படுமோ அவ்வளவிலே நிறுத்தி பின்னர் நன்ருகச்சோதித்து முடித்துப்பத்திரத்தி லெழுதுவிக்க.

அப்படிச்சோதித்தல் எதிர்வாதி யுத்தரங் கொடுக்குமளவுமே செய்யப்படும் ; அதற்குமேலில்லை.

ஆனல் உத்தரங்கொடுத்து அதன்சோதனை நிகழுமளவும் மறதியாலேனும் - அறியாமையாலேனும் உபயவாதிகளாலே விடப்பட்ட பொருள்களைச் சேர்த்துக்கொள்ளலாம்.

சபாசதர்கள் - பக்கத்தைச்சோதியாமலே யுத்தரத்தை வாங்கிக் கொண்டால் தண்டிக்கப்படுவார்கள்.

வாதியானவன் உவக்கமின்மையால்- பிரதிக்கினைகொடுக்கத் திறமில்லாதவனுனபோது அவனுடைய காரியத்திற்குஞ் சத்திக்குந்தக்கபடி காலங்கொடுக்க.

## உத்தரபாதம்.

பிரகற்பதி.

மேற்காட்டிய விலக்கணங்களோடு கூடிய பக்கமானது சோதிக்கப்பட்டு நிச்சயமாகப் பத்திரத்தி லெழுதப்பட்டிருக்குமளவில் எதிர்வாதியானவன் உத்தரத்தை யெழுதுக.

உத்தரமானது - காரியபேத விசேடங்களினுலே அப்பொழுதே கொடுக்கத்தக்கதும் காலவளவிற் கொடுக்கத்தக்கதுமாம்.

பலமுனிவர்.

கறவைப்பசு - எருது - பூமி - பொன் - பெண் - திருட்டு-கொடுமை - பெருமையழிவு - கெடுதி - நீக்கம் - வன்செய்கை - மாபாவியெனல் - பொருள்வைப்பு - கொடுக்கப்பட்டது - விற்றல் - கொள்ளல் - பெண்ணிச்சை-கலகம்- அச்சமுதலானவைகளா லொப்புதல்-பொய்ச்சான்றுரைத்தல் - இவை முதலானவைகளுக்கு அப்பொழுதே யுத்தரங் கொடுப்பிக்கத் தக்கது.

காத்தியாயனர்.

முன்பு பக்கத்தின்பொருளைக் கேட்ட எதிர்வாதி சான்றினர் முதலான சாதனங்கள் தேசாந்திரத்திலிருப்பது முதலானவைகளைக் குறித்துத் தானுத்தரங் கொடுத்தற்குக் காலவளவைக் கேட்டால் அவனுடைய காரியத்தையும் சத்தியையுநோக்கி ஒருவருடஞ்சென் றதில் ஒருநாளும், ஆறுவருடஞ்சென்றதில் மூன்றுநாளும், பன்னிரண்டு வருடஞ்சென்றதில் ஏழுநாளும், இருபதுவருடஞ்செனறதில் பன்னி ரண்டுநாளும், அல்லது பதினைந்துநாளும், முப்பதுவருடஞ் சென்ற தில் ஒருமாதமும், அதற்குமேற்பட்டதில் ஒன்றரைமாதமும் அவனுக் குக் கொடுக்க.

மேலும் மூடன் - உன்மத்தசித்தன்-நோயால் வருந்துகின்றவன் - அன்னியதேசத்தினின்று வந்தவனிவர்களுக்கும்-அறியப்படாதபொ ருள்விடயத்திற்கும் ஒருவருடங் கொடுக்கத்தக்கது.

விவாத மூலப்பொருளேனும்- சான்றினரேனும் - தேசாந்திரத்தி லிருந்தால் அழைப்பிக்கத்தக்க அந்தப்பொருளேனும் அச்சான்றின ரேனும் வந்து சேருதற்குத் தக்க காலங்கொடுக்க.

வழிமுறையாகவருகின்ற தேசாசாரத்தைநோக்கி நியாயத்தைக் கடவாமல் அரசனுத்தரத்தைக் கொடுப்பிக்க.

## உ த் த ர ம்

பலமுனிவர்.

உத்தரமாவது:—வாதியின்பக்க முழுதையு மறைப்பதும் - அபி யோகத்தைத் தள்ளத்தக்க திறமுடையதும் - ஐயமில்லதும்- செவ்வி தாகப் பொருண்முற்றியதும் - எளிதினுணரத்தக்கதும் - மிகுந்தவிரி வில்லதுமா யிருப்பதாம்.

இப்படிப்பட்ட வுத்தரத்தை யெதிர்வாதி கொடுக்க.

நாரதர்.

அவ்வுத்தரம் சத்தியோத்தரம் - மித்தியோத்தரம் - காரணோத்த ரம் - பூருவநியாயோத்தரமென நால்வகைப்படும்.

அவற்றுள்,

பலமுனிவர்.

சத்தியோத்தரமாவது :—வாதி சொன்னதை யுண்மையென்று கொள்ளுதல்.

மித்தியோத்தரமாவது :—வாதியினுடைய அபியோகத்தைப் பொய்யென்று தள்ளுதல்.

காரணோத்தரமாவது:—வாதியினுடைய அபியோகத்தையொப்புக்கொண்டு அதைத் தள்ளுதற்குக் காரணஞ் சொல்லுதல்.

பூருவநியாயோத்தரமாவது :—முன்னமே இவனிந்த விவகார விடயத்தில் நியாயத்தானத்தில் விவகாரவழியாக என்னால் வெல்லப்பட்டானென்று சொல்லுதல்.

## உத்தரப்போலி.

காத்தியாயனர்.

உத்தரப்பொலியாவது:—மேற்காட்டிய வுத்திரவிலக்கணத்திற்கு மாறுபாடாய் காக்கைக்குப் பல்லுண்டோ வில்லையோவென்னும் பயனின்மை முதலான குற்றங்களோடு கூடியிருப்பதாம்; அது உத்தரமாகக் கொள்ளத்தக்கதன்று.

சாத்திய நிச்சயத்துக்கொவ்வாமல் மேற்சொல்லிய நான்குத்தரங்களுங் கலந்துவருவது - சங்கரோத்தரமாம்; அதுவுங் கொள்ளத்தக்கதன்று. ஆனால்-பக்கத்தினுடைய ஏகதேசத்திற் சத்தியோத்தரமும், ஏகதேசத்தின் மித்தியோத்தரமும், ஏகதேசத்திற் காரணோத்தரமும், ஏகதேசத்திற் பூருவநியாயோத்திரமுங் கலந்து வரும்பொழுது - அப்படி - சங்கரமானாலும் - அவை நான்குந் தனித்தனியே யொவ்வொரு பக்கத்திற்கு உத்தரவானால் - அது - சங்கரத்தினாலே யுத்தரவாகாமற் போவதில்லை.

எப்படியெனில்.

வாதியானவன - பத்துப்பொன்னும் - இருபதின் கலநெல்லும் - முப்பதாடையும் - நாற்பதாடும் - எனக்கிவன் கொடுக்கவேண்டுமென்னும் பக்கத்திற்கு எதிர்வாதியானவன்-பொன் வாங்கினதுண்டு கொடுக்கிறேன் - நெல்லு வாங்கினதில்லை - ஆடைவாங்கினதுண்டு - கொடுத்துவிட்டேன் - ஆட்டுவிடயத்தில் - முன்பு விவாதப்பட்டபோது நியாயசபையில் விவகாரவழியில் வெல்லப்பட்டான் என்றிப்படி சத்தியோத்தரமுதலான நான்குத்தரங்களுஞ் சாத்தியசித்திக்கு விரோதப்படாம லுத்தரவாகின்றபடியால் அந்த வுத்தரங்கள் சங்கரப்பட்டனவென்று நீக்கத்தக்கனவல்ல.

அந்த வுத்தரங்களிலே - சத்தியோத்தரமானால் - உபயவாதிகளிடத்திலும் - பிரமாண விசாரணையில்லை.

மித்தியோத்தரமானால் வாதிபிரமாணங் கொண்டுவரும்படி செய்க.

காரணோத்தரமானாலும் - பூருவ நியாயோத்தரமானாலும் எதிர்வாதி - பிரமாணங்கொண்டு வரும்படிசெய்க.

சத்தியோத்தரத்திற்கு வேறான மூன்றுத் தரங்களுங் கலந்தவிடத்தில் வாதி யொருபிரமாணமும் எதிர்வாதி யிரண்டு பிரமாணமுங் கொண்டுவரும்படி செய்க.

காரணோத்தரமும் - பூருவ நியாயோத்தரமுங் கலந்தவிடத்தில் எதிர்வாதி யிரண்டுபிராமணங் கொண்டுவரும்படி செய்க.

மித்தையுங் காரணமுமேனும் மித்தையும் பூருவநியாயமுமேனுங் கலந்தவிடத்தில் உபயவாதிகளு மொவ்வொருபிரமாணங் கொண்டுவரும்படி செய்க.

ஆரீதர்.

சங்கரோத்தரத்தை யேற்றுக்கொண்டு பிரமாணவிசாரணை செய்யும்பொழுது எந்தப்பிரமாணம் மிகுந்த பொருளை விடயமாகவுடையதோ அல்லது பிரயோசனத்தையுடையதோ அந்தப்பிரமாணத்தை முதலிலே விசாரணைசெய்க.

உதாரணம்.

வாதியானவன்-பசுவின் கொம்பைப்பற்றிக்கொண்டு இஃதின்னகாலத்தி லென்வீட்டினின்று தப்பிப்போயிற்று ; இப்பொழுதிவன் வீட்டிற் காணப்படுகின்றதென்று சொல்லுமிடத்தில்,எதிர்வாதியானவன் இவன்சொன்னது பொய் இவன்வீட்டினின்று தப்பிப்போனகாலத்திற்குமுன்னமே யென்வீட்டிலிருந்தது:என்வீட்டிற்பிறந்ததென்று சொன்னால் இந்தவிடயத்தில் மித்தையுங் காரணமுங் கலந்திருந்தாலும் - காரணமிகுந்திருப்பதால் மிகுதிபற்றிக் காரணோத்தரத்தையே கொள்க.

இப்படி யெந்தப்பிரமாணமானது பொருண் மிகுதியையேனும் பிரயோசனத்தையேனு முடையதாயிருக்குமோ அந்தப்பிரமாணத்தை முன்னர்க்கொண்டு விசாரணைசெய்க.

எதிர்வாதியானவன் பக்கத்தினுடைய வுத்தரவுக்கேற்படுத்திய காலங்கடந்தும் உத்தரத்தைக் கொடாதபொழுது அரசன் சாம - தான - பேத - தண்டமாகிய வுபாயங்களினாலே யுத்தரவைக்கொடுப்பிக்க.

வசிட்டர்.

அவ்வுபாயங்கள் செய்தவிடத்தும்-எதிர்வாதி யேழுநாளையி லுத்தரவைக் கொடாவிடில் அவன் வெல்லப்பட்டவனாகித் தண்டத்திற் குரியனாவான்.

யாஞ்ஞவற்கியர்.

எதிர்வாதியானவன் தன்மேல் வாதிசெய்த அபியோகத்தைப் பரிகரியாமல் அவன்மேலெதிரான அபியோகஞ்செய்யற்க.

கலகம் - வன்செய்கை - சொற்கொடுமை - தண்டக்கொடுமை - இவைகளைச்சார்ந்த விவகாரங்களிலே வாதி குற்றஞ் செய்திருந்தால் அவனைக்குறித்து எதிரபியோகஞ் செய்யலாம்.

ஒருவனால் அபியோகம்பண்ணப்பட்டவன்மேல் மற்றொருவன் அபியோகஞ் செய்யற்க.

## ஈனவாதியர்.

பலமுனிவர்.

சபையினிடத்திலேமுன்புசொன்ன விவாதத்தைவிட்டுப் பின்பு வேறொன்றைப் பற்றுவோனும் - காரியத்தைக்கேட்பித்து அதைப் பற்றாமல் விடுவோனும், அபியோகத்தைச்செய்து நான் செய்யவில்லையென்பவனும் மாறுபாடாகச்சொல்பவனும் பத்திரத்திலெழுதப்பட்ட பூருவபக்கத்தை வேறாகச்செய்பவனும் - வாக்குமூலத்தை யெழுதுவித்துப் பின்பு குறைவாகவேனும், அதிகமாகவேனுஞ் சொல்பவனும், மேலும் சபாசதர்களையும்,சான்றினையும் பகைப்பவனும், மூக்காலுமழைக்கப்பட்டுஞ் சபையில்வாராதவனும், சொல்லென்று சொல்லப்பட்டுஞ் சொல்லாதவனும், வேறொருபோக்குக்காட்டிக் காலங்கழிப்பவனும்,எதிர்வாதியைப்பயப்படுத்தல், பயப்படுத்துவித்தல், பேதித்தலிவற்றைச் செய்பவனும்,முன்பு சான்றுண்டென்றுசொல்லிப் பின்னரில்லையென்பவனும், இன்னு மிவைபோன்ற குற்றங்களைச் செய்பவனும்,ஈனவாதியராவார்; குற்றத்திற்குத்தக்கபடி தண்டிக்கவும்படுவார்.

மேற்சொல்லிய குற்றங்கள் கோபத்தினாலேசெய்யப்பட்டாலப்பொழுது நிகழாநின்ற அவர்களுடைய விவகாரங்கள் தள்ளப்படும்.

பொருளைச்சார்ந்த விவகாரங்களெல்லாவற்றினும் சொற்றவறிச் சொல்லுதலினாலே தண்டத்திற்கு மாத்திரமுரியராவார் விவகாரத் தாழ்வை யடையார்.

## கிரியைப்பாதம்.

பிரகற்பதி.

பிரதிக்கினை - உத்தரமென்னு மிரண்டையும் வினவியசபாசதர் களால் இன்னுன்கிரியைக் கொண்டுவரவேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டவன் இலிகிதமுதலான மானுடப் பிரமாணங்களைக் காண்பித்தன் முதலானவைகளைச் செய்க.

அந்தப் பிரமாணங்க ளில்லாதபோது அச்சபையினர் விதித்த திவ்வியப்பிரமாணத்தைச் செய்க.

## இலேக்கியம்.

வசிட்டர்.

மேற்சொல்லப்படு மிலக்கணங்களையுடைய இலேக்கியம் அரசனமைப்பும் தேசத்தமைப்புமென விருவகைப்படும்.

அவற்றுள்,

பலமுனிவர்.

அரசனமைப்பானது - சாசனம் வெற்றிப்பத்திரம் ஆக்கினைப் பத்திரம் - அறிக்கைப் பத்திரம் - நிபந்தப்பத்திரம்-அருள்புரி பத்திரமென வறுவகைப்படும்.

அவற்றுள்,

சாசனமாவது—அரசனுனவன் பூமிதானம் பண்ணும்போது செப்பேட்டிலேனும் - படத்திலேனும் - முதலிலே - பூமியைத் தாங்கிய வராகமூர்த்தியான திருமாலருள்பெறுக வென்னும் வாழ்த்தினையும், பின்னர் தன்னுடைய முற்பாட்டன்-பாட்டன் - தந்தை - யிம்மூவருடையு பராக்கிரம முதலால நற்குணங்களையும் - நான்காம் புருடனுகிய தன்னையும் தானமாகக் கொடுக்கப்படுகிற பூமி - கிராம முதலானவற்றி னெல்லையினையும், வருடம் - மாதம் - பக்கம் - திதியிவற்றையும், தானமேற்பவனுடைய சாதி முதலானவற்றையும், தேசம் - கிராமம் - இடமிவற்றையும், தாய்க்குந் தந்தைக்குந் தனக்கும் புண்ணியத்தின் பொருட்டின்னுன் மைந்தனுகிய வின்னுனுக்கென்னுற் கொடுக்கப்பட்ட தென்பதையும், மேல்வருமரசர் யாவரேனு மிதனைத்தடுத்தலுங் கவர்தலுஞ் செய்யாமற் காக்கவென்னும் வேண்டுதலையும், இரவி-மதியுள்ளளவும் வழிவழி முறையாக வனுபவிக்கத்தக்கதென்பதையும், கொடுத்தவனுங் காத்தவனும் அறுபதினுயிர வருடம்

மேலுலகத்தி லிருப்பனென்பதையும், கவர்ந்தவன் அவ்வளவு காலம் நரகத்தில் வீழ்ந்து கிடப்பனென்பதையும், இராசசபையிலிருக்கு மிலே க்கனுலே பொருணிறை வுடையதாகவும், வழுவிய சொல்லில்லதா கவும், எழுவாய் - செயப்படுபொருள்-பயனிலே-யிவைபொருந்த வெ ழுதுவித்து, இன்னவிடத்தி லிவ்வளவு பூமியென்னு லின்னுனுக்குக் கொடுக்கப்பட்டது; இது என் சம்மதமென்று தன் கையா லெழுதி அவ்விலேக்கன் பெயரை யெழுதுவித்து தனது முத்திரையிட்டு - கொடுக்கப்பட்ட பூமியில், ஏற்றவனுக்குண்டான வுரிமையை யொ ருவருந் தடைசெய்யாமையின் பொருட்டு, சிறப்புடைய அந்தணர் - அதிகாரியர் - குடும்பிகளான மற்றைவருணத்தார்-கணகன் - தூதன் வைத்தியனிவர்களும், மிலேச்சர்முதல் சண்டாளர் வரையு முள்ளா ரெல்லாரும் அறியும்படி தான மேற்றவனுக்குக் கொடுப்பதாம்.

வெற்றிப்பத்திரமாவது:—முதலிலே வாதியின் பிரதிக்கினேயை யும், பின்னர் எதிர்வாதியி னுத்தரத்தையும் இவ்விரண்டின் விசார ணேயையும், இலிகிதமுதலான சாதனங்களேயும் அவற்றின் விசார ணேயையும் சான்றினரை விசாரித்த விதமும், மிருதிவசனமும், பிரா ட்டுவிவாகன் - சபையினர் - குலத்தினர்- அரசன் இவர்கண் முதலா னவர்களுடைய சம்மதமும் கையெழுத்து மெழுதப்பட்டதாகி யிராச சமுத்திரை யிடப்பட்டு வெற்றியடைந்தவனுக்குக் கொடுக்கப்படுவ தாம்.

காத்தியாயனர்.

மேலும், அபியோகம்பண்ணின வாதி தன்னுடைய விவகாரத் தை நடத்துதற்கு வாராது போகுதல்முதலான குற்றத்தா லீனனுன போது நடந்தசெய்கை யெழுதப்பட்டதும், இராசமுத்திரைமுதலான வைகளே யுடையதுமாகப் பிரதிவாதிக்குக் கொடுக்கப்படுவதும் வெற் றிப்பத்திரமாம்.

வசிட்டர்.

ஆக்கினேப்பத்திரமாவது:—சாமந்தர் - வேலேயாளர் - நாடுபுரப் பவ ரிவர்கள் முதலானவர்களுக்கு இக்காரியஞ் செய்யவேண்டுமென் றெழுதப்படுங் கட்டளேயாம்.

அறிக்கைப்பத்திரமாவது:—வேள்வித்துணேயினர் - புரோகிதர்- ஆசாரியரிவர்கள் முதலான நன்குமதிக்கத்தக்கவர்களுக்குக் காரியங் களே யறிவித்தற்பொருட் டெழுதப்படுவதாம்.

யாஞ்ஞவற்கியர்.

நிபந்தப்பத்திரமாவது:—அரசனுக்கினையினாலே வாணிகஞ்செய்பவர் முதலானவர்களால் தேவர்கட்கேனும் அந்தணர்க்கேனும் மாதந்தோறும், அல்லது வருடந்தோறு மிவ்வளவுபொருள் கொடுக்கத் தக்கதென் றெழுதப்பட்டுக் கொடுக்கப்படுவதாம்.

பிரகற்பதி.

அருள்புரிபத்திரமாவது:—அரசனானவன் ஒருவனுடைய சேவகஞ் சௌரியமுதலானவைகளை வியந்துகொண்டாடி, அவனுக்குக் கிராமமுதலானவைகளைக் கொடுத்து அதற்குச்சாதனமாக வெழுதிக் கொடுப்பதாம்.

பலமுனிவர்.

தேசத்தஸ்மப்பு-தன்கைப்பத்திரமுதலாகப் பலவகைப்படும்.

அது, வருடம் - மாதம் - பக்கம் - திதி - கொடுத்தவன் - வாங்கினவனிவர்களுடைய சாதி - கோத்திரம் - பெயர் - தந்தைமுதலானவர்கள் பொருளின்விதம் - அளவு- இருவரொப்பினாற்செய்த வட்டி - சான்றினர்பெயர் - ஒற்றி - தானம் - தேசாசாரம் - வரம்பு - அரசனுடைய மரபின்முறை - நிலையாயிருக்குமிடம் - அப்பொழுதிருக்குமிட மிவைமுதல்ான விசேடணங்களை யுடையது.

இந்த விசேடணங்களிலே கடன்முதலான விடயங்களில் அவ்வவ்வற்றிற்கு வேண்டிய விசேடணங்களெல்லா மெழுதப்பட்ட பின்னர் இன்னான் மைந்தனாகிய வெனக்கிதுசம்மதமென்று வாங்கினவன் றன்பெயரைத் தன்கையாலும்,தேசவழக்கப்படி யிரட்டித்த தொகையினராயேனும், ஒற்றைப்பட்ட தொகையினராயேனு மிருக்கின்ற சான்றினர் தங்களுக்கு வழக்கமான வெழுத்தினாலே யிவ்விடயத்தி லின்னான் மைந்தனு மின்ன பெயரினையுடையவனுமாகிய நான் சான்றினனென்பதை தனித்தனியே தங்கள் கையினாலும், இருவராலும் வேண்டப்பட்ட இன்னானாகிய வென்னா லிஃதெழுதப்பட்டதென்று வரைபவனாலு மெழுதப்படவேண்டும்.

சான்றினனெழுதத் தெரியாதவனானால் அயற் சான்றினா லெழுதுவிக்க.

காத்தியாயனர்.

தன்கைப்பத்திரமாவது :—பொருளைவாங்கினவன் சான்றில்லாமல் தன்கையா லெழுதிக்கொடுப்பதாம்.

ஒப்புப்பத்திரமாவது:—கடன்கொடுத்தவன் கையாலெழுத கடன்வாங்கினவனுலே யொப்பப்படுவதாம்.

நாரதர்.

ஈட்டுப்பத்திரமாவது:—தனிகர் அயலவனுடைய அசைக்கப்படு பொருளேயேனும், அசைக்கப்படாத பொருளேயேனும், ஈடாகவைத்துக்கொண்டு தன்பொருளேக் கொடுக்கும்பொழுது அவ்வயலவன்வைத்த ஈட்டுப்பொருள் காக்கத்தக்கதென்றேனும் துய்க்கத்தக்கதென்றேனுமெழுதப்படுவதாம்.

பிரகற்பதி.

தொடரீட்டுப்பத்திரமாவது:—தனிகன் முன்பு தான்வைத்துக்கொண்ட ஈட்டைக்கொடுத்து முன்புகொடுத்த திரவியத்துக்காகவே றீட்டை யேற்றுக்கொண்டதற்காக வெழுதப்படுவதாம்.

விலேப்பத்திரமாவது:—வீடு விளைநில முதலான தாவரப்பொருளேனும் மற்றெந்தப்பொருளேனும் விற்கப்படும்பொழுது விற்றதற்காகத் தக்கவிலேயுட னெழுதப்படுவதாம்.

காத்தியாயனர்.

நிலேமைப்பத்திரமாவது:—வித்துவான்கள் - பதினெண்சாதியர்- கணத்தினர் - பட்டணத்தாரிவர்கள் முதலானவர்களுக் குரிமையேற்படுத்தி யவ்வுரிமை சித்திப்பதற்காக வெழுதப்படுவதாம்.

சேர்க்கைப்பத்திரமாவது :—சிறப்புடையோர்க்குப் பழிமொழி நேரிட்டபோது அது நீங்குதற்காக அவருடையமுன்னேய நன்னடைகள் பின்னர் நன்ருக விளங்குதற்பொருட் டெழுதப்படுவதாம்.

பரிசுத்தபத்திரமாவது:—மாந்தராலே பரிகாரஞ்செய்யப்பட்டுப் பழிநீங்கியிருப்பவர்க்குச் சான்றினரோடு கூடியதாக வெழுதப்படுவதாம்.

விபாகபத்திரமாவது:—தாயத்தார் தம்மிலொத்துப் பங்கிட்டுக் கொண்டதற்காக வொருவர்க்கொருவ ரெழுதிக்கொடுப்பதாம்,

பிரகற்பதி.

தானபத்திரமாவது :—ஒருவன் பூமிதானம் பண்ணும்பொழுது இது இரவிமதி யுள்ளவரையு மனுபோகிக்கத்தக்கது இடையூறேனுங் கவர்ச்சியேனுஞ் செய்யத்தக்க தன்றென் றெழுதிக்கொடுப்பதாம்.

சம்மதபத்திரமாவது:—ஊராரேனும் நாட்டாரேனுந் தம்மிலொத்து அரசனுக்கு மாறுபாடுறுமல் தருமப்பொருட்டெழுதுவிப்பதாம்.

அடிமைப்பத்திரமாவது:—ஒருவன் ஆடையுணவின்றிவருத்தப்பட்டுக் கொடியவழியிற் போகும்போது தனது துன்பந்தீரும்பொருட்டு நானுனக்கடிமை யுன்பணியைச் செய்குவனென் றொருவனுக்கெழுதிக்கொடுப்பதாம்.

கடன்பத்திரமாவது:—வட்டியேற்படுத்திப் பொருளைக் கடனாக வாங்கினவனாலேனும், அவனுக்காக மற்றொருவனாலேனும் எழுதப்பட்டு ஞாபகத்தின்பொருட்டுத் தனிகனிடத்தில் வைக்கப்படுவதாம்.

காத்தியாயனர்.

எல்லைப்பத்திரமாவது:—எல்லைவழக்கைத்தீர்த்து அதற்காகவெழுதப்படுவதாம்.

விசுத்திப்பத்திரமாவது:—கடன்வாங்கினவன் கடனைக்கொடுத்தபோது கிழிக்கப்படவேண்டிய பத்திரந் தேசாந்திரத்திலிருப்பதினாலேனும், கேடுற்றதினாலேனும், கிழிபடாவிடில் கடன்தீர்த்ததற்காக வெழுதப்படுவதாம்.

பற்றுப்பத்திரமாவது:—கடன்வாங்கினவன் சில பொருள்கொடுத்தபோது தனிகன் அந்தப் பொருளைப்பற்றிக்கொண்டதற்காக வெழுதிக்கொடுப்பதாம்.

மேற்சொல்லிய பத்திரங்களில் கொடுத்தவன் - வாங்கினவன் - சான்றினரிருவர் - வரைபவ னிவ்வைவரு மேவப்பட்டிருப்பது பஞ்சாரூடபத்திர மெனப்படும்.

## பத்திரப்பிரயோசனம்.

மரீசி.

தாவாவிடயத்தில் - விற்றல் - ஒற்றி - தானம் - விபாகமிவற்றிலும் கடன்முதலியவற்றிலும் பத்திரத்தாற் சித்தியையும் வழக்கின்மையையு மடைவர்கள்.

## வேறுபத்திரம் பிறப்பித்தல்.

பலமுனிவர்.

பத்திர[illegible]ன்து:—தேசாந்தரத்திருப்பினும் வருத்தத்தா லறியத்தக்க வெழுத்துடையதாயிருப்பினும் கேடுறினும் கவரப்படினும் ஒடி-

யினும் செரியினும் இருதுணியாயினும் வேகினும் அழுக்கு வெயர்வை யிவற்று லெழுத்தழியினும் துளைபடினும் செடுகோட்பட்டுப்பழையதாயி னும் - தேசாந்தரத்திருப்பதை யழைப்பித்தற் கேற்படுத்திய காலவ ளாயி லழைப்பிக்கப்படாவிடினும் வேறுபத்திரம் பிறப்பிக்கலாம்.

## இலேக்கியபரிசோதனம்.

காத்தியாயனர்.

அரசன் கிரியையை யழைப்பித்துப் பத்திரத்தைப் பரிசோதிக் கும்போது அவ்வவ்பத்திரங்கட்குக்காட்டிய விலக்கணங்களோடு கூடி னவைகளும், அப்பொழுது நடக்கின்ற விவகாரவிடயங்களுக் கொப்பா னவைகளுமாயிருக்கின்ற பத்திரங்களைச் சாதனங்களாகக் கொள்க.

பலமுனிவர்.

முன்னர் அரசனமைப்பு தேசத்தமைப் பென்னுமிலேக்கியங்க ளுக்குக் கூறிய விசேடணங்கள் மாறுபட்டிருப்பதும், வலிமை-உலோ பம் - பயம் - மதம் - வஞ்சனை யிவற்றாற்செய்யப்பட்டதும், ஈற்றிலி ருக்கவேண்டிய வெழுத்துக்க ளிடந்தப்பியும் விளக்கமில்லாதவிடத்தி லும், ஐயப்படத் தக்கனவாகவும் இலக்கணம் வழுவினவாகவு மிருந் தா லதுவும், உடையவனல்லாதவனாற் பண்ணப்பட்டதும், காக்கைக் காற்போலக், கீறப்பட்டதும் செடுகோட்பட்டது விளக்கமா யிருந்தால துவும்; சிலகாட்பட்டது மழுங்கினதா யிருந்தாலதுவும், தெரிபட்டும் அழிவுற்றுமிருக்கிற வெழுத்தையுடையதும், மரணசமயத்திற் பொறி கலங்கினவன் - சிறுவன்-அச்சமுற்றவன் - பீடிக்கப்பட்டவன்-துக்கத் தாற்றுன்பமுற்றவன் - வழக்குத் தொடரப்பட்டவன் - உன்மத்தன்- பெண் - உரிமையின்மைய னிவர்களாற் செய்யப்பட்டதுங் காரியசித் திக்குச் சாதனமாகாது.

காத்தியாயனர்.

பத்திரத்திலெழுதப்பட்ட சான்றினன் நிந்திக்கப்பட்டவனாயே னுங் கொடிய செய்கையுடையவனாயேனு மிருந்தாலும் அப்படியே கொடுத்தவனும் - வாங்கினவனும் - வரைந்தவனுமிருந்தாலும் அந்தப் பத்திரங்காரியசாதனமாகாது.

இந்தப் பத்திரத்திலெழுதப்பட்ட விலேக்கனுலிஃதெழுதப்பட் டதன்றெனவும். இந்தச் சான்றினாலே யிதுகாணப்பட்ட தன்றென வும், சபையினர்க்கு வெளிப்படாத இப்படிப்பட்ட குற்றங்களை வாதி வெளிப்படுத்துக.

இப்படி வாதிசொன்ன குற்றத்தைச் சபையினர் எதிர்வாதிக்குத் தெரியப்படுத்தினபோது அவனந்தக் குற்றத்தைப் பொய்ப்படுத்தினால், வாதிக்குத் தண்டமும் - விவகாரத்தாழ்வு முண்டாம்.

இஃதென்னுடைய கையெழுத்தன்றெனவும், இந்தப்பத்திரமென்னாற்செய்யப்பட்டதன்றெனவுஞ்சொல்லுத லாலேயமுற்றவிடத்தில் அந்தப் பத்திரத்திற்காட்டிய சான்றினர் - வரைந்தவனிவர்களாலவ்வையத்தை நீக்குக.

ஆரீதர்.

தன் கைப்பத்திரமானால் அவனாலெழுதப்பட்ட வேறொருபத்திரத் தெழுத்தோ டொப்புநோக்குதலானும் - செய்யுந்தொழில் - சம்பந்தம் - குறிகள்-இவனுக்கிவ்வளவு பொருளுண்டா யிருக்கலாமென்று யுத்திபண்ணுத லிவைமுதலான வேதுக்களினாலும் - நிச்சயஞ்செய்க.

நாரதர்.

பத்திரத்திற் கையெழுத்திடாத சான்றினரிலும் - வாங்கின கையெழுத்து வலியுடையது.

காத்தியாயனர்.

கொடுத்தவன் - வாங்கினவன் - சான்றினர்-வரைந்தவ னிவர்களெல்லாருமிறந்தபோது இவர்களுடைய கையெழுத்தினாலே நிச்சயஞ்செய்க.

அப்படியே இராசசாசனம் - வெற்றிப்பத்திர மிவற்றிற்கும்-இராசமுத்திரை கையெழுத்திவற்றாலே நிச்சயமாம்.

மிருதியந்தரம்.

உடையவன் பதினாறுவயதிற்கு மேற்பட்டவனும் - அறிவுடையவனும் - திறமுடையவனுமா யிருக்கும்பொழுது அவனுக்கெதிரே யிருபதுவருடந் தடையின்றிப் பூமியெந்தப்பத்திரத்தினாலனுபோகிக்கப்பட்டதோ அந்தப்பத்திரமும் அப்படியே யனுபோகிக்கப்பட்ட வெல்லைப்பத்திரமும் பிரமாணமாகும்.

ஒற்றியோடுகூடிய கடன்பத்திரமானது - அதிலெழுதப்பட்ட சான்றினர் முதலானவெல்லாரு மிறந்தபோதைக்கும் அனுபோகமற்பமானாலும் பிரமாணமாகும்.

நாரதர்.

வெள்ளைக் கடன்பத்திரமானது தனிகன் - சில பொருளைப் பற்றிக்கொண்டும் -அடுத்தடுத்துப் பத்திரத்தைக்காண்பித்தும் - கேட்

பித்தும் நினைப்புண்டாக்கியுமிருந்தால் - சான்றின ரிறப்பினும் பிரமாணமாகும்.

பலமுனிவர்.

அயலவன் பெயராலெழுதப்பட்ட பத்திரத்தைக்குறித்தும்-எழுத்தறியாதபெண் - இளமையன்-பீடிக்கப்பட்டவ னிவர்களுடைய தாயாதன் முதலான சுற்றத்தாரிவர்களை வஞ்சித்துச்செய்துகொண்டபத்திரத்தைக்குறித்துஞ் சந்தேகம் வந்தபோது முன்புபொருள்கொடுக்கல் வாங்கல் முதலான சம்பந்தத்தினாலும் ஆகமம் - யுத்தி - ஏது - இவற்றாலு நிச்சயஞ்செய்க.

காலதேச காரியங்களையறிந்து கண்ணாடியிற் காணப்படுகின்றவுண்மையல்லாத வுருவம்போலவும், மெய்யான பத்திரம்போலவும் சித்திரத் துருவம்போலவும், பொய்ப்பத்திரத்தை யுண்டாக்கத்தக்கமிண்டர்களும் மிகுந்த பொருளாசையாற் காரியத்தை மாறுபாடாக, ச்சொல்லுந் துட்டர்களுமிருக்கின்றார்கள் ஆகையால் அப்படிப்பட்ட பத்திரங்களைப்பார்த்து ஆகம முதலியவற்றாலும் யுத்தியினாலும் இஃதிப்படிப்பட்ட பத்திரமென்று நிச்சயிக்க.

பிரசாபதி.

ஒருவன் பத்திரத்திலெழுதப்பட்ட கையெழுத்து - பெயர் - கோத்திரம் - சாதி குறிகளிவைமுதலான வெல்லாவற்றையும் பார்த்தின்னான் பிரதிவாதியா யிருக்கலாமென் றெண்ணி அபியோகம் பண்ணினபோது பிரதிவாதியானவன் நானிந்தவிடயத்திற் பொருள்வாங்கினதில்லை ஒருவிதத்திலுஞ் சம்பந்தப்பட்டவனல்லன் இந்தப்பத்திரத்திலிருக்கிற கையெழுத் தென்னாலெழுதப்பட்டதென் றுறுதியாகச் சொல்லுதலினாலே சபையினர்க்குப் பலவகையேதுக்களினாலும் யுத்திகளினாலுஞ் சந்தேகந்தீராதபோது அந்தப்பத்திர மிருபதுவருடத்துக்கு மேற்பட்டதாயினும் அதைத்தள்ளித் திவ்வியத்தினாலே நிச்சயஞ் செய்க.

காத்தியாயனர்.

இந்தப் பத்திரம் பொய்யென்றேனும், சான்றினரும், வரைந்தவனும், பொய்யொன்றேனுஞ் சொல்லிச்சொன்னபடி சாதியாதவனுக்கு உத்தமசாகதண்டம் விதிக்கப்படும்.

தாவாவிடயத்தில் - விற்றல் ஈடுவைத்த லிவற்றைப் பொய்யென்று சொல்லிச் சாதியாதவனுக்கு அவனுடைய நாக்கையுங் கையையுமறுத்தல் தண்டமாக விதிக்கப்படும்.

வியாசர்.

ஒருவனுடைய பத்திர மொருவனிடத் திருந்தால் அந்தப்பத்திரம் தன்னிடத்தில் வந்ததற்குக் காரணத்தை யவன்சொல்லவேண்டும்.

பத்திரங்க ளொன்றோடொன்று மாறுபடமளவில் தன்கையாலெழுதப்பட்டது - பிறன்கையாலெழுதப்பட்டது - இராசபத்திரம் இராசசாசனமிவை குற்றமற்றிருந்தாலொன்றிலுமொன்று வலியுடையது.

சம்வர்த்தனர்.

சான்றினனுடைய சொல்லினும் இலேக்கியம் வலியுடையது.

காத்தியாயனர்.

சான்றினாலுந் திவ்வியத்தினாலு மிலேக்கியந் தள்ளப்படாது.

பலமுனிவர்.

முப்பதுவருடஞ்சென்ற பத்திரமும் முதற்பொருளின் றேகைக்குவட்டி சமப்படுமளவில் திறமுடையவனாகிய தனிகனானவன் பொருளுடையவனாகிச் சமீபத்திலிருக்கின்ற கடனுடையோனை கேளாமலும் பத்திரத்தைக் காட்டாமலுமிருந்தா லந்தப்பத்திரஞ்சித்தியடையாது.

உன்மத்தன் - மூடன் - இளமையன் - அரசனுக்கஞ்சினவன் - ஊரைவிட்டோடிப்போனவன் - திறமில்லாதவன் - பயத்தினாலே பிடிக்கப்பட்டவ னிவர்களுடைய பத்திரங்கள் நெடுங்காலங்கடப்பினுந் தாழ்வடையாது.

## அனுபோகம்.

நாரதர்.

அரசனானவன் உத்தரத்தைக்கேட்டுச் சாதனவிசாரணை செய்யும்போது சாமந்தர்க ளறிந்திருக்கிற நெடுங்கால வனுபோகத்தைச் சாதனமாகக்கொள்க.

காத்தியாயனர்.

சாமந்தவிலக்கணமாவது:—வீடு விளைநிலமுதலியவற்றிற்கு நாற்பாலினு மடுத்திருக்கின்ற வீடு விளைநிலமுதலியவற்றிற் குடையவர்களாயிருத்தல்.

நாரதர்.

வீடு விளை நிலமிவற்றிற்கு அடுத்த சாமந்தர்களாலே நிச்சயஞ் செய்க.

காத்தியாயனர்.

வீதி வெளித்தலைக்கடைவாயில் - நீர்ப்போக்கு-இவைமுதலானவைகளிலேதோற்றியவையத்தில் அனுபோகமே பெரிதாம். அவ்வனுபோகத்தினாலே யவைகட்கு நிச்சயமாம்.

நாரதர்.

தாவாவிடயத்தில் பத்திரமிருப்பினும், சான்றினரிருப்பினும், அனுபோகமில்லையாயின் அஃதுறுதியுடையதன்று.

பிரகற்பதி.

ஒரு சாசனத்திலெழுதப்பட்ட கிராமம் - விளைநிலம் - தோட்டமிவற்றுட் சிலவற்றிற் கனுபோகமிருப்பினும், அவையெல்லா மனுபோகிக்கப்பட்டனவேயாம்.

யாஞ்ஞவற்கியர்.

பூமிமுதலிய அசைக்கப்படாதபொருள்இருபதுவருடம்வரையும் உடையவனுக் கெதிரே காரணமின்றி யவ்வுடையவனாலே கேட்கப்படாமல், அயலவனா லனுபோகிக்கப்பட்ட விடயத்தில் விவகாரத்தினாலே நிச்சயிக்கும்போது இலேக்கியத்தாலுண்டான வலிமாத்திரமே குறையும் அந்தப் பூமிமுதலிய பொருளும், அவற்றிலுண்டாகிய பலனுங்கெடாம லுடையவனை யடையும்.

தனமுதலான அசைக்கப்படுபொருள் பத்துவருடம்வரையும், மேற்சொல்லியபடியே அனுபோகிக்கப்பட்டால் அந்தவிடயத்திலும் அப்படியே யடையும்.

பலமுனிவர்.

கேளாமலிருந்ததற்குக் காரணமிருந்தால் எவ்வகைப் பொருளாயினும் அயலவனா லெத்தனைகால மனுபோகிக்கப்பட்டாலும், அப்பொருள் உடையவனை யடைதற்கோ ரிடையூறுமில்லை.

மேற்காட்டிய வேதுக்களினாலே வலிகுறையாததும், தகுதியானவனுபோகத்தோடு கூடியதுமாகிய பத்திரமும், சான்றும், வீடு விளைநிலமுதலான விடயங்களிற் பிரமாணங்களாம்.

பிதாமகன்.

அனுபோகமாவது:—ஆகமத்தோடு கூடியதும், நெடுங்கால முடையதும், இடைவிடாததும், தடை மொழிமுதலானவை யில்லாததும், எதிர்வாதிக் கெதிரானதுமென்னு மைந்தங்கங்களையுடையதாம்.

நாரதர்.

ஆகமமானது - தந்தையிடத்தினின்றேனும், நிதியைக்கண்டெடுத்தலினாலேனு மடைவதும்,தானத்தாலடைவதும்,கிரயத்தாலடைவதும், சௌரியத்தாலடைவதும், மனைவியாலடைவதும், சந்ததியில்லாத தாயாதன் முதலானவனிடத்தினின் றடைவதுமென அறுவகைப்படும்.

பிரகற்பதி.

நெடுங்காலமுடையவனு போகமானது- முப்பதுவருடத்திற்குக் குறையாத காலமுடையதாம்.

முப்பத்தைந்துவருட காலத்திற்கு புருடகாலமென்று பெயர்.

பலமுனிவர்.

ஒருவன் பூமிமுதலானவைகளின் விவாதத்திலே யனுபோகத்தைப் பிரமாணமாகச் சொல்லும்போது, அவ்வனுபோகம் முப்புருடகாலமாகிய நூற்றைந்துவருடத்திற் குட்பட்டகாலத்திற்குள்ளே தொடங்கப்பட்டதானால் அதை மேற்காட்டிய ஆகமத்தோடு கூடியதாகவே சொல்லவேண்டும்.

ஆகமத்தை இலிகிதத்தினாலேனும், சான்றினராலேனு மெய்ப்படுத்துக.

அனுபோகமானது - நூற்றைந்துவருடத்திற்கு முற்பட்டகாலத்திலே தொடங்கப்பட்டதானா லவ்வனுபோக ஆகமவிருப்பில்லாமலே பிரமாணமாகும்.

ஆனால், அனுபோகத்தி னங்கங்களுக்கு விரோதமாகிய வாகமமின்மைமுதலானவைகளைக் குறித்துச் சந்தேகந் தோற்றும்பொழுது ஆகமவிசாரணை செய்யலாம்.

ஆகமத்தோடுகூடிய வனுபோகமே பிரமாணமாம்-அனுபோகம்-ஆகமத்தை மூலமாகவுடையது, ஆகமம்வேர் - அனுபோகங்கிளை - ஆகையால் வேறின்றிக் கிளைதோன்றாது.

மேற்காட்டிய வைந்தங்கங்களு ளொன்றுகுறையினும்-அனுபோகம் பிரமாணமாகாது.

நாரதர்.

ஒருவன் ஆகமத்தைவிட் டனுபோகத்தைமாத்திரஞ்சொன்னாலவன் திருடனாவான்.

ஆகமப்பத்திரமில்லாம லனுபோகத்தைச் சொல்பவன்-தானமுதலான வாகமத்தையும், நெடுங்காலமுடைமை முதலான வனுபோகத்தையும், நிலத்தை யுழுகிறவர்களும், தொன்றுதொட்டுவருகிற கிராமத்தலைவர்களும், க்ஷேத்திரசாமந்தருமாகிய சான்றினராலே தெரியப்படுத்துக.

ஒருவன் - இன்னானுக்குக் கொடுமென்று மற்றொருவன் கையிற் கொடுத்ததும், கவரப்பட்டதும், காப்பதற்காக வொருவனிடத்தில் வைக்கப்பட்டதும், அரசனுடைய சார்புமுதலான வலிமையா லனுபோகிக்கப்பட்ட கிராமம் விளைநிலந் தோட்ட மிவைமுதலானவைகளும், இரவலாகவாங்கப்பட்டதும், உடையவனறியாம லனுபோகிக்கப்பட்டதுமாகிய விவைமுதலிய வெல்லாம் எத்தனைகால மனுபோகிக்கப்படினு மிவைகளை யனுபோகித்தவர்க ளுடையார்கள்.

சம்வர்த்தர்.

அரசனால் ஒருவனுடைய பூமி மற்றொருவனுக்கு கோபம் - உலோபம்-வஞ்சனை யிவற்றாற்கொடுக்கப்பட்டதும், துட்டனாலே கொடுக்கப்பட்டதும், நெடுங்கால மனுபோகிக்கப்படினும், அவ்வனுபோகமந்தப் பூமிசித்தியின்பொருட்டுக் காரணமாகாது.

பிரகற்பதி.

முறையே முப்புருடக்காலமாகிய நூற்றைந்துவருட மனுபோகிக்கப்படினும், அவ்வனுபோகம் சாசனத்திற்கு விரோதமாயிருப்பின் அஃது சித்தியாது.

பலமுனிவர்.

விவாதப்பட்ட காரியத்தின்சித்தியிலே- முதற் றலைமுறைப்புருடனுக்கு ஆகமமும, நடுவி லிரண்டுதலைமுறைப் புருடனுக்கும், மூன்றுந்தலைமுறைப்புருடனுக்கும், ஆகமத்தோடுகூடிய வனுபோகமும், நாலாந்தலைமுறைப் புருடனுக் கிடைவிடாத நெடுங்கால வனுபோகமொன்றும் பிரமாணமாம்.

## சான்றினரிலக்கணம்.

பலமுனிவர்.

ஒருவன் அயலவனுடைய காரியத்தை யெதிரோபார்த்தலினாலேனும், கேட்டலினாலேனுஞ் சான்றினனாவான்.

பிறப்பு - தொழில்- பொருளிவற்றிற் சுத்தியும், நன்னெறிநடையும், தூய்மை - பரவசமின்மை - நற்புத்தி - இல்லாதிருத்தல் - மைத்த

ருடைமை - பழிப்பின்மை - அறிவு : அறந்தெரிதல் - உண்மையுரை த்த லிவற்றினை யுடையராயும், பொருட்பேராசை - பகை - அழுக்கா றிவை நீங்கினவராயு மிருப்பவர் மூவர்முதற் பதினொருவர்வரையுஞ் சான்றினராவார்.

## இன்னாருக்கின்னார் சான்றினர்.

நாரதர்.

அந்தணர்முதலிய வருணத்தோருள்ளும், அனுலோமன் முதலிய சாதியோருள்ளும், பலவகைச்சாதியோருள்ளும், வருக்கத்தாருள்ளும், சேனைக்கூட்டத்தாருள்ளும், மேற்காட்டிய விலக்கணமுடையவராயிருப்பவர்கள், அவர்களுக்கவர்களும், மாதர்க்குமாதரும், சான்றினராவார்கள்.

யாஞ்ஞவர்கியர்.

அல்லது - எல்லாருக்கு மெல்லாருஞ் சான்றினராகலாம்.

## சான்றினரல்லாதார்.

பலமுனிவர்.

சுரோத்திரியன் - திருடன் - தானேபேசுவோன் - சொன்னிலைமையில்லாதவன் - மிருதாந்தரனென்னு மரித்த வாதியின் சான்றினன் - இவ்வகையினருஞ் சான்றினராகார் - இவர்களைப்போலவே - பிரமசரியன் - வானப்பிரத்தன் - சன்னியாசி - சாத்திரவிருத்தமான கருமஞ்செய்பவன் - தருமந்தவறினவர்கள் - மிருதிவசனங்களால் விலக்கப்பட்டவர்க ளாகையாலும், அரசன் - நாடுநகரூர்புரக்கு மதிகாரியர் - இராசமனுடனிவர்கள் பலகாரியக் கவலைமுதலியவற்றையுடையவராகையாலும், சினத்தன் - கொடுந்தொழிற்செய்பவன் - மகாபாதகமுதலான செய்கையினாலே நிந்திக்கப்பட்டவன் - பதிதன் - விடமிடுபவன் - நெருப்பிடுபவன் - பகைவரிடத்திற் சஞ்சரிப்பவன் - வலிமைசெய்பவன் - கோட்சொல்பவன் - தந்தையுடன் வழக்காடுவோன் - தப்புச் சான்றுரைத்தவனென் றறியப்பட்டவன் - இவர்கள் கொடுமைமுதலான வன்செய்கையுடையவராகையாலும், தட்டான்முதலான சிற்பியர் - கூத்தன் - புகழ்வோன் - பாடுவோன் - தானுய்தற்குத் தன் மனையாளை வேசையாக்குவோன் - கள்விற்பவன் - தன்னை விற்பவன் - விடம் - புலால் - அன்னம் - அபூபமுதவான சிற்றுண்டி - மது - பால் - வெண்ணெய் - நெய் யிவைகளை விற்பவனும் - வட்டிப் பொருளா லுய்பவனுமாகிய வந்தண னிவர்கள் பொருளாசையுடைய

வராகையாலும், ஆசாரவீனன் - புறம்புசெய்யப்பட்டவன் - தள்ளி விழிந்தோர்பாற் சேவிப்பவன் - கடல்வாணிகன் - ஒயாநடையினன் - நிலையில்லாதவன் - பெண் - இளமையன் - மூப்பினுற்றளர்ந்த சிந்தையன் - தரித்திரன் - நோய் - பசி - தாகம் - காமம் - அயர்ச்சியிவற்ருல் வருத்தமுற்றவன் - பாணம் - முப்பிணி - சன்னிபாதம் - பேயிவற்ருல் மதங்கொண்டவன் - குட்டநோயினன் - குருடன் - செவிடன் - தூர்த்தன் - சழக்கன் - துக்கமுடையவன் - செக்கான் - கடைச்சாதியனிவர்களறியாமைமுதலான இழிகுண முடையவராகையாலும், விவாதப்பட்டிருக்கிற பொருளிற் சம்பந்தமுடையவன் - விவகாரிகளுடைய விருத்தியாலுய்பவன் - அவர்களிடத்திற் சேவிப்பவன் - அவர்களாலேவப்பட்டவன் - அவர்களுடைய காரியம் பார்ப்பவன் - சுற்றத்தான் - வேலைசெய்வோன் - பிணையினன் - அடிமை - அவர்களுடைய பாத்திரம் - உணவு முதலியவற்ரு லுதவிபெற்றவன் - அவர்களுக்குதவிசெய்பவன் - அனுகூலன் - அவர்களுடையதந்தையார் - தந்தையருடன்பிறந்தவர் - குலத்திற்பிறந்தவன் - ஞாதியன் - நன்மாமன் - நன்மாமன்மைந்தர் - பெண்மாமன் - உடன்பிறந்தவளுடைய கணவன் - உடன்பிறந்தவளுடைய மைந்தன் - ஆசாரியன் - கிராமபுரோகிதன் - இவர்கள் தத்தமக்கேற்ற சம்பந்தமுடையவராகையாலும், சான்றினராதற் குரியரல்லர்.

## சான்றினர்பேதம்.

### பிரசாபதி.

சான்றினர் பண்ணப்பட்டாரும் பண்ணப்படாதாருமென விருவகையர்.

### நாரதர்.

பண்ணப்பட்ட சான்றினர் - இலிகிதன் - நினைக்கப்பட்டவன் - தன்னிச்சையில்லாதவன் - கூடன் - உத்தரனென்னு மைவகையர்.

### அவருள்,

### பிரகற்பதி.

இலிகிதன் - பத்திரத்திலே தனது சாதிபெயரிட முதயைவற்ரே டெழுதப்பட்டவன்.

நினைக்கப்பட்டவன் - அழைக்கப்பட்டுச் சான்றினனாகப் பண்ணப்பட்டவன்-

தன்னிச்சையில்வந்தவன் - காரியஞ்செய்யுமளவி லழையாமற் றன்னிச்சையில் வந்தபோது சான்றினனாக நியமிக்கப்பட்டவன்.

கூடன்- மறைவிலிருந்து கடன்முதலான விடயமானசொல்லைக் கேட்பவன்

உத்தரன்-முன்ன ரொருவிடயத்திற் சான்றினனாகியிருந்த வொருவன் தேசாந்தரஞ் செல்லும்போதேனும், மரணசமயமுற்ற போதேனும், இதை நீயறிந்திருவென்று அவனாற் கேட்பிக்கப்பட்டவன்.

இவ்வைவகையினருங் கடன்முதலான வெல்லா விடயங்களிலுஞ் சான்றினராவார்.

நாரதர்.

பண்ணப்படாதசான்றினர் - கிராமத்தார் - பிராட்டுவிவாகன் - அரசன் - செயவிடையுற்றவன்-குல்லியன் - உபயானு மதனென்னும் அறுவகையினர்.

அவருள்,

பிறகற்பதி.

கிராமத்தார் - கிராமத்தெல்லைக்கு ளுண்டான கொலை திருட்டிவ்விடயங்களிற் சான்றினராவார்.

பிராட்டுவிவாகன்- தனக்கு மேலான்விடத்து மறுவிசாரணையிற் சான்றினனாவான்.

அரசன் - தன்னிடத்தி லுபயவாதிகள் சொன்னசொல்லைக் கேட்ட விடயத்திற் சான்றினனாவான்.

செயவிடையுற்றவன்-காரியநிகழும்பொழுது பயவாதிகளா லவர்களுடையகாரியங்களை நம்புதலினா லறிவிக்கப்பட்டவிடயத்திற் சான்றினனாவான்.

குல்லியன் - இருவர்க்கு மொத்தவனும், நன்மையனும், சுற்றத்தானுமாயினோன். அவன் - கடன் - தாயபாகமிவற்றிற் சான்றினனாவான்.

உபயானுமதன் உபயவாதிகளுக்குச் சம்பந்தனும் தருமந் தெரிந்தவனுமாயினோன் அவனொருவனுமே கடன்முதலான விடயங்களிற் சான்றினனாவான்.

யாஞ்ஞவற்கியர்.

மேற்காட்டிய விலக்கணமுடையவர் கிடையாவிடத்திற் கடன்முதலான விடயங்களிலும், வன்செய்கை - சொற்கொடுமை - தண்

டக்கொடுமை - தையற்பற்று - திருட்டிவற்றிலும் எனையோ ரெல்லாருஞ் சான்றினராவார்.

## சான்றினரிடத்துக் குற்றங்காட்டல்.

பிரகற்பதி.

வாதியருடைய சான்றினரிடத்திற் பகைமுதலானமறைவான குற்றமிருப்பின் தன்னை யப்பொழு தெதிரி வெளிப்படுத்துக.

காத்தியாயனர்.

வெளிப்பட்ட குற்றங்களைச் சபையினரே சொல்லுக.

பிரகற்பதி.

சான்றினரிடத்திற் காணப்பட்ட குற்றங்கள் பரிசோதிக்கப்பட்டதற்குமேல் விவகாரநிச்சய மாரம்பிக்கப்படுகையிற் சான்றினருடைய குற்றங்களைக் குறித்து வாதியர் விவாதப்பட்டால் அரச னதனைத் தள்ளிவிட்டு நிச்சயத்திற் குத்தரவுசெய்க.

காத்தியாயனர்.

குற்றமுடையரல்லாத சான்றினரை நிந்தித்தாலும், சொன்ன குற்றத்திற்குக் காரணங்காட்டாவிடினு மவனுக்குப் பூருவ சாகசதண்டம் விதிக்கப்படும்.

இல்லற மின்மைமுதலான குணமின்மையைக் குற்றமாகச் சொல்லற்க,

சான்றினனாகுகைக்கு விரோதமாகிய அடிமைமுதலான சம்பந்தத்தைக் குற்றமாகச் சொல்லுக.

வியாசர்.

குற்றத்தினாலே சான்றினர் தள்ளப்பட்டால் வாதி வேறுபிரமாணத்தினாலே சாதிக்க.

எதிர்வாதியானவன் சான்றினரைக் குறித்துச்சொன்ன குற்றத்தைச் சாதித்தற்காக வேறு சான்றினரைக் காட்டல்கூடாது. அப்படிக்காட்டினால் வரம்புகடந்துபோம்.

சான்றினன் வேறொரிடத்துப் பொய்ச்சான் றுரைத்தவனென்பது முதலான குற்றமுடையவனானா லவனுக்குத் தள்ளப்படுதல்மாத்திரமேயல்லாமற் றண்டமில்லை.

வாதியானவன் தன்னைச்சார்ந்தசான்றினர் தள்ளப்பட்டபோது வேறு பிரமாணங்களையேனும், திவ்வியத்தையேனும் விரும்பாவிடில் அவன் வெல்லப்பட்டவனுவான் தண்டத்தையுமடைவான்.

பிரகற்பதி.

விவகாரவிசாரணை நடக்குமளவிற் பிரமாணங்களைக் குறித்துக் குற்றங்காட்டினுல், அதனை முன்னர்ச்சோதித்துப்பின்னர் விவகாரத்தை முடிக்க.

## சான்றினர்சோதனை·

பலமுனிவர்.

அரசனுனவன் சான்றினரிடத்தில் துட்டகுணங்களாகிய குற்றமில்லாதவன்போலக் காணப்படுதல், காரணமின்றி மிகவுங் கூப்பிடல், அடுத்தடுத்து மிகவும் பெருமூச்செறிதல், கால்களாலே நிலத்தை கீறுதல், கைகளையும் ஆடையினையு முதறுதல், நின்றவிடம்விட்டுப் பெயர்ந்து திரிதல், கடைவாயைநக்குதல், உதடுகளைமெல்லுதல், முகநிற மாறுபடல், நெற்றிவெயர்த்தல், வாய்தடுமாற விவைமுதலாகக் காணப்படுகிற குணங்களையும், விலக்குதற் கேதுவான காணப்படாத சொன்னிலைமையின்மை முதலானவற்றையுஞ் சோதித்தறிந்து அவ்வகைக் குணமுடைய துட்டரைச் சான்றுரைத்தலினின்று நீக்குக.

## சான்றினருண்மைசொல்லும்படி சொல்லுதல்·

பலமுனிவர்.

அரசனுனவன், சபையிலுபயவாதிகளுக் கெதிரே சான்றினரை நோக்கியினிய சொற்களினுலே நீயிரிவ் விருவரிடத்தி னிகழ்ந்தகாரியங்களையறிந்தபடி யுண்மையாகச் சொல்லுவீராக - உண்மைசொல்பவன். இம்மையிற் பொருளையும் - மறுமையிற் புண்ணியவுலகத்தையுமடைவான் - சத்தியமே மேலானதானமும், தவமும் - தருமமுமாம் - தேவர்கள் சத்தியவடிவினர்-மானுடர் சத்தியவடிவினர் - எவனுடைய புத்தி சத்தியத்தினிற்குமோ அவனிகத்திலே தெய்வத்தன்மையயடைவான், சத்தியத்தின் மேலானதருமமும்-அசத்தியத்தின் மேலானபாவமுமில்லை - பாவிகள் நாஞ்செய்யுங்காரியத்தைப் பிறரறியாரெனவெண்ணுகின்றூர்கள், தேவர்களும் - இந்திரன் முதலானவெண்மரும் ஐம்பூதங்களும்- இரவியும்- மதியும்- மனமும்-அறக்கடவுளும்-உலகத்திலுள்ளாரெல்லாரையும் பார்க்கின்றூர்கள், ஆகையால் ஒருவன் செய்தவஞ்சனை வெளிப்படும் - பொய்ச்சான்றுரைத்தவன், தன்னுடைய

வேழுமரபிலுள்ளாரையுங் கீழான நரகத்தில் வீழ்த்துவான் ஏழுபிறப் பிலீட்டிய வெல்லாப்புண்ணியங்களேயுங் கெடுத்தவனுவான் - பிரமவ தையும் - சிசுவதையும் - தந்தைவதையுஞ் செய்தவனுவான் - மிகவுங் கொடிய ரௌரவமுதலான நரகங்களேயு மடைவான் - இன்னும்-உள ர்ப்பனறி - கழுதை - நாய் - நீர்க்காக்கை - புழு - இப்பிறப்பிற்பிறந்து பின்பு - மானுடப்பிறப்பிலே - பிறவிக்குருடன் - செவிடன் - குட்ட நோயினன் - ஊமை யிவர்களாகியும், மிகுந்த பசிதாகமுடையவனு கித் தனது பகைவன் வீட்டிற்றன் மனையாளோடும் பிச்சையேற்பவ னுகியும் பிறப்பானென்றிப்படிப்பொய்ச்சான்றுரைத்தவனுக்குண்டா குங் கொடுமையான பயன்களைத்தெரிவித் துண்மை சொல்லும்படி செய்க.

## சான்றினரைவினுவல்.

பலமுனிவர்.

அரசனுனவன், சபையிலிருந்து சான்றினரையழைப்பித்து முற் பகற் பொழுதிற்கிழக்கு முகமாகவேனும் வடக்குமுகமாகவேனு நிறு த்தி அப்படி நிறுத்தப்பட்டவ னந்தணனுனல் அவனை நீபொய்சொல் லுவையா யிலுன்னுடைய சத்தியத்தாலுண்டாகின்ற புண்ணியங்க ளெல்லாங் கெடுமெனவும், சத்திரியனுனல் அவனை நீ பொய்சொல்லு வையா யிலுன்னுடைய வாயுதவாகனங்களு தவாதொழியுமெனவும், வைசியனுனல் அவனை நீ பொய்சொல்லுவையா யிலுன்னுடையபசு வும் - வித்தையும் - பொன்னும் பலியாதழியுமெனவும், சூத்திரனுனல் அவனை நீ பொய்சொல்லுவையாயில் மறையோனை - பெண்ணை - மக வைக்கொன்றவன் - மித்திரத் துரோகம்பண்ணினவன், செய்நன்றி மறந்தவ னிவர்களடையுமுலகத்தை யடைவாய் நீ பிறந்தகாலமுதலி துவரையுஞ்செய்த புண்ணியம் வீணுகுமெனவும், நீ ஓராட்டைக்குறி த்துச்சொன்ன பொய்யுனது சுற்றத்தா ரிலேவரையும், ஒரு பசுவைக் குறித்துச்சொன்ன பொய்பதின்மரையும், ஒரு குதிரையைக் குறித்து ச்சொன்னபொய் யீரைம்பதின்மரையும், ஒரு மானுடனைக்குறித்துச் சொன்ன பொய்யோரா யிரவரையும், பின்னும் பூமி தடாகமுதலான நீர்நிலைகள் பெண் - போகம் - புணர்ச்சி - முத்துமுதலிய மணிவகை கள் - கல்லின்பேதங்க ளிந்தவிடயத்திற்சொன்ன பொய்யுனது சுற்ற த்தாரெல்லாரையுங் கொல்லுமெனவுஞ்சொல்லி யுண்மைசொல்லும் படி வினுவுக.

அப்படியே பசு - வாணிகம் - வட்டிப்பொருள் சிற்பத்தொழிலி வற்று லுய்பவனும் - சேவிப்பவனும் - பாடுவோனும்-தனது தருமத்

தை விட்டவனும்-அன்னியனன்னத்தாலுய்ப்பவனுமாகிய பார்ப்பானை
ச் சூத்திரனைப்போலவும் - அப்படியே அம்பட்டன்முதலானவர்களை
யும் வினவுக.

## சான்றுரைத்தல்.

### காத்தியாயனர்.

சான்றுரைத்தல் இராசசபை - அந்தணச்சபை - தேவசன்னிதி
யிவ்விடங்களிற் செய்யத்தக்கது.

தனம்- தாவரம்- நாற்காலுயிர்-இருகாலுயி ரிவ்விடயத்தில் இரா
சசபையிலும் - உயிர்க்கொலைவிடயத்திற் சிவசன்னிதி அந்தணச்சபை
யிவற்றிலும் - சான்றுரைத்தல் செய்யத்தக்கது.

### பிரகற்பதி.

சான்றினன் - தலைச்சாத்தையும் - கழற்காப்பையுங் கழற்றிவை
த்து - உத்தரீயத்தை யுபவீதம்போலத் தரித்து கிழக்கு முகமாகவே
னும் - வடக்குமுகமாகவேனு நின்று - பொன் கோமயந்தருப்பை யிவ
ற்றைக் கையிலெடுத்துக்கொண்டு மேற்சொல்லிய சான்றின் சபதங்க
ளைக் கேட்டவனாகி யுண்மையைச் சொல்லுக.

உண்மைசொல்லாதவன் - பாவப்பயன்களை யடைவான்.

### கௌதமர்.

சான்றினர் - தனித்தனியே கேட்கத்தக்கவர்கள்.

### காத்தியாயனர்.

அரசனானவன் - குற்றமில்லதும் - இயல்பினாற் சொல்லப்பட்ட
துமாகிய சான்றினர் மொழிகளைக் கேட்டறிக.

கடன்முதலான விடயங்களிற் பிரதிக்கினை பண்ணப்பட்ட பொ
ருளுக் கதிகமாகவேனுங் குறைவாகவேனுஞ் சொன்னாலும் தேசம் -
காலம்-சாதி - வயசு உருவம்-திரவியம் - அளவுவிவற்றை மாறுபாடா
கச்சொன்னாலும் அச்சான்றினனுடைய மொழிதள்ளப்படும்.

வாதியேனும் எதிர்வாதியேனுங்காட்டிய சான்றினர் விடயத்திற்
கொப்பாகச்சொன்ன லந்தச்சத்தியஞ் சித்தியடையும்.

பெண்கவர்ச்சி திருட்டு - வன்செய்கை யிவ்விடயங்களிலே யே
கதேசஞ் சொல்லப்பட்டாலும் முழுவதுஞ் சொல்லப்பட்டதாகும்.

### மனு.

ஒரு விடயத்திற் சான்றினருடைய மொழிக ளிருவிதப்படி லவ
ர்களிலுயர்ந்த தொகையினர் மொழிகளைக் கொள்க அவர்களுடைய

மொழிகளிருவிதப்படி லவர்களிற் குணமுடையோர் மொழிகளைக் கொள்க குணமுடையோர் மொழிகளிருவிதப்படிற் குணத்திற்சிறந்தோர் மொழிகளைக்கொள்க.

நாரதர்.

குணத்திற் சிறந்தோருடைய மொழிகள் மாறுபாட்டையக் தீராவிடத்துச் சான்றினரை விலக்குக.

பிரகற்பதி.

மேற்சொல்லிய இலேக்கியத்திலும் சான்றினர் மொழிகளிலுமைமுந் தோற்றுமிடத்தி லனுமானத்தினாலும், அவ்வனுமானமும் பொருந்தாவிடத் திற்றிவ்வியத்தினாலு நிச்சயஞ்செய்க.

பலமுனிவர்.

ஒருவன் பிணிமுதலிய பீடையில்லாதவனாகித் தான் சான்றினனை தையயலார்க் கறிவித்துச் சான்றுரைத்தல் செய்யாவிடினும் அழைப்பிக்கப்படுகையில் வாராதிருப்பினு மவன் பொய்ச்சான்றினனுவான் அவன் காவல் முதலானவைசெய்யப்பட்டு மூன்று பக்கத்துக்கு ளுண்டென் றேனுமில்லை யென்றேனுஞ் சொல்லாவிடிற் கடன் பொருளையுடையவனுக்கும், கடனிற் பத்திலொருபங்கை யரசனுக்குத்தண்டமாகவுங் கொடுக்கத் தக்கவனுவான்.

வசிட்டர்.

ஒருவனாலே நியமிக்கப்படாதவனும் - அழைப்பிக்கப்படாதவனும் ஏவப்படாதவனுமாயினேன் பொய்யென்றேனு மெய்யென்றேனுஞ்சொன்ன லவன்பாவியு மிழிஞனுமானவன் கொடிய தண்டத்தினாலே தண்டிக்கத் தக்கவனுவான்.

காத்தியாயனர்.

ஒருவன் கடன்முதலான விடயங்களி லிப்படிச்சொன்னால் தகுதியான தண்டமுங் கடன்பொருளும் - சொற்கொடுமையிலும் அற்ப வழக்கிலு மிப்படிச்சொன்னல் அரசன்பொருட்டு முந்நூறுபணந் தண்டமுங் கொடுப்பிக்கப்படுவான்.

அரசன் சான்றினரிடத்தி லுண்மையை யறிதற்காகத் தக்ககால வளவு கொடுக்கலாம்.

ஐயமில்லாதபோது சான்றினரை யப்பொழுதே விசாரணைசெய்க அப்படிச் செய்யாமற் காலவிளம்பஞ்செய்தால் தருமத்தைக் கெடுக்கின்ற மிகுதியான பாவமுண்டாம்.

அந்தணன்முதலிய நான்கு வருணத்துச் சான்றினன் பொருளாசையினலே பொய்ச்சான்றுரைப் பிலாயிரம் பணமும் மயக்கத்தாலுரைப்பிற் பூருவசாக சதண்டமும் அச்சத்தாலுரைப்பி விரண்டுமத்திமசாகசதண்டமும் நட்பாலுரைப்பி னான்கு பூருவசாகசதண்டமும், காமத்தாலுரைப் பிற்பதின் மடங்கு பூருவசாகசதண்டமும் கோபத்தாலுரைப்பின் மும்மடங்கு பூருவசாகசதண்டமும், அறியாமையாலுரைப்பி விருநூறுபணந் தண்டமும், இளமையாலுரைப்பின் முந்நூறு பணந்தண்டமு மவனுக்கு விதிக்கப்படும்.

யாஞ்ஞவற்கியர்.

இவையுமன்றி மறையவனுக்கு ஆடையுரிதலும் வீட்டைவிடித்தலும் தேசத்தி னின்றோட்டுதல் முதலானவையுந் தண்டமாம்.

மற்றை வருணத்தார்க்குப் பல்லையுடைத்தல் நாக்கையறுத்தல் உதட்டையறுத்தல் முதலானவற்றைப் பொய்ச்சான்றுரைத்த விடயங்களைத்தழுவி விதிக்க.

பலர்கூடிப் பொய்ச்சான்றுரைத்தால் மேற்கூறிய தண்டங்களை யவர்களுக்குத் தனித்தனி விதிக்க.

மனு.

குணமில்லாத சான்றின னொருவனியிருந்தவிடயத்தில் சான்றுரைத்த வேழுநாளைக்குட் பிணிமுதலான துன்பங்காணப்படி லச்சான்றினனுடைய மொழிபிரமாணமன்று.

சான்றினரைக்குறித்த தண்டங்களை - சான்றினருடைய குற்றங்களையுங் குணங்களையுந் தண்டத்தை விதிக்கின்ற வசனங்களையு நன்முக வாராய்ந்து தகுதிப்படி விதிக்க.

நாரதர்.

ஒருவனுடைய சான்றினனை மற்றொருவ னுண்மையினின்று மாறுபடுத்த நினைத்து அச்சான்றின னிடத்தின் மறைவிற்சென்றாலும் - அவனைப் பேதித்தாலும் அவனினனைப்போலத் தண்டிக்கத் தக்கவனாவான்.

காத்தியாயனர்.

வாதியானவன் முதலிலே சொல்லுவித்த சமீபத்துச் சான்றினராலே தனக்குத்தோல்வியுற்றுப் பின்னர் தூரத்திலிருந்த குணவிசேடமுடைய சான்றினர் சொல்லுதலினலே அவனுக்கு வெற்றியுற்றாலந்தமுதற் சான்றினர் பொய்ச்சான்றினராவார்.

நாரதர்.

ஆயுதங்கையி லிருப்பதாலிவன் கொலைசெய்தவனென்றும் கன்னக்கோல் கையிலிருப்பதாலிவன்றிருடனென்றும் மண்வெட்டி கையிலிருப்பதாலிவன் கரையுடைத்தவனென்றும், கொள்ளிகையி லிருப்பதாலிவனெருப்பிட்டவனென்றும், பெண்ணினுடைய மயிரைப்பிடித்தவனை அயலவளை விரும்பினவனென்றும், சான்றில்லாமலே நிச்சயிக்கலாம், ஆனாலுடலிற் காணப்படுகின்ற புதுப்புண் முதலியவற்றா லிவனடிக்கப்பட்டவனென்று நிச்சயிப்பதை மிகவுமாலோசித்துச் செய்க.

## திவ்வியப்பிரமாணம்.

யாஞ்ஞவற்கியர்.

கடன்முதலான விடயங்களிலே யிலிகிதமுதலான மானுடர்பிரமாணங்க ளில்லாமையினாலேனும், யுத்திபண்ணக் கூடாமையினாலேனும், விவகாரநிச்சயத் திலேயமுற்றபோது வாதி வழக்குத்தோல்வித் தண்டங்கொடுக்க வொப்பினா லெதிர்வாதிக்குத் திவ்வியம் விதிக்கப்படும்.

விட்டுணு.

இராசத்துரோகஞ் செய்தவரேனும், வன்செய்கைசெய்தவரேனும், பாதகஞ்செய்தவரேனும், திருடர் கூட்டுறவினாற் றிருடரென்றும், அபியோகம்பண்ணப்பட்டவர்களுக்கு வாதிவழக்குத்தோல்வித் தண்டத்தை யொப்புதல் வேண்டாமலே திவ்வியம் விதிக்கப்படும்.

நாரதர்.

அற்பவிடயங்களிலோவெனிற் சத்தியமுதலான சபதங்கள் விதிக்கப்படும்.

திவ்வியமானது - துலாம் - அக்கினி - சலம் - விடம் - கோசம்-தண்டுலம் - தத்தமாடம் - பால் - தருமசமென வொன்பது வகைப்படும்.

பிரகற்பதி.

சபதமானது - சத்தியம் புண்ணியமிவைகள் கெடுமென்பதும், வாகனம் - ஆயுதம் - பசு - விதை - பொன் - தெய்வத்தின்பாதம்-தந்தைபாதம் - மைந்தன்றலை - மனைவிதலை யிவற்றைத் தொடுதலும், இன்னுந் தடாகப்பிரதிட்டை முதலியவற்றா லுண்டாகின்ற புண்ணியங் கெடுமென்பது முதலான வுலக வழக்கமானவைகளுமெனப் பல வகைப்படும்.

மேற்சொல்லிய வொன்பதுவகைத் திவ்வியங்களுள் துலாமுதலான வைந்துதிவ்வியங்களும், பெரிதான வபியோகங்களும், மற்றை நான்குதிவ்வியங்களு மற்பவபியோகங்களிலும் விதிக்கப்படும்.

பொருளைச்சார்ந்த கடன்கோடன் விடயங்களில் அபியோகத்தின் பெருமையுஞ் சிறுமையுந் திரவியத்தொகையா லறியத்தக்கனவாம்.

## பொன் வெள்ளி செம்பிவற்றி னிறையளவைப்பெயர்.

அவற்றுள்.

### பொன்னிறைப் பெயர்.

மனு

சிறுபுழை வழிவருஞ் சூரியகிரணத்திலே நுண்ணிதாகக் காணப்படுகின்றதுகளுக்குத் திரிசரேணுவென்று பெயர்.

| | | |
|---|---|---|
| திரிசரேணுவெட்டுகொண்டது - ஈர் | | |
| ஈர் மூன்றுகொண்டது | மன்கடுகு | |
| மன்கடுகு மூன்றுகொண்டது | வெண்கடுகு | |
| வெண்கடு காறுகொண்டது | நடுத்தரயவம் | |
| நடுத்தரயவ மூன்றுகொண்டது | குன்றி | |
| குன்றி யைந்துகொண்டது | மாடம் | அதற்குக்கருஷமென்றும், அக்ஷமென்றும்பெயர். |
| மாடமாறுகொண்டது | பொன் | |
| பொன்னாலுகொண்டது | பலம் | அதற்குநிட்கமென்று பெயர். |
| பலம் பத்துகொண்டது | தரணம் | |

### வெள்ளிநிறைப்பெயர்.

| | | |
|---|---|---|
| மேற்சொல்லிய குன்றியிரண்டு கொண்டது. | } | வெள்ளிமாடம். |
| வெள்ளிமாடம் பதினறு கொண்டது. | } | வெள்ளித்தரணம் அதற்குப்புராணமென்றுபெயர். |
| வெள்ளித்தரணம் பத்துக்கொண்டது. | } | பலம் அதற்குச்சதமானமென்றுபெயர். |

## செம்பினிறைப்பெயர்.

பொன்னிறையிற்காட்டிய பலத்தி னுவிலொருபங்கான தாம்பிரத்திற்குக் காருடிகமென்றும் - காருடாபணமென்றும் - பணமென்றும் பெயராம்.

## திரவியத்தொகைப்படி திவ்வியத்தேற்பாடு.

### காத்தியாயனர்.

மானுடப் பிரமாணமில்லாமற் றிவ்வியப் பிரமாணத்தினுலே நிச்சயிக்கவேண்டியவிடத்தில், எல்லாப்பொருளையும்பொன்னினுவிலொருபங்காகிய வுலகவழக்க நிட்கமாக்கியந்த நிட்கத்தொகைப்படி திவ்வியங்கொடுக்க.

### நிட்கமாவது இருபதுகுன்றியெடை கொண்டபொன்.

இப்படிப்பட்ட நிட்கம்.

| | |
|---|---|
| காணூற்றுக்கு மேற்பட்டதற்கு | விடதிவ்வியம். |
| மூந்நூற்றிருபதுக்கு மேற்பட்டதற்கு | அக்கினிதிவ்வியம். |
| இருநூற்றுநாற்பதுக்கு மேற்பட்டதற்கு | சலதிவ்வியம். |
| நூற்றறுபதுக்கு மேற்பட்டதற்கு | துலாதிவ்வியம். |
| இருபத்துநாலுக்கு மேற்பட்டதற்கு | விசேட கோசதிவ்வியம். |
| ஆறுக்கு மேற்பட்டதற்கு | தண்டுல திவ்வியம். |

### உத்தமனுக்கு.

| | |
|---|---|
| ஐந்துக்கு மேற்பட்டதற்கு | தருமசதிவ்வியம். |
| மூன்றுக்கு மேற்பட்டதற்கு | அற்பகோச திவ்வியம். |
| சான்றுக்குறைவான மூன்றுக்கு மேற்பட்டதற்கு | புட்பதிவ்வியம். |

### மத்திமனுக்கு.

| | |
|---|---|
| இரண்டரைக்கு மேற்பட்டதற்கு | தருமசதிவ்வியம். |
| இரண்டுக்கு மேற்பட்டதற்கு | தெய்வத்தின் பாதத்தையும் தந்தைபாதத்தையுந் தொடுதல். |
| ஒன்றரைக்கு மேற்பட்டதற்கு | மைந்தன் மனைவிமுதலாயினோர் தலைகளைத் தொடுதல். |

### அதமனுக்கு.

| | |
|---|---|
| ஒன்றேகாலுக்கு மேற்பட்டதற்கு | தருமச திவ்வியம். |

ஒன்றுக்கு மேற்பட்டதற்கு — யாக முதலான புண்ணியத்தையேனும் தடாகப்பிரதிட்டைமுதலான புண்ணியத்தையேனு மிழத்தலாகிய திவ்வியம்.

நிட்கத்தைப் பத்துப்பங்குசெய்து அவற்றுள் நாலுபங்குக்கு மேற்பட்டதற் குலகவழக்கமான சபதங்களும் அந்த நாலுபங்குக்குக் கீழ்ப்பட்டதற்குச் சாதிசபதங்களுங் கொடுக்க.

## சாதிசபதங்கள்.

மனு.

சூத்திரன் - அறுகு - எள்ளு - வெள்ளி- பொன்-கலப்பையாற் பேர்க்கப்பட்ட வோடு இவற்று ளொன்றையேந்தி யெல்லாப்பாதங்களு மென்னிடத்தடைகவென்று சொல்லுக.

வைசியன் - பசு - விதை - பொன் னிவையெனக்குப் பலியாது கெடுகவென்று சொல்லுக.

சத்திரியன் - வாகனமும், ஆயுதமும், பலியா தொழிகவென்று சொல்லுக.

அந்தணன் - உண்மைசொல்லுதலினு லுண்டாகிய புண்ணியம் பயன்படாமற் போருகவென்று சொல்லுக.

## பொருட் கவர்ச்சிவிடயத்தில்

பிரகற்பதி.

உத்தமனுக்கு.

| | |
|---|---|
| ஐம்பதுநிட்கத்துக்குமேற்பட்டதற்கு | விடதிவ்வியம். |
| முப்பத்தேழனைக்குமேற்பட்டதற்கு | அக்கினிதிவ்வியம். |
| முப்பத்துமூன்றுக்குமேற்பட்டதற்கு | சலதிவ்வியம். |
| இருபத்தைந்துக்குமேற்பட்டதற்கு | துலாதிவ்வியம். |
| இருபதுக்குமேற்பட்டதற்கு | தத்தமாடதிவ்வியம். |
| பதினைந்துக்குமேற்பட்டதற்கு | தண்டுலதிவ்வியம். |
| ஏழனைக்குமேற்பட்டதற்கு | கோசதிவ்வியம். |
| ஐந்துக்குமேற்பட்டதற்கு | தருமசதிவ்வியம். |
| நாலுபசுவுக்குமேற்பட்டதற்கு | பால்திவ்வியம். |

## மத்திமனுக்கு.

| | |
|---|---|
| இருபத்தைந்துக்குமேற்பட்டதற்கு | விடதிவ்வியம். |
| பத்தொன்பதேமுக்காலுக்குமேற்பட்டதற்கு | அக்கினிதிவ்வியம். |
| பதினறுநிட்கமும் பதின்மூன்று குன்றியும், ஒருயவமுங்கூடிய வளவிற்கு மேற்பட்டதற்கு | சலதிவ்வியம். |
| பன்னிரண்டரைக்குமேற்பட்டதற்கு | துலாதிவ்வியம். |
| பத்துக்குமேற்பட்டதற்கு | தத்தமாடதிவ்வியம். |
| ஏழரைக்குமேற்பட்டதற்கு | தண்டுலதிவ்வியம். |
| மூன்றேமுக்காலுக்குமேற்பட்டதற்கு | கோசதிவ்வியம். |
| இரண்டரைக்குமேற்பட்டதற்கு | தருமசதிவ்வியம். |
| இரண்டுபசுவுக்குமேற்பட்டதற்கு | பால்திவ்வியம். |
| பன்னிரண்டரைக்குமேற்பட்டதற்கு | விடதிவ்வியம். |
| ஒன்பதேகாலே யரைக்காலுக்கு மேற்பட்டதற்கு | அக்கினிதிவ்வியம். |
| எட்டுநிட்கமுங்ஒருயவங்குறைந்த குன்றியுங் கூடியவளவிற்கு மேற்பட்டதற்கு | சலதிவ்வியம் |
| ஆறேகாலுக்குமேற்பட்டதற்கு | துலாதிவ்வியம். |
| ஐந்துக்குமேற்பட்டதற்கு | தத்தமாடதிவ்வியம். |
| மூன்றேமுக்காலுக்கு மேற்பட்டதற்கு | தண்டுலதிவ்வியம் |
| ஒன்றேமுக்காலேயரைக்காலுக்குமேற்பட்டதற்கு | கோச திவ்வியம். |
| ஒன்றேகாலுக்கு மேற்பட்டதற்கு | தருமசதிவ்வியம். |
| ஒருபசுவுக்கு மேற்பட்டதற்கு | பால்திவ்வியம். |

முன்புசெய்ததாகிய குற்றங் காணப்பட்டவனுக்கும், இராசதுரோகம்-வன்செய்கை யிவற்றைச் செய்தவர்களுக்கும், பாவியென்று சொல்லப்பட்டவர்களுக்கும், மேற்சொல்லிய தொகைகளுக்குக் குறைந்த தொகைகளிலும், அவ்வவ் திவ்வியங்கொடுக்க.

## வாதியர்சாதிப்படி திவ்வியம்.

### நாரதர்.

அந்தணனுக்குத் துலாமும், சத்திரியனுக்கு அக்கினியும், வைசியனுக்குச் சலமும், சூத்திரனுக்கு விடமுங்கொடுக்கப்படும். கோசபானமெல்லாருக்குங் கொடுக்கப்படும்.

காத்தியாயனர்.

அல்லது - எல்லாச்சாதியோருக்கு மெல்லாத்திவ்வியமுங் கொடுக்கப்படும். ஆனு லந்தணனுக்கு விடமாத்திரங் கொடுத்தல்கூடாது.

பலமுனிவர்.

பேடன் - பிணியன் - வலியிலன் - செவிடன் - குருடன் - சிறுவன் - அடிக்கப்பட்டவன் - விருத்தன் - பெண்ணிவர்களுக்கு அக்கினி-சலம்விட மிம்மூன்று திவ்வியங்களுங் கொடுத்தல்கூடாது.

கருமானுக்கும், குட்டரோகிக்கும், அக்கினி திவ்வியங் கொடுத்தல் கூடாது.

நீரிற்சஞ்சரிப்பவர்களுக்கும், சுவாசகாசப் பிணியுடையவர்களுக்கும், சலதிவ்வியங் கொடுத்தல் கூடாது.

மந்திரந்தெரிந்தவன் யோகமுணர்ந்த வனிவர்களுக்கும், பித்தரோகிக்கும், சிலேட்டுமரோகிக்கும், விடதிவ்வியங்கொடுத்தல்கூடாது.

மகாபாதகஞ்செய்தவனுக்கும், பரலோகமில்லையென்பவன் நன்றிமறந்தவ னிவர்முதலான பாவிகட்கும், கோசதிவ்வியங் கொடுத்தல் கூடாது.

தாய் - தந்தை - அந்தணர் - குரு - சிறுவர் - மாதர் - அரசனிவர்களைக் கொன்றவர்கள் - சங்கரசாதிமுதலாயினே ரிவர்களுக்கரசன் திவ்வியங்களைத் தனது மனுடனைக்கொண்டு செய்விக்க.

## இருதுவின்படி திவ்வியம்.

பலமுனிவர்.

குளிர்காலத்திற் சலதிவ்வியமும், வேனிற்காலத்தி லக்கினிதிவ்வியமும், மழைகாலத்தில் விடதிவ்வியமும், மிகுந்தகாற்றடிக்கும்வேளையி லேதுலாதிவ்வியமுஞ் செய்வித்தல்கூடாது.

## திவ்வியஞ்செய்யுமிடம்.

பலமுனிவர்.

மகாபாதகஞ்செய்தவன் தேவாலயத்தெதிரிலும், இராசத்துரோகஞ்செய்தவன் அரசனுடைய அரண்மனைக்கெதிரிலும், பிரதிலோமசாதியன் - நாற்சந்தியிலுந் திவ்வியம்பண்ணும்படி செய்க.

மேற்சொல்லிய மகாபாதகமுதலியவற்றிற்கு வேறானகாரியங்களைச் செய்தவர்கள், துலாமுதலான திவ்வியங்களை யெல்லாருமறியவிராச சபையிற்பண்ணும்படி செய்க.

## துலாதிவ்வியம்.

பலமுனிவர்.

துலாத்தினுடைய சொரூபமும், அளவும், அலங்காரமும், விதிப்படிசெய்து முன்னர்ச் சோத்தியனைத் துலைத்தட்டிலேற்றி யெடைக்கட்டி யொப்புநோக்கி அதனையிறக்கி பின்னர் அந்தத்துலாத்தினுக்கு முதலான விடங்களிலே தருமதேவதைமுதலான தேவதைகளை யாவாகனம்பண்ணிப் பூசித்தல், சோத்தியனுடைய நெற்றியிற் பத்திரங்கட்டுதல், தருமதேவதையை வேண்டுதல், அந்தச் சோத்தியனாலே சொல்லுவிக்க வேண்டியவைகளைச் சொல்லுவித்த லிவைமுதலான பொதுவிதிக்காரியங்களுஞ்செய்து பின்னர் அவனை முன்போலத் துலைத்தட்டிலேற்றி நிறைபார்க்கையில் முன்பு எடைகட்டிய நிறைக்குச் சமமாகவேனும், உயர்வாகவேனுமிருந்தா லெதிரிக்கபராதமுதலானவைகளை விதித்தலும், தாழ்ந்தாற் சோத்தியனுக்குத் தண்டமுதலானவைகளை விதித்தலுஞ் செய்க.

## அக்கினிதிவ்வியம்.

பலமுனிவர்.

பிராட்டு விவாகனானவன் - மகிமையோடு விளங்குகின்ற தேவசன்னிதியிலே பூமி சுத்திபண்ணி யவ்விடத்தில் மேற்கேதொடங்கிக் கிழக்கே முடிவாகப் பதினறங்குல வளவுடைய வொன்பதுமண்டலங்களையும், அவ்வளவினையுடைய இடைவெளிகளையுங் கோமயத்தினாலே செய்க.

அம்மண்டலங்கடோறுங் கிழக்கே நுனியாகத் தருப்பைகளைப் பரப்பி முதலாவது மண்டலமுத லெட்டாவது மண்டலம்வரையும், முறையே அக்கினி - வருணன் - வாயு - யமன் - இந்திரன் - குபேரன் - சோமன் - சூரியனிவர்களையும், ஒன்பதாவது மண்டலத்திலே மற்றைச் சகலதேவதைகளையு மாவாகனஞ் செய்க.

முதலாவது மண்டலத்திற்குத் தெற்கே சமீபத்தில் லௌகிகாக்கினியைப் பிரதிட்டைசெய்து சாந்தியோகம்பண்ணி அவ்வக்கினியிலெட்டங்குலவளவும், ஐம்பதுபலக்கனமுமுடைய இருப்புப்பிண்டத்தை யிரண்டுதரங்காய்ச்சி மூன்றுங்காய்ச்சனடக்கையிலதிலே தருமதேவதையை ஆவாகனம்பண்ணிப் பூசித்தல் முதலான பொதுவிதிக்காரியஞ்செய்து சோத்தியனை முதலாவதுமண்டலத்திலே கிழக்குமுகமாக நிறுத்தி, அவன் கைகளினாலே நெல்லைத்தேய்க்கச்செய்து கைக

ளிலே மறுக்களிருந்தால் அம்மறுக்களிலே செம்பஞ்சுக்குழம்பு முத லானவைகளாற் குறியிட் டிரண்டுகைகளையுங்கூட்டி விரிக்கச்செய்து, அக்கைகளிலேயே பூரசிலைகளைவைத்து வெள்ளைநூலா லேழுசுற்று சுற்றி ஏழுவன்னியிலைகளையும், ஏழறுகுகளையும், ஏழுமலர்களையும், தயிராலே நனைக்கப்பட்ட அக்ஷதைகளையும்வைத்து அக்கினியைப் பிரார்த்தித்து, சோத்தியனுடைய வாக்கினாலே சொல்லவேண்டுவன வற்றையெல்லாஞ் சொல்லுவித்து, அவ்விருப்புப்பிண்டத்தைப் பற் றுக்குறட்டினாலெடுத்து அவனுடைய கையிலேவைக்க அவனந்தப் பிண்டத்தைக் கையிலேந்தி யிடைவெளியிலே காலைவையாம லிரண் டாவது முதலான மண்டலங்களின் மேலாக மெல்லநடந்து ஒன்ப தாவது மண்டலத்திலே வைக்க.

அதற்குமேல் முன்போல நெல்லைத் தேய்க்கச்செய்தபின்பு சா யங்காலவளவும் கைகளிற் கொப்புளமுதலானவைகள் காணப்படா விடில் அவன் சுத்தனாவான்.

காத்தியாயனர்.

அப்பிண்டந் தவறிவீழ்ந்தாலும், கைகள் சுடப்பட்டதோ வில் லையோவென்னு மையந்தோற்றினாலும், மீட்டு மப்பிண்டத்தை யேந் துப்படி செய்க.

## சலதிவ்வியம்.

பலமுனிவர்.

முதலை - மீன் - அட்டை - பாசி - புல்லு - சேறு- அலை யிவை யெல்லாம் நீர்நிறைந்திருக்கின்ற தடாக முதலானவைகளின் கரை யிற் சமமானபூமியி லொருதோரணமு மந்தத்தோரணத்திற்கு நூற் றைம்பதுமுழத் தூரத்தி லொருதோரண நிறுத்தி, அந்த தடாகமுத லானவைகளி லரையளவு சலத்தி லொருதூணைநிறுத்தி யதனடியிற் சோத்தியனை நிறுத்தி வருணபூசைமுதலான பொதுவிதிக்காரியஞ் செய்விக்க.

பின்னர் வலியும் விரைவுமுடைய வொருவனந்தக் கரைத்தோர ணத்தடியிலும், அத்தன்மையுடைய மற்றொருவ னூற்றைம்பதுமுழத் தூரத் தோரணத்தடியிலு நிற்கும்படி செய்க.

கரைதோரணத் தடியினின்றவன் மூன்றுபாணங்களை விடும்படி செய்க.

அப்படிவிடப்பட்ட பாணங்களிலே மத்திம வேகபாணத்தைத் தூரத்துத் தோரணத்தடியி னிற்கிறவ னெடுத்துக்கொண்டுபோய்த் தன்னிலேயி னிற்கும்படி செய்க.

இப்படியிருக்கையில் பிராட்டுவிவாகன் கையைத் தட்டினவுடனே சோத்தியன் சலத்திலே முழுகுக. கனாத்தோரணத் தடியினின்றவனோடிப் பாணத்தையெடுத்துத் தூரத்து நிற்கின்றவனிடத்தைச் சேர்ந்து அங்கே நின்றவனோடிவந்து கனாத்தோரணத்தடியைச் சேர்ந்து பார்க்குமளவும் அப்படி முழுகியிருக்கின்ற சோத்தியனுடைய சிரசுமுதலான அவயவங்கள் காணப்படாம லமிழ்ந்தியிருந்தானவன் சுத்தனுவான்.

## விடதிவ்வியம்.

பலமுனிவர்.

தேவசன்னிதியிலே உபவாசமும், சுசியுமுடையபிராட்டு விவாகன் விதிப்படி தருமதேவதையின் பூசைமுதலானவைகளைச் செய்வித்துச் சுசியுடைய சோத்தியனைத் தெற்குமுகமாக நிறுத்திப் பிரதிக்கினைப்பத்திரத்தை யவன் சிரத்தில்வைத்து இமயமலையிலும் மிருகத்தின் கொம்புகளிலும் பிறந்தவிடத்தையேனும், வற்சநாபியாகிய விடத்தையேனும், ஏழுயவப் பிரமாணமெடுத்து அதை யதற்கு முப்பது பங்கான நெய்யிற்கலந்து மந்திரித்துச் சோத்தியன் பானம்பண்ணும்படி செய்விக்க.

சோத்தியன் விடபானம்பண்ணின கன்முத லைஞ்ஞூறுதரங் கையைத்தட்டுகிற காலமளவும், மயிர்ப்புளகம் - வெயர்வை- முகவீக்கம் - நிறமாறல் - நடுக்கம் - கண்சொருகுதல் - நெஞ்சடைப்பு-மேல்மூச்சு - மரண மிக்குணங்களி லொன்றேனுந் தோன்றுவிடி லவன் பரிசுத்தனுவான். பின்னர் - அக்கணமே வைத்தியன் மருந்துகொடுத்து விடத்தைமுறித் தைந்துநாளளவு மவ்விடத்திலிருந்து அவனைக் காப்பாற்றும்படி செய்விக்க.

## கோசதிவ்வியம்.

பலமுனிவர்.

சோத்தியன்-தெய்வவுபாசனனுன லவனுடைய இட்டதேவதைக் கபிடேகமுதலான பூசைசெய்வித்தவ்வபிடேகசலத்தையும், சக்லதேவதைகளையுஞ் சமமாக நினைப்பவனுனற் சூரியபிம்ப வபிடேகசலத்தையும், சோரனுனலும், ஆயுதத்தினுலே சீவனம்பண்ணுகிறவ னுன

லும், துர்க்கைமுதலான வுக்கிரதேவதையி னபிடேகசலத்தையும், இராசசபையிற் கொண்டுவந்துவைத்து மேற்சொல்லியபடி தருமதேவதை யாவாகனமுதலான பொதுவிதிக்காரியஞ் செய்து அந்தச் சலத்தை மூன்றுசிறங்கை பானம்பண்ணும்படி செய்விக்க.

அப்படிச் செய்வித்தபின்னர் அன்றுமுத லிருபத்தொருநாள் வரையி லிராசிகதைவிகத் துன்பங்கள் சோத்தியனுக்கேனும், அவனுடைய மைந்தர் முதலாயினோர்க்கேனு முண்டாகும். இந்தப்பிரமாணம் அற்பப் பொருள்விடயத்திலும், மிகுந்த பொருள்விடயத்திலுஞ் செய்வதுண்டு அற்பகோசமான லேழுநாள்வரையிலும், மகாகோசமான லிருபத்தொருநாள்வரையிலும், மேற்சொல்லிய துன்பந்தோன்றுவிடி லவன் சுத்தனுவான்.

## தண்டுலதிவ்வியம்.

பலமுனிவர்.

சூர்யபிம்ப வபிடேகசலத்தை மட்பாத்திரத்தில் வார்த்து அதிலே சம்பாநெல்லரிசியை முதனாளூறவைத்து, தருமதேவதை யாவாகனமுதலான பொதுவிதிக் காரியஞ்செய்து மறுநாள் சுசியுடையசோத்தியனுக்கு அந்தத் தண்டுலத்தில் மூன்றுபிடிகொடுக்க, சோத்தியனதனைமென்று மாவுரிமரத்திலையிலேனும், அரசிலையிலேனு முமிழும்படி செய்க.

அப்படி மென்றுமிழ்ந்த அரிசியிரத்தத்தோடு கலந்திருப்பினும், கன்னம் கீழ்வாய்ப்புற மிவை விரியினு மவன் சுத்தனுவான்.

## தத்தமாடதிவ்வியம்.

பல்முனிவர்.

பிராட்டுவிவாகனனவன் இராசசபையிலே பதினறங்குல வகலமும், நாலங்குலவாழமும், வட்டவடிவுமுடையதாக இரும்பு - தாம்பிரம் - மண்ணிவற்றுளொதனுலேனுஞ் செய்யப்பட்ட பாத்திரத்திலிருபதுபல நெய்யைவார்த்து அது நெருப்பிற்காயும்பொழுது பொன்முதலானவைகளி லெதனுலேனு முத்திரையுடையதாகச் செய்யப்பட்டவொரு மாடப்பிரமாண முடையதையதிலே போட்டுத்தருமதேவதையாவாகனமுதலான பொதுவிதிக்காரியஞ் செய்து, பச்சிலையிடப் பொங்கும்படி காய்ந்திருக்குஞ்சமயத்தில் அந்தத் தத்தமாடத்தைச் சோத்தியன்கையா லெடுக்கும்படி செய்க.

அந்தச் சோத்தியனுடையகையிற் கொப்புளமுதலான குற்றங் காணப்பட்டால் அவன் குற்றமுடையவனுவான்.

## பால்திவ்வியம்.

பலமுனிவர்.

எட்டங்குலகீளமும், நாலங்குலவகலமும், பதின்மூன்றங்குலக் கனமுமுடைய இருப்புப்பாளத்தை யக்கினியிலிட்டுத் தருமதேவதை யாவாகனமுதலான பொதுவிதிக்காரியஞ்செய்து செந்தழற்போலக் காய்ந்திருக்குஞ் சமயத்தில் அந்தப்பாளத்தைச் சோத்தியநாவிலே நக்கும்படி செய்க.

அந்நாக்கிலே வேகுதல் முதலிய குற்றந்தோன்றாவிடி னவன் சுத்தனுவான்.

## தருமசதிவ்வியம்.

பிதாமகன்.

தருமப்பிரதிமையை வெள்ளியினாலும், அதருமப்பிரதிமையை ஈய மிரும்பிவற்று ளொதனாலேனுஞ் செய்க.

அல்லது தருமப்பிரதிமையை வெண்மையாகவும், அதருமப்பிர திமையைக் கருமையாகவும், வத்திரத்திலேனு மெழுதுக. அந்தப் பிர திமைக ளிரண்டையுங் கோமயத்தாலேனு மண்ணாலேனும் பண்ணப் பட்ட வுருண்டைகளுக்குள்ளே வைத்து அவைகளைப் பாண்டத்துள் மறைவாகவைத்து, தருமதேவதை யாவாகனமுதலான பொதுவிதிக் காரியஞ்செய்து அந்தப்பிரதிமைகளைப் பூசித்தபின்னர் சோத்தியனவ் விரண்டி லொன்றையெடுக்கும்படி செய்க:

சோத்தியனெடுத்தது தருமப்பிரதிமையானு லவன்சுத்தனுவான்.

## விவகாரநிச்சயத்திற்குப்பின்பு செய்யுங்காரியம்.

சங்கிரக்காரர்.

அரசனானவன் விவகாரத்திலே நியாயப்படிவெற்றியடைந்தவனு க்கிலேக்கியத்திற்காட்டிய இலக்கணமுடைய வெற்றிப்பத்திரத்தைக் கொடுத்து அவனுக்குத் தக்கபடி யுபசாரஞ்செய்க:

வியாசர்.

தோல்வியடைந்தவனுக்குத் தண்டத்தை விதிக்க.

நாரதர்.

விவகாரஆரம்பத்தில் பொதுக்கட்டிவைத்த பொருளை ஜெயித்தவனுக்கு வட்டியோடு கொடுப்பிக்க.

யாஞ்ஞவற்கியர்.

பல பொருளைக்குறித்து வாதிஎதிர்த்துபோவதில் பிரதிவாதி காணிக்தவிஷயத்தி லொன்றுங் கொடுக்கவேண்டுவதில்லை, ஆனலிப் பல பொருள்களில் ஒன்ருவது நான்கொடுக்கும்படி யிவ்வாதி ரூபித்தா லெல்லாப்பொருளையுங் கொடுப்பேனென்று உறுதியாகச் சொன்னலப்பொழுது வாதியினலே ஒருபொருளாவது பல பொருளாவது நிஜப்படுத்தினல் எல்லாப்பொருளையுங்கொடுப்பிக்கப்படுவான்.

விட்டுணு.

ஜெயித்தவன் அரசனுக்கு நூற்றுக்குஐந்து சம்பளமாகவும்,தோற்றவன் நூற்றுக்குப் பத்துத்தண்டமாகவுங் கொடுக்க.

## மறுவிசாரணை.

நாரதர்.

ஸ்திரீகளிடத்திலும்,இரவிலும்,ஊர்வெளியிலும், வீட்டிலும், பகைவரிடத்திலும்,இரகசியத்திலும், தீர்ப்புசெய்தவழக்கிலும், பலபந்தம் பொருளாசை - பகை யிவைமுதலியவைகளால் தீர்மானித்த வழக்கிலும், புத்தியீனமாவது, பக்ஷபாதமாவது, உண்டாகும், ஆகையா லவைகள் மறுபடியும் விசாரிக்கத்தக்கனவாம்.

பிரகற்பதி.

ஜாதிகூட்டத்தார் முதலான கீழ்ப்படி நியாயஸ்தலத்தாரால் தீர்ப்புசெய்தது நலமாகத்தோன்ருதபோது அந்தவிஷயத்தைக்குறித்து அரசன் மறுவிசாரணைசெய்க.

யாஞ்ஞவர்கியர்.

மறுவிசாரணைசெய்யும்பொழுது கீழ்ப்படி நிச்சயஸ்தானத்தார் அநியாயத் தீர்ப்புச் செய்ததாகக் காணப்பட்டா லந்தச்சபையினருக்கு தோற்றவழக்கி லுண்டான நஷ்டப்பொருளுக் கிரட்டிப்பான அபராதம் விதிக்கப்படும்.

பிரகற்பதி.

அப்படி யநியாயமாக தீர்மானித்தது ஜெயமடைந்த வழக்காளியின் முயற்சியினாலேயானால் அவனுக்கும், அந்தச் சபையினருக்கும் அபராதம் விதிக்கப்படும்.

சாக்ஷிகளாலேயானால் சாக்ஷிபிரகரணத்தில் விதித்த அபராதம் அச்சாக்ஷிகளுக்குமாத்திரம் விதிக்கப்படும்.

நாரதர்.

நியாயமாக தீர்ப்புசெய்ததை ஒருவன் அகங்காரத்தினாலே அநியாயமென்றெண்ணி மறுவிசாரணையிற் கொண்டுவந்தால் அவன்தோல்வியுடனே தண்டத்தையடைவன்.

இராசசபையிலே தீர்ப்பானது நியாயமாகக் தோன்றினால் அதற்கு மேலான இராசசபையிருந்தா லந்தச்சபையில் அதை மறுவிசாரணை செய்யும்படி கொண்டுபோகலாம்.

## நீக்கத்தக்கது.

மனு.

ஒருவன் அன்னியன்பொருளை யிரவல்முதலானவைகளாற்கைப்பற்றி அப்படிக் கைப்பற்றியு பலத்தால் அப்பொருளை யீடாகவைத்தல், விற்றல், தானமாகக்கொடுத்தல், இச்சைப்படி செலவழித்தல், அப்படிப்பட்டதை யவனிடத்தில் மற்றொருவன்வாங்குதலிவைகளை குறித்த வழக்குகளை யரசனீக்குக.

யமன்.

பலபந்தமாய் கொடுக்கப்பட்டதற்கும், அனுபோகிக்கப்பட்டதற்கும், எழுதப்பட்டதற்கும், சிறுபிள்ளை- சுதந்தரமில்லாதவன் இவர்களாற் செய்யப்பட்டவைகளுக்கும் பலமில்லை.

பலமுனிவர்.

சிறுபிள்ளை - பதினறுவயசுக்குட்பட்டவன்.

சுதந்தர மில்லாதவர் தந்தை தாய் தமையனிவர்களை யுடையவரும், மாதரும், அடிமைகளும், அடுத்துப்பிழைப்போரும், மாணக்கர்முதலியோரு மாவார்.

காத்தியாயனர்.

மைந்தன்முதலான வுரிமையில்லாதவர்களாலே செய்யப்பட்ட காரியங்க ளிவர்களுடைய தந்தைமுதலான தலைவர்களாலே நீக்கப்படலாம்.

நாரதர்.

ஆனால் உரிமையில்லாதவரான உன்மத்தன் அச்சமுற்றவனிவர்களாற் செய்யப்பட்டகாரிய மரசனாலே நீக்கப்படும்.

காத்தியாயனர்.

மேற்கூறிய மைந்தன்முதலிய வுரிமையில்லாதவராற் செய்யப்பட்டகாரியம், அவர்களுடைய தந்தைமுதலான தலைவர்களாலொப்பப் பட்டால் அரசனதனை நீக்காமற்கொள்ளலாம்.

பிரசாபதி.

உரிமையின்மையன், பொருளின்வரவு, செலவு, பொருளைக்காப்பாத்தல், கொடுத்தல், வாங்கல் இவைகளிலும், உழவு-வியாபார மிவற்றிலுங் முதலாளியாக நியமிக்கப்பட்டால் அவனாற்செய்தது தலைவனாற் செய்யப்பட்டதேயாம்.

எஜமான னெந்தத்தேசத்திருப்பினும், அவனேற்படுத்திய மனிதன்செய்ததை யந்த எஜமானன் மறுத்தல்கூடாது.

காத்தியாயனர்.

ஆபத்தைப்போக்குதற்பொருட்டும், குடும்பங்காத்தற் பொருட்டும், மனைவிமுதலிய தற்சுதந்தரமில்லாதவராற் செய்யப்பட்டகாரியத்தை யவர்களுடைய குடும்பத்தலைவர்கள் தள்ளாமற்கொள்க.

நாரதர்.

அவர்கள் வீடுமுதலான வசையாப்பொருள்களைத்தானமுதலானவைகளாகச் செய்தா லவைகளுக்குச் சித்தியில்லை.

## பால்யன் முதலினோர் பொருள்விடயம்.

மனு.

அரசனானவன் தங்கள்பொருளைகாக்குந்திறமில்லாதவர்களாகிய சிறுவன் - மலடி - மைந்தரில்லாதவர்கள் - திக்கில்லாதவர்கள் - கற்புடையவள் - குலத்தா ரில்லாதவள் - இவர்களுடைய பொருளைச் ஜாக்கிரதையாய்காக்க.

இவருள் பால்யன்பொருளை யவனுடைய விளமைப்பருவ நீங்குமளவுங் காக்க.

இவர்களுடைய பொருளை அபகரித்த சுற்றத்தாருக்குச் சோரதண்டம் விதிக்கப்படும்.

கௌதமர்.

காப்பாற்றத்திறமுடையவ னானாலும், பொருள்விழுந்தவிடந் தெரியாமற்போய் அப்பொருள் அன்னியனாலெடுக்கப்பட்டு அரசனுக்கறிவிக்கப்படின் அரசனதனைப் பலர்க்கு மறிவித்துத் தன்பொருளோடு சேராமல் வைத்து ஒருவருஷம் வரைக்கும் காக்க.

மனு.

பொருளுடையவன் சமீபத்திலிருந்து ஒருவருஷத்திற்குள் வாராமற்போனாலும், தூரத்திலிருந்து மூன்றாண்டி னுள்வாராமற்போனாலும், அப்பொரு ளரசனைச்சேரும்.

பலமுனிவர்.

பொருளுடையவன் மேற்சொல்லிய காலத்துக்குள்வந்து அப்பொருள் தன்னுடையதென்று இடம் - காலம் - நிறம்-தன்மை-குறி-எண்ணிக்கை - அளவு - இவைகளை நன்றாக அரசனுடைய வதிகாரிகளுக்கு ரூபித்தானானல் அப்பொருளை யவனுக்குக்கொடுக்க.

மனு.

உரிமையில்லாதவன் அப்பொருளைத் தான் பெறுதற்கு முயற்சிசெய்துவந்து பொய்சொன்னால் அப்பொருளுக் கொத்தபொருள் அவனுக்குத் தண்டமாக விதிக்கப்படும்.

மேற்கண்ட சமீபத்திலிருக்கிற வுடையவ னொருவருடத்துக்குள்ளும், தூரத்திலிருக்கிற வுடையவன் மூன்றுவருடத்துக்குள்ளும், குறித்தகாலத்தில் விரைவில்வந்தால் அப்பொருளிற் பன்னிரண்டிலொன்றும், சிலநாள்கழித்துவந்தாற் பத்திலொன்றும், பலநாள் கழித்துவந்தா லாறிலொன்றுமெடுத்துக்கொண்டு மிகுதியையுடையவனுக்குக் கொடுக்க.

கௌதமர்,

அப்படி யரசன் பாகங்கொள்ளும்போது தவறிப்போன பொருளைக்கண் டெடுத்துக்கொண்டுவந்து தன்னிடத்திற் கொடுத்தவனுக்குத் தனது பாகத்திலே நாலிலொருபங்கு கொடுக்க.

உடையவ னிறந்ததினாலே வாராமற்போனபோது அவனிழந்த பொருளில் நாலிலொருபங்கு கொடுக்க.

யாஞ்ஞவர்கியர்.

தப்பிப்போன குதிரைமுதலான வொருகுளப்புடையதை தலத்துக் காவற்காரர் முதலானவர்களிலே கண்டுகொண்டுவந்தவனுக்கு

நாலுபணமும், மனுடனைக்கண்டுகொண்டு வந்தவனுக்கு ஐம்பதுபண மும், கடா - பசு - ஒட்டகம் - இவற்றினைக்கண்டுகொண்டு வந்தவனு க்குத் தனித்தனி யிரண்டிரண்டுபணமும், ஆட்டைக்கண்டுகொண்டு வந்தவனுக்குக் காற்பணமும், அரசன்கொடுக்க.

மனு.

நிதியை யொருவன் கண்டெடுத்தபோது அந்தநிதியி லாறிலொ ருபங்கு வரசனைச் சேரும்.

நிதியையெடுத்தவன் - உத்தம குணமுடையவனானற் பன்னிர ண்டிலொன்று அரசனைச்சேரும்.

யாஞ்ஞவற்கியர்.

பிராம்மணனானல் அதனி லரசனென்றும் எடுக்கப்படாது.

நிதியைக்கண்டெடுத்தவன்- அதனை யரசனுக்கறியப்படுத்தாமற் கொண்டுபோனா லவனிடத்தி லந்தநிதியையும், அவனது சத்திக்குத் தக்கபடி தண்டத்தையும் வாங்குக.

மனு.

அரசன் தான்கண்டெடுத்த நிதி தன்னுடையதானா லது முழு வதுந் தானேகொள்க. அந்தநிதி யின்னாருடைதென்று வழக்கமாகச்சொ ல்லப்பட்டா லதனிற்பாதி தருமத்துக்காகவைத்துப் பாதியைத் தன து பொக்கிஷத்திற் சேர்த்துக்கொள்க.

உடையவன் குணவீனனானா லந்தப்பொருளிலே பாதி யரசனை யும் பாதி யவ்வுடையவனையுஞ் சேரும்.

கௌதமர்.

அரசன் திருடனாற்வரப்பட்ட பொருளைக் கண்டுபிடித்துப் பொ ருளுடையவனுக்குக் கொடுப்பியாவிடில் அப்பொருளுக்குச் சமமான பொருளைத் தனது பொக்கிஷப்பொருளி லெடுத்துக்கொடுக்க.

விவகாரசாரசங்கிரகத்திற் பொதுவிதிப்படலம்

முற்றிற்று.

---

# விவகாரசாரசங்கிரகம்

## சிறப்புவிதிப் படலம்.


| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| கடன்கோடல் அல்லது கடன்கொடுத்தல். | ... | உ |
| கடனானது கொடுக்கத்தக்கது முதலான எழுவகை விசேஷணங்களை யுடையது. | க | ச |
| அந்தக் கடனிப்படிக் கொடுக்கப்படவேண்டும். | — | அ |
| ஈடு நான்குவகைப்படும். | ... | கக |
| துய்ப்பீட்டி னிலக்ஷணம். | ... | கச |
| காப்பீட்டி னிலக்ஷணம் | ... | கரு |
| காலவரையீட்டி னிலக்ஷணம். | ... | கஎ |
| காலவரையிலீட்டி னிலக்ஷணம். | ... | ககூ |
| ஜாமீனும் - சாக்ஷியும்- பத்திரமு மின்னப்படி யிருக்கவேண்டும். | ... | உக |
| வட்டியிலக்ஷணம் வட்டிப்பிரகரணத்திற் காண்க. | உ | ங |
| ஈடுமுதலானவை யின்னநிமித்த மிருக்கவேண்டும். | ... | சா |
| ஈடுமுதலானவை யில்லாவிடிற் கடனெளிதிற் சித்தியாது. | ... | கூ |
| உரிமை யில்லாதவர்களுக்குக் கடன் கொடுத்தல் கூடாது. | ... | கஉ |
| ஈட்டின்விதி. | ... | கச |
| தனிகனீட்டை யிப்படிக்காக்க. | ... | கசா |
| தீக்கோள் முதலியவற்றால் ஈடு கெடுதியடைந்தபோது கடனுடையவனது செய்கை. | ... | உ0 |
| ஈடாகவைத்த நிலம் அரசனாலேனும் வெள்ளத்தாலேனும் கெடுதியடைந்தபோது கடனுடையான் செய்கை. | ... | உஎ |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| ஈடு சிலகாலே வட்டிக்குச் சமமானபோது கடனுடையவன் செய்கை. | ... | ௩௧ |
| காப்பீட்டையுந் துய்ப்பீட்டையும் ஏற்பாட்டின்படி செய்க. | ௩ | ௪ |
| ஈட்டைக்குறித்த செய்கை மாறுபட்டால் வட்டியில்லே. | ... | ௬ |
| காப்பீட்டை[illegible]மவிரோதமாக அனுபோகித்தவனுக் குண்டாகுங் கேடு. | ... | ௧௦ |
| கடனுடையவனுடைய குற்றத்தால் துய்ப்பீடனுபோகிக்கப்படாவிடில். | ... | ௧௪ |
| காப்பீட்டைக் கடனுடையவன் சம்மதியில்லாமல் கடன்கார னனுபோகித்தால். | ... | ௧௮ |
| துய்ப்பீடான வேலையாட்டி முதலானவர்களே கடன்கொடுத்தவன் பீடித்தா லவனுக்குத் தண்டம். | ... | ௨௪ |
| எவ்வளவேனு மனுபோகித்தல் கூடாதென்ற துய்ப்பீட்டை யனுபோகித்தால் தண்டமுதலானவை யுண்டாகும். | ... | ௨௭ |
| ஈடாகவைத்தபொருள் கடன் கொடுத்தவனுடைய அஜாக்கிரதையினுலே விகாரமடைந்தால். | ... | ௩௨ |
| ஈட்டை முன்னிருந்தபடி கொடுத்தால் வட்டியுமுதலுங் கெடாது. | ௪ | ௧ |
| காப்பீடு விகாரத்தை யடைந்தபடி கொடுக்கப்பட்டால் தனிகன் காப்பீடு குறைவு முதலானவை யுறும்படி செய்தால். | ... | ௪ |
| நஷ்டமானஈடு வட்டியொடுகூடிய முதற்பொருளுக்குக் குறைவாயிருந்தால். | ... | ௧௦ ௧௪ |
| மேற்படியீடு அதிக விலேயுடையதானல். | ... | ௨௦ |
| கடன்கொடுத்தவன் பொருளைக் கொடாவிடில். | ... | ௨௨ |
| ஈடு கெடுதியடைந்தபோது அதைக்குறித்துக் கடனுடையான் அனியாயமாகச்சொன்னல். | ... | ௨௬ |
| குற்றமுடைய பத்திரத்தா லீட்டை அனுபோகித்த கடன்கொடுத்தவனுக்குத் தண்டமின்னது. | ... | ௩௩ |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| **ஈட்டிலுடைமை கெடுதல்.** | ரு | க |
| காலவள வேற்படுத்தாமல் வைத்த காப்பீடு கடன் கொடுத்தவனுடைய தாகுகைக்கேது. | ... | ங |
| காலவள வேற்படுத்திவைத்த காப்பீடு கடன்கார னுடைய தாகுங்கைக்கேது. | ... | அ |
| மேற்காட்டிய இரண்டு விஷயத்திலும் கடன்கார னீட்டை விலைமுதலானவை செய்வதற்குக் காலவளவு. | ... | கஉ |
| ஈட்டை மீட்கத்தக்ககாலம். | ... | கஅ |
| காலவளவும் உடன்படிக்கையுஞ் செய்யாதவிஷய த்தில் இரட்டிப்புக்குமேல் வட்டியில்லை. | ... | உக |
| ஈடுவைத்த கடன்பட்டவ னிறந்துபோனால் அவ் வீட்டைக்குறித்துத் கடன்கார செய்யுங்காரியம். | ... | உஎ |
| கடனுடையவனுடைய மைந்தர் முதலாயினோ ரில் லாதபோதும் அவனது சுற்றத்தானிருந்து கடன்கொடு க்க வொப்பினபோதுந் தனிகன் செய்கை. | சு | உ |
| ஈட்டுப்பொரு ளிரட்டிப்புக்குச் சமமாயிருந்தால். | ... | எ |
| வட்டியொடுகூடிய முதற்பொருளுக் கீடுகுறைவா யிருந்தால். | ... | கூ |
| ஆடை முதலானவைகளை முதற்பொருளாகக்கொ டுத்தவிஷயத்தில் வைத்த ஈட்டைக்குறித்த செய்கை. | ... | கங |
| இரட்டிப்புக்குமேல் கடன்காரன் தன்னிடத்திலி ருந்த ஈட்டை விற்காமல் வேறோரிடத்தில் வைப்பதை க்குறித்த செய்கை. | ... | ககூ |
| கடன்காரன் சொல்லியிருந்தால் இரட்டிப்புக்குள் ளும் வேறிடத்தி லீடாக வைக்கலாம். | ... | உச |
| முத்திரைமோதிரம் புண்ணியமிவற்றை யீடாகவா ங்கிக்கொண்டு கடன்கொடுத்த விஷயத்தில் தனிகன் செ ய்கை. | ... | உகூ |
| காலவள வேற்படுத்தாத துய்ப்பீட்டின் விஷயம். | ... | ஙங |
| **ஈடுசித்தித்தல்.** | எ | க |
| காப்பீடுந் துய்ப்பீடு கடன்கொடுத்தவனுக்கீடாகுகை. | ... | ங |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| **ஈடுமுதலிய வழக்கின் விலக்கம்.** | எ | அ |
| இருவருக் கீடாகவைத்த நிலம் அனுபோக முடையவனதாகும். | ... | கo |
| அவ்விருவருக்கும் அனுபோகமிருந்தால். | ... | கச |
| இருவரும் அதுவரைக்கு மனுபோகியாம லொருதினத்தில் விவாதப்பட்டால் அதை யவர் அனுபோகிக்கும் விதம். | ... | கஎ |
| ஒருதினத்திலே இருவரிடத்தில் வைக்கப்பட்டகாப்பீட்டை அடையத்தக்கவன். | ... | உo |
| ஒரு பொருளை யிருவரிடத்தி லீடாக வைத்தவனுக்குத் தண்டமின்னது. | ... | உச |
| ஒருவனிடத்துவைத்த வொருவருஷத் துணவுக்கதிகம் விளைகின்றநிலத்தை மற்றொருவ னிடத்தில் வைத்தவனுக்குத் தண்டமின்னது. | ... | உஎ |
| அதற்குக் குறைந்தபூமியை வைத்தவனுக்குத் தண்டமின்னது. | ... | ருக |
| ஒரு காப்பீட்டைவைத்துக்கொண்ட இருவருமொருகாலத்தில்வந்தாற் செய்கை. | அ | உ |
| விளைநில முதலானவைகளைத் தனித்தனி யொவ்வொருவர்க்கு ஒற்றி - விக்கிரயம்- தானமாகக்கொடுத்தவிஷயத்தில் விரோதம்வந்தபோது வலியுடைது இன்னது. | ... | ரு |
| அப்படியானாலு மின்னது வலியுடையது. | ... | க |
| இரண்டாவதீடு வலியுடையதாகுதல். | ... | கரு |
| வெண்ணிலைப்பத்திரம் வலியுடையதாகுதல். | ... | கஅ |
| பொருளைக்குறித்த விஷயத்தில் வலியுடையதின்னது. | ... | உரு |
| ஒற்றிமுதலானவைகளில் வலியுடையதின்னது. | ... | உரு |
| ஒருதினத்தி லொருபொருளையொற்றி-விக்கிரயம் - தானமாகக்கொண்ட மூவருமதைப் பிரித்துக்கொள்ளும் வகை. | ... | உஅ |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| ஈட்டைமீட்டல். | கூ | க |
| கடனுடையா னின்னகாலத்தி லீட்டை மீட்டுக்கொள்க. | ... | ங |
| துய்ப்பீடாகவைத்த பூமியை மீட்குங்காலம். | ... | எ |
| துய்ப்பீடாகவைத்த ஆடை முதலானவைகளைத் தனிகன்கொடுக்குங் காலம். | ... | கக |
| காப்பீடாகவைத்த ஆடைமுதலானவைகளைக் கடன்காரன்கொடுக்குங் காலம். | ... | கரு |
| ஈட்டைக்கொடாத கடன்காரனுக்குத் தண்டமின்னது | ... | கசு |
| கடன்காரன் தேசாந்தரம்போயிருந்தபோது ஈட்டைக்கொடுக்கத்தக்கவ ரின்னார். | ... | உஉ |
| அவர் கொடாவிடில். | ... | உசு |
| ஈட்டைக்கொடாவிடி லன்றுமுதல் வட்டியில்லை. | ... | உஅ |
| கெட்டுப்போன ஈட்டின்விலையைக் கடனுடையவன் வாங்கிக்கொள்ளும் வகை. | ... | ஙக |
| உடன்படிக்கைப்படி யீடுமீட்டுக்கொள்ளப்படாவிடில் அந்த நிலத்தை கடன்காரன் அனுபோகிக்கலாம். | க0 | ச |
| உடன்படிக்கை செய்யாவிடில் நிலப்பலன் முதலுக்குச் செல்லாகாது. | ... | கஉ |
| நிலப்பலனைமாத்திரம் வட்டிக்கீடாகச் செய்தவிஷயத்தில் ஈட்டை மீட்டுக்கொள்ளுங்காலம். | ... | கரு |
| பிணை. | ... | உக |
| காண்பிக்கும் பிணையின னிலக்ஷணம். | ... | உச |
| நம்புதற் பிணையின னிலக்ஷணம். | ... | உரு |
| கொடுக்கும் பிணையின னிலக்ஷணம். | ... | உசு |
| ஒப்புவிக்கும் பிணையின னிலக்ஷணம். | கக | க |
| அபயப்பிணையின் னிலக்ஷணம். | ... | உ |
| வாங்கின ஈட்டைக்கொடுக்கும் பிணையின னிலக்ஷணம். | ... | ங |
| விவாதப் பிணையின னிலக்ஷணம். | ... | ச |
| பிரமாணப்பிணையின னிலக்ஷணம். | ... | ரு |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| ஈடுகோப்புப் பிணையின னிலக்ஷணம். | கஉ | க |
| துய்ப்பிக்கும் பிணையின னிலக்ஷணம். | ... | உ |
| ஈடுதரு பிணையின னிலக்ஷணம். | ... | ங |
| பிணை யேற்படுத்தல். | ... | ச |
| பிணையினர் சிறப்புவிதி. | ... | எ |
| காண்பிக்கும் பிணையினன் ஜாமீன்தொடர்ச்சி நீக்கம். | ... | கூ |
| மேற்படி பிணையினன் கடனுடையவனை யழைத்துவருவதற்குக் காலவளவு கொடுக்க. | ... | கங |
| கடனுடையானைக் காண்பியாமற் போகுதல் முதலானவை நேரிட்டபோது அந்தக்கடனைக் காண்பிக்கும் பிணையினன் கொடுக்க. | ... | கஅ |
| பெருவிலை யீட்டைக்கெடுத்த கடன்காரன்பொருளில்லாதவனானபோது பொருளுடைய ஈட்டுஜாமீன்தாரன் ஈட்டின் விலையைமாத்திரங் கொடுக்க. | கங | க |
| காண்பிக்கும் பிணையினனும் ஈடுதரு பிணையினனுமல்லாத மற்றைப்பிணையினர் தாங்கள் பண்ணினவுடன்படிக்கைப்படி செய்க. | ... | ரு |
| ஒரு விஷயத்து ஜாமீன்தார் பலரும் பொருள்கொடுக்கும் வகை. | ... | கூ |
| பிணையினர் பலரும் பொருள்கொடுக்க வொப்புக்கொண்டால் கடன்காரன் இச்சைப்படிப் பொருளைவாங்கலாம். | ... | கஉ |
| பலபிணையினருள் கடன்கொடுத்தவனாலே குறிக்கப்பட்டவன் தேசாந்தரம்போனாலும் இறந்துபோனாலும் அவனுடைய மைந்தர் பொருள்கொடுக்கும் வகை. | ... | கஅ |
| பிணையினருடைய மைந்தர் முதலாயினோர் விதி. | ... | உங |
| மைந்தருக்குப் பிணைத்தொடர்ச்சியில்லாத பிணையினரின்னோர். | ... | உரு |
| தந்தையருடன்படிக்கைப்படி செய்யத்தக்க மைந்தர். | ... | உகூ |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| ஏதுகாணப்பட்டா லின்ன பிணையினருடைய மைந்தர் பொருள்கொடுத்தல் முதலானவை செய்யத்தக்கவராவர். | கச | க |
| கடனுடையவனிடத்தி லீடுவாங்கிக்கொண்டு பிணைப்பட்டவனுடைய மைந்தன் அக்கடனைக் கொடுக்க. | | எ |
| கொடுக்கும் பிணையினனுடைய பௌத்திரனுக்குக் கடன் தொடர்ச்சி யில்லை. | ... | கங |
| பிணைப்பட்டதில்லை யென்றதைத் தனிகன் மெய்ப்படுத்தினால் பிணையினனுக்குத் தண்டமின்னது. | ... | கஎ |
| கடனுடையான் பொருட்டு கடன்காரனோடு வழக்காடின பிணையினனுக்குத் தண்டமின்னது. | ... | உஉ |
| பிணையினர் கொடுத்தபொருளைச் செலுத்தல். | ... | உரு |
| பிணையினன் தான் கொடுத்தபொருளைக் கடனுடையவனிடத்தில் அப்படியே வாங்கிக்கொள்க. | ... | உஎ |
| கடன்காரன் வருத்தப்படுத்த ஜாமீன்தாரன் கொடுத்த பொருளை அவனுக்குக் கடனுடையான் ஒன்றரை மாசத்திற் செலுத்தாவிடில் அதற்குமே லிரட்டிப்பாகக் கொடுக்க. | கரு | உ |
| பசு முதலானவைகளை முதற்பொருளாகக் கொடுத்தவிஷயத்தில் பிணையினன் பொருள்கொடுத்தால் அப்பொருளை அவனுக்குக் கடனுடையான் வட்டியொடு கொடுக்க. | ... | கூ |
| காலதேச மொத்திருக்க கடனுடையவனுக் கறிவியாமற் பொருள்கொடுத்த பிணையினன் தான்கொடுத்த பொருளைமாத்திரம் வாங்கிக்கொள்க. | ... | கங |
| ஈட்டுப்பிணையினன் தனது சோர்வினால் வீடுகெட்டுப்போனா லப்பொருளை யுடையவனுக்குக் கொடுக்க. | ... | கசு |
| வட்டிப்பிரகாணம். | ... | உஉ |
| வட்டி யறுவகைப்படும். | ... | உச |
| காயிகைவட்டியி னிலக்ஷணம். | ... | உஅ |
| காலிகைவட்டியி னிலக்ஷணம். | ... | ஙக |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| சக்கரவட்டியி னிலக்ஷணம். | கரு | ஙஉ |
| காரிதைவட்டியி னிலக்ஷணம். | கசு | க |
| சிகாவட்டியி னிலக்ஷணம். | ... | ச |
| போகலாபவட்டியினிலக்ஷணம். | ... | ரு |
| வட்டியினளவு. | ... | அ |
| ஈட்டுக்கடனுக்கு வட்டி. | ... | க௦ |
| பிணைக்கொடுத்த கடனுக்கு வட்டி. | ... | கஉ |
| வெண்ணிலைக் கடனுக்கு வட்டி. | ... | கச |
| நான்கு வருணத்தாரும் வெண்ணிலைக்கடனுக்குக் கொடுக்கும் வட்டியினளவு. | ... | கஎ |
| பொல்லா வழிச்செல்லும் வாணிகரும் கடல்வழிச் செல்லும் வாணிகரும் வெண்ணிலைக் கடனுக்குக் கொடுக்கும் வட்டி. | ... | உக |
| எல்லாச்சாதியோரும் ஏற்பாட்டின்படி வட்டிகொடுக்க. | ... | உரு |
| பசுவை வேலைக்காரியை முதற்பொருளாகக் கொடுத்தவிஷயத்தில் முடிவான வட்டியின்னது. | ... | உஅ |
| சந்ததியில்லாவிடி லின்னது வட்டி. | ... | ஙக |
| வட்டியேற்பாடில்லாத விஷயம். | கஎ | க |
| கடனைக் காலவளவிற் கொடாவிடி லன்றுமுதல் வட்டியுண்டு. | ... | ங |
| நண்பினன் கொடுத்தபொருளைக் கொடாவிடில் அதற்கு ஆறுமாதத்துக்குமேல் வட்டியுண்டு. | ... | எ |
| சரக்கைக் கடனாகிவாங்கி விலைப்பொருள் கொடாமல் தேசாந்தரம்போனால். | ... | கக |
| இரவலாக வாங்கின ஆபரணமுதலியவற்றையுடையவன் கேளாமலிருக்கையிற் கொடாமல் தேசாந்தரம்போனால் வட்டியுண்டாகுங் காலம். | ... | கரு |
| உடையவன் கேட்கவும் பொருள்கொடாமல் தேசாந்தரம்போனால் வட்டியுண்டாகுங் காலம். | ... | ககூ |
| இரவல்வாங்கினவ னூரிலிருக்கையில் உடையவன் கேட்கவுங் கொடாவிடில் பொருளுக்கு வட்டியுண்டாகுங் காலம். | ... | உங |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
| --- | --- | --- |
| வட்டி யுண்டாகாத பொருள். | கஎ | உஎ |
| பொருளை யுடையவன் கேட்கவுங் கொடாவிடில் வட்டியுண்டாகுங் காலமுந் தொகையும். | | உகூ |
| நிட்க்ஷேபமுதலியவற்றைக்கேட்டுங்கொடாவிடில் வட்டி யுண்டாகுங்காலமுந் தொகையும். | கஅ | க |
| **பிறிதுவிதி.** | | ச |
| வட்டியுண்டாகாத பொருளிவை. | ... | சூ |
| **வட்டிவாங்கலின் விலக்கும்.** | ... | கரு |
| பொருளிரட்டிப்பு வரையும் வட்டியுண்டாம் நன்மைய னிவ்வளவு வட்டி வாங்குக. | ... | கஎ |
| கடன்காரன் அதிகமாகவும் இச்சைப்படி யாகவும் வட்டிவாங்குதல் கூடாது. | ... | உஉ |
| இன்ன வட்டிகள் நன்மையனாலே வாங்கத்தக்கன வல்ல. | ... | உரு |
| அந்தணன் ஆபத்துக்காலத்தில் வட்டிவாங்கலாம். | ... | உகூ |
| **வட்டியின் முடிவான அளவு.** | ககூ | க |
| சிலதேசங்களிலிருமடங்கு முதலான வட்டியுண்டு | ... | ந |
| பொன் வெள்ளிமுதலானவைகளுக்கு முடிவான வட்டி. | ... | சூ |
| மேற்சொல்லிய பொருளுக்கு அதிக வட்டியில்லை. | ... | கஎ |
| அதிக வட்டியுண்டாகும் விஷயம். | ... | ககூ |
| உடன்படிக்கையினாலே வட்டி நூறுமடங்கு வரையுமாம். | ... | கoச |
| சொல்லப்படாத கம்பளமுதலானவைகளுக்கு வட்டி யிருமடங்கு. | ... | உசூ |
| புல்லு முதலானவைகளுக்கு முதற்பொருள் கொடுக்குமளவும் வட்டியுண்டு. | ... | உகூ |
| **கடனைத் தீர்த்தல்.** | உo | ச |
| இன்ன கடனைக் கடனுடையவன் கேட்டபொழுதே கொடுக்க. | ... | சூ |
| இன்னகடனை யேற்படுத்தியகாலத்திலே கொடுக்க. | ... | அ |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| இன்ன கடனைப் பொருளிரட்டிப்பானவுடனே தீர்க்க. | ௨0 | ௧௨ |
| கடனுடையவ னில்லாதபோது அக்கடனைத் தீர்க்கத்தக்கவ ரின்னர். | ... | ௧௪ |
| கடனைக் கடன்காரன் கேட்டபொழுதே கொடுக்கவேண்டுமென்பதற்குத் தாற்பரிய மிப்படி. | ... | ௧௬ |
| வாங்கின கடனைத் தீராதவனுடைய புண்ணியமெல்லாம் கடன்காரனைச்சேரும். | ... | ௨௧ |
| கடனைத் தீராமலிறந்தவன் கடன்காரன் வீட்டி லின்னபிறப்பிற் பிறப்பான். | ... | ௨௪ |
| கடனைத் தீர்த்துப் பத்திரத்தைக் கிழிக்க. | ... | ௨௮ |
| கடன்பத்திர மில்லாவிடில் விசுத்திப்பத்திரங் கொடுக்க. | ... | ௩0 |
| விசுத்திப்பத்திரங் கொடாதபோது கடன்காரன் செய்கை. | ௨௧ | ௨ |
| சாக்ஷிக ளறியக்கொடுத்த கடனை யவர்முன்பாக தீர்க்க. | ... | ௫ |
| அவரில்லாவிடில் வேறுசாக்ஷிகள் முன்பாகத் தீர்க்க. | ... | ௭ |
| கடன்தீர்க்கத் திறமில்லார் விஷயம். | ... | ௯ |
| திறமில்லாதவன் வட்டிகொடுத்துப் புதுப்பத்திரம் பிறப்பிக்க. | ... | ௧௧ |
| வட்டிகொடுக்கத் திறமில்லாதவன் வட்டியை முதலாக்கிப் புதுப்பத்திரம் பிறப்பிக்க. | ... | ௧௫ |
| வட்டியிற் சிலபொருள் கொடுத்தவன் இப்படிப் புதுப்பத்திரம் பிறப்பிக்க. | ... | ௧௮ |
| வறுமையுடைய அந்தணன் வட்டியும் முதலிற் சிலபொருளுங் கொடுத்தபோது அவன்செய்யுங் காரியம். | ... | ௨௩ |
| கடன்பத்திரஞ் சமீபத்திலில்லாதபோது செல்லுஞ் சீட்டுக்கொடுக்க. | ... | ௨௭ |
| தனமுடைய கடனுடையவனிடத்தில் கடனையொருதரத்திற்றானே வாங்குக. | ... | ௨௯ |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| அவன் வட்டியிற் சில பொருள்கொடுத்தா லதை வாங்குதல் கூடாது. | உஉ | க |
| வாங்கினால் அது வட்டிக்குச் செல்லாகாது. | ... | ங |
| ஈட்டைக் கொடுக்கும்வகை. | ... | ரு |
| ஈடானது கடன்முழுதுஞ் செல்லுமளவு மனுபோகிக்கப்படும். | ... | சு |
| பற்றிக்கொண்ட பொருளுக்குப் பற்றுச்சீட்டுக கொடாதபோது கடன்காரனுக்குண்டாகுங் காரியம். | ... | கஉ |
| நிலுவைப்பொரு ளதிகமாயிருந்தால் கடனுடையவன் செலுத்திய பொருளுக்கு வட்டியுண்டாகும் விஷயம். | ... | கள |
| கொடுத்தகடனை வாங்குமுபாயம். | ... | உக |
| உபாயம் நால்வகைப்படும். | ... | உங |
| தருமவுபாயம். | ... | உள |
| கபடவுபாயம். | ... | ஙக |
| வலிச்செய லுபாயம். | உங | ரு |
| ஆசரிதவுபாயம். | ... | அ |
| கடன்காரன் அவ்வுபாயங்களை யிப்படிச்செய்க. | ... | கஉ |
| தருமவுபாயமும் கபடவுபாயமு மின்னாரிடத்திற் செய்க. | ... | கசு |
| வலிச்செய லுபாயமுதலானவைகளை யின்னாரிடத்திற் செய்க. | ... | உo |
| தாழ்ந்தசாதித்துஷ்டரான கடனுடையாரிடத்திற் கடனை வாங்கும்வகை. | ... | உச |
| ஜாமீன்கொடாத கடனுடையானை யின்னகாலங்களில் விடுக. | ... | உள |
| கிடைத்தும் ஜாமீன்கொடாதவனைக் காவற்படுத்துக. | ... | ஙக |
| கிடையாமையாற் ஜாமீன்கொடாதவனைக்குறித்த செய்கை. | உச | க |
| விதிப்படி தடுத்தல்முதலானவை செய்தற்குக் கடன்காரனுக்கு அதிகாரமுண்டு. | ... | ரு |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| கடன்காரன் சாத்திரவிரோதமாகக் கடனுடையவனைத் துன்பப்படுத்தின லவனுக்கு விதிக்குந் தண்டம். | உச | கூ |
| கடனுடையவன் கடனை யில்லையென்னுமல் மாறுபாடுபேசினல் அவனிடத்திற் கடனை யிப்படிவாங்கிக் கொள்க. | ... | கஎ |
| ஐயப்பட்ட கடனைக்குறித்துக் கடன்காரன் வலிமைசெய்தா லவனுக்குண்டாகுங் கேடு. | ... | உச |
| பொருளுடையவனுகிய கடனுடையவன் வெண்ணிலைக் கடனைக்கொடாதபோது அதனை யரசன் கொடுப்பிக்க. | ... | ஙக |
| பொருளில்லாதவனுகிய கடனுடையவன் பொருளிரட்டிப்பானதற்கு மேல்வட்டியைக்குறித்துச் செய்யுங்காரியம். | உரு | உ ரு |
| ஏற்படுத்தியகாலஞ் சென்றவுடனே கடன்காரன் வேறுபத்திரம் பிறப்பிக்க. | ... | சு |
| அர்தணனுகிய கடனுடையவனிடத்தில் கடனைப் பற்றிக்கொள்ளும் வகை. | ... | க௦ |
| உழவன் முதலானவர்களிடத்திற் கடனைப் பற்றிக் கொள்ளும் வகை. | ... | கரு |
| தாழ்ந்தசாதிக் கடனுடையவளிடத்திற் கடனைப் பற்றிக்கொள்ளும் வகை. | ... | உ௦ |
| கடனுடையவன் வேலைசெய்ய வொப்பாதவனும் பொருள்கொடுக்கச் சத்தியில்லாதவனுமானல் அவனைக் காவற்படுத்துக. | ... | உச |
| கடனுடையவன் சமசாதித் தனிகருடைய கடனைத்தீர்க்கும் வகை. | ... | உஅ |
| வேறுபட்டசாதித் கடன்காரருடைய கடனைத்தீர்க்கும் வகை. | ... | ங௦ |
| பொருளுடைய கடனுடையவன் ஒருதினத்திற் பலரிடத்தில் வாங்கினகடனைத் தீர்க்கும் வகை. | உசு | உ |
| பொருளற்பமாயிருந்தால் கடனைத்தீர்க்கும் வகை. | ... | எ |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| நிலுவையாய்நின்ற கடன்காரருடைய கடனுக்கீடு கடனுடையான் செய்யும் வேலையே. | உசு | கo |
| ஒருதினத்திற் கடன்கொடுத்த கடன்காரர் பலரும் ஈட்டுப்பொருளைக் குறித்துச் செய்யுங்காரியம். | ... | கரு |
| பலரிடத்திற் பொருள்வாங்கி வாணிகஞ்செய்யுங் கடனுடையவன் உண்டான இலாபத்தை யின்னானுக்குக்கொடுக்க. | ... | உo |
| கடனைத்தீர்க்கத்தக்கவ ரின்னார். | ... | உசு |
| கடனைத்தீர்க்குந் திறமின்மை முதலானவையடைந்த பிதாவின்கடனைக் குற்றமில்லாத தகுதிப்புத்திரன் தீர்க்க. | ... | உசு |
| பிதாவிருக்குமிடந் தெரிந்தா லவன்கடனைப புத்திரன் தீர்க்கவேண்டுவதில்லை. | உஎ | க |
| பிறவிக் குருடுமுதலான குற்றமுடைய பிதாவின் கடனைக் கொடுக்கவேண்டுவதில்லை. | ... | ரு |
| குற்றமுடைய புத்திரர் சமீபத்திலிருக்கும் பிதாவின் கடனைக் கொடுக்கவேண்டுவதில்லை. | ... | சு |
| இறந்துபோன பிதாவின் கடனைப் பாகம்பிரித்துக் கொள்ளாம லவனுடன்கூடி யிருந்தமைந்தர் தீர்க்க. | ... | கo |
| அவிபத்த புத்திரர்களெல்லாருந் தலைமையானால் பிதாவின்கடனைப் பொதுப்பொருளினாலே தீர்க்க. | ... | கசு |
| புத்திரன் தந்தைகடனை முன்புதீர்த்துப் பின்பு தனது கடனைத் தீர்க்க. | ... | உo |
| கொடுக்கத்தாகத தாகியபிதாவின் கடன் விஷயம். | ... | உக |
| பிதாவுண்டாக்கிய கள்ளுக்கடன் முதலானவைகளைப் புத்திரர் தீர்க்கவேண்டுவதில்லை. | ... | உசு |
| பௌத்திரனாலே கொடுக்கத்தக்க கடன்விஷயம். | உஅ | ரு |
| பாட்டனுடைய இப்படிப்பட்ட கடனைப் பௌத்திரன் வட்டியில்லாமல் தீர்க்க. | ... | சு |
| பாட்டன் கடனில் தந்தைவைத்த நிலுவையைப் பௌத்திரன் தீர்க்க. | ... | கூ |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| கடன்காரன் மெய்ப்படுத்தின கடனைப் பௌத்திரன் தீர்க்க. | உஅ | கக |
| பாட்டன் கள்ளுக்குடி முதலியவற்றாலுண்டாக்கிய கடனைப் பௌத்திரன் கொடுக்கவேண்டுவதில்லை. | | கச |
| சந்நியாசமுதலியவற்றையடைந்த பாட்டனுடைய கடனைப் பௌத்திரன் தீர்க்க. | ... | கஎ |
| பௌத்திரன் பாட்டன்கடனை அவன் பொருளையடைந்தபோது வட்டியோடும் அடையாத போதுவட்டியில்லாமலுங் கொடுக்க. | ... | உ0 |
| பௌத்திரனுடைய புத்திரன் தன் பிதாவினுடைய பாட்டன்பொருளை யடையாவிடில் கடனைத் தீர்க்கவேண்டுவதில்லை. | ... | உச |
| பாட்டனுந் தந்தையுந் தானும் வாங்கினகடனை முறையே தீர்க்க. | ... | உஎ |
| புத்திரனைக்குறித்துச் சொன்ன விசேஷங்களெல்லாம் பௌத்திரருக்குங் கொள்க. | ... | உகூ |
| **கடனுடையவனது பொருளையடைந்தவன் முதலானவர்களின் விஷயம்.** | உகூ | க |
| புத்திரரும் பௌத்திரருமில்லாம லிறந்துபோனவனுடைய பொருளையடைந்தவன் முதலானவர்கள் அவனுடைய கடனைத்தீர்க்க. | ... | ச |
| புருஷனிறந்தபின்பு தன் மாமன்முதலான அன்னியனை யடுத்தவளுடைய புருஷன் கடனைத்தீர்ப்பவரின்னார். | ... | கக |
| அவர்களதைத் தீராவிடில் அவளை விடுக. | ... | கரு |
| **குடும்பவிஷயம்.** | ... | கஎ |
| குடும்பங் காத்தற்பொருட்டு வாங்கினகடனைக் குடும்பத்தலைவன் தீர்க்க. | ... | ககூ |
| கடனுடையவள் புத்திரனைவிட்டுநீங்கியன்னியனையடுத்திருந்தா லவள்கடனைப் புத்திரனே தீர்க்க. | ... | உச |
| குடும்பத்தலைவன் சம்மதியால் குடும்பங் காத்தலுக்கு வேறான காரியத்தைக்குறித்து குடும்பத்தார் வாங்கினகடனைத் தலைவன் தீர்க்க. | ... | உகூ |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| ஆபத்துக்காலத்தில் புத்திரன் முதலானவர்கள்வாங்கினகடனைக் குடும்பத்தலைவன் தீர்க்க. | ௩௦ | ௨ |
| குடும்பப் பொருட்டன்றி மைந்தனும்-மனைவியும்-வாங்கினகடனை யிச்சையுண்டானால் தலைவன் தீர்க்கலாம். | ... | ௮ |
| ஆபத்துநிமித்தம் புத்திரன் முதலானவர்கள் வாங்கினகடனை யிச்சையில்லாவிடினுந் தலைவன் தீர்க்க. | ... | ௧௨ |
| வண்ணான் முதலானவர்கள் தங்களுடைய மனைவியருண்டாக்கிய எவ்வகைக்கடனையு மெப்படியுந் தீர்க்கவேண்டும். | ... | ௧௫ |
| அவிபத்தர் குடும்பப்பொருட்டு வாங்கினகடனைத் தலைவனில்லாதபோது பாகத்திற்குரியவர்கள் தீர்க்க. | ... | ௨௦ |
| கணவனு மைந்தனுஞ்செய்தகடனை மனைவியும் புத்திரன் செய்தகடனைப் பிதாவும் மனைவிசெய்தகடனைக் கணவனுந் தீர்க்கவேண்டும். | ... | ௨௪ |
| பராதீனமாதர் விஷயம். | ... | ௨௭ |
| மனைவி தீர்க்கத்தக்க கடன். | ... | ௨௯ |
| மனைவிக்குச் சம்பந்தமில்லாத கடன். | ... | ௩௨ |
| மனைவி தானொப்புக்கொண்ட கடனைத்தீர்க்க. | ௩௧ | ௧ |
| மனைவி தனித்துவாங்கினகடனைத் தானே தீர்க்க. | ... | ௩ |
| மனைவி கணவன் பொருளையடைந்தால் அவன் சொன்னகடனைத் தீர்க்க. | ... | ௫ |
| கடன்காரனிறந்துபோனபோதுகடனைச்செலுத்துமுறைமை | ... | ௮ |
| வேதியனாகிய கடன்காரனிறந்தபோது அவனுடைய கடனைச் செலுத்து முறைமை. | ... | ௧௧ |
| நிக்ஷேபத்தைவைத்தவ னில்லாதபோது மிம்முறையே யறிக. | ... | ௧௮ |
| கடன்கோடல் முற்றிற்று. | | |
| உபநிதி. | ... | ௨௧ |
| உபநிதி மூன்றுவகைப்படும். | ... | ௨௩ |
| உபநிதி யிலக்ஷணம். | ... | ௨௬ |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| நிக்ஷேபவிலக்ஷணம். | ௩௨ | ௩ |
| நியாசவிலக்ஷணம். | ... | ௭ |
| அவள் க்ஷத்திரியன் வைசியனைப்புணர்ந்தால் தண்டமின்னது. | ... | ௭ |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| ஒருத்தி தானே வலிமையினால் ஒருவனைப் புணர்ந்தால் புணர்ந்தவனுக்கும் அவளுக்கும் தண்டமின்னது. | ௧௧௦ | ௧௧ |
| உயர்ந்தஜாதி கன்னிகையின் குறியை ஒருவன் விரல் முதலியவற்றால் வடுப்படுத்தினால் தண்டமின்னது. | ... | ௧௫ |
| வன்செய்கை முற்றிற்று. | | |
| **சொற்கோடுமை.** | ... | ௧௬ |
| சொற்கொடுமை யின்னது. | ... | ௨௧ |
| தேசநிந்தையின் விபரம். | ... | ௨௪ |
| ஜாதிநிந்தையின் விபரம். | ... | ௨௬ |
| குலநிந்தையின் விபரம். | ... | ௨௮ |
| வித்தைநிந்தையின் விபரம். | ... | ௩௦ |
| சிற்பநிந்தையின் விபரம். | ௧௧௧ | ௧ |
| உயர்ந்தஜாதியினை நிந்தித்தால் தண்டமின்னது. | ... | ௨ |
| நிந்தை மூவகைப்படும். | ... | ௬ |
| முதல்நிந்தையின்னது. | | ௯ |
| நடுநிந்தையின்னது. | ... | ௧௦ |
| உயர்நிந்தையின்னது. | ... | ௧௩ |
| முதல் நடு உயர்நிந்தைகளுக்கு தண்டமின்னது. | ... | ௧௭ |
| இழிவான ஆண்குறிமுதலியவற்றை காண்பித்து அவர்களைச்சொல்லுதல் முதலியவை சொற்கொடுமையாம். | ... | ௨௧ |
| முன்னே வைதவன் இன்னானென்று தெரியாதபோது இருவர்க்கும் தனித்தனி தண்டம் விதிக்க. | ... | ௨௬ |
| முன்னே வைதவனுக்கு தண்டமின்னது. | ... | ௩௦ |
| வாய்தவறி தெரியாமற் சொன்னேன் என்று வைதவன் சொன்னால் தண்டமின்னது. | ௧௧௨ | ௨ |
| சொற்கொடுமை முற்றிற்று. | | |
| **தண்டக் கோடுமை.** | ... | ௬ |
| தண்டக்கொடுமையின் விவரம். | ... | ௮ |
| அக்கொடுமை மூவகைப்படும். | ... | ௧௫ |
| சாம்பல் சேறு புழுதியுடின் மேலெறிந்தவனுக்கு தண்டமின்னது. | ... | ௨௦ |
| கோழை மல முதலியவை எறிந்தவனுக்கு தண்டமின்னது. | ... | ௨௨ |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
| --- | --- | --- |
| வாந்தி சுக்கில இரத்த முதலியவைகளா லெறிந்தால். | கக௨ | ௨௫ |
| கைகால் மயிர் ஆடை இவற்றைப்பற்றி யிழுத்தால். | ... | ௨௯ |
| விறகு முதலியவற்றால் இரத்தம் காணாதபடி யடித்தவனுக்கு தண்டமின்னது. | ககங | ௨ |
| இரத்தங் காண தோல் அற அடித்தவனுக்கு தண்டமின்னது. | ... | ௫ |
| தசைதெறிக்க அடித்தவனுக்கு தண்டமின்னது. | ... | எ |
| எலும்புமுறிய அடித்தவனுக்கு தண்டமின்னது. | ... | கூ |
| கைகால் முதலிய வறும்படி அடித்தவனுக்கு தண்டமின்னது. | ... | க௨ |
| புண்பட அடித்தவனுக்கு தண்டமின்னது. | ... | க௫ |
| உலக்கை முதலியவை கொண்டு வீட்டுச் சுவரை அடித்தவனுக்கு. | ... | கசு |
| சுவரை விரிய அடித்தவனுக்கு. | ... | ௨க |
| சுவர் விழும்படி செய்தவனுக்கு. | ... | ௨ச |
| வீட்டிலே கல்லையும் முள்ளையும் போட்டவனுக்கு | ... | ௨எ |
| யானை - குதிரை - பசு இவை முதலான மிருகங்களின் கால்முதலான உருப்புகளறும்படி அடித்தவனுக்கு. | ... | ஙக |
| மரத்தை வெட்டினவனுக்கு. | ககச | க |
| ஜீவனத்திற்கு ஏதுவானமரத்தை வெட்டினவனுக்கு தண்டமின்னது. | ... | ௫ |
| தண்டக்கொடுமை முற்றிற்று. | | |
| சூது | ... | கக |
| சூதாடுதல் அரசன்விலக்குக. | ... | கங |
| சூதாடுதலும் உண்டென்று சிலமுனிவர்கொண்டனர். | ... | கஎ |
| சூது இருவகைப்படும். | ... | கசு |
| கருவிச்சூது இன்னது. | ... | ௨௨ |
| உயிர்ச்சூது இன்னது. | ... | ௨ங |
| சூதுச்சாலைஅதிகாரி அரசனுக்கு கப்பங்கொடுத்து சூதாடுசாலை ஏற்படுத்துக. | ... | ௨கூ |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| சூதாடவிரும்பினோர் இறைகூறுகொடுத்தாடலாம் | ககச | உகூ |
| பந்தயம்வைத்து ஆடினவர்களில் இவ்வாறு வசூல் செய்க. | ககரு | உ |
| அவ்வதிகாரி உடன்படிக்கைப்படி அரசனுக்குப் பொருள்கொடுக்க. | ... | ரு |
| அரசனவ்வதிகாரிக்கு துன்பம்வாராமலே காக்க. | ... | எ |
| சூதாடிதோற்றவன் பணங்கொடாவிட்டால் அரசனைதைக் கொடுப்பிக்க. | ... | கூ |
| விளையாட்டி நிமித்தம் சூதாடினால் அரசனுக்கு ஒன்றுங் கொடுக்கவேண்டுதில்லை. | ... | கஉ |
| சூதுச்சாலையதிகாரி சூதில் தோற்றவனிடத்து பணம் வசூல்செய்ய காலவளவுகொடுக்க. | ... | கரு |
| சூதிலே விவாதப்பட்டால் சூதுச்சாலையதிகாரி நிச்சயஞ்செய்க. | ... | கஅ |
| ஏற்படுத்தியகாலவரையுள் பணஞ்சேராவிடில்வட்டிகட்டிவாங்குக. | ... | உ0 |
| சூதிலே புரட்டுச் செய்தவனை இன்னபடி தண்டிக்க. | ... | உஉ |
| சூது முற்றிற்று. | | |
| பொதுவானசிலதண்டங்கள். | ... | உஎ |
| தண்டம் இருவகைப்படும். | ... | உகூ |
| உடல் தண்டமின்னது. | ... | ௩உ |
| பொருள் தண்டமின்னது. | ககசு | க |
| உடல் தண்டத்துக்கு ஸ்தானங்கள் இன்னவையாம். | ... | ௩ |
| அவரவர்செய்த குற்றத்திற்குத் தக்கபடி இராசநீதியிற்காட்டிய தண்டங்கள் விதிக்க. | ... | அ |
| உத்தமனான அந்தணனுக்கு கொலைவிதிக்க நேரிட்டால் அவனைத் தலை மழித்தல் முதலானவைகளையே சிட்சையாகவிதிக்க வதைகூடாது. | ... | கச |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| அரசனானவன் காலம் - தேசம் - குற்றம் - ஜாதி - வலி - வயது - தருமம் பொருள் இவைகளையறிந்து தண்டனை விதிக்க. | ககசு | ககூ |
| தண்டப்பொருளின் தொகையும் பெயரும். | ... | உசு |
| தண்டப்பொருள் பிரதம - சாகசம் - மாத்திமசாகசம் உத்தமசாகசமென மூவகைப்படும். | ... | உஎ |
| பிரமவதை முதலிய மகாபாதகம்செய்தவன் கொல்லத்தக்கவன் அறியாமையாற் செய்தவன் எல்லாப் பொருளையும் இழப்பான். | ககஎ | உ |
| அறிந்துசெய்தவன் அந்தணனானால் தேசத்தினின்று நீக்குதல் தேசமெங்கும் சுற்றுதல் முதலிய சிட்சை செய்க. | ... | க0 |
| அறியாமையாற் செய்தவனுக்கு தண்டமின்னது. | ... | கரு |
| மனிதரில்லாவிடத்தில் துன்பஞ்செய்பவர்கள் கொல்லத்தக்கவர்கள். | ... | கஅ |
| மந்திரமுதலியவை செய்பவர்களுக்கு தண்டமின்னது. | ... | உக |
| வாணிகஞ்செய்பவர்கள் குறைந்தவிலைக்கு வாங்கி அதிகவிலைக்குவிற்றால் தண்டமின்னது. | ... | உச |
| அரசன் வாணிகஞ்செய்வோரை யழைப்பித்து சரக்குகளின்விலையி னேற்பாடுசெய்க. | ... | உஎ |
| அரசன் சரக்குகளை விற்பனைசெய்வதில் இவ்வளவுக்கு இவ்வளவுலாபம் நிச்சயிக்க. | ... | ங0 |
| கொடுத்த ஆடையை வண்ணான் முருக்கம்பலகையில் துவைத்து உலர்த்திகொடுக்க. | ககஅ | உ |
| வெளுக்கப்பட்ட ஆடையை வண்ணானுடுத்தினால் தண்டமின்னது. | ... | ச |
| வண்ணான் ஆடைகளை வாடகை முதலானவைகளுக்கு கொடுத்தால் தண்டமின்னது. | ... | சு |
| ஒருதரம் இரண்டுதரம் மூன்றுதரம் நான்குதரம் பலதரம் வெளுக்கப்பட்ட ஆடையைக்கெடுத்தால் முறையே அவ்வாடையின் விலைக்குத்தக்கபடி பொருள் கொடுக்க. | ... | க0 |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| அரசன் ஆக்கினையின்றி குற்றமில்லாதவனை கட்டுதலும்குற்றமுள்ளவனை கட்டவிழ்த்துவிடுதலையுஞ்செய்தால்தண்டமின்னது. | ககஅ | சஅ |
| ஒருவன் பழுதானசரக்கை விலைப்படுத்த நல்லசரக்கோடுகலந்துவிற்றால் அவனுக்கு தண்டமின்னது. | ... | உக |
| ஒருபொருளை இன்னொருபொருளாகக்காட்டி விற்பவனுக்கு தண்டமின்னது. | ... | உச |
| ஷை | கககூ | க |
| பிணத்தின்மேலேதரித்த பூமாலைப்பத்திர முதலானவைகளை விற்றவனுக்கும் அரசன் சிம்மாசனமுதலியவைஏறினவனுக்கும் பிதா குருமுதலானவர்களை அடித்தவனுக்கும் தண்டமின்னது. | ... | க0 |
| அரசனுக்கு தீங்குசொல்லுகிறவன் முதலியவர்களுக்கு தண்டமின்னது. | ... | கச |
| தந்தைக்கும் மைந்தனுக்கும், புருஷனுக்கும் மனைவிக்கும் உண்டாகிய விவாதத்தை பெருக்கினால் அவனுக்கு தண்டமின்னது, | ... | ககூ |
| வாக்குதத்தம்முதலிய செய்து பிசகினவனுக்கும் இன்னும் அபகாரமான காரியங்களைச் செய்தவனுக்கும் தண்டமின்னது. | ... | உங |
| திருடர்முதலானவர்கள் வந்தகாலத்தில் சகாயஞ்செய்தவனுக்கும் இன்னுந் தகாதசெய்கைகளைச் செய்தவனுக்குந் தண்டமின்னது. | ... | உஅ |
| துலாக்கோல் படி முதலியவைகளை ஏற்றங்குறைவு உண்டாக்கினவனுக்கு தண்டமின்னது. | கஉ0 | ச |
| வாகடசாஸ்திரந் தெரியாமல் பசுமுதலியவைகளுக்கு சிகிற்சைபண்ணினால் தண்டமின்னது- | ... | அ |
| ஒழிபு. | ... | கஉ |
| ஒழிபு இன்னது. | ... | க ச. |
| இராசசாசனத்தை வேறுபாடாக எழுதினவன் விபசாரஞ்செய்தவன் திருடினவன் இவர்களை பிடித்து அரசனுக்கு அறிவியாமற்போனால். | ... | கரு |

| பொருட்குறிப்பு. | பக்கம். | வரி. |
|---|---|---|
| இராசவிரோதம் முதலியவைசெய்பவர்களுக்கு தண்டமின்னது. | க௨0 | ௨0 |
| எல்லாப் பொருள்களையும் கவர்ச்சியில் அரசன் அவரவருடைய சீவனசாதனங்களைமாத்திரம் அவரவர்களுக்கு கொடுத்துவிடுக. | ... | ௨௪ |
| பண்டிவாகனாதிகளுக்குஅபாயநேர்ந்தகாலத்தில் மனுஷர்முதலானவரை விலகிப்போவென்று சொல்லியும் பிராணிகட்கு சேதம்வந்தால். | ... | ௨௯ |
| ஒருவன் நான்சாகிறேன் நான்சாகிறேனென்று கூப்பிடும் திறமையுடைய சாரதி வண்டி வாகனங்களை விலக்காமற்போனால். | க௨க | ௩ |
| அரசன் தான்நியமித்த அதிகாரிகள் செய்கைகளை அறிந்து நல்லவர்களையுந் துஷ்டர்களையுந் தக்கபடி நடத்துக. | ... | எ |
| கைக்கூலிவாங்கினவனை, இவ்வாறுதண்டிக்க. | ... | க0 |
| இந்நூலிற் சொல்லப்படாதவை யெல்லாம் மனுஸ்மிருதியிற் கண்டுணர்க. | ... | க௩ |


ஒழிபு முற்றிற்று.

விவகாரசாரசங்கிரகம் பொருட்குறிப்பு முற்றிற்று.

# விவகாரசாரசங்கிரகம்.

## சிறப்புவிதிப்படலம்.

### கடன்கோடல் அல்லது கடன் கொடுத்தல்.

நாரதர்.

கடன்கோடலாவது - கொடுக்கத்தக்கது, கொடுக்கத்தகாதது, என்னல் எவ்விடத்து எப்படி எதுகொடுக்கல் வாங்கலின் றருமமென்று ஏழுவிதமான விசேஷணங்களை யுடையது. (க)

பிரகற்பதி.

அந்தக்கடனானது முதற்பொருளுக்கும் வட்டிக்குங் குறைவுபடாத ஈட்டையும், தகுதியான ஜாமீனையுஞ் சாக்ஷியினையுமுடைய தாகவும் பத்திரத்திலெழுதப்பட்டதாகவுங் கொடுக்கப்படுகை. (உ)

அசையும்பொருள் அசையாப்பொருளுமாகிய ஈடானது துய்ப்பீடும், காப்பீடும், காலவரையீடும், காலவரையிலீடுமெனநால்வகைப்படும். (ங)

துய்ப்பீடாவது - அநுபோகிக்கத் தக்கதாம்.

காப்பீடாவது - பாசன முதலானவைகளில்வைத்துக் காக்கத்தக்கதாம்.

காலவரையீடாவது- இன்னகாலத்தில் மீட்கப்படுமென்று காலவளவேற்படுத்தி வைக்கப்படுவதாம்.

காலவரையிலீடாவது - காலவளவேற்படுத்தாமல் மீட்டுக்கொள்ளுமளவும் உன்னிடத்தி லிருக்கத்தக்கதென்று வைக்கப்படுவதாம்.

ஜாமீன்தார் மேற்சொல்லப்படு மிலக்ஷணமுடையவராகவும், சாக்ஷிகள் முன்சொல்லப்பட்ட விலக்ஷணமுடையவராகவும், பத்திரமா

னது தேசத்தமைப்பிற்காட்டியு விலக்ஷணமுடையதாகவு மிருக்கவேண்டும். (௪)

வட்டிலக்ஷணம்:—மேல்வரும் வட்டிப் பிரகாணத்திற் சொல்லப்படும். (௫)

நாரதர்.

நம்புதற்பொருட்டு ஈடும் - ஜாமீனும் - விளக்கத்தின்பொருட்டுப் பத்திரமுஞ் சாக்ஷிகளு மிருக்கவேண்டும். (௬)

ஆரீதர்.

இந்தச்சாதனங்க ளொன்குமில்லாமற் கடன்கொடுத்து வழக்குண்டானுல் காரியசித்தி யில்லை. (௭)

காத்தியாயனர்.

உரிமையின்மையராகிய பெண் - அடிமை - பால்யன் இவர்களுக்குக் கடன்கொடுத்தல் கூடாது. (௮)

## ஈட்டின்விதி.

ஆரீதர்.

தனிகனனவன் - தன்னிடத்தில் கடன்காரன் ஈடாகவைத்ததை அவனுக்குக் கொடுக்குமளவும்-கெடுதல், குறைதல் வேறுபடல் - பயனின்மை - உருவமாறல் இவைகளில்லாமல்காக்க. (௯)

பலமுனிவர்,

இப்படிக் காக்கப்படுமளவில் தனிகனுடைய குற்றமில்லாமலே தீக்கோள் தேசத்துன்பமிவை முதலானதை வீகத்தாலும் பிழையில்லாமலிருக்கையி லரசன்றன் மனதுக்கேற்றபடி பிறனுக்குத் துன்பஞ் செய்தலாகிய விராசிகத்தாலும் திருடன், சுற்றத்தாரிவர்களினுலும் ஈடுக்குக் கெடுதிகேரிட்டால் - கடனுடையவன் வட்டியோடு முதற்பொருளையாவது முன்புவைத்த ஈட்டுக்குச்சமமான வேறீட்டையாவது தனிகனுக்குக் கொடுக்க. (௧0)

மேற்சொல்லியபடியே 'தனிகனுடைய குற்றமில்லாம லீடாக வைக்கப்பட்ட நிலமானது அரசனலேனும் வெள்ளத்தினலேனுங் கேடுற்றுல் வேறுநிலத்தை யீடாகக்கொடுக்க. (௧௧)

நாரதர்,

ஈடானது மேற்சொல்லியபடி கெடாமல் காக்கப்பட் டிருக்கையில் இரட்டிப்புக் குட்பட்டகாலத்திற் ருனேசிலநாள் வட்டித் தொ

கைக்குச் சமமானால் குறைநாளை வட்டிக்குத்தக்கதான வேறீட்டை வாங்கிக்கொள்க. (௧௨)

ஆரீதர்.

காப்பீட்டையேனும் - துய்ப்பீட்டையேனும் - ஏற்பாட்டின்படியே காப்பதையேனும் துய்ப்பதையேனுஞ் செய்க. (௧௩)

அப்படிக் காக்கத்தக்கதை யனுபோகித்தாலும் துய்க்கத்தக்கதையனு போகியாவிடினும் வட்டியில்லை துய்ப்பீட்டிலேயனு போகமே வட்டியாம். (௧௪)

பலமுனிவர்.

காப்பீட்டைநியமத்துக்கு விரோதமாக பலாத்காரமாய் அற்பகாலமனுபோகித்தால் கடன்காரனுடைய வட்டிகெடும் நெடுங்கால மனுபோகித்தால் வட்டியுடனே முதற்பொருள் முழுதுங்கெடும். (௧௫)

மனு.

துய்ப்பீடானது - கடனுடையவனுடைய குற்றத்தினாலே அனுபோகிக்கப்படாவிடி லனுபோகத்துக்கு தக்கபொருள் ஜாமீன்தாரனிடத்தாவாது கடன்கொடுத்தவனிடத்தாவது வாங்கத்தக்கது. (௧௬)

காத்தியாயனர்.

வேலைசெய்விக்கத்தக்க வேலைக்காரியையாவது பண்டிமுதலானவைகளையாவது காப்பீடாக வைத்தவிஷயத்திற் கடன்பட்டவனுக்குச்சொல்லாமல் கடன்காரனந்தவேலைக்காரியாலாவது, பண்டிமுதலானவைகளாலாவது வேலைசெய்வித்துக்கொண்டால் அவனுடையவட்டிகெடும் அல்லது செய்தவேலையைக் குறித்துக்கேட்டகூலியையும் - வாடகையையும் - அவனந்தக் கடனுடையவனுக்குக் கொடுக்க. (௧௭)

துய்ப்பீட்டுவிடயத்தில் வேலைக்காரி முதலானவர்கள் வேலைசெய்யும்பொழுது அவர்களைத் கடன்கொடுத்தவன் திட்டியு மடித்துரோஷஞ்செய்தா லவனுக்குப்பூருவசாகசதண்டம் விதிக்கப்படும். ()

எவ்வளவேனு மனுபோகித்தல் கூடாதென்றுவைத்த துய்ப்பீட்டின் விஷயத்தில் கடன்கொடுத்தவன் வலிமையா லதனையனுபோகித்தா லவன் பூருவசாக சதண்டத்தையடைவான் கடனாகக்கொடுத்த பொருள்கெடும் ஈடானது கடனுடையவனை யடையும். (௧௯)

யாஞ்ஞவற்கியர்.

கடன்கொடுத்தவனுடைய அஜாக்ரதையினாலே துய்ப்பீடேனும் காப்பீடேனும் விசாரணைக்குபோனால் அவன் தன்னிடத்தில்வைத்தபொழுதிருந்தபடியே அந்தஈட்டைச் செய்துகொடுக்க. (௨௦)

அப்படிக் கொடுத்தாற் கடன்கொடுத்தவனுக்கு முதற்பொருளோடு வட்டிகிடைக்கும். (உக)

நாரதர்.

காப்பீடானது அனுபோகத்தினாலே கெட்டுப்போனால் அதை முன்போலச் செய்வதற்கு எவ்வளவு பொருள் செலவாகுமோ அது அவ்வீட்டின் வட்டிக்குச் சமமாயிருந்து, கடன்பட்டவன் அவ்வீட்டை கெட்டுப்போனபடியே கடன்காரனிடமிருந்து பெற்றுக்கொண்டால் அவனுக்கு முதற்பொருள்மாத்திரம் கொடுப்பதன்றி வட்டி கொடுக்கவேண்டுவதில்லை. (உஉ)

காப்பீட்டைக் கடன்கொடுத்தவ னனுபோகத்தினாலே குறைவு முதலானவை யுறும்படிசெய்தா லந்தக்குறைவு முதலானவைகளுக்குத் தக்கபொருள் முதற்பொருளிலே கெடும். (உங)

வியாசர்.

கடன் கொடுத்தவனுடைய குற்றத்தினாலே நஷ்டமாய்ப்போன பொன்முதலான ஈடானது வட்டியோடு கூடிய முதற்பொருளுக்குக் குறைவாயிருந்தால் கடன்கொடுத்தவனந்த ஈட்டின்விலைப்பொருளைக் கடனுடையவனுக்குக்கொடுத்துத் தன்னுடைய கடனை வட்டியோடு மடைக. (உச)

பிறகற்பதி.

நஷ்டமாய்ப்போன ஈடானது முதலுக்கும் வட்டிக்கு மதிகவிலையுடையதாயிருந்தால் கடன்கொடுத்தவன் தனக்குள்ளவட்டிக்கு முதலுக்கு மதிகமாயிருந்த பொருளைக் கடன்பட்டவனுக்குக் கொடுக்க.

ஆரீதர்.

கடன்கொடுத்தவன் கொடுக்கவேண்டிய பொருளைக் கொடாவிடில் ஈட்டுஜாமீன்கொடுத்தவன் கடனுடையவனுக் கதனைக்கொடுக்க.

ஈடு கெடுதியடைந்த விஷயத்தில் கடனுடையவ னந்த ஈட்டின் விலைக்கு இரண்டுபங்காவது மூன்று பங்காவது கொடுக்கவேண்டுமென்று அநியாயத்தினாலே கடன் கொடுத்தவனையாவது ஜாமீன் கொடுத்தவனையாவது துன்பப்படுத்தினபோது அவனப்படித் துன்பப்படுத்தினது அநியாயமென்று ருஜுவானா லந்தப்பொருளையும் விதித்த தண்டப்பொருளையும் அரசனுக்குக் கொடுக்க. (உரு)

காத்தியாயனர்.

கடன்கொடுத்தவன் குற்றமுடைய பத்திரத்தினாலே யீட்டை யனுபோகித்தா லரசனந்தப் பத்திரத்தைக்கிழித்து அவனுக்குத் தண்டத்தை விதிக்க. (உஅ)

## ஈட்டிலுடைமை கெடுதல்.

யாஞ்ஞுவற்கியர்.

கடன்பொருளுக்கு வட்டியேற்படுத்திக் காலவரை குறிக்காமல் வட்டியொடு முதற்பொரு ளிரட்டிப்பாகும்பொழுது மீட்டுக்கொள் ளாவிட்டால் இது வுன்னுடையதாகுகவென்று சொல்லிவைத்த காப் பீடானது சொல்லியபடி மீட்கப்படாவிடி லது கடன்கொடுத்தவன தாகும் கடன்பட்டவனுக்குச் சொந்தமாகாது. (உகூ)

காலவள வேற்படுத்திவைத்த ஈடானது சொல்லியபடி யந்தக் காலவளவுக்குள்ளே மீட்கப்படாவிடில் அதுகடன்பட்டவனுக் காகா மல் கடன்காரனுடைடைய தாகிவிடும். (௩0)

வியாசர்.

ஆனுலிவ்விரண்டு விஷயத்திலும் கடன்கார னந்த ஈட்டைப் பொருளிரட்டிப்பான காலத்திற்கு மேலும் ஏற்படுத்திய காலத்திற் குமேலும் முதற்பொருள் தனமானுற் பதினைு நாள்வரையும் ஆடை முதானவைகளாறுற் பத்துநாள்வரையுந் தன்னுடைய பொருளைப் போல விலைசெய்தல் முதலானவை செய்தல்கூடாது அதற்குமேற் செய்யலாம். (௩க)

அந்தப்பதினைு நாட்குள்ளும் - பத்துநாட்குள்ளும் - பொரு ளைக் கொடுத்தீட்டை மீட்டுக்கொள்ளலாம். (௩உ)

மனு.

காலவள வேற்படுத்தாமலேனும் வட்டியொடு முதற்பொருளிர ட்டிப் பாகுங்காலத்து வீடுமீட்கப்படாவிடி லதற்குமேல் இதுவுன் னுடைய தாகுகவென்றுசொல்லாமலேனும்வைத்த ஈட்டுவிஷயத்தில் பொருளிரட்டிப்புக்குமேல் மீட்கப்படுமளவு முதலுக்கு வட்டிவள ராது. (௩௩)

பிரகற்பதி.

மேற்கண்டபடி முதலிரட்டிப் பானதற்குமேல் ஈடுவைத்து கட ன்பட்டவ னிறந்தாலும் காணுமற்போனுலும் கடன்காரன் அந்தக் க டன்பட்டவனது பிள்ளை முதலானவர்களுக் கறிவித்து அவர்க ளந்த ப்பொருளைக் கொடுத்தீட்டை மீட்டுக்கொள்வதற்காகப் பத்துநாட் பொறுத்து அதற்குமேல் சாட்சிகளெதிரே யதைவிற்று இரட்டிப்புக் கதிமாயிருப்பதைக் கடனுடையவ னுடைய மைந்தர்முதலானவர்களு க்குக் கொடுக்க. (௩௪)

காத்தியாயனர்.

மைந்தன் முதலானவர்க ளொருவருமில்லாவிட்டா லந்த மிகு திப்பொருளை யரசனுக்குக்கொடுக்க மேற்சொல்லியபடி மிகுதிப்பொ ருளை வாங்கிக்கொள்ளத்தக்க கடன்பட்டவனுடைய பந்துவி லெவ னுவது நானீட்டை யெடுத்துக்கொண்டு வட்டியுமுதலுங் கொடுக்கி றேனென்று சொன்னு லதனை விற்காம லப்படிச்செய்யலாம். (ருரு)

ஈட்டுப்பொரு ளிரட்டிப்புக்குச் சமமாயிருந்தால் கடன்காரன் சாக்ஷிக ளறிய அதனைவிற்றுத் தானேயெடுத்துக் கொள்க. (ருசா)

வட்டிபொடுகூடிய முதற்பொருளுக் கீடுகுறைவா யிருந்தால் மிகுதியை வாங்கிக்கொள்ளத்தக்கவ னிடத்தில் கடன்கொடுத்தவன் தனக்குச் சேரவேண்டியபொருளை யெந்தவுபாயத்தினுலேனும் வாங் கிக்கொள்க. (ருஎ)

ஆடை முதலானவைகளை முதற்பொருளாகக் கொடுத்தவிஷயத் திலீடாகவைத்த பொருளைவிற்று நான்கு மடங்குமுதலான முடிவான வட்டியையும் முதற்பொருளையும் வாங்கிக்கொண்டு மிகுதியை மேற் சொல்லியபடி கடனுடையவ னுடையமைந்தர் முதலாயினேருக்குக் கொடுக்க. (ருஅ)

பிரகற்பதி.

கடன்காரன் முதலிரட்டிப் பானதற்கு மேல் மேற்சொல்லிய படி யீட்டை விலைசெய்யாமல் அதனை மற்ருேரிடத்தி லீடாகவைத் துப் பொருளைவாங்க நினைத்தா லப்பொழுது தன்னிடத்திலிருந்த ஈட் டையும் பத்திரத்தையுங்கொடுத்து முன்பு தான் கடனுகக்கொடுத்த மூலப்பொரு ளெவ்வளவோ அவ்வளவை மாத்திரம் வாங்கிக்கொள்க.

கடன்காரன் கடன்கொடுக்கும்பொழுது இன்ன காலத்தில் இந் த ஈடு மீட்கப்படாவிடில் இது மற்ருேரிடத்தி லீடாகவைக்கப்படுமெ ன்று சொன்னு லிரட்டிப்புக்குட்பட்ட காலத்திலும் அதனைமற்ருேரி டத்தி லீடாகவைக்கலாம். (ருகூ)

யாஞ்ஞவற்கியர்.

அற்பமான விலையுடையமுத்திரைமோதிர முதலானதையேனும் புண்ணியத்தையேனும் ஈடாகவைத்துப் பொருளைக் கடனுகவாங்கி சொன்னபடி கடனுடையவன் கொடாவிடில் தனிக னரசனுக்கறிவி த்து வட்டியுடனே தன் பொருளையடைக. (சாO)

காலவளவை யேற்படுத்தாமல் வைத்த துய்ப்பீடானது எத்த னைகாலஞ்சென்ருலுங் கெடாது. (சாக)

## ஈடுசித்தித்தல்.

நாரதர்.

கடன் கொடுத்தவன் கடனுடையவனுக்கெதிரே யிவனுடைய வீடு முதலானவைக ளென்னிடத்தி லீடாகவைக்கப்பட்டனவென்று நியாயசபையாருக்கறிவித்து அந்தவீடு முதலானவைகளைத் தக்கபடி வைத்துக்காத்தலினாலே காப்பீடும் அனுபோகித்தலினாலே துய்ப்பீடும் அந்தக்கடன்காரனுக் கீடாகும். (சஉ)

## ஈடுமுதலியவழக்கின் விலக்கம்.

விட்டுணு.

இருவரிடத்தி லீடாக வைத்த விளைநில முதலானதைக்குறித்து அவ்விருவரு மெனதெனதென்று வழக்கிட்டகாலத்தில் அந்த ஈடானது இருவருள் அனுபோகமுடையவனதாகும். (சங)

பிரகற்பதி.

அவ்விருவருக்கு மனுபோகமிருந்தால் முந்தியனுபோகித்தவனுடையதாகும். (சச)

வசிட்டர்.

இருவரும் அதுவரைக்கு மனுபோகியாமல் அனுபோகத்தைக்குறித்து ஒருதினத்தில் விவாதப்பட்டுவந்தால் அவ்விருவரு மதனைப்பங்கிட் டனுபோகிக்க. (சரு)

ஒருதினத்திலே யிருவரிடத்தில் வைக்கப்பட்டது காப்பீடானால் அதைக் கைப்பற்றல் முதலானதை யெவன் முன்னடிச்செய்தானோ அவனுக்கே அது சித்திக்கும். (சசு)

காத்தியாயனர்.

அப்படி யிருவரிடத்தி லொருபொருளை யீடாகவைத்தவனுக்குச் சோரதண்டனை விதிக்கப்படும். (சஎ)

விட்டுணு.

ஒருவன் ஒருவனுக்கொருவருஷஆகாரத்துக்கதிகமான பலனுண்டாகின்ற பூமியை யொருவனிடத்தி லீடாகவைத்து அது மீட்கப்படாம லிருக்கும்பொழுது அந்தப்பூமியைத்தானே மற்றொருவனிடத்தி லீடாகவைத்தா லவனுக்கு அடித்தலாகிய தண்டனை விதிக்கப்படும்.

அதற்குக்குறைந்த பூமியை மேற்சொல்லியபடி வைத்தால் அவனுக்குப் பதினறு பொன்அபராதமாக விதிக்கப்படும். (சஅ)

காத்தியாயனர்.

இருவரிடத்தில் வைக்கப்பட்ட வொருகாப்பீட்டை வாங்கிக்கொள்ளுதற்கு அவ்விருவரு மொருகாலத்தில் வந்தால் அதனை யவ்விருவரும் பங்கிட்டுக் கொள்க. (ருo)

விளை நிலமுதலானவைகள் சாக்ஷி பத்திரங்களுடனே ஒருவனுக்கு அடமானமாகவும் - ஒருவனுக்கு விக்கிரயமாகவும் - ஒருவனுக்கு தானமாகவும் - பண்ணப்பட்டு விரோதம் வந்தபோது அவைகளில் பத்திரத்தா லேற்பட்டதற்கு வலிவுண்டு. (ருக)

அப்படியானாலும் ஈட்டுப்பத்திர மெழுதும்பொழுது ஈட்டுப்பொருளின்னதென்று குறியாமற் பொதுப்பட வெழுதப்பட்ட பத்திரத்திலும் இன்னதின்னதென்று குறித்தெழுதப்பட்ட பத்திரம் வலியுடையதாகும். (ருஉ)

ஒருவன் இந்தநிலமெல்லாம் ஈடென்று பொதுப்படச் சொல்லிவைத்துப் பின்னொருகாலத்தில் கடன்காரனுடைய சம்மதியினாலே யந்தக்கடனுக்கே யீடாக அந்தநிலத்தி லிவ்வளவுநிலம் ஈடென்றுகுறித்துச் சில நிலத்தை யீடாகவைத்தால் அப்படிக் குறிக்கப்பட்ட இரண்டாவதீடானது முந்தின ஈட்டிலும் வலியுடையதாகும். (ருங)

கடன்காரனனவ னீடுவைத்துக்கொண்டு கடன் கொடுத்துப் பின்பு அந்த ஈட்டைக் கொடுத்துவிட்டு நம்புதலினாலே வெண்ணிலையாக விரண்டாவது கடன் பத்திரமெழுதிக்கொண்டால் அந்த வெண்ணிலைப்பத்திரம் முந்தினபத்திரத்தினும் வலியுடையதாகும். (ருச)

யாஞ்ஞவற்கியர்.

இப்படியே பொருளைக்குறித்த எல்லா வழக்குகளிலும் இரண்டாவது கிரியையே வலியுடையதாகும். (ருரு)

ஆனால் ஒற்றி - விற்றல் - தானமிவைகளில் முந்திசெய்யப்பட்டதே வலியுடையதாகும். (ருசா)

பிரகற்பதி.

ஒருதினத்தி லொருபொருள் மூவர்க்கும் தனித்தனி ஒற்றியாகவும் - விக்கிரயமாகவும் - தானமாகவும் பண்ணப்பட்டவிஷயத்தி லந்தப் பொருளை மூன்றுபங்காக்கித் தானம்பெற்றவனுக் கொருபங்குகொடுத்து மற்றை யிரண்டுபங்கை விலைக்குக் கொண்டவனும் ஈடாகவைத்துக்கொண்டவனுந்தாங்கள் கொடுத்தபொருளின்றொகைக்குத் தக்கபடி பிரித்துக்கொள்க. (ருஎ)

## ஈட்டைமீட்டல்.

### வியாசர்.

ஒருபொருளைக் காப்பீடாகவைத்துக் கடன்வாங்கினவிஷயத்தில் கடனுடையவன் வட்டியோடு பொருளிரட்டிப் பானவுடனவது அதற்குமேற் பதினைலுநாளைக்குள்ளாவது வட்டியுமுதலுங் கொடுத்துத் தன்வீட்டை மீட்டுக்கொள்க. (ருஅ)

காலவளவேற்படுத்தாமல் துய்ப்பீடாகவைத்த பூமியைக் கடனுடையவன் பலகாலமானவுடனே முதற்பொருளைமாத்திரங் கொடுத்து ஈட்டை மீட்டுக்கொள்க. (ருகூ)

### பிரகற்பதி.

தேகத்தில் உடுக்கக்கத்தக்கதான ஆடை முதலானவைகளைத் துய்ப்பீடாக வைத்தவிஷயத்தில் கடனுடையவன் முதற்பொருள்மாத்திரங்கொடுத்துக் கேட்கும்பொழுது தனிக னந்தஈட்டைக் கொடுக்க. (சூ0)

மேற்சொல்லிய ஆடைமுதலானவைகளைக் காப்பீடாகவைத்த விடயத்தில் கடனுடையவன் வட்டியோடு முதற்பொருள்கொடுத்துக் கேட்கும்பொழுது கடன்கார னந்த ஈட்டைக்கொடுக்க. (சூக)

### யாஞ்ஞவற்கியர்.

கடனுடையவன் கடன்பொருளைக் கொடுத்துக் கேட்கும்பொழுது கடன்கர்ரன் தன்னிடத்திலிருக்கிற ஈட்டைக்கொடாவிடி லவனுக்குச் சோரதண்டனை விதிக்கப்படும். (சூஉ)

கடனுடையவன் பொருளைக்கொடுத்துத் தன்னீட்டை மீட்டுக்கொள்ள வந்தபோது கடன்காரன் தேசாந்தரம்போயிருந்தா லவனுடையமைந்தன் முதலானவர்களிடத்தி லப்பொருளைக் கொடுத்தீட்டை மீட்டுக்கொள்க. (சூங)

அவர்கள் கொடாவிடில் கடன்காரன் வந்தபின்பு அந்தஈட்டை வாங்கிக்கொள்க. (சூச)

கடனுடையவன் தான்வாங்கின கடன்பொருளைக்கொடுத் தீட்டைக்கேட்கும்பொழுது கடன்கார னந்தஈட்டைக் கொடாவிடில் அன்றுமுதல் கடன்பொருளுக்கு வட்டி இல்லை. (சூரு)

ஈடாகவைத்தபொருள் கெட்டுப்போனவிடத்தில் கடன்பட்டவன் ஈட்டுப்பொருளின் விலையைக் கடன்காரனிடத்தில் வாங்கிக்கொ

ள்ளும்பொழுது முதற்பொருள் கொடுத்தநாள்முதல்அவ்விலைப் பொருளுக்குள்ள வட்டியோடுவாங்கிக்கொள்க. (சுசு)

பிரகற்பதி.

ஒருவன் தன்னுடைய விளைநிலத்தை யீடாகவைத்துக்கடன்வாங்கும்பொழுது இதின்பலத்தை நானே யனுபோகித்துக்கொண்டு இந்தக் கடனிரட்டிப் பாவதற்குள்ளே யுனக்குவட்டியு முதலுங்கொடுத்தீட்டை மீட்டுக்கொள்வேன் அப்படிமீட்டுக்கொள்ளாவிட்டால் வட்டியுமுதலுஞ் சேருமளவும் இந்தநிலத்தின்பலத்தை நீ யனுபோகித்துக்கொள்வாயாக வென்றுடன்படிக்கை செய்தவிஷயத்தில் அப்படியே வட்டியுமுதலுஞ் சேருமளவும் கடன்கார னனுபோகித்துப் பின்பு அந்த நிலத்தைக் கடன்பட்டவனுக்குக் கொடுத்துவிடுக. (சுஎ)

இப்படி யுடன்படிக்கை செய்யாதவிடத்தி லெத்தனைகாலங் கடன்காரனாலே யனுபோகிக்கப்பட்டாலும் நிலத்தின்பலன் முதலுக்குச் செல்லாகாது. (சுஅ)

காலவள வேற்படுத்தி யிந்த நிலத்தின் பலன்வட்டிக்கு மாத்திரம் ஈடாகவுன்னு லனுபோகிக்கத்தக்கதென் றுடன்படிக்கை பண்ணிவைத்தவிஷயத்தில் அந்தக்காலத்திற்குள்ளே யதிலுண்டாகிய பலன் அந்தவட்டிக்குக் குறைவாயிருந்தாலும் சமமாயிருந்தாலும் ஏற்படுத்திய காலத்தில் முதற்பொருள் மாத்திரங்கொடுத்துத் தன்னீட்டை மீட்டுக்கொள்க. (சுகூ)

## பிணை அல்லது ஜாமீன்.

பலமுனிவர்.

| பிணையினர் பெயர். | பிணையின ரிலக்ஷணம். |
|---|---|
| காண்பிக்கும் பிணையினன் | இவனை வேண்டும்பொழுது நானே காண்பிப்பேனென் றுடன்படுவோன். |
| நம்புதற் பிணையினன் | இவனல்லவன் வஞ்சனைசெய்பவ னல்லன் என்சொல்லைநம்பிப் பொருள் கொடு வென்றும் இவ்வேலையாளன் திருடனல்லன் இவன் திருடினால் நானே யுத்தரவாதியென்றும் உடன்படுவோன். |
| கொடுக்கும் பிணையினன் | இவன் கொடுக்கவேண்டிய கடன்பொருளை வட்டியோடு கொடாதபோது |

நானே கொடுப்பேனென் றுடன்படுவோன்.

ஒப்புவிக்கும் பிணையினன். — கடன்வாங்கினவன் வட்டியோடு முதற்பொருளைக் கொடுத்தபோது கடன்காரன் அவனுடைய ஈட்டைக்கொடாவிடில் நானே கொடுப்பேனென் றுடன்படுவோன்.

அபயப் பிணையினன் — இவன் பிறர்க்குத் துன்பஞ்செய்யான் செய்தால் அந்தக் குற்றத்திற்கு நானே யுத்தரவாதி யாவேனென் றுடன்படுவோன்.

வாங்கின ஈட்டைக்கொடுக்கும் பிணையினன். — கடனுடையவன் ஈடாகவைத்த பொருளை எதைக் குறித்தானாலும் பின்னுந்தான் கடன்காரனிடத்தில் வாங்கிக்கொண்டபொழுது அவன் கொடாவிடில் அதனை நானே கொடுப்பேனென் றுடன்படுவோன் அல்லது ஒருவன் ஒருபொருளை யிரவலாக வாங்கும்பொழுது அவன் கொடாவிடில் நானே கொடுப்பேனென் றுடன்படுவோன்.

விவாதப் பிணையினன் — நியாயசபையாருக்கு விவகாரத்தீர்ப்புப்பொருளையும் தண்டப் பொருளையும்நானே கொடுப்பேனென் றுடன்படுவோன்.

பிரமாணப் பிணையினன் — மானுடப் பிரமாணத்தைக்கொண்டுவருதற்கேனும் திவ்வியப் பிரமாணத்தைச்செய்வதற்கேனும்காலமேற்படுத்தியபொழுது இவனந்தக் காலத்திற் சொல்லியபடி செய்யாவிடில் இந்த விவாதவிஷயப் பொருளை நானே கொடுப்பேனென் றுடன்படுவோன்.

ஈடுகாப்புப் பிணையினன். துட்டனுன பங்காளியினிடத்தில் காப்பீடாகவைத்தபொருளை அவன் விற்றல்-தானமாகக் கொடுத்தல்-இவைகளைச் செய்வானென்று சந்தேகந் தோன்றியபொழுது அதை யவனப்படிச்செய்யாமலிருப்பதற்காக வுடன்படுவோன்.

துய்ப்பிக்கும் பிணையினன் துய்ப்பீடாகவைத்த பொருளை மேற்சொல்லிய பங்காளி தின்றழியாமலிருப்பதற்காக வுடன்படுவோன்.

ஈடுதரு பிணையினன் ஈடாகவைத்த பெருவிலைப்பொருளை மேற்சொல்லிய பங்காளி தின்றழியாம லிருப்பதற்காக வுடன்படுவோன்.

பின்னும் காலம் - தேசம் - காரியம் - பொருளின் வேறுபாடு - இவற்றைக்குறித்து அவ்வவற்றிற்குத் தக்கபடி ஜாமீன்யேற்படுத்திக் கொள்க.

## பிணையினர் சிறப்புவிதி.

### காத்தியாயனர்.

மேற்சொல்லப்பட்ட காண்பிக்கும் பிணையினன் கடனுடையவனைக் கடன்கொடுத்தவன் காண்பிக்கச்சொன்னபோது அவனைக் காண்பித்தால் அவன் தன் ஜாமீன்தொடர்ச்சியினின்றும் விடுபடுவான்.

### பிரகற்பதி.

அப்படிக் காண்பிக்கவேண்டியகாலத்தில் கடனுடையவன் சமீபத்தி லில்லாமல் தேசாந்திரம் போயிருந்தால் அவனை யழைத்துவருவதற்காகத் தூரத்திற்குத் தக்கபடி அச் ஜாமீன்தாரனுக்குக் காலவளவு கொடுக்க.

### மனு.

அவனந்தக் காலவளவுக்குள்ளே கடன்கொடுக்கவேண்டியவனை யழைத்துவந்து காண்பியாவிட்டாலும், அந்த வாதி யிறந்துபோனாலும், இராசிக-தைவிகத் துன்பமடையாதிருக்கின்ற வாதியை க்காண்பியாவிட்டாலும் அந்த ஜாமீன்தாரன் அந்த வாதி கொடுக்கவேண்டிய கடனை வட்டியோடுங் கொடுக்க.

பெருவிலே யுடைய ஈட்டைக்கெடுத்த கடன்காரன் பொருளில் லாதவனுகியும் ஈட்டுஜாமீன்தாரன் பொருளுடையவனுகியுமிருந்தால் அவன் கடனுடையவனுக்கு அந்த ஈட்டின் விலையைமாத்திரங் கொடுக்க. வட்டிகொடுக்கவேண்டுவதில்லே.

மற்றைப் பிணையினரும் தாங்க ளெந்தக்ககாரியங்களேக் குறித்து எவர்களுக்குப் பிணையினரானுர்களோ அந்தக் காரியங்களே யவர்கள் செய்தபோது தாங்கள் பண்ணின வுடன்படிக்கைப்படி செய்க.

யாஞ்ஞுவற்கியர்.

ஒருவிஷயத்திற் ஜாமீன்தாரர் பலரிருந்து அவர்கள் பொருள்கொடுக்கும்படி நேரிட்டபோது அப்பிணையின ரெல்லாரும் அப்பொருளேச்சமமாகமாகப் பிரித்துக் கொடுக்க.

பிணையினராகியபலருந்தனித்தனியே கடனுடையவனேப்போல நானே முழுவதுங் கொடுப்பேனென் றேற்புக்கொண்டபோது கடன் கொடுத்தவன் தன்னிச்சைப்படி அப்பிணையினருள் எவனிடத்திலேனும்கடன் பொருளே வாங்கிக்கொள்ளலாம். அந்த ஜாமீன்தாரர்கள் எல்லாரிடத்திலும் பாகப்படி வாங்கிக்கொள்ளலாம்.

பிரகற்பதி.

கடனுடையவனேப்போல வொப்புக் கொண்ட பல பிணையினருள் இன்னுனிடத்தில் வாங்கிக்கொள்வேனென்று கடன்காரனுலே குறிக்கப்பட்டவன் தேசாந்திரம்போனுல் அவன்மைந்தன் முதற்பொருள்மாத்திரங் கொடுக்க. இறந்துபோனுல் தந்தை கொடுக்கவேண்டிய பாகப்பொருளேமாத்திரங்கொடுக்க

## பிணையினருடைய மைந்தர்முதலாயினேர் விதி.

யாஞ்ஞுவற்கியர்.

காண்பிக்கும் பிணையினன் - நம்புதற்பிணையினன் - பிரமாணப் பிணையினன் இவர்கள் தாங்கள் செய்த வுடன்படிக்கைப்படி செய்யாமலிறந்துபொனுல் அவர்களுடைய மைந்தர்க்கு அந்தப் பிணையின் தொடர்ச்சியில்லே.

கொடுக்கும் பிணையினனும் விவாதப்பிணையினனும் உடன்படிக்கைப்படி செய்யாம லிறந்துபோனுல் அவர்களுடைய மைந்தர்கள் தங்களுடைய தந்தையர் பண்ணின வுடன்படிக்கைப்படி செய்க

அபயப்பிணையினன் - ஈட்டுப்பிணையின னிவர்கள் முதலான மற்றைப் பிணையின ரிறந்துபோனபின்னர் அவர்கள் முன்பு செய்த வுடன்படிக்கையை யாலோசிக்குமிடத்து அவர்களுடைய மைந்தர் கள் பொருள்கொடுத்தல் முதலானவை செய்யத்தக்கவொன்று ஏது காணப்பட்டால் அப்படியே செய்விக்க.

காத்தியாயனர்.

மைந்தர்க்குச் சம்பந்தமில்லாத காண்பித்தல் முதலான பிணை விஷயங்களில் கடனுடையவனிடத்தில் ஈடுவாங்கிக்கொண்டு பிணைப் பட்டவ னிறந்துபோனபோது கடன்காரன் அந்தப்பிணையினன் ஈடு வாங்கிக்கொண்டு உடன்பட்டதை மெய்ப்படுத்தினல் அந்தப் பிணையி னனுடைய மைந்தன் அந்தக் கடனைக் கொடுக்க.

வியாசர்.

மேற் சொல்லப்பட்ட பிணையினருள் கொடுப்பேனென் றொப் புக்கொண்ட பிணையினனுடைய புத்திரன் அந்தக்கடனைக்கொடுக்கக் பௌத்திரர் கொடுக்கவேண்டுவதில்லை.

பிதாமகன்.

பிணைப்பட்டவன் தானொப்புக்கொண்ட பிணையை யில்லையெ ன்றபோது கடன்காரன் பிணையொப்புக்கொண்ட துண்டென்று மெ ய்ப்படுத்தினல் அவன் கடன்காரனுக்குக் கடன்பொருளையும், அரச னுக்கு அதற் கொப்பான தண்டப் பொருளையுங் கொடுப்பிக்கத் தக் கவனுவான்.

பிணைப்பட்டவன் - கடனுடையவன்பொருட்டுக் கடன்காரனு டன் வழக்காடினல் அவனுக்கு விவகாரப்பொருளுக் கிரட்டிப்பான தண்டம் விதிக்கப்படும்.

## பிணையினர் கொடுத்தபொருளைச் செலுத்தல்.

காத்தியாயனர்.

கடனுடையவன் கடன்காரனுக்குக் கொடுக்கவேண்டிய பொரு ளைப் பிணையினன்கொடுத்தால் அந்தப்பிணையினன் தான்கொடுத்த தைப்பிரமாணங்களினலே மெய்ப்படுத்தி அந்த கடனுடையவனிட த்தில்வாங்கிக்கொள்க.

நாரதர்.

கடனுடையவன் தானேற்படுத்திய காலவளவிற் கடனைக்கொடாததினாலே கடன்காரன் ஜாமீன்தாரனை வருத்தப்படுத்தித் தனது கடனைப்பற்றிக்கொண்ட விஷயத்தில் அந்தப்பொருளை யொன்றரை மாதத்திற்குள்ளே கடனுடையவன் பிணையினனுக்குக் கொடாவிடில் அதற்குமேல் அப்பிணையினனுக்குக் கடனுடையவ னிரட்டிப்பாகக் கொடுக்க.

யாஞ்ஞவர்கியர்.

பசுமுதலானவைகளை முதற்பொருளாகக் கொடுத்த விஷயத்தில் கடன்காரன் பிணையினனிடத்திற் றன்பொருளைப்பற்றிக்கொண்டபோது அந்தப்பிணையினன் வட்டிப்பிரகாரணத்திற் காட்டிய வட்டியோடும் அந்தப்பொருளைக் கடனுடையவனிடத்தல்வாங்கிக்கொள்க.

கடனுடையவன் அறிவிக்கத்தக்ககாலத்தையும் தேசத்தையுமுடையவனா யிருக்கும்போது அவனுக்கறியப்படுத்தாமல் பிணையினன் கடன்காரனுக்குப் பொருளைக் கொடுத்தவிஷயத்தில் அஜ்ஜாமீன்தாரன் தான்கொடுத்த பொருளைமாத்திரம் கடனுடையவனிடத்தில் வாங்கிக்கொள்க.

நாரதர்.

ஈட்டுப்பிணையினன் தான் பிணைபட்ட ஈடு தன்னுடையசோர்வினாலே தப்பிப்போனாலும், அறியாமையினாலே தப்பிப்போனாலும், கவரப்பட்டாலும், அந்தப்பொருளையுடையவனுக்குக் கொடுக்க.

## வட்டிப்பிரகரணம்.

பிரகருதி.

வட்டியானது காயிகைவிருத்தி - காலிகைவிருத்தி - சக்கரவிருத்தி - காரிதைவிருத்தி- சிகாவிருத்தி- போகலாபவிருத்தி யென வறுவகைப்படும்.

அவற்றுள்,

காயிகைவிருத்தியாவது:—குதிரை - எருது - பசு - முதலானவைகளை யீடாகவைத்து அவைகளின் காயசம்பந்தமான சுமத்தல் முதலான செய்கைகளை வட்டியாகச்செய்வதாம்.

காலிகைவிருத்தியாவது:—மாசந்தோறுங் கொடுக்கப்படுவதாம்.

சக்கரவிருத்தியாவது:—வட்டிக்குவட்டியாகக் கொடுக்கப்படுவதாம்.

காரிகைவிருத்தியாவது:—கடனுடையவன் தன்னுடைய அவசரத்தின்பொருட்டுச் சாத்திரநியமித்துக்கதிகமாகத் தன்னுடையசம்மதத்தினு லேற்படுத்துவதாம்.

சிகாவிருத்தியாவது:—நாள்தோறுங் கொடுக்கப்படுவதாம்.

போகலாபவிருத்தியாவது:—வீடு - விளைநிலமுதலான தாவரங்களை யீடாகவைத்து அவற்றினனுபோகத்தை வட்டியாகச்செய்வதாம்.

## வட்டியினளவு.

மனு.

ஈடுவைத்து வாங்கின கடனுக்கு வட்டி நூற்றுக் கொன்றேகால்.

வியாசர்.

ஜாமீன்மாத்திரங்கொடுத்து வாங்கினகடனுக்கு வட்டி நூற்றுக் கொன்றே முக்காலேயரைக்கால்.

ஈடும் பிணையுமில்லாத வெண்ணிலைக்கடனுக்கு வட்டி நூற்றுக் கிரண்டு.

யாஞ்ஞவற்கியர்.

மேற்சொல்லிய வெண்ணிலைக்கடன் விஷயத்தில் கடனுடையவன் அந்தணனுனல் அவன்வட்டி நூற்றுக்குஇரண்டும், க்ஷத்திரியன் நூற்றுக்குமூன்றும், வைசியன் நூற்றுக்குநான்கும், சூத்திரன் நூற்றுக்குஐந்தும், மாசந்தோறுங் கொடுக்க.

மேற்சொல்லிய வெண்ணிலைக்கடன் விஷயத்தில் பொல்லாதவழியிற்சென்று வாணிகஞ்செய்பவர்கள் நூற்றுக்குப்பத்தும் கடல்வழிச் சென்று வாணிகஞ் செய்பவர்கள் நூற்றுக்கு இருபதுவட்டியாகக் கொடுக்க.

எல்லாச் சாதியோரும் இரண்டுமுதலான தொகைக்கு அதிகமாகவேனும், குறைவாகவேனும், ஏற்படுத்திக்கொண்டபடி வட்டியைக் கொடுக்க.

பசுவையும் வேலைக்காரியையு முதற்பொருளாகக் கடன்கொடுத்தவிஷயத்தி லந்தப்பசுவும் வேலைக்காரியுமாகிய பொருளுக்கு முடிவானவட்டி சந்ததியேயாகும்.

சந்ததியில்லாவிடில் பெருத்தலும் அழியாதிருத்தலுமே வட்டியாம்.

## வட்டியேற்பாடில்லாத விஷயம்.

### விட்டுணு.

ஒருவன் வட்டியேற்படுத்தாமற் காலளவையேற்படுத்திக் கடன் வாங்கி யந்தக் காலவளவிற்கொடாவிடில் அன்றுமுதலப்பொருளுக்கு வட்டியுண்டாம்.

### நாரதர்.

ஒருவன் தன்னுடைய உபயோகத்துக்காக, ஸ்னேகனாலே கொடுக்கப்பட்ட பொருளைக்கொடாவிடில் அந்தப்பொருளைவாங்கினநாள் முதலாறுமாதவரையில்வட்டியில்லை அதற்குமேல் வட்டியுண்டு.

### காத்தியாயனர்.

ஒருவன் சரக்குகளைக் கடனாகவாங்கி விலைப்பொருளைக்கொடாமல் - தேசாந்தரம்போனால் - சரக்கை வாங்கினவனுடைய வருணத்திற்குச் சொல்லியபடி சரக்கின் விலைப்பொருளுக்கு வாங்கினநாள் முதலாறுமாசத்துக்கு மேல்வட்டி யுண்டாகும்.

ஒருவன் இரவலாக ஆபரணமுதலான பொருளைவாங்கிப் பொருளுடையவனாலே கேட்கப்படாமலும் - அதனைத் தான்கொடாமலும்-தேசாந்தரம்போனால் பொருளை வாங்கினநாள்முதல் ஒருவருஷத்துக்குமே லப்பொருளுக்கு வட்டியுண்டாகும்.

மேற்சொல்லிய இரவல்விஷயத்திற் பொருளைவாங்கினவன் பொருளுடையவனாலே கேட்கப்பட்டுக் கொடாமல்-தேசாந்தரம்போனால் பொருளை வாங்கினநாள்முதல் மூன்றுமாசத்துக்குமேல் வட்டியுண்டாகும்.

மேற்சொல்லிய இரவல்விஷயத்திற் பொருளைவாங்கினவன் தன்னுடைய வூரிலிருக்கும்பொழுது பொருளுடையவனாலே கேட்கப்பட்டும் பொருளைக்கொடாவிடில் கேட்டநாள்முதல் அதற்கு வட்டியுண்டாகும்.

இஷ்டத்தினாலே கொடுக்கப்பட்டபொருளுக் கெத்தனைகாலஞ் சென்றாலும் வட்டியில்லை.

அந்தப்பொருளானது உடையவனாலே கேட்கப்பட்டுக் கொடுக்கப்படாவிடில் - கேட்டநாள்முத லதற்கு நூற்றுக்கு, ஐந்துவிழுக்காடு வட்டியுண்டாகும்.

நிக்ஷேபம் - வட்டிநிலுவை - சரக்கின் விலை இவைகளைக் கேட்டுங்கொடாவிடில்-கேட்டநாள்முதல்-நூற்றுக்கு ஐந்து விழுக்காடு வட்டியுண்டாகும்.

## பிரிதுவிதி.

பலமுனிவர்.

வேதனம் - நியாசம் - தண்டப்பொருள், கூத்தாடி முதலானவீணர்க்குக் கொடுக்கிறேனென்ற பொருள்-சூதுப்பொருள் - சீதனம் - வட்டிநிலுவை - கொடுத்தலைக் குறித்தையப்பட்டபொருள் - பிணைப்பொருளிவற்றிற்கும், கள்ளு-சருமம் - பயிரிவற்றிற்கும், கடன்பொருளைக் கொடுக்கவந்தபோது, கடன் வட்டியாசையால் வாங்காமையினாலே பொதுக்கட்டிவைக்கப்பட்டாலன்றுமுதல்-முன்பு-கடன்காரன் கொடுத்தபொருளுக்கும், காப்பீடாகவைக்கப்பட்டது அனுபோகிக்கப்பட்டாலதற்கும், சரக்குக் கொடுத்தவனாலே கேட்கப்படாமலிருந்த சரக்கின் விலைப்பொருளுக்கும் வட்டியில்லை.

## வட்டிவாங்கலின் விலக்கம்.

மனு.

பொருளிரட்டிப் பாகுமளவும் வட்டி விதிக்கப்பட்டது, நன்மையை விரும்பினவனொருவருஷத்து வட்டிமாத்திரமே வாங்குக, நூற்றுக் கிரண்டுவிழுக்காடு வட்டிகொடுக்கவேண்டிய அந்தணன் தன்னவசரநிமித்தமாக நூற்றுக் கைந்துவிழுக்காடு வட்டிகொடுக்கவொப்பினுலொருவருஷத்துக்கு மேற்பட்ட வட்டிவாங்குதல் கூடாது.

சிலவிஷயங்களில் கடன்காரன் நூற்றுக்கிரண்டுமுதலைந்துவரையும் விதிக்கப்பட்ட வட்டிக்கதிகமாகவும், தன்னிச்சைப் படியாகவும் வட்டி வாங்குதல் கூடாது.

சக்கரவிருத்தியும் விரைவி லதிகலாபத்தை யுண்டாக்குகின்ற காலிகைவிருத்தியும், காரிகைவிருத்தியும், மிகுந்த வருத்தந்தருகின்ற காயிகை விருத்தியுஞ் சாத்திரங்களில் விதிக்கப்பட்டிருப்பினும், நன்மையை நினைப்பவனாலே வாங்கத்தக்கனவல்ல.

அந்தணன் ஒருகாலத்திலும் வட்டிவாங்குதல் கூடாது. ஆனால், ஆபத்துக்காலத்தில் வாங்கலாம்.

## வட்டியின்முடிவான வளவு.

பலமுனிவர்.

கடனுகக்கொடுக்கும் பொருளுக்கு சில தேசங்களிலே யிரண்டு பங்கும், சிலதேசங்களிலே மூன்றுபங்கும், சிலதேசங்களிலே நான்கு மடங்கும், சிலதேசங்களிலே யெண்மடங்கும் வட்டிவாங்குவதுண்டு.

பொருள்களின் வேறுபாட்டினுலே வட்டித்தொகை வேறுபடும் எப்படியென்னில், பொன் - வெள்ளி- முத்து-பவளம் - வச்சிரமிவை முதலானவைகளுக் கிருமடங்கும், ஆடை - செம்பு - ஈயம் - வெண்கலம் - பித்தளை - இரும்பு - இவற்றிற்கு மும்மடங்கும், தானியவகைகளுக்கு நான்குமடங்கும், பூமியிலுண்டாகின்ற தானியவகைகளுக்கு வேறுன மலர் - கனி - கிழங்கு முதலானவைகளுக்கும், எருது-குதிரை முதலானவைகளுக்கும், ஆட்டின்மயிர் - கவரிமாவின் மயிரிவைகளுக்கும், ஐந்துமடங்கும் - காய்வகை - பருத்திநூல் - வித்துவகை கரும்பு-இவைகளுக் காறுமடங்கும், உப்பு-புளிமுதலான அருசுவைப்பொருள்கள் - மெழுகு - எண்ணெய்- நெய் - சாராய்வகை - தேன் வெல்லம் - இவற்றிற்கெண்மடங்கும், முடிவானவட்டியாம்.

மேற்சொல்லிய பொருள்களுக் கெத்தனைகாலஞ் சென்ருலும், அதிகமான வட்டி வளராது.

ஆனல் - வட்டியை முதலொடுசேர்த் தொரு தொகையாக்கினுலும், கடனுடையவன் தான்முன்புவைத்த ஈட்டை வேறோரிடத்தில் வைத்தாலும், கடன்காரன் தன்னிடத்தில்வைத்த ஈட்டை மற்ரோரிடத்தில் வைத்தாலும், மேற்சொல்லிய வட்டிக் கதிகமான வட்டியுண்டாகும்.

அற்பகாலத்தி லுடன்படிக்கைப்படி வட்டி நூறுமடங்கு மூண்டாகும்.

இவ்விடத்திற் சொல்லப்படாத கம்பளமுதலியவற்றிற் கிருமடங்கேயாம்.

பலமுனிவர்.

புல்லு - கட்டை - செங்கல் - பருத்திநூல் - சாராயத்தையுண்டாக்குகின்ற பட்டை மலவிசேட மிவைமுதலானவை கேடகம் -கவசம் - ஆயுதம் - கரி - யானைத்தந்தம் - எலும்பு - கொம்பு - மட்பாத்திரம் - சிகாவிருத்தி - காயிகைவிருத்தி - போகலாபவிருத்தி- இவற்றிற்கும், மலர் - கனி - இவற்றிற்கும், முதற்பொருள் கொடுக்குமளவும்,

வட்டி வாங்கவேண்டும். ஆனு லிவற்றுள் பருத்திநூல் - மலர் - கனி - இவற்றைக் கடனாகவாங்கினவன் மிகுதியான பொருளுடையவனானு லிவ்விடத்திற்காட்டியபடி கொடுக்க.

## கடனைத்தீர்த்தல்.

பிரகற்பதி.

கடனுடையவன் மிகவும் அற்பமானகாலத்திற் கொடுப்பேனென்று வாங்கினகடனைத் கடன்காரன் கேட்டபொழுதே கொடுக்க.

கடன்காரனிடத்திற் கடன்வாங்கும்பொழுது இந்தக்கடனை யிதனடுத்த திருக்கார்த்திகை யுற்சவத்துக்குள்ளே கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டு வாங்கினகடனைக் கடனுடையவன் அந்தக் காலத்திற் ருனேகொடுக்க.

காலவளவை யேற்படுத்தாத விஷயத்திற் பொருளிரட்டிப்பானவுடனே கடனைத்தீர்க்க.

கடனைத் தீர்க்கவேண்டியகாலத்திற் கடனுடையவ னில்லாவிடிலவனுடைய மைந்தரந்தக் கடனைத்தீர்க்க.

இவ்விடத்திற் கேட்கும்பொழுதே கடனைக்கொடுக்கவேண்டுமென்பதனுல் கடன்காரன் கேட்டபின் கொடுக்கவேண்டுமென்று சொன்னதன்று கேட்பதற்கு முன்பும் கொடுக்கலாம், கடனைப் பொருள்கிடைத்தபொழுதே தீர்க்கவேண்டுமாகையால்.

புராணம்.

கடனுடையவன் தான் வாங்கினகடனைக் கொடாவிடில், அவன் செய்த புண்ணியமெல்லாங் கடன்காரனைச் சாரும்.

பலமுனிவர்.

வாங்கினகடனைத் தீராம லிறந்துபோன கடனுடையவன் கடன்காரனிடத்தில் கூலியாளாகவும், பெண்ணுகவும், அடிமையாகவும், குதிரையாகவும், மாடாகவும், கழுதையாகவு பிறந்துழைப்பான்.

யாஞ்ஞுவற்கியர்.

கடனுடையவன் கடனைத்தீர்த்து அந்தக் கடன்பத்திரத்தைக் கிழிக்க.

கிழிக்கத்தக்க பத்திரங் காணப்படாதபோது கடனைத்தீர்த்ததற்காகக் கடன்காரன் விசுத்திப்பதிரங் கொடுக்க.

நாரதர்.

கடன்காரன் அந்த விசுத்திப்பத்திரத்தைக் கொடாதபோது கடனைதீர்த்ததை யுத்தமருக்கறிவிக்க.

யாஞ்ஞுவர்கியர்.

பத்திரமில்லாமல் சாக்ஷிகள்மாத்திர மறியக் கொடுத்த கடனை அந்தச்சாக்ஷிகள் முன்பாகவே தீர்க்க.

அவர்களில்லாதபோது தொகையிலுங் குணத்திலு முயர்ந்த வேறு சாக்ஷிகள்முன்பாகத் தீர்க்க.

## கடன்தீர்க்கத் திறமில்லார் விஷயம்.

மனு.

முதற்பொருளையும் வட்டியையுஞ்சேர்த்துக்கொடுக்க சக்த்தியில்லாதவன் கடன்காரனுடைய சம்மதியினாலே அதுவரைக்குங் கூடின வட்டியைக்கொடுத்து முதற்பொருளுக்கந்த வருஷமுதலானவைகண்டெழுதிய புதுப்பத்திரத்தைப் பிறப்பிக்க.

அப்படி வட்டிகொடுக்கச் சக்த்தியில்லாதவன் அதுவரையுங் கூடின வட்டியை முதலாக்கி அதற்குமுன்பு ஏற்படுத்தின வட்டிக்கு மிகவுங் குறைவாக வட்டியேற்படுத்தி வேறுபத்திரத்தைப்பிறப்பிக்க.

கடனுடையவன் வட்டிப்பொருளிற் சில பொருள்கொடுத்து நின்ற வட்டியையு முதலையு மொன்ருகச்சேர்த்து முன்பேற்படுத்தின வட்டிக்குச் சற்றுக்குறைவாக வட்டியேற்படுத்திப் புதுபத்திர மெழுதிக்கொடுக்க.

யாஞ்ஞுவற்கியர்.

கடனுடையவன் வறுமையுடைய அந்தணனானல் அவனேற்படுத்திய காலத்திற்குள்ளே வட்டியும் முதலிற் சிலபொருளுங் கொடுத்தபோது அதை யந்தப்பத்திரத்தின் பின்புறத்தி லென்ன லிவ்வளவு கொடுக்கப்பட்டதென்பதை கடன்காரன் அவனாலெழுதுவிக்க.

அந்தப்பத்திரஞ் சமீபத்திலில்லாதபோது கடன்காரன் கடனுடையவனுக்குச் செல்லுஞ் சீட்டைக்கொடுக்க.

கடனுடையவன் தனமுடையவனானல் அவனிடத்திற் கடனை தனமில்லாதவனிடத்தில் வாங்குவதுபோலச் சிறிதுசிறிதாகவாங்காமல் வட்டியோடு முதற்பொருள்முழுது மொருதரத்திற்ருனேவாங்குக.

மேற்சொல்லப்பட்டவன் வட்டிக்காகச் சில பொருள்கொடுத்தால் அதை வாங்குதல்கூடாது.

ஒருவேளை வாங்கினுல் அது வட்டிக்குச்செல்லாமல் கடன்காரனிடத்தில் நிக்ஷேபத்தைப்போலவே யிருக்கும்.

கடன்முழுதுங் கொடுத்தபின்பு ஓரோதாத்திலீடுகொடுக்கப்படும்.

அனுபோகத்தையே வட்டிக்கீடாகவைத்த விஷயத்தில் கடன் குறைவறச் செல்லுமளவும், அந்த ஈட்டுப்பொருள் முழுதையு மனுபோகிக்க.

ஒருவன் கறவைப்பசுவை யீடாகவைத்துக் கடன்வாங்கி அதைச் சிறிதுசிறிதாகக் கொடுத்தாலும், அந்தக்கடன்முழுதுஞ் செல்லுமளவும், அந்த ஈடு அனுபோகிக்கப்படும்.

கடன்காரனுனவன் தான்கொடுத்த கடனிலே சில பொருளை வாங்கிக்கொண்டு பொல்லாங்கினுலே அதற்குப் பற்றுச்சீட்டுகேட்டுங் கொடாதபோது கடனுடையவன் செலுத்தின பொருளின்றெகைமிகுதியாகவும், நிலுவைப்பொருள் மிகவுங் குறைவாகவுமிருந்தால் அந்தநிலுவைப்பொருள் கடன்காரனுக் கில்லாமற்போகும்.

நிலுவைப்பொரு ளதிகமாயிருந்தால் -கடனுடையவன் செலுத்தியபொருளுக்குச் செல்லுஞ்சீட்டுக் கொடுக்குமளவும்-கடன்காரன் முன்புதான் கொடுத்தபொருளுக் கெவ்வளவு வட்டி யேற்படுத்தினுனே-அவ்வளவு வட்டிகொடுக்க.

## கொடுத்தகடனை வாங்குமுபாயம்.

பிரசாபதி.

உபாயமானது தருமவுபாயமெனவும் - கபடவுபாயமெனவும் - வலிச்செய லுபாயமெனவும்-ஆயரிதவுபாயமெனவும்-நான்கு வகைப்படும்.

அவற்றுள்,

தருமவுபாயமாவது-கடன்காரனுனவன் - கடனுடையவனுடையரண்பினரும் சுற்றத்தாரும் கடனைக்கொடுவென்று அவனுக்குச்சொல்லும்படி செய்தலும் - தான் - நல்வார்த்தை சொல்லுதலும் - பின்றொடர்ந்து செல்லுதலும் - மிகவும் வேண்டுதலுமாம்.

கபடவுபாயமாவது கடன்காரனுனவன் கடனுடையவனிடத்தில் கலியாண வுற்சவமுதலான எந்த ஏதுவைச் சொல்லியாகுலும்-இரவ

லாக வாங்கின ஆபரணமுதலான எவ்வகைப் பொருளையும் ஒருவனு க்குக் கொடுக்கச்சொல்லிக் கடனுடையவன் கொடுத்தபொருளையும் - அந்தத் கடன்காரன் - தன்னுடைய கடனுக்கீடாக வைத்துக்கொள் ளுதலும் - இவை போன்றமற்றைச் செய்கைகளுமாம்.

வலிச்செயலுபாயமாவது, கடன்காரனனவன் - கடனுடையவ னைத் தன் வீட்டிலழைத்துவந்து அடித்தல் முதலான செய்கையின லே பயப்படுத்தித் தன்னுடைய கடனைக்கொடுக்கும்படி செய்தலாம்.

ஆசரிதவுபாயமாவதுகடன்காரனனவன் கடனுடையவனுடைய பெண்டு பிள்ளைகளையும், பசுக்களையும் வெளியிற் போகாதபடிதடுத்து வீட்டையடைத்து முத்திரையிட்டுத் தன் கடனைக் கொடுக்கும்படி செய்தலாம்.

ஆனல் இந்த வுபாயங்களைத் கடன்காரன் கடனுடையவனு டைய மேன்மையையும் - தேசவழக்கங்களையும் - அறிந்துசெய்யவே ண்டுமே யல்லாமல் தன்மனதின்படி செய்தல்கூடாது.

காத்தியாயனர்.

அரசன் - தலைவன் - அந்தணன் - இவைகளைத் தருமவுபாயத் தினலும், பங்காளி - ஸ்நேகன் - வாணிகன் - உழவன் - சிற்பன் - இவர்களைக் கபடவுபாயத்தினலுங் கடனைக் கொடுக்கும்படி செய்க.

பிருகு.

மேற்சொல்லப்பட்டவர்களுக்கு வேறானவர்களை வலிச்செயலு பாயத்தினலும் - தேசவழக்கப்படி - கடன்காரனனவன் தானே கட னுடையவனைத் தடைசெய்யாமற் கொடிய சேவகனலே தடைசெய் வித்தலி னலேனும் - தன்னுடைய கடனைக்கொடுக்குபடி செய்க.

தாழ்ந்த சாதித்துட்டரான கடனுடையவர்களைக் காவற்படுத் தல் - கால்விலங்கிடுதலிவைமுதலான மிகுந்த வருத்தச் செய்கை களினலே தன்னுடையகடனை வாங்கிக்கொள்க.

தடுக்கப்பட்ட கடனுடையவன் தகுதியான ஜாமீனைக்கொடுத் தால், அவனை - போஜனவேளையிலும் - இராக்காலத்திலும் - அவசிய ஞ்செய்யத்தக்க காரியங்களிலும் விடுக.

கொடுக்கத்தக்க ஜாமீனன்கிடைத்திருந்தும் ஜாமீனைக்கொடாத கடனுடையவனைக் காவற்படுத்துக.

கிடையாத்தினாலே ஜாமீன் கொடாதவனைக் காவலாளருக்கறிவித்து விடுக, அவன் - மேன்மையுடையவனும் - நம்பத்தக்கவனுமாயிருந்தால் அவனை வேறுவிதத்தினாலே தடைசெய்யாமல் சபதத்தினாலே தடைசெய்க.

இவ்விஷயத்திற்சொல்லிய விதிப்படி தடுத்தல் முதலானவைகளைச் செய்யுங் கடன்காரனானவன் - அரசனாலே, நீ யிதனைச்செய்தல் கூடாதென்று மறுக்கத் தக்கவனல்லன்.

பலமுனிவர்.

இப்படிச்செய்யாமல் கடன்காரன் - ஸ்மிருதிக்கும்-ஆசாரத்திற்கும்-விரோதமாகத் தன்னுடைய மனதிற்கேற்றபடி கடனுடையவனைத்துன்பப்படுத்தினபோது அந்தக் கடனுடையவன் - அரசனிடத்தில் வந்து இவனநியாயஞ் செயகிறானென்றறிவித்தால் - அரசன்-கடன்காரனுக்குக் கடனைக்கொடுப்பித்துக் கடன்காரன் குற்றத்துக்காக - அவன் தனமுடையவனானால் தக்கடனுக்குச் சமமான பொருளையும் தரித்திரனானால் - அதிலே நாலிலொருபங்குப் பொருளையும்-அபராதமாகக் கொடுக்கும்படி செய்க.

கடனுடையவன் - கடனையில்லையென்று சொல்லாதவிஷயத்தில் கடன்காரன்-மேற்சொல்லிய வுபாயங்கள்செய்துங் கடனுடையவன் கடனைக்கொடாதபோனாலும்-கொடுக்கவேண்டியகடனைக் கொடுக்கவேண்டுவதில்லை யென்றுசொன்னாலும் - நியாயப்படி கொடுக்கவேண்டுவதுண்டானாற் கொடுக்கிறேனென்றாலும் - அதனை அந்தக்கடன்காரன் அரசனுக்கறிவித்து விவகாரவுபாயத்தினாலே கடனை வாங்கிக்கொள்க.

பிரகற்பதி.

உருவம் - இலக்கம் - இவைமுதலியவற்றைக் குறித்தும், கொடுக்கத்தக்கதோ கொடுக்கத்தகாததோ வென்பதைக்குறித்தும் வாங்கத்தக்கதோ வாங்கத்தகாததோவென்பதைக் குறித்தும்,சந்தேகப்பட்ட கடனை அரசனுக்கறிவித்து அச்சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளாமல் கடன்காரன் தொந்தரைசெய்தால் அவனந்தப்பொருளையிழந்து அதற்குச்சமமான அபராதம் கொடுக்கத்தக்கனாவான்.

யமன்.

பொருளுடையவனாகிய கடனுடையவன் வெண்ணிலையாகவாங்கின கடனைப் பொல்லாங்கினாலே கொடாவிடில் அரசனந்தக் கடனுடையவன் வட்டியுமுதலும் கடன்காரனுக்குக் கொடுக்கும்படி செய்க.

பிரகற்பதி.

பொருளில்லாதவனாகிய கடனுடையவன் கடன்பொருள்வட்டியுடனே யிரட்டிப்பானதற்குமேல் அந்தவட்டியை முதலுடன்சேர்த்து அதற்குவட்டியேற்படுத்தி வேறுபத்திரம்பிறப்பித்து அந்தவட்டி தகுதியான துய்ப்பீட்டினாலே செல்லும்படி செய்க.

காலவளவை யேற்படுத்திய விஷயத்தில் அந்தக் காலஞ்சென்றவுடனே கடன்காரன் தன்னிச்சைப்படி செய்யாமல் கடனுடையவன் சம்மதத்தினாலே வேறுபத்திரம் பிறப்பிக்கலாம்.

யாஞ்ஞவற்கியர்.

வாங்கினகடனை கொடுக்கத்தக்கச் சத்தியில்லாத கடனுடையவன் அந்தணனானால் கடன்காரன் அவனுடைய சக்த்திக்குத்தக்கபடி கிடைத்தமட்டுக்கும் மெல்லமெல்ல நாள்வரையிலே கொடுக்கும்படி செய்து வட்டியொடு கடனைப்பற்றிக்கொள்க.

காத்தியாயனர்.

உழவன் - க்ஷத்திரியன் - வைசியன்-சூத்திரனிவர்கள் வாங்கின கடனைக் கொடுக்கச் சக்த்தியில்லாதவர்களும், அகப்பட்டபோதுகொடுக்கத்தக்கவர்களுமானால் அவர்கள்கொடுக்கும்பொழுது கடனை வாங்கிக்கொள்க.

யாஞ்ஞவற்கியர்.

கடனுடையவன் தாழ்ந்தசாதியானும் கடன்கொடுக்கச் சத்தியில்லாதவனுமாயிருந்தால் கடன்காரன் அவனுக்குத் தகுதியானவேலையிட்டு அதனாலே தன்னுடைய கடன் பொருள்சேரும்படி செய்க.

காத்தியாயனர்.

அந்தக்கடனுடையவன் வேலைசெய்ய வொப்பாதவனும், பொருள்கொடுக்கச் சக்த்தியில்லாதவனுமானால் பொருள்கிடைத்தபொழுது கடனைக்கொடுக்கும்படி அவனைக் காவற்படுத்துக.

யாஞ்ஞவற்கியர்.

கடன்காரர் சமசாதியாராயிருந்தால் கடனுடையவன் தான் கடன்வாங்கின காலக்கிரமப்படி கடனைக்கொடுக்க.

கடன்காரர் வேறுபட்ட சாதியாயிருந்தால் அந்தணர்முதலாகச் சாதிக்கிரமப்படி அவர்களுடைய கடனைத்தீர்க்க.

காத்தியாயனர்.

கடனுடையவன் ஒருதினத்திலே பலரிடத்திற் கடன்வாங்கின விஷயத்தில் அவர்களெல்லாருக்கும் ஒருதினத்திலே கடன்கொடுக்கும்படி நேரிட்டபொழுது அந்தக்கடனெல்லாவற்றையுங் கொடுக்கத் தக்கபொருள் கடனுடையவனிடத்திலிருந்தால் அவன் எல்லாக்கடனையும் அப்பொழுதே தீர்க்க.

பொருள் அற்பமாயிருந்தால் கடன்காரர்கொடுத்தகடன் பொருளின் தொகைப்படி பிரித்துக்கொடுக்க.

யாஞ்ஞவற்கியர்.

அற்பமான பொருளுடைய கடனுடையவன் பலரிடத்திற்கடன் வாங்கி மேற்சொல்லிய கிரமப்படி கடனைத்தீர்த்து வருநாளில் ஏழையானால் அப்பொழுது நிலுவையாகின்ற கடன்காரருடைய கடனுக்கு அவன்செய்யும் வேலையையன்றி வேறுகதியில்லை.

காத்தியாயனர்.

ஒருதினத்திலே கடன்காரர் பலருக்குப் பத்திரமெழுதிக்கொடுத்துக் கடன்வாங்கினவிஷயத்தில் கடனுடையவனாலேவைக்கப்பட்ட ஈட்டைக் கைப்பற்றிக்கொள்ளுதலையும், அதைக்காப்பதையும், அதிலுண்டாகும் பலத்தையும், அந்தக்கடன்காரர்கள் சமமாகச் செய்துக்கொள்க.

பலரிடத்திற் பொருளைவாங்கி வாணிகஞ்செய்யுங் கடனுடையவன் ஒருவனிடத்தில் வாங்கினபொருளாற் கொண்டசரக்கினாலே யிலாபமுண்டானால் அதை யந்தப்பொருள்கொடுத்த கடன்காரனுக்கே கொடுக்க. மற்றதை கடன்காரனுக்குக் கொடுக்கவேண்டுவதில்லை.

## கடன்தீர்க்கத்தக்கவர்களின்னார்.

பலமுனிவர்.

கடனுடையவனாகிய பிதா தீராப்பிணியினனா யிருப்பதினாலே கடனைத்தீர்க்கத் திறமையில்லாதவனா யிருந்தாலும், அவன் தேசாந்தரம்போயிருக்குமிட மின்னதென்றுதெரியாம லிருபதுவருஷஞ் சென்றாலும், இறந்துபோனாலும், அந்தப் பிதாவாங்கினகடன் பொருளின்தொகை முதலியவற்றைக்குறித்து சந்தேசமில்லாதிருப்பின் அந்தகடனைப் பிறவிக்குருடுமுதலிய குற்றமில்லாதவனாகியும், பதினறுவயதிற்கு மேற்பட்டவனாகியு மிருக்கின்ற புத்திரன்தீர்க்க.

தேசாந்தரம்போன பிதா விருக்குமிடந்தெரிந்தா லந்தப்பிதாவின் கடனைப் புத்திரன்கொடுக்க வேண்டுவதில்லை.

பிதா பிறவிக்குருடனுயேனும், பதிதனுயேனும், பயித்தியம் - சயரோகம் - குட்டரோகம் - இவைமுதலிய நோயுடையவனுயேனு மிருக்கும்போது அந்தப்பிதாவின்கடனைப் புத்திரர்கள் தீர்க்க.

தந்தையானவன் சமீபத்திலிருந்தாலும், புத்திரர்மேற்சொல்லிய தன்மையுமுடையவராயிருந்தாலும், பிதாவின்கடனை அந்தப்புத்திரர் கொடுக்க வேண்டுவதில்லை.

காத்தியாயனர்.

பிதாவிருக்கையில் சிலபுத்திரர்கள் பாகம்பிரித்துக்கொண்டவர்களாகியும், சிலபுத்திரர்கள் பாகம்பிரித்துக்கொள்ளாமற் பிதாவுடனே சேர்ந்தவர்களாகியு மிருக்கும்பொழுது அந்தப்பிதா கடனுடையவனுயிருந்து இறந்துபோனுல் அந்தக்கடனைப் பிதாவோடுகூடியிருந்த புத்திரர்மாத்திரமே தீர்க்க.

நாரதர்.

அவிபத்தர்களாகிய புத்திரர்களெல்லாருந் தலைமையுடையவர்களாயிருந்தால் அவர்களெல்லாருஞ் சம்மதித்துப் பொதுப்பொருளினுலே பிதாவின்கடனைத் தீர்க்க.

பிரகற்பதி.

புத்திரன் தன்னுடைய பிதாவாங்கினகடனையும், தான்வாங்கின கடனையும், கொடுக்க வேண்டும்பொழுது பிதாவின்கடனை முன்பு கொடுத்துப் பின்பு தன்னுடையகடனைத் தீர்க்க.

## கொடுக்கத்தகாததாகிய பிதாவின் கடன்விஷயம்.

பலமுனிவர்.

பிதாவானவன் கள்குடித்தல் சூதாட விவற்ருலுண்டாகிய கடனையும், தூர்த்தன் - சூதாடுவோன் - புகழ்பவன் - கூத்தாடி-மல்லன்- ஈனவைத்தியன்- சாருடவித்தைக்காரன் - கழைக்கூத்தர்- இழிவானவேலை செய்பவர் - திருடன் - இவர்கள் முதலானவர்களுக்குக் கொடுக்கிறேனென் றொப்புக்கொண்ட வீண்கொடைப் பொருளையும், காமத்தினுலே நிலைமைதப்பினவளுக்கு எழுத்தினுலேனும், சொல்லினுலேனும், கொடுக்கிறேனென் றொப்புக்கொண்டபொருளையும், கோபத்தினுலே உயிரையேனும், பொருளையேனும், அழித்தற்காகக் கொ

டுக்கிறேனென்ற பொருளையும், இன்னுமிவைபோன்ற கடன்களையும், புத்திரன் கொடுக்கவேண்டுவதில்லை.

## பௌத்திரனாலே கடன்கொடுக்கத்தக்க கடன்விஷயம்.

காத்தியாயனர்.

பிதாவைப்பெற்ற பாட்டனுடைய கடனானது தீராப்பிணிமுதலான குற்றமுடைய பிதாவினாலே தீர்க்கப்படாமலும், குற்றமில்லதுமாயிருந்தா லந்தக்கடனைப் பௌத்திரன் வட்டியில்லாமல் தீர்க்க.

பிதாவினாலே கொடுக்கப்பட்டதுபோய் மிகுதியாய்நின்ற கடனிலுவையைப் பௌத்திரன் தீர்க்க.

பிதாவினாலே யறியப்படாத கடனையும், அவனாலேதள்ளப்பட்ட கடனையும், கடன்காரன் மெய்ப்படுத்தினா லதனையும் அந்தப்பௌத்திரன் தீர்க்க.

பாட்டனானவன் கள்குடித்தல் முதலானவைகளாலுண்டாக்கிய கடனைப் பௌத்திரன் கொடுக்கவேண்டுவதில்லை.

விஷ்ணு.

பாட்டன் கடனுடையவனாகிச் சன்னியாசத்தையடைந்தாலும், மரித்தாலும், தேசாந்திரம்போ யிருபதுவருஷஞ் சென்றாலும், அவனுடைய கடனைப் பௌத்திரன் தீர்க்க.

பௌத்திரன் பாட்டனுடைய பொருளையடைந்தால் அவனுடையகடனை வட்டியுடனும், பொருளையடையாவிடில் வட்டியில்லாமலுங் கொடுக்க.

நாரதர்.

அந்தப் பௌத்திரனுடைய புத்திரன் தனது தந்தையின் பாட்டனுடையபொருளை யடையாவிடில் கடனைத்தீர்க்கவேண்டுவதில்லை.

பிரகற்பதி.

பாட்டனும் பிதாவும் தானும் கடன்வாங்கினவிஷயத்தில் பாட்டனுடைய கடன்முதல் கிரமத்திலே தீர்க்க.

புத்திரனைக்குறித்துப் பதினாறுவயதுடையவரா யிருத்தல் முதலாகக்கூறிய பலவகை விசேஷணங்களெல்லாம் பௌத்திரருக்குங் கொள்க.

## கடனுடையவனது பொருளையடைந்தவன் முதலானவர்களின் விஷயம்.

யாஞ்ஞவற்கியர்.

கடனுடையவன் புத்திரரும் பௌத்திரரு மில்லாதவனாகியும், பொருளுடையவனாகியு மிருந்து இறந்துபோனால் அவனுடையபொருளை யெடுத்துக்கொண்டவனும், அவனில்லாதபோது அவனுடைய மனைவியை வைப்பாட்டியாக வைத்துக்கொண்டவனும், அவனில்லாதபோது பிறவிக்குருடுமுதலான தன்மையுடையவராகிய வவனுடைய புத்திரரு முறையே அவனுடையகடனைத் தீர்க்க.

காத்தியாயனர்.

பொருளுடையவளாகியும், சிறுகுழந்தையுடையவளாகியு மிருக்கின்ற மனைவி கடனுடையவனாகியிருந்த கணவனிறந்துபோனபின்பு தன்னுடைய நன்மாமன்முதலான அன்னியனைத் தன்னைக்காத்தற்பொருட்டு வைத்திருந்தால் அந்த மாமன்முதலானவர்க ளந்தக் கடனைத் தீர்க்க.

அவர்க ளந்தக்கடனைத் தீராவிடில் அவளைவிடுக.

## குடும்பவிஷயம்.

பிரகற்பதி.

குடும்பத்தலைவன் குடும்பங்காத்தற்பொருட்டு தனதுதந்தையுடன் பிறந்தவன் - தன்னுடன்பிறந்தவன் - தனதுமைந்தன் மனைவி தாய் - வேலைக்காரன் - மாணுக்கன்-தன்னை யடுத்திருப்பவ னிவர்கள் வாங்கினகடனைத் தீர்க்க.

நாரதர்.

புத்திரனையுடையவளும் பொருளில்லாதவளுமாகிய வொருத்தி கடனுடையவளாயிருந்து தனது புத்திரனைவிட்டுநீங்கிப்போய் தனது மாமன்முதலான அன்னியனை யடுத்திருந்தா லவளுடையகடனை யவளுடைய புத்திரனே தீர்க்க.

விட்டுணு.

குடும்பத்தலைவனுடையசம்மதியினாலே குடும்பங்காத்தலல்லாத மற்றெந்தக் காரியத்தைக் குறித்தாலும், மனைவிமுதலான குடும்பத்தாராலே வாங்கப்பட்ட கடனை அந்த குடும்பத்தலைவன் தீர்க்க.

காத்தியாயனர்.

ஆபத்துக்காலத்தில் குடும்பத்தலைவன் குடும்பங்காத்தலிலே திறமில்லாதவனனபோதேனும், பிணியுடையவனனபோதேனும், வருத்தமுற்றபோதேனும், கன்னிகையின் கலியாணப்பொருட்டேனும், பிதுருகாரியப்பொருட்டேனும், புத்திரன்முதலானவர்களாலே வாங்கப்பட்டகடன் அந்தக் குடும்பத்தலைவனாலே தீர்க்கத்தக்கதாகும்.

நாரதர்.

ஒருவன் தனதுமைந்தன் மனைவியிவர்களாலே தனது குடும்பப்பொருட்டன்றிச் செய்யப்பட்ட கடனைத்தீர்த்தலிலே யிச்சையுடையவனானல் அந்தக் கடனைத்தீர்க்க. இச்சையில்லாதவனானல் அதனைத் தீர்க்கவேண்டுவதில்லை.

ஆபத்து நிமித்தம் புத்திரன்முதலானவர்களாலே செய்யப்பட்ட கடனைத் தீர்த்தலிலே யிச்சையில்லாதிருப்பினும், அந்தக்கடனைக் குடும்பத்தலைவன் தீர்க்கவேண்டும்.

வண்ணான் - செக்கான் - இடையன் - வேடன் - கள்விற்கிறவன் - கூத்தாடியிவர்கள் தங்களுடைய மனைவியர் - குடும்பப் பொருட்டேனும், மற்றெந்த நிமித்தத்தினாலேனு முண்டாக்கிய கடனைத்தீர்த்தலிலே யிச்சையிருப்பினு மில்லாவிடினுந் தீர்க்கவேண்டும்.

யாஞ்ஞவற்கியர்.

அவிபத்தர்கள் குடும்பத்தின்பொருட்டுக் கடன்வாங்கினபோது அந்தக்கடனைத்தீர்க்கத்தக்க குடும்பத்தலைவன் - தேசாந்தரம்போனாலும், இறந்துபோனாலும், அந்தக்கடனை யந்தக்குடும்பத்திலே பாகத்துக்குரியவர்களா யிருக்கிறவர்கள் தீர்க்க.

கணவன் மைந்தனிவர்களாற் வாங்கப்பட்டகடனை மனைவியும், புத்திரனாலே வாங்கப்பட்ட கடனைப் பிதாவும், மனைவியாலே வாங்கப்பட்ட கடனை கணவனுங் கொடுக்கவேண்டுவதில்லை.

## பராதீனமாதர் விஷயம்.

காத்தியாயனர்.

மனைவியும் - கணவனும் - புதல்வனு மொன்றுபட்டுக் கடன்வாங்கினவிஷயத்தில் அவருள் கணவனும், புதல்வனு மிறந்துபோனாலந்தக்கடனை அம்மனைவிதீர்க்க.

அப்படியல்லாத கடனை மனைவி தீர்க்கவேண்டுவதில்லை.

மனைவியானவள் தான் கொடுப்பதாக ஒப்புக்கொண்டால் அந்தக்கடனை அவளே தீர்க்கவேண்டும்:

மனைவியானவள் தான்தனித்துவாங்கினகடனைத் தானேதீர்க்க.

காத்தியாயனர்.

மரணசமயத்திலே கணவன் இந்தக்கடனை நீதீர்க்கவேண்டுமென்று சொன்னபோது மனைவி தானொப்புக்கொள்ளாவிடினும், கணவனுடைய பொருளையடைந்தால் அவளே யந்தக் கடனைத்தீர்க்க.

## கடன்காரனிறந்துபோனபோது கடனைச் செலுத்து முறைமை.

நாரதர்.

வேதியனாகிய கடன்கார னிறந்தபோது அவனுக்குச் செலுத்தவேண்டிய கடன்பொருளை அவனுடையபுத்திரன் பௌத்திரன் முதலான மரபினரிடத்திலும், அவர்களில்லாவிடில் சமானகுலத்தினரிடத்திலும், அவர்களில்லாவிடில் மாமன்முதலான அணித்தினராகிய சுற்றத்தாரிடத்திலும், அவர்களில்லாவிடில் அன்னியனான வுத்தமவேதியனிடத்திலுங் கொடுக்க, அவனுமில்லாவிடில் புனலிற்பதிக்க, அல்லது அக்கினியிலோமஞ்செய்க, இவ்விரண்டு செய்கையும் பரலோக சாதனமாம். நிக்ஷேபத்தை வைத்தவனில்லாதபோது மிம்முறையே யறிக.

கடன்கோடல் முற்றிற்று.

---

## உ ப நி தி.

பலமுனிவர்.

உபநிதியானது உபநிதியெனவும் - நிக்ஷேபமெனவும் - நியாசமெனவு மூன்றுவகைப்படும்.

அவற்றுள்.

உபநிதியாவது ஒருவன் - தனமுதலான தனதுபொருள் தன்னிடத்திருந்தால் - அரசன் - பங்காளி - திருடனிவர்கள் முதலானவர்களா லபாயப்படுமென்றெண்ணி யச்சமுற்றுப் பொருளைச்சேமப்படுத்தற்பொருட்டு - நற்குலப்பிறப்பும் - நன்னடையும் - அறந்தெரிதலும் - உண்மையுரைத்தலும் - பல்கிளையுடைமையும் - பொருளுடைமையுமுடையவனாகியும் - நம் பத்தக்கவனாகியு மிருப்பவனிடத்தி லின்னதெ

ன்று சொல்லாமலும் - காட்டாமலும் - எதிரோ யெண்ணுமலும் - பெட்டி முதலானவைகளில் மறைத்து முத்திரையிட்டு வைப்பதாம்.

நிக்ஷேபமாவது, ஒருவன் மேற்சொல்லிய விசேஷணங்க ளெல்லா முடைய வொருவனிடத்தில்-தனதுபொருளை யவனெதிரோயெண்ணிக்கொடுப்பதாம்.

பிரகற்பதி.

யாசமாவதுஒருவன் மேற்சொல்லிய அச்சத்தால் தன்னுடைய எருதுமுதலிய காலிகள் வெண்கலப்பாத்திரமிவைமுதலானவைகளை மேற்சொல்லிய விசேடணங்களை யுடையவன்- அயலூருக்குப்போயிருக்கும்போது - அவன்வந்த பின்னர் அவனிடத்தி லொப்பிவிக்கவேண்டுமென்றுசொல்லி - அவனுடைய வீட்டாரிடத்திற் கொடுப்பதாம்.

மேற்சொல்லப்பட்டபொருள் - சாக்ஷிகளறியக் கொடுக்கப்படுவதும் - மறைவாகக் கொடுக்கப்படுவதுமென விருவகைப்படும்.

இப்படி வைக்கப்பட்டபொருளை வைத்துக்கொண்டவன்-தனது புத்திரனைப்போலக்காத்து பொருளைவைத்தவன் கேட்கும்பொழுதே கொடுக்க.

அப்படிப் பொருளைக்காத்துக்கொடுத்தால், அவன் - இரணியமுதலானபொருள்களைத் தானமாகக்கொடுத்தவனுக் கெந்தப் பலனுண்டாகுமோ அந்தப்பலத்தையும் - அடைக்கலம் புகுந்தவனைக் காத்தவனுக் கெந்தப்பல னுண்டாகுமோ அந்தப்பலத்தையு மடைவான்.

அந்தப்பொருளைக் கவர்ந்தவன் - தனது புதல்வனையும் - நண்பினன் முதலானவர்களையுங்கொன்ற பாவப்பலத்தை யடைவான்.

## நல்லவனுன பொருள்வைத்துக் கொண்டவன் விஷயம்.

பிரகற்பதி.

மேற்சொல்லப்பட்டபொருளை வைத்துக்கொண்டவன் -அதைத் தன்னிடத்தில் வைத்தபடியே பொருளை வைத்தவனிடத்திற்கொடுக்க மற்றொருவனிடத்திற் கொடுத்தல் கூடாது.

மேற்சொல்லப்பட்டபொருளானது, வைத்துக்கொண்டவனாலே வஞ்சனை பண்ணப்படாமல் - இராசிக தைவிகக்குற்றங்களினாலே யவனுடைய பொருளோடு நாசமடைந்தால் - அந்தப்பொருளை வைத்துக்கொண்டவன் கொடுக்கவேண்டுவதில்லை.

காத்தியாயனர்.

பொருளை வைப்பவன் இதனை யிவ்விடத்தில்வைத்தா லபாயப் படுமென்றறிந்துந் தனதுபொருளை வைத்தபோது அந்தப்பொருளெந்த வேதுவினாலே யானாலும் நாசமடைந்தா லதனைவைத்துக்கொண்டவன் கொடுக்கவேண்டுவதில்லை.

## துட்டனான பொருள்வைத்துக் கொண்டவன் விஷயம்.

பிரகற்பதி.

இராசிக தைவிகக்குற்றங்களினாலன்றி மேற்சொல்லப்பட்டபொருளை வைத்துக்கொண்டவனுடைய குற்றத்தினாலே பொருள் நாசமடைந்தால் அவனந்தப்பொருளின் விலையையும் - அகப்பட்டால் அதற்குள்ள வட்டியொடு பொருளையும் - உடையவனுக்குக் கொடுக்க - கவரப்பட்டால் பொருளுடையவனுக்கும் - தகுதியான தண்டப்பொருளை யரசனுக்குங் கொடுக்க.

பொருளை வைத்துக்கொண்டவனுடைய சோர்வினாலே - வைக்கப்பட்டபொருள் அவனுடைய பொருளோடு நாசமடைந்தால் - அவனந்தப் பொருளுக்குச்சமமான பொருளைமாத்திரங்கொடுக்க வட்டியில்லை.

வைக்கப்பட்ட பொருளைவைத்தவன் கேட்டபொழுது - கொடாவிடில் - அரசனதனை நூற்றுக்கைந்தாகிய வட்டியொடு கொடுப்பிக்க.

பொருளைவைத்தவன் கேட்டுங்கொடாம லிருந்தபோது இராசிக தைவிகக்குற்றங்களினாலே பொருள்நாசமடைந்தால் அந்தப்பொருளின்விலையைமாத்திரம்உடையவனுக்கும் தகுதியானதண்டப்பொருளை யரசனுக்கும் பொருளைவைத்துக்கொண்டவன் கொடுக்க.

வியாசர்.

பொருளை வைத்தவனுடையவனு மதியில்லாமல் அனுபோகப் பொருட்டுச் செலவழித்தாலும் - இலாபப்பொருட்டுக் கொடுக்கல் வாங்கல்செய்தாலும் பொருளைவைத்துக்கொண்டவன் அந்தப்பொருளை வட்டியோடு உடையவனுக்கும் - தகுதியான தண்டப்பொருளை யரசனுக்குங் கொடுக்க.

பிரகற்பதி.

பொருளைவைத்துக்கொண்டவன் தன்னிடத்தில் வைத்தபொருளைத் தின்றழித்தால் வட்டியோடும் - சோர்வினாலேயழித்தால் சமமா

கவும் - அறியாமையினாலேயழித்தால்நாலிலொருபங்கு குறைவாகவும் பொருளைவைத்தவனுக்குக் கொடுக்க.

பொருளை வைத்துக்கொண்டவன் சுற்றத்தாருடைய வலிமையினாலே பொருளை யில்லையென்றுசொல்லி பின்னர் - சாக்ஷியாலேனும்-திவ்வியத்தினாலேனு முண்டென் றொப்புக்கொண்டால் அவனந்தப் பொருளையுடையவனுக்கும் - அதற்குச் சமமான தண்டப்பொருளை யரசனுக்குங் கொடுக்க.

மனு.

சாக்ஷிகளெதிரி லெவ்வளவுபொருள் வைக்கப்பட்டதோ அவ்வளவுபொருளே அந்த சான்றினரெதிரில் வாங்கிக்கொள்ளத்தக்கது.

பொருளைவைத்தவன் சாக்ஷிகள் சொல்லும்பொருளி னளவுக்கு வேறுபாடாகச்சொன்னா லவன் தண்டிக்கப்படுவான்.

வைத்தபொருளை யில்லையென்பவனும் - பொருளைவையாமற் கேட்பவனுந் திருடனைப்போலத் தண்டிக்கப்படுவார்கள்.

பொருளைவைத்தவ னிறந்துபோனால் அவனுக்குச்சமமான வுரிமையுண்டயவனிடத்தில் அந்தப்பொருளை வைத்துக்கொண்டவன் - கொடுத்தபோது, அதைக்குறித்து - அரசனேனும் - பொருளைவைத்தவனுடைய சுற்றத்தாரேனும் வழக்கிடல் கூடாது.

பொருளுக்குரியவர்கள் பலரிருப்பின் அவர்களெல்லாருக்கு மெதிரிலே அது கொடுக்கத்தக்கது.

பொருளைவைத்துக்கொண்டவ னிறந்தபோனபோது - அவனிடத்தில் முன்பு பொருளைவைத்தவன் அவனது பொருளுக் குடையவனிடத்திலே தனதுபொருளை வாங்கிக்கொள்க.

இவ்விடத்தி லுபநிதிக்குக் காட்டியவிதியெல்லாம் நிக்ஷேபத்திற்கும் - நியாசத்திற்கும் - இரவல் முதலியவற்றிற்குங் கொள்க.

உபநிதி முற்றிற்று.

---

## கூடிமேம்படல்.

பலமுனிவர்.

கூடிமேம்படல் இலாபத்தின்பொருட்டு - நற்குலப்பிறப்பு - அறிவுடைமை - திறமை - சோம்பின்மை - நாணயமறிதல் - வரவுசெலவுதெரிதல் - சௌரியம் - பொருளுடைமை யிவற்றை யுடையவர்களா

கியும் - வலியின்மை சோம்புடைமை - மிகுந்த செல்வமுடைமை - நோய் - வருத்தம் - அதிஷ்டமின்மை - முதற்பொருளின்மை - யிக்குற்றமுடைய ரல்லாதவர்களும், தம்மிலொத்தவர்களுமாகி யிருக்கின்ற வணிகர் முதலானவர்கள் பலர்கூடி தத்தமக்குரிய - வாணிகம்-உழவு-சிற்பம் - வேள்வி - கூத்து - திருட்டு - என்னுமிவ்வறுவகைத் தொழில்களைச் செய்தலாம்.

அவற்றுள்.

வாணிகச்செய்கை :—நாணயந்தெரிந்த வணிகர் பலர்கூடி முதற்பொருள்வைத்துப் பங்கேற்படுத்தியேனும் - செய்துகொண்ட கட்டுப்பாட்டின்படியேனும் - வாணிகத்தொழில் செய்வதாம்.

அவர்கள், எதிரிலேனும் - மறைவிலேனும் - வஞ்சனையில்லாமல் தனம் - தானியம் - பலவகைப்புண்ணியங்கள் - இவைகளைக்கொடுக்கல்-வாங்கல்-கொள்ளல் - விற்றல்-இவை முதலானகாரியங்களைச் செய்க.

வரவு - செலவு - குறைவு - வட்டி - நஷ்டம் - இவைகளைத் தாங்கள் - வைத்தமுதற்பொருளின் தொகைப்படியேனும் - ஏற்றம் - குறைவு - சமம் - இவ்வகையினேற்படுத்திக்கொண்ட பாகப்படியேனும் அடைக.

மேற்சொல்லிய முதற்பொருளின் தொகைப்படியேனும் - ஏற்பாட்டின் படியேனும் - செய்யத்தக்க காரியங்களைச்செய்க.

யாஞ்ஞவற்கியர்.

அந்தந்தச் செய்கைகளிலே - காரியஞ்செய்யத் திறமையில்லாதவன் - தனது பங்குக்குள்ளதை மற்றொருவனாலே செய்விக்க.

பிரகற்பதி.

கூடினவரெல்லோருஞ் சம்மதித் தேற்படுத்திய வொருவனாலே பத்திர முதலானவை செய்யப்பட்டு கொடுக்கல் - வாங்கல் - முதலான காரியஞ்செய்யப்படின் - அந்தக்காரியம் - அந்தக்கூட்டத்தாரெல்லா ராலுஞ்செய்யப்பட்டதாம்.

கூட்டுத்தொழிலாளருள் எந்தவிஷயத்தினாலும் வழக்குநேரிட்ட பொழுது அவர்கள் - பகையின ரல்லாதவர்களாயிருந்தால் - அதனை விசாரிக்கத்தக்கவரும் - அதற்குச் சாக்ஷிகளும் - அக்கூட்டத்தாரேயாவர்கள்.

யாஞ்ஞவற்கியர்.

கூட்டுத்தொழிலாளருளொருவன்கொள்ளல்-விற்றல்-முதலான காரியங்களிலே வஞ்சனைசெய்து - அது மெய்ப்பட்டா லந்தக்கூட்டத்தார் அவனுடைய இலாபத்தையெடுத்துக்கொண்டு - அந்தக்கூட்டத்தினின்றும்-அவனை வெளிப்படுத்துக.

வியாசர்.

சுங்கங்கொடாமல்-தப்புவித்துச் சாக்கைக் கொண்டுபோனவன் கொடுக்கவேண்டிய சுங்கப்பொருளுக்கு - இரட்டிப்புக் கொடுக்க.

பிரகற்பதி.

இராசிக தைவிகத்துன்பங்களாலே பொருள் நஷ்டமானால்-அந்த நஷ்டத்தைக்கூட்டத்தா ரெல்லாரும்-தங்கள் தங்கள்பாகப்படி யொப்புக்கொள்க.

கூட்டத்தாருள் ஒருவன் அவர்களுடையவனு மதிபெறுதவனு யேனும் • தடுக்கப்பட்டவனுயேனுந் தனதிச்சைப்படி காரியத்தைச் செய்து - தனது புத்தித்தாழ்வு - காமம்-குரோதம் - இவைமுதலான வேதுக்களினலே பொருளைக்கொடுத்தால் - அவனந்தக் கெடுதிப்பொருள் முழுதையும் - அந்தக்கூட்டத்தாருக்குக் கொடுக்க.

காத்தியாயனர்.

கூட்டத்தாருள் ஒருவன் தனது வலித்திறமையினலே - திருடராலேனும் - சலத்தாலேனும் - அக்கினியினலேனும்-கவரப்பட்டபொருளை மீட்டால் - அந்தப்பொருளிலே பத்திலொருபாகம் - அவனுக்கு அந்தக்கூட்டத்தார் கொடுக்க.

கூட்டத்தாரிற் சேராதவனுடைய பொருளைகாக்கின்றவனுக்கும் இவ்விதியே யறிக.

கூட்டத்தாராலே கொடுக்கப்பட்ட கடன்முதலியவற்றைக் கேட்டுவாங்குதல் முதலானகாரியங்களை யொருவன் தனது பாகப்படி செய்யாவிடில் அவனுக்கந்தப்பொருளிலுள்ள இலாபங்கிடையாது.

பிரகற்பதி.

உழவுச்செய்கை—தெரிந்த வுழவனானவன், திரவியம் - மாடு - விதை - கலப்பைமுதலானபயிர்ச்சாதனங்களைச் சமமாகவுடைய பலரோடு கூடியுழுதல் முதலானகாரியங்களைச் செய்தலாம்.

நன்றாகத்தெரிந்த வுழவனானவன், இளைத்ததும் மூப்படைந்ததும் - மிக்ககுறளும் - நோயுடையதும் - விரைந்தோடிப்போவதும் - ஒற்றைக்கண்ணுடையதும்-ஒடிந்த காலுடையதுமாகிய, எருதையும் - கடாவையும் - உழவின்பொருட்டுக் கொள்ளாதொழிக்க.

மலைக்கும் - பட்டணத்திற்கும் - இராசமார்க்கத்துக்கும் - சமீபத்திலிருக்கிற நிலத்தையும் - களர்நிலத்தையும் - எலிகள் மிகுதியாயிருக்கிறநிலத்தையும் - ஒழிக்க.

மேற்சொல்லப்பட்ட வாணிகச்செய்கையில் இலாபம்-நஷ்டம் - முதலானவைகளைக் குறித்துக்காட்டின - விதியெல்லாம் - உழவுச்செய்கையிலு மறிக.

பிரகற்பதி.

சிற்பச்செய்கை தட்டான்முதலான சிற்பத்தொழிலினர் பலர் கூடி பொன் - வெள்ளி - மற்றையுலோகவகைகள் நூல்-மரம் - கல்- தோல் - இவற்றால் ஆபரணமுதலானவைகளையும், தேவாலயமுதலானவைகளையும் செய்யும்பொழுது அந்தச் சிற்பத்தொழிலாளருள் திருத்தஞ்செய்பவ னொருபாகமும், நன்குணர்ந்தவ னிரண்டுபாகமுந் திறமையுடையவன் மூன்றுபாகமும்,ஆசாரியனான்குபாகமுங்கொள்க.

மேல் வாணிகச்செய்கைக்குக் காட்டின விதிகளையே தகுதிப்படி யிந்தச் சிற்பச்செய்கையிலுங் கொள்க.

மனு.

வேள்விச்செய்கை வேள்வித்துணை யந்தணர் பலர்கூடிச்செய்யுங் காரியமாம்.

வேள்வியின்பொருட்டு எசமானனாலே வரிக்கப்பட்டவர்களாகி நியமிக்கப்பட்டபடி அத்துவரியுமுதலான நால்வகைக் கணத்தாரும் தங்கள்தங்கள் காரியங்களைச் செய்க.

அந்த நால்வகைக்கணத்தாருக்கும் எசமானனாலே சமுதாயதக்ஷிணையன்றி விசேஷதக்ஷிணையாகக் கொடுக்கப்பட்ட தேரினை அத்துவரியுவும், வெள்ளைப் பரியினைப்பிரமாவும், வெள்ளைவாற்பரியினை ஒதாவும்,பண்டியை உற்காதாவும் முறையேகொள்க.

சமுதாயதக்ஷிணையை நூறுபங்காக்கி அவற்றுள் நாற்பத்தெட்டு பங்கை முதற்கணத்தினர் நால்வருஞ் சமமாகக்கொள்க. மிகுந்த ஐம்

பத்திரண்டுபங்கினு ளிருபத்தினுலுபங்கை யிரண்டாங்கணத்தினர் நால்வருஞ் சமமாகக்கொள்க. மிகுந்தவிருபத்தெட்டுபங்கினுள் பதினறு பங்கை மூன்ருங்கணத்தினர் நால்வருஞ் சமமாகக்கொள்க. மிகுந்த பன்னிரண்டுபங்கை நாலாங்கணத்தினர்நால்வருஞ் சமமாகக்கொள்க.

வேள்விக்காரியஞ் செய்யும்பொழுது ஒருவன் தனது காரியத்தைவிட்டு நீங்க விரும்பினல் அவன் தன்னுடையகாரியத்தை யன்னியனுலேனும்,தானிருந்த கணத்தாரு ளொருவனுலேனு முடிப்பித்துத் தனக்குள்ள தக்ஷிணையை யடைக.

அவருளொருவ னிறந்துபோனல் அவனெப்புக்கொண்ட காரியத்தை யவனுடைய கோத்திரத்தானேனும், மாணக்கனேனும், முடித்து அவனுடைய பாகத்தை யடைக.

சம்பந்தமுடையவ ரில்லாவிடில் வேள்விக்கு எசமானன் வேெருருவனை நியமித்து அந்தக்காரியத்தை முடிப்பித்து அந்தப்பாகத்திலே யவனுக்குச் சிறிதுகொடுத்து மிகுந்ததை முன்பு காரியத்தை யொப்புக்கொண்டவனுக்கே கொடுக்க.

பிரகற்பதி.

கூத்துச்செய்கை - நட்டுவன் முதலானவர்கள் பலர்கூடிச்செய்யுங் காரியமாம்.

நடனத் தொழிற்கூட்டத்தாருள் தலைவனிரண்டுபாகமும், தாளக்காரன் ஒன்றரைப்பாகமும், ஏனை யோர்சமபாகமுங் கொள்க.

திருட்டுச்செய்கை - திருடர் பலர்கூடிச் செய்யுங்காரியமாம்.

சோரக்கூட்டத்தார் தலைவனுடையவனு மதிபெற்று வலியவனை பகைவனுடைய தேசத்திற்சென்று கவர்ந்துகொண்டுவந்த பொருளில் அரசனுக் காறிலொருபங்கும், தலைவனுக்கு நாலிலொருபங்கும், சூரனுக்கு மூன்றுலொருபங்கும், திறமுடையவனுக் கிரண்டிலொரு பங்குங்கொடுத்து மிகுதியைச் சமமாகக்கொள்க.

காத்தியாயனர்.

எளியவனுன பகைவனுடைய தேசத்திற்சென்று கவர்ந்துகொண்டுவந்த பொருளிலோவெனில் அரசனுக்குப் பத்திலொருபங்கு ஏனையோருக்குப் பாகமுற்படியே.

அந்தக் கூட்டத்தாரு ளொருவன் பகைவனிடத்தகப்படின் அவனை மீட்பதற்காகக் கொடுத்தபொருளை அந்தக் கூட்டத்தாரெல்லாருஞ் சமமாக வொப்புக்கொள்க.

பங்கேற்பாடு செய்யாமற் கூடித் தொழில்செய்கின்ற வாணிகர் - உழவர் - சிற்பர் - திருடரிவர்களுக்கு மிவ்விதியேகொள்க.

## நல்கியதை நல்காமை:

பிரகற்பதி.

நல்கியதைநல்காமை - கொடுக்கத்தகாதபொருளும், கொடுக்கத் தக்கபொருளும், கொடுக்கப்பட்ட பொருளும் கொடுக்கப்படாதபொருளுமென நால்வகைப்படும்.

அவற்றுள்,

கொடுக்கத்தகாதபொருள் பலருக்கும்பொதுவாகியவழி நிலமுதலான பொருளும் - புதல்வரும் - மனைவியரும்- ஈடாகவைத்தபொருளும், அயலவனுக்குக்கொடுக்கப் பிரதிக்கினை பண்ணப்பட்டாலுஞ் சந்ததியுடையவனது எல்லாப்பொருளும், நியாசப்பொருளும், இரவற்பொருளும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பொருளும், நிக்ஷேபப்பொருளும், சீதனப்பொருளுமாம்.

இப்படிச்சொல்லப்பட்ட கொடுக்கத்தகாதபொருளைக் கொடுத்தவனும், வாங்கினவனுந் தண்டிக்கப்படுவார்கள்.

கொடுக்கத்தகாதபொருள் கொடுக்கப்பட்டால் அரசனந்தப் பொருளைவாங்கிப் பொருளுடையவனுக்குக் கொடுக்க.

நாரதர்.

கொடுக்கத்தக்கபொருள் குடும்பங்காத்தற்கு வேண்டியபொருளுக் கதிகமாயிருக்கிற தனதானியமுதலான பொருள்களாம்.

இந்தப்பொருள் பாகஞ்செய்துகொள்ளாதவர்களாயேனும், பாகஞ் செய்துகொண்டவர்களாகியேனு மிருக்கிறவர்களாலே கொடுக்கப்படலாம்.

பிரகற்பதி.

தலைவருடைய அனுமதியிருந்தால் விவாகத்தில்வந்த பொருளையும், பாட்டன்முதல் முறைமைப் புருஷரிடத்தி னின்றுவந்த பொருளையும், சௌரியத்தாலடைந்த பொருளையுங் கொடுக்கலாம்.

தானே சம்பாதித்தபொருளைத் தலைவருடைய அனுமதி வேண்டாமலே கொடுக்கலாம்.

ஈட்டுப்பொருளைத் தன்னுடையதானபோது கொடுக்கலாம்.

வசிட்டர்.

கணவனுக்குப்பின்பு மனைவியானவள் கொடுத்தலும் வாங்கலுஞ் செய்தல்கூடாது.

ஸ்வீகாரமாகப் புத்திரனை வாங்கிக்கொள்பவன் வாங்கிக்கொள்ளும்பொழுது அரசனுக்கறிவித்து சுற்றத்தாரெதிரே வீட்டினடுவில் ஓமஞ்செய்து விதிப்படி வாங்கிக்கொள்க.

யாஞ்ஞவற்கியர்.

ஒருவன் கொடுக்கத்தக்கனவாகிய அசையும் பொருளையும் அசையாப்பொருளையுங் கொடுக்கும்போது சாக்ஷிகள்முதலானவர்களறிய விளக்கமாகக்கொடுக்க.

ஒருவன் வாக்குத்தம்பண்ணின பொருளைக் கொடாமற் போனாலும், கொடுக்கப்பட்டதை மீட்டுக்கொள்ளவிரும்பினாலும், அவன் யாவியாவான் தண்டத்தையுமடைவான்.

ஆரீதர்.

ஒருவன் வாக்குத்தத்தம்பண்ணின பொருளைக் கொடாவிடிலந்தப்பொருள் கடன்பொருளைப்போல் அவனை யிகத்திலும் பரத்திலுந் தொடரும் அவன் பலவகையான நரகங்களை யடைந்து நாய்ப்பிறப்பு முதலிய இழிவான பிறப்பையு மடைவான்.

கௌதமர்,

தருமந்தப்பி நடக்கின்ற அந்தணன்பொருட்டு வாக்குத்தத்தம் பண்ணின பொருளைக் கொடாதவன் குற்றமுடையவனல்லன்.

கொடுக்கப்பட்டபொருள் சரக்கின்விலையாகக் கொடுக்கப்பட்டதும், தெரியாதகாரியத்தைத் தெரிந்துகொள்வதற்காகக் கொடுக்கப்பட்டதும், உவப்பினலே புகழ்வோன்முதலானவர்களுக்குக் கொடுக்கப்பட்டதும்,இஷ்டத்தினலே புதல்வர் முதலானவர்களுக்குக்கொடுக்கப்படதும்,பயமுதலான ஆபத்துக்காலத்தி லதைக்குறித்தேனும், காரியவுதவிசெய்ததைக் குறித்தேனுங் கொடுக்கப்பட்டதும், கலியாணப்பொருட்டுக் கன்னிகையின்ஞாதியர் முதலானவர்களுக்குக் கொடுக்கப்பட்டதும், இரக்கத்தினலே தாய் - தந்தை - குரு-மித்திரன் -

வணக்கமுடையவன் - எல்லாருக்கு முபகாரஞ்செய்தவன் - எளியவன் - அனுதன் - நல்லொழுக்கமுடையவ னிவர்களுக்குக் கொடுக்கப்பட்டதும், சிரத்தையினாலே புண்ணியத்தின்பொருட்டுக் கொடுக்கப்பட்டதுமென எண்வகைப்படும்.

காத்தியாயனர்.

பிராணபத்தையடைந்தவன் தன்னைக் காத்தவனுக்கு எல்லாப் பொருளுங் கொடுக்கிறேனென்று வாக்குத்தத்தம்பண்ணினாலும், அது சொன்னபடி சித்தியாது.

நாரதர்.

கொடுக்கப்படாதபொருள் பயத்தினாலே காவலாளருக்குக் கொடுக்கப்பட்டதும், பிரிக்கப்படாதபொருளைத் தாயாதிகளுக்குக் கொடுக்க வொப்பாமற் கோபத்தினாலே அன்னியருக்குக் கொடுக்கப்பட்டதும், ஒருவன் மிகுந்த துக்கத்தினாலே இந்தப்பொருளாலே நமக்கென்னபயனென்று சலிப்புற்றபோது அந்தச் சலிப்பினாலே கொடுக்கப்பட்டதும், திருட்டு - வன்செய்கை- பொல்லாதகாரியம் - அயலவன் மனைவியைப்பற்றுத விவற்றைச் சொல்லுகிறவனுக்கும், மறைந்தோடிப்போனவனை வெளிப்படுத்துகிறவனுக்கும்,காரியஞ்செய்யாதவனை இவனன்றாகக் காரியஞ்செய்கிறவனென்று எசமானனிடத்திற் சொல்லுதற்காக ஒருவனுக்குங் கொடுக்கப்பட்டதுமாகிய கைகூலிப்பொருளும், பரியாசத்தினாலே கொடுக்கப்பட்டதும், ஒருவன் தான்மீட்டும் வாங்கிக்கொள்ளுகிற பொருளை அயலவர்கொண்டாடும்படி சபையிலொருவனுக்குக் கொடுத்ததும், இளமையனாலே கொடுக்கப்பட்டதும், இன்னானுக்கிதுவென்கிற நிச்சயமில்லாமல் வேறொருவனுக்குக் கொடுக்கப்பட்டதும், உரிமையின்மையாகிய அடிமைமுதலானவர்களாலே கொடுக்கப்பட்டதும், நோயால் வருத்தமுற்றவனாலே கொடுக்கப்பட்டதும், அதருமத்தைக்குறித்துக் கொடுக்கப்பட்டதும், ஊமைத்தங்காய் முதலானவைகளைத் தின்று மயக்கமுற்றபோது கொடுக்கப்பட்டதும், வேலையை யொப்புக்கொள்ளும்பொருட்டு வேலையாளனுக் குபகாரம்போலக் கொடுத்ததும், ஒருவனிந்தப்பொருளை யிவனுக்குக்கொடுத்தால் நமக் கிலாபங்கிடைக்குமென்றெண்ணி யிலாபத்தை யுண்டாக்காதவனுக்குக் கொடுத்ததும், தகுதியில்லாதவனைத் தகுதியுடையவனென்று சொன்னதினாலே அவனுடையசொல்லை நம்பிக்கொடுத்ததும், அதருமமாகச் செலவழிக்கின்றவனைத் தருமமாக

செலவழிக்கின்றவனென்று சொன்னதைக்கேட்டுக் கொடுத்ததும், நபுஞ்சகன் - மிகவும் விருத்தன் - அவதூதன் - சன்னியாசி - இவர்களாலே கொடுக்கப்பட்டதுமாம் - இந்தப்பொருள்கள் மீட்டும் வாங்கிக்கொள்ளத் தக்கனவாம்.

காத்தியாயனர்.

ஒருவன் தனக்குக் காரியஞ்சித்திக்கிற நிமித்தங் கைக்கூலிகொடுக்க வாக்குத்தத்தம்பண்ணினாலும், அது கொடுக்கத்தக்கதன்று முன்னாகக்கொடுத்திருந்தா லதனை யரசன்வாங்கிப் பொருளுடையவனுக்குக் கொடுக்குப்படி செய்க.

கைக்கூலியை வாங்கினவனுக்கு அந்தக் கைக்கூலிப் பொருளுக்குப் பதினாறுமடங்கான பொருளைத் தண்டமாகவிதிக்க.

கைக்கூலிகொடுத்தவனுக்குத் தண்டமில்லை கொடுப்பித்தவனுக்கு தகுதியானதண்டம் விதிக்கப்படும்.

ரோயாற் பீடிக்கப்பட்டவன் தருமகாரியப்பொருட்டு வாக்குத்தத்தம்பண்ணின பொருளைக்கொடாமலிறந்துபோனா லந்தப்பொருளையவனுடைய புத்திரன் கொடுக்கவேண்டும்.

மனு.

வேள்விமுதலான தருமகாரியத்தைச் செய்வதற்காகப் பொருளை யாசித்துவாங்கினவ னந்தகாரியத்தைச் செய்யாமல் மதத்தினாலேனும் பொருளாசையாலேனுங்காரியஞ்செய்தேனென்று பொய்சொன்னால் அரசன் அவன்யாசித்துவாங்கின பொருளையும், அந்தக் குற்றத்திற்குத் தண்டமாக வொருபொன்னையு மவனிடத்தில் வாங்குக.

நாரதர்.

கொடுக்கப்படாதனவாகிய பொருள்களைக் கொடுத்தவனும், வாங்கினவனுந் தண்டிக்கப்படுவார்கள்.

நல்கியதை நல்காமை முற்றிற்று.

---

## ஒப்பிப்பணிசெய்யாமை.

நாரதர்.

பணிசெய்பவர்:—உயர்வான பணிசெய்பவரும். இழிவானபணிசெய்பவருமென விருவகையர்.

அவருள்,

உயர்வானபணிசெய்பவர்:—மாணுக்கரும், அணித்துறைவோரும், வேலையாளரும், வேலைத்தலைவருமென நால்வகையர்.

இழிவானபணிசெய்பவர்:—வீட்டடிமைமுதலான பதினைவர்.

இவ் விருவகையாருக்கு முரிமையில்லை.

மேற்கூறியநால்வகையாருள்,

மாணுக்கனென்பவர்:—இருபிறப்பாளரும், வசந்தகாலத்திற்செய்யப்பட்ட வுபநயன முதலானவைகளை யுடையவருமாகி யிருப்பவர்.

அவர் குருவினிடத்திலே பிச்சை யன்னத்தைப் புசித்துக்கொண்டும், குருவுக்கும், அவருடைய பத்தினிக்கும், புத்திரனுக்கும் இழிவல்லாத பணிவிடைசெய்துகொண்டும், இருக்குவேதமுதலான வேதங்களைக் கற்றுசமாவர்த்தனஞ் செய்தவுடனே குருதக்ஷிணைகொடுத்து வணங்கி அவருடைய விடைபெற்று நீங்கித் தமதுவீட்டை யடைக.

அணுத்துறைவோனென்பவர்:—சிற்பசாஸ்திர ஞானமுண்டாகும்பொருட்டும், பொன் - மணி இவைமுதலியவற்றைச்சேர்ந்த வேலைகளிலும், தாம்பிர முதலான வுலோகவகைகளைச் சேர்ந்த வேலைகளிலும், நாட்டியம் - கீதம் - இவைமுதலியவற்றைச் சேர்ந்த வேலைகளிலுங் கைவல்லமை யுண்டாகும் பொருட்டும், ஆசாரியனிடத்தில் அவனேற்படுத்தியகாலஅளவுவரையில்அவனுடையவீட்டில் அன்னம் புசித்துக்கொண்டு - அவன் சொன்னபடி கங்கணம் கடகஞ் செய்தல் முதலான வேலைகளைச் செய்துகொண்டிருப்பவர்.

ஆசாரியன் அவ்வணித்துறைவோருக்கு வேலை கற்பித்து அவரைச் சிக்ஷித்துத் தனது புத்திரனைப்போல நடப்பிக்க. ஆசாரியன் அவர்களுக்குச் சிற்பவேலையிடாமல் வேறுகாரியங்களைக் கற்பித்தால் அவ்வாசாரியனுக்குப் பூருவசாகசதண்டம் விதிக்கப்படும்.

அவ்வணித்துறைவோர் கிரமந்தப்பி நடக்கிற ஆசாரியனைவிட்டு நீங்கலாம்.

அவ்வணித்துறைவோரோடிப்போனுல் ஆசாரியனவரைப்பற்றி யிழுத்தடித்துக் கட்டிவைத்துத் தன்னிடத்திலிருக்கும்படி செய்க.

அவ்வணித்துறைவோர் ஆசாரிய னேற்படுத்தியகாலத்துட் சில காலத்தில்வேலைகற்றுமுடிந்தால் குறைக்காலஞ்செல்லுமளவும் ஆசாரியனிடத்தில் இருந்து அந்த வேலையாற்கிடைத்தபொருளை யவனுக்கு

க் கொடுத்து அந்தக் காலமுழுதுஞ் சென்றவுடனே தனதுசத்திக்குத் தக்கபடி ஆசாரியனைப் பூசித்துவணங்கி யவனுடைய விடைபெற்று நீங்குக.

---

பிரகற்பதி.

வேலையாளர்—பெண்கூலிக்காரர் - பொருள்கூலிக்காரர் - போகக்கூலிக்காரரென மூவகையர்.

அவருள்,

பெண்கூலிக்காரரென்பவர்—எசமானனுடையவீட் டடியாளைக் கலியாணம்பண்ணிக்கொண்டு அவளையே கூலியாகக்கொண்டு அவ்வெசமானனிடத்தில் வேலைசெய்பவர்.

பொருட்கூலிக்காரரென்பவர்—எசமானன் கொடுக்கும் பொருளையே கூலியாகக் கொண்டு அவ்வெசமானனிடத்தில் வேலைசெய்பவர்.

போகக்கூலிக்காரரென்பவர்—பயிரின் பலத்தையும் பசுவின்பாலையுங் கூலியாகக்கொண்டு எசமானனிடத்தில் வேலைசெய்பவர்.

அவருள்,

ஆயுதச்சேவகர்உத்தமர் - உழவுச்சேவகர் மத்திமர் - சுமைசுமத்தல் - சோறட்டல் - இவைமுதலான வீட்டுவேலைசெய்பவ ரதமர்.

வேலைத்தலைவரென்பவர்—வேலைக்காரரை நியமித்து அவர்களாலே வீட்டு வேலைகளையும் வெளிவேலைகளையுஞ் செய்வித்துக்கொள்பவர்.

## அடிமையர் விளக்கம்.

நாரதர்.

அடிமையர்—வீட்டடிமை முதலிய பதினைவர்.

அவருள்,

வீட்டடிமையென்பவன்-வீட்டடியாளிடத்திற்பிறந்தவனும்.

விலையடிமையென்பவன்-விலையாற் கொள்ளப்பட்டவனும்.

அடையடிமை யென்பவன்-தானம்வாங்குதல் முதலியவற்றா லடையப்பட்டவனும்.

தாயவடிமையென்பவன்-விபாகத்திலே பாகப்படி வந்தவனும்.

அனுகாலபிருதனென்பவன் கொடுமையானகாலத்திற்காக்கப்பட்டவனும்.

ஈட்டடிமை யென்பவன் - கடன்காரனிடத்தி லீடாவைக்கப்பட்டவனும்.

கடன்மீளடிமையென்பவன் தனது கடனை தீர்த்தற்பொருட் டடிமையானவனும்.

போரிற்கிடைத்தவனென்பவன்-போரிலே வென்றதனுற் கொள்ளப்பட்டவனும்.

பணிதனென்பவன் - அடிமையாகுகையைத்தானே ஒட்டமாகச்செய்யப்பட்ட சூதுமுதலியவற்ருல் வெல்லப்பட்டவனும்.

தானுமடிமையென்பவன் - நானுனக்கடிமையானேனென்று வந்தவனும்.

துறவுகெட்டவடிமையென்பவன்-துறவினிலே தவறி யடிமையானவனும்.

செய்யப்பட்டவடிமையென்பவன் - நீ இவ்வளவுகால மெனக்கடிமையாயிருவென் றடிமையாகப்பண்ணப்பட்டவனும்.

சோற்றடிமை யென்பவன் - தானுண்ட சோற்றின் விலைக்காகக் காலவளவை யேற்படுத்தி வேலைசெய்பவனும்.

வடவாபிருதனென்பவன் - ஒருவன்வீட்டடியாளைக் கலியாணம்பண்ணிக்கொண்டு அவளுடைய எசமானனுக் கடிமையானவனும்.

காத்தியாயனர்.

அந்தணனை அந்தணனு மடிமையாகக் கொள்ளுதல்கூடாது.

மனு.

க்ஷத்திரியனும் வைசியனும் வேறுகதி யில்லாதகாலத்தில் அடிமையாகலாம்.

காத்தியாயனர்.

அனுலோமக்கிரமத்திலே யடிமையாகலாம்

அடிமையர் செய்கை.

வீட்டுவாசல் - தெரு - அசுசியானவிடம் இவற்றைத் துடைப்பத்தினுலே விளக்குதலும், சரீரத்தில் மறைக்கத்தக்கவிடத்தைச் சொறிதலும், எச்சில்-மலம்-சலம் இவைகளை வாரிக் கொட்டுதலும், சவசமுதலிய விழிவானகாரியங்களைச் செய்தலுமாம்.

நாரதர்.

மேற்சொல்லப்பட்ட அடிமையர் பதினைவருள் துறவு கெட்ட அடிமையொழிந்த மற்றையடிமையரெல்லாரும் தங்களையடிமையாகக்கொண்ட எசமானனுடைய தயையினாலே அடிமைத்தன்மையினின்றும் விடப்படுவார்கள்.

மேலும் புலிமுதலியவற்றால் எசமானனுக்கு உயிர்க்கிறுதியுறும்படி நேரிட்ட ஆபத்துக்காலத்தில் அவ்வெசமானனைக் காத்தால் அவர்களிவ்வாலே அடிமைத்தன்மையினின்று நீங்கிப் புத்திரபாகத்தையடைவர்கள்.

துறவுநிலைகெட்ட அடிமை சாகுமளவும் அரசனுக்குமாத்திரமடிமையாவான்; அவனுக்கு மீட்சியில்லை. அவனந்தணனால் அரசனவனுடைய நெற்றியிலே நாய்க்காற்குறியிட்டு தேசத்தினின்று மவனைத் துரத்திவிடுக.

கடன்மீளடிமை—தன்னுடைய கடனுக்காக எசமானன் கொடுத்தபொருளை வட்டியுடனே யவனுக்குக்கொடுத்தால் மீள்வான்.

தானமடிமை-போரிற்கிடைத்தவன்-பணசிதன்-இம்மூவரும் தங்கள்பொருட்டு வேறுமனிதனைக் கொடுத்தேனும் தக்ககாரியஞ் செய்தேனு மீள்வார்கள்.

செய்யப்பட்ட அடிமை—ஏற்படுத்திய காலமுடிவிலே விடப்படுவான்.

அனுகாலபிருதனும் சோற்றடிமையும் தாங்களுண்ட சோற்றின் விலையைக் கொடுத்தால் விடப்படுவார்கள்.

ஈட்டடிமை தன்னை யீடாகவைத்து வாங்கப்பட்ட பொருளைக் கொடுத்தால் விடப்படுவான்.

வடவாபிருதனென்பவன் எசமானனுடைய வீட்டடியாளை விடுதலினாலே விடப்படுவான்.

யாஞ்ஞவற்கியர்.

ஒருவன் வலிமையா லடிமையாகக்கொள்ளப்பட்டாலும் திருடராலே கவரப்பட்டு அடிமையாகும்படி விற்கப்பட்டாலும் ஈடாகவைக்கப்பட்டாலும் தானம்பண்ணப்பட்டாலும் அவனுக் கடிமைத்தன்மையில்லை.

அவனை யேற்றுக்கொண்டவன் விடாமற்போனால் அரசன் விடுவிக்க.

காத்தியாயனர்.

வீட்டடியாளை எசமானன் விரும்பி யவளுக்குக் கருப்பமுண்டானால் அந்தப்பிள்ளையோடும் அவளடிமைத்தன்மையினின்று நீக்கத்தக்கவளாவாள்.

எஜமானன் அடிமையை அடிமைத்தன்மையினின்றும் ஒழித்துவிட நினைத்தால் அடிமையினுடைய தோளிலிருக்கிற நீர் நிறைந்த குடத்தை வாங்கியுடைத்து, தான் கிழக்குமுகமாகநின்று - அக்ஷதை மலரோடு கூடியசலத்தை யவ்வடிமையின் றலையிலிறைத்து - அடிமையல்லனென்று முக்காற்சொல்லி அவ்வடிமையை விடுக.

அப்படி விடப்பட்டவடிமை பிணைப்படுதல் முதலான வெல்லாக்காரியங்களிலுந் தகுதியுடையவனாவான்.

மேற்கூறிய விதியெல்லாம் பெண்ணடிமைக்குங் கொள்க.

நான்கு வருணத்தாருள் அனுலோமக்கிரமத்தில் அடிமையாகலாம்.

ஒப்பிப் பணிசெய்யாமை முற்றிற்று.

## கூலிகொடாமை.

நாரதர்.

வேலைக்குக் கூலியேற்படுத்திக் கூலிகொடுப்பதற்குக் காலமேற்படுத்தாதவிஷயத்தில், கூலியை மூன்றுபங்காக்கி வேலைத்தொடக்கத்திலொருபங்கும்நடுவிலொருபங்கும் முடிவிலொருபங்குமாகக்கொடுக்க.

கூலி யிவ்வளவென் றேற்பாடுசெய்யாதவிஷயத்தில் - வாணிகத்தொழிலில் வேலைசெய்தவனுக் கிலாபத்திலும், பசுக்காக்குந் தொழிலில் மேய்ப்பவனுக்கு அந்தப் பசுவின்பால் முதலியவற்றிலும் பயிர்த்தொழிலில் அற்பமான வருத்தத்தினாலே பயிர்செய்தவனுக்குஅந்தப் பயிரின்பலத்திலும் பத்திலொருபாகங் கொடுக்க.

பிரகற்பதி.

உழவன் எசமானனாலே உணவு - ஆடை - கொடுக்கப்பட்டவனாகி மிகுந்த வருத்தப்பட்டு பயிர்செய்தால் அந்தப் பயிரின்பலத்தில் அவனுக்கு அஞ்சிலொருபங்கும் உணவு ஆடை கொடுக்கப்படாதவனாகி மிகுந்தவருத்தப்பட்டுப்பயிர்செய்தால் அவனுக்கு மூன்றிலொருபங்குங் கொடுக்க.

மனு.

கூலியேற்படுத்தப்படாமல் கப்பல் வியாபாரஞ்செய்கிற கூலிக்காரருக்குக்கடலிலே சஞ்சரிக்கத்தக்க திறத்தினராயும் அந்தந்த தே

சங்களிலே அந்தந்தக்காலங்களில் நடக்கும் வழக்கந்தெரிந்தோராயு மிருக்கின்றவர்களா லேற்படுத்தப்பட்டதே கூலியாம்.

யாஞ்ஞவற்கியர்.

வாணிகத்தில், எஜமானனுடைய அனுமதியில்லாமல் வேலையாளன் இலாபத்தைக் குறைவாகப்பண்ணினால் அவனுடைய கூலியிலே எஜமானனிச்சைப்படி யவனுக்குச் சிலகொடுக்கப்படும்.

அந்தவேலைக்காரன் அதிக லாபமுண்டாகும்படிசெய்தால் அவனுடைய கூலிக்கதிகமாகச் சிலபொருள் அவனுக்குக் கொடுக்கப்படும்.

கூலிக்காரர் பலர்கூடிக் கிணறுகல்லுதல் முதலியவற்றைச் செய்யுமிடத்து அந்தவேலை முடியாதபோது அவரவர்வேலைக்குத் தகுதியாக நடுவர்சம்மதிப்படி கூலிகொடுக்கத்தக்கது.

அவர்களா லந்தவேலை முடிக்கப்பட்டால் பேசினபடி கூலிகொடுக்கத்தக்கது.

நாரதர்.

வேலையாளர் தங்கள் வசப்படுத்தின காரியசாதனங்களாகிய கலப்பை முதலியவற்றை உடையவனைப்போலச் சோர்வுறுமற் காக்கவேண்டும்.

பிரகற்பதி.

அவர்கள் சோர்வுசெய்தாற் கூலியிழப்பர்.

வேலைசெய்ய வொப்புக்கொண்டு முன் கூலிவாங்கினவன் அந்தவேலைசெய்யாவிடில் எசமானனுக்கு அந்தக்கூலிக் கிரட்டிப்புப்பொருளையும், தன்னுடைய சத்திக்குத்தக்கபடி அரசனுக்குத் தண்டத்தையுங்கொடுக்க.

யாஞ்ஞவற்கியர்.

முன் கூலிவாங்காதவன் தானொப்புக்கொண்ட வேலையைச்செய்யாவிடில் எசமானனுக்குமாத்திரம் - தனக்குச் சொன்னகூலிக்குச் சமமான பொருளைக்கொடுக்க.

நாரதர்.

அல்லது எசமானன் - கூலியைக்கொடுத்து வலிமையினாலே வேலையைச் செய்வித்துக்கொள்க.

பிரகற்பதி.

வலிமைசெய்துஞ் செய்யாவிடில், அவனுக்கு இருநூறுகாருடா பணம் தண்டமாக விதிக்கப்படும்.

மனு.

வேலையாளன் ஒப்புக்கொண்ட வேலையிலே சிறிது குறைவாயிருப்பினும் அப்பொழுது அவனுக்குக் கூலிகொடுக்கத் தக்கதன்று.

அந்த வேலையாளன் பிணிமுதலிய துன்பத்தால் வேலைசெய்யாமற் காலதாமசமானாலும் அந்தவேலையைமுடித்துக்கூலியை யடைவான்.

நாரதர்.

காலவளவை யேற்படுத்தி வேலைசெய்ய வொப்புக்கொண்டவன் அந்தக் காலமுடிவாகு முன்னமே செய்யாவிட்டால் அவன் கூலியிழந்து அரசனுக்கு நூறுபணந் தண்டமாகக் கொடுக்கக்கடவன்.

விட்டுணு.

வேலைசெய்கின்றவனை - எஜமானன் வைதல் முதலியவற்றால் வேலையை விட்டுப்போகும்படிசெய்தால் அரசன் அவன்செய்த வேலைக்குள்ள கூலியைக் கொடுப்பிக்க.

பலமுனிவர்.

எஜமானனுடைய எருதுமுதலானவைகள் இராசிக தைவிகங்களினாலும், திருடர்களினாலு மல்லாமல் வேலையாளனுடைய சோர்புமுதலான குற்றத்தினாலே கெடுதியடைந்தால் அவற்றின் விலைக்குச் சமமாகவும் கொலைச்சிந்தையினாலே கொடுமையான அடித்தல் முதலிய செய்கையாற் கெடுதியடைந்தால் இரட்டிப்பாகவும் அந்தவேலையாளன் கொடுக்க.

நாரதர்.

பாக்குச்சுமை முதலானவை சுமைகாரனுடைய சோர்வினாலே கெடுதியடைந்தால் அந்தச்சரக்கின் விலைக்குச் சமமான பொருளும் அவனுடைய கெடுபுத்தியினாலே கெடுதி யடைந்தால் இரட்டிப்புப் பொருளுங்கொடுக்க.

காத்தியாயனர்.

சுமைகாரன் - ஆயுதச்சேவகன் - இவர்கள் முதலானவர்கள் வேறுகூலிக்காரர் முதலானவர்கள் கிடையாத விடத்திலே - பயணவிகாதம்பண்ணினால் அவர்கள் எசமானனுக்குத் தங்களுடைய கூலிக் கிரட்டிப்புப் பொருள்கொடுக்க.

யாஞ்ஞவர்கியர்.

சுமைசுமைக்க வொப்புக்கொண்ட கூலிக்காரன் பயணத்தொடக்கத்லே ஒப்புக்கொண்டபடி செய்யாவிடில் அவன் தனக்குச்சொ

ன்ன கூலியிலேழிலொருபங்கையும் பாதிவழிக்குட்பட்ட விடத்திலானால் - நாலிலொருபங்கையும் நடுவழியிலானால் கூலி முழுதையும் எசமானனுக்குத்தண்டமாகக்கொடுக்க.

பிரகற்பதி.

எஜமானனுடைய அனுமதியினாலே வேலைக்காரன் எல்லையைக் கடந்து நிலத்தையுழுதல் முதலானவைகளைச்செய்தால் குற்றம் எசமானனுக்கேயாம் - அந்தவேலைக்காரனுக்குத் தண்டமுண்டாம்.

காத்தியாயனர்.

இளைத்தேனும் நோயால்வருத்தமுற்றேனு மிருக்கின்ற வேலைக்காரனையோரிடத்தில் வைத்து மூன்றுநாளேனுங் காப்பாற்றாத எஜமானனுக்குப் பூருவசாகசதண்டம் விதிக்கப்படும்.

பிரகற்பதி.

எஜமானன் வேலையைச்செய்வித்துக்கொண்டு கூலிகொடாவிடில் அரசன் கூலியைக்கொடுப்பித்துக் குற்றத்திற்குத் தக்கபடி தண்டத்தைவிதிக்க.

விட்டுணு.

ஒருவன் காலவளவேற்படுத்தி வைத்துக்கொண்ட கூலிக்காரனை அக்காலத்திற்குள்ளே தள்ளிவிட்டால் அவன்கூலிக்காரனுக்குக் கூலி முழுதுங்கொடுத்து அரசனுக்கு நூறுபணந் தண்டமாகக்கொடுக்க.

யாஞ்ஞவற்கியர்.

சரக்குப்பொதி முதலானசுமை சுமக்கும்வேலையை யொப்புக்கொண்டவனைப் பயணம் ஆயத்தமாயிருக்கையில் எஜமான் - தள்ளிவிட்டால் - அவன் - ஏற்படுத்தின கூலியிலேழி லொன்றும் - பாதிவழிக்குட்பட்ட விடத்திலே தள்ளிவிட்டால் - கூலிமுழுதும் கொடுக்க.

விருத்தமனு.

பாதிவழிக்குட்பட்ட விடத்திலே சரக்குவிற்கப்பட்டால் எஜமானன் பேசினகூலியிற் பாதிகொடுக்க.

காத்தியாயனர்.

சரக்குச்சுமை - சுங்கக்காரனாலே தடுக்கப்பட்டாலும் - அரசன் முதலானவர்களாலே கவரப்பட்டாலும்-அவ்வழியி னளவுக்குத்தக்க கூலியைக் கூலிக்காரனடைவான்.

நாரதர்.

ஒருவன் சரக்கைக்கொண்டுபோவதற்காக எருதுமுதலானவைகளை வாடகைக்கு வாங்கிச் சரக்கைக் கொண்டுபோகாவிட்டால் அ

வன் தான்சொன்ன வாடகையில் நாலிலொருபங்கும் கொண்டுபோய்ப் பாதிவழியில்விட்டால் வாடகை முழுதும் பாதிக்குட்பட்டவிடத்தில்விட்டால் அதற்குத்தக்கவாடகையுங் கொடுக்க.

காத்தியாயனர்.

ஒருவன் தனது காரியப்பொருட்டு பண்டி-யானை-குதிரை-கழுதைமுதலானவைகளையும், வீடு-கடை-சலபாத்திரம்- நெய்ப்பாண்டமுதலானவைகளையும் வாடகைக்கு வாங்கிக்கொண்டு அவைகளினாலே பயனையடையாவிடினும் அவன் அவைகளை உடையவன்வசம் ஒப்புவிக்குமளவும் உள்ள வாடகையைக் கொடுக்க.

நாரதர்.

வாடகைக்கு வாங்கின நெய்ப்பாண்ட முதலானவைகள் நெறிந்தேனும், உடைந்தேனும்போனால் வாங்கினவன் வேறு பாண்டமுதலானவைகளையேனும், அவைகளுக்கு விலையையேனு முடையவனுக்குக் கொடுக்க.

அன்னியனுடையநிலத்தில் வீடுகட்டி வாடகைகொடுத்துக் குடியிருந்தவன் அவ்விடம்விட்டுப் போம்பொழுது அவன் மரம்-செங்கல் முதலானவைகளைக் கொண்டுபோகுக.

வாடகையேற்படுத்தாமல் வீடுகட்டிக் குடியிருந்தவன் போம்பொழுது அந்தவீட்டின் மரமுதலானவை நிலத்திற் குடையவனைச் சேரும்.

## விலைமாதர்விஷயம்.

நாரதர்.

வேசையானவள் ஒருவன்கொடுத்தபணத்தை வாங்கிக்கொண்டு அவனை யிச்சியாமற்போனால் அவள்வாங்கினபணத்திற் கிரட்டிப்பான பொருளை யவனுக்குக்கொடுக்க.

பணங்கொடுத்தவன் அவளை யிச்சியாமற்போனால் அவன் அந்தப்பணத்தை யிழப்பான்.

ஸோயினள் மிகவு முக்கியமான காரியத்திற் பதைப்புற்றிருப்பவள் - இராசகாரியத்தி லிச்சையுடையவள் - ஒருவனாலே வரிக்கப்பட்டவள் - இவர்கள் தாங்களுடன்பட்ட புருஷனைச் சேராவிடில் அபராதமில்லை,

ஒருவன் வேசையை யனுபோகித்துப் பணங்கொடாவிடினும், பல் - நகம் முதலானவைகள் மிகவுமழுந்த வனுபோகித்தாலும், உபஸ்தமல்லாத விடங்களிற்புணர்ச்சிசெய்தாலும், பலரைப் புணரும்படி செய்தாலும், அவன் பணத்திற் கெண்மடங்குபொருளை யவளுக்கும், அதற்குச்சமமான தண்டப்பொருளை யாசனுக்குங் கொடுக்கத்தக்கவனுவான்.

புராணம்.

வேசையானவள் ஒருவனிடத்திற் பணம்வாங்கிக்கொண்டு பொருளாசையால் மற்றொருவனை யனுபோகித்தால் அவள் முன்வாங்கின பணத்தை பணங்கொடுத்தவனுக்கும், தண்டத்தை அரசனுக்குங் கொடுக்கத்தக்கவள்.

வேசையிரிடத்திலுண்டாகிற விவாதம் அவர்களுடைய வீட்டிலே யிருப்பவரும். அவர்களையே கொண்டாடுவோரும், காமுகருமாகிய இவர்களாலே நிச்சயிக்கத்தக்கது.

## சாமிபால்விவாதம்.

பலமுனிவர்.

பசுவுடையவனாலே கூலியேற்படுத்தப்படாத விஷயத்தில் நூறு பசுமேய்க்கப்பட்டால் வருஷமொன்றிற்கு ஈனுதபசுவொன்றும், இருநூறுபசு மேய்க்கப்பட்டால் ஈன்றபசுவொன்றுடனே எட்டுநாளிலொருநாள் கறவைப்பசுக்களில் பத்துக்கு ஒன்ருக அதிகமாகக்கறக்கின்ற பசுவின்பாலும், மேய்ப்பவனுக்குக் கூலியாம். எல்லாத்தொகையினும் கூலியிப்படியே யறியத்தக்கது.

எருமை முதலான காலிகளை மேய்ப்பவனுக்கு மிப்படியே கூலியேற்படுத்துக.

பாலில்லாவிடில் மேற்சொல்லியபாலின் விலைப்பொருளை கூலியாகக் கொடுக்க.

யாஞ்ஞவற்கியர்.

மேய்ப்பவன் தன்வசமொப்புவித்த காலிகளை நாடோறுங் காலைப்பொழுதிற் கொண்டுபோய்ப் புல்லைமேய்ப்பித்து நீர்குடிப்பித்து மாலைப்பொழுதி லொன்றுங்குறையாம லொப்புவிக்க.

மனு.

மேய்க்குமிடத்தில் திருடர் - கொம்பு- காளம் வேய்ங்குழல்முதலானவைகளா லொலிசெய்து காலிகளைக் கவர்ந்துபோனல் மேய்ப்பவன் குற்றமுடையவனல்லன்.

வியாசர்.

காலிகளிருக்கும் ஊர் - நாடு - வீடு - இவற்றிற் கிடையூறுவந்தபொழுது காலிநஷ்டமாயேனும், கவரப்பட்டேனும்போனல் அதைக் குறித்து மேய்ப்பவனுக்குக் குற்றமில்லை.

பலமுனிவர்.

புழு - புலி - திருடர் - செந்நாய் - மலைமுழை பள்ளமுதலான மீண்டுவரக் கூடாதவிடங்கள் இவற்ருற் காலிக்கு அபாயநேரிட்டால் மேய்ப்பவன் கூக்குரலிடுதல் எசமானன் சமீபத்திலிருந்தா லவனுக்கறிவித்தல் இவைமுதலிய தன்னுலாகிய புருஷமுயற்சி செய்யாமற் சோர்வுமுதலான குற்றமுடையவனுயின் அவன் கெடுதியடைந்த காலியின்விலையை யெசமானனுக்கும், பன்னிரண்டணாப்பணந் தண்டத்தை அரசனுக்குங் கொடுக்க.

காலவசத்தாற் காட்டிலே காலியிறந்துபோனு லந்தக் காலியின் காது தோல் - வால் - இவைமுதலான அடையாளங்களை மேய்ப்பவன் எசமானனுக்குக் காண்பிக்க.

காத்தியாயனர்.

விளைநிலம் - தோட்டம் - புல்லிருக்குமிடம்- வீறகுக்காடு-வீடு-தொழுவம் - இவ்விடங்களிலே காலிபுகுமளவில் அவ்விடமுடையவன்புகுந்த காலி கன்ருனு லதின்காதுமுதலியவற்றைப் பிடித்தலும், பெரிய வெருதுமுதலானவைகளானு லடித்தலும், அவைகளைப் போக்குதற்குத் தக்கபடிசெய்க.

அடித்த லதிகமானுல் தண்டமுண்டாம்.

காடு - ஊர் - வழி - பெருவழி - வழிச்செல்வோர்தங்குமிடம்- இவற்றிற்குச் சமீபமான பயிர் நிலங்களுக்கு ஒட்டகமெட்டிப்பார்ப்பதற்கும், பசு - குதிரை தாண்டுதற்குங் கூடாததாகவும், பன்றி - நாய் - இவற்றின் முகநுழைக்கத்தக்க புழைகளில்லாததாகவும வேலிகட்டுக.

வேலிகட்டின பயிரைக் காலிகள் மேய்ப்பவனுலே தடுக்கப்படாமலே மேய்ந்தழித்தபோது மேய்ப்பவன் தகுதி யானதண்டத்தையும், காலியுடையவன் - நிலமுடையவனுக்குப் பலசேதத்தையுங் கொடுக்கும்படிசெய்க.

யாஞ்ஞவற்கியர்.

வேலியில்லாதபயிரை மேய்ப்பவனறியாமற் காலி மேய்ந்தழித்தால் மேய்ப்பவனுக்குக் குற்றமில்லை.

விட்டுணு.

அவனறிந்தழிக்கப்பட்டால் தண்டம் விதிக்கப்படும்.

கௌதமர்,

வேலியிடத் தக்கவிடங்களிலே வேலியிடாமல் இறைக்கூற்றுக்கு அழிவுசெய்த நிலமுடையவன் தண்டிக்கப்படுவான்.

யாஞ்ஞவற்கியர்.

காலிகள்வேறும்படி பயிரைமேய்ந்தழித்தால் காலியுடையவன் நிலமுடையவனுக்குப் பலசேதத்தையும், அரசனுக்குத் தகுதியான தண்டத்தையுங்கொடுக்க மேய்ப்பவனுக்குத் தடிமுதலியவற்ருலடித்தல் தண்டமாகவிதிக்கப்படும்.

பயிரையழித்த காலி - இளமைப்பருவங்கடந்த கழுதை-ஒட்டகம்-எருமை யிவைகளானல் எட்டுமாடமும், பசுவானல் நான்குமாடமும், வெள்ளாடு செம்மறியாடுகளாளு லிரண்டுமாடமும் தண்டமாக விதிக்கப்படும்.

காலிகள்மேய்ந்த விடத்திலே படுத்திருந்தால் மேற்சொல்லிய தண்டமெல்லாம் விதிக்கப்படும்.

சங்கலிகிதர்.

இரவிலே யொரு பசுபேய்ப்பவனறியாமல் ஒரு முகுர்த்தத்துக்குட்பட்ட காலத்தில் மேய்ந்தால் தண்டமில்லை.

கன்றீன்ற பத்துநாளைக் குட்பட்ட பசு தேவாலயப்பசு பெரிய வெருது- சூலம்போட்டபசு-அரசனுடைய யானை குதிரைகள் - இனந்தப்பிவந்தபசு - மீட்டு மினந்தேடிப்போம் பசு-ஒற்றைக்கண்ணுடையது-ஒற்றைக்கொம்புடையது-இடி-பாம்பு-புலி-நோய் இவற்ருல் துன்பப்பட்ட பசு இவற்றிற்குத் தண்டமில்லை.

கூலிகொடாமை முற்றிற்று.

---

## உடையவனல்லான் விற்றல்.

பிரகற்பதி.

உடையவனல்லாதவனென்பவன் நிக்ஷேபம்-அன்னுவாகிதம்-நியாசம்-கவரப்பட்டது-ஈடாகவைக்கப்பட்டது - தப்பிப்போனதாகிய அயலவனுடைய பொருள் இவைமுதலானவைகளை வெளிப்படையாகவேனும் மறைவாகவேனும் விற்பவன்.

உடையவன் - உடையவனல்லாதவனாலே விற்கப்பட்ட தனது பொருளை யெவனிடத்திற் காண்கின்றானோ அவனிடத்தினின் றதனை யடைவான்.

நாரதர்.

உடையவன் தப்பிப்போனதும் கவரப்பட்டதுமாகிய தனது பொருளை அரசனுக்கறிவித்துத்தானடைக.

உடையவன் அரசனுக் கறிக்கைசெய்யாமற் பொருளைக் கொண்டுபோனால் அவன் தண்டிக்கப்படுவான்.

உடையவன் தனது பொருளைக் கவர்ந்தவனிடத்திலேனும் தப்பிப்போ யெடுத்தவனிடத்திலேனுங் கண்டபோது அவர்களை யிராசமனுஷரைக் கொண்டு பிடிப்பிப்பதற்குக் காலதேசங்க ளொவ்வாவிடில் தானேயவரைப்பிடித்து அரசனிடத்திலேனும் அரசனுடைய மனுஷரிடத்திலேனும் ஒப்புவிக்க.

அரச னவர்களைத் தண்டித்து உடையவனுக்குப் பொருளைக் கொடுப்பிக்க.

யாஞ்ஞவற்கியர்.

உடையவனல்லாதவனிடத்தில் அறியாமையினாலே வாங்கப்பட்ட பொருளை வாங்கினவனிடத்தில் உடையவன் கண்டு அரசனுக் கறிவித்தபோது, அரசன் அப்பொருளின்விலையை விற்றவனாலேகொடுப்பித்து விலைப்பட்டபொருளை யுடையவனுக்குச் சேரும்படி செய்து விற்றவனைத் தண்டிக்க.

அகாலத்தில் வாங்குதல்முதலான குற்றங்கள் காணப்படில் விற்றவனும் வாங்கினவனுஞ் சோரனைப்போலத் தண்டிக்கப்படுவார்கள்.

வீட்டினுள்ளேனும் கிராமத்திற்கு வெளியிலேனும் அகாலத்திலேனும் தகுதியுடையரல்லாத ஈனரிடத்திலேனும் இரகசியமாகவேனும் தாழ்ந்தவிலையாலேனும் உடையவ னனுமதியில்லாமலேனும் அடிமை முதலிய வுரிமையின்மையரிடத்திலேனுங் கொள்ளப்பட்டது குற்றமுடையதாகும்.

காத்தியாயனர்.

பொருட்கெடுதியடைந்தவன் தன்னுடைய பொருளை அயல்வனிடத்திற் கண்டபோது ஆகமாதிகளினாலும் சாக்ஷிக்காராகிய ஞாதிகளினாலும் அப்பொருள் தன்னுடையதென்பதைச் சாதிக்க.

பிரகற்பதி.

அப்படிச் சாதித்தபின்பு அந்தப்பொருளை விலைக்கு வாங்கினவன் தனக்கு விற்றவனைக் காண்பிக்க.

வாங்கினவன் விற்றவனைக் காண்பித்தால் அவனுக்குக் குற்றமில்லை.

அயலவனுடைய பொருளைவிற்றவன் வாங்கினவனுக்கு விலைப்பொருளையும், அரசனுக்குத் தண்டத்தையும் உடையவனுக் கந்தப்பொருளையுங் கொடுக்க.

காத்தியாயனர்.

விற்றவன் தூரதேசத்தி லிருந்தால் அவனையழைப்பிப்பதற்காக அந்தத் தூரத்துக்குத் தக்க காலவளவைக் கொடுக்க.

அப்படிக் காலவளவு கொடுத்தும் வாங்கினவன் விற்றவனை யழைப்பியாமற்போனபோது தான் விலைக்குவாங்கினதைச் சாக்ஷிகளாலே மெய்ப்படுத்தினுல் அவனுக்குத் தண்டமில்லை.

அப்படி யழைப்பியாமலேனும் மெய்ப்படுத்தாமலேனும் போனுல் அவன் பொருளுடையவனுக்குப் பொருளையும் அரசனுக்குத் தண்டத்தையுங் கொடுக்கத்தக்கவனுவான்.

விலைக்கு வாங்கினதை நிச்சயித்தலிலே ஞாதியாகிய சாக்ஷியே பிரமாணம். மிகுந்த பொருள்விஷயத்திலே திவ்வியமுண்டாம்.

வியாசர்.

பொருட்கெடுதி யடைந்தவன் பொருளைத் தன்னுடையதென்று சொல்லி மெய்ப்படுத்தாவிடில் அவனுக்குச் சோரதண்டம் விதிக்கப்படும்.

பிரகற்பதி.

பொருட்கெடுதியடைந்தவன் பொருள் தன்னுடைய தாகுகையைச் சாதிப்பதற்கும், கொண்டவன் வாங்கினதைச் சாதிப்பதற்கும் மேற்சொல்லிய சாக்ஷிகளில்லாதபோது அரசன் அவ்விருவருடைய தகுதியைப் பார்த்து விவாதவிஷயமான பொருளின் விலையை அவ்விருவருக்கும் நியாயப்படி பிரித்துக்கொடுக்க.

காத்தியாயனர்.

உடையவனுலேயும் இராசமனுஷராலேயும் கடைவீதியிற் காணப்பட்ட பொருளை விற்றவன் இறந்தேனும் இருக்குமிடந் தெரியாம

லேனும் போனல் அந்தப் பொருள் விளக்கமாக விற்கப்பட்டதாளு லும் அதின் விலையிற் பாதியை வாங்கினவனுக்குக் கொடுப்பித்து அப்பொருள் உடையவனைச் சேரும்படி செய்க.

எசமானனுடைய வனுமதியில்லாமல் வீட்டடியாளை யொருநாளனுபோகித்தா லிரண்டுபணத்தையும், பசுவை யனுபோகித்தால் எட்டுப்பணத்தையும், எருதை யனுபோகித்தால் பதின்மூன்றுபணத்தையும், பூமியை யனுபோகித்தால் பதினறுபணத்தையும், உரல் - முறம் இவற்றை யனுபோகித்தால் அரையரைப்பணத்தையும், உலக்கையை யனுபோகித்தால் இரண்டுபணத்தையுங் கொடுக்க.

ஓடம்-குதிரை-கலப்பை-பசுஇவற்றை வலிமையாலனுபோகித்தவன் இவற்றிற் கொருநாளைக்குள்ள வாடகைக்கு எண்மடங்கு பொருளைக் கொடுக்க.

உடையவனல்லான்விற்றல் முற்றிற்று.

---

## விற்றுக்கொடாமை.

நாரதர்.

இருப்பிடத்தில் வாணிகஞ்செய்யு மொருவனுக்கு ஒருவன் சரக்கை விற்று வாங்கினவன் கேட்டுக்கொண்டிருக்கையிலே கொடாமலிருந்தபோது அந்தச் சரக்கு மலிந்தால் முன்பு சரக்கைக் கொண்டவன் கொடுத்தபணத்துக்கு அந்த மலிவினலே யெவ்வளவுசரக் கதிகமாகுமோ அவ்வளவுசரக்கை அவன் கொடுக்க.

யாஞ்ஞவற்கியர்.

சரக்குமலியாமற் கொண்டபோதிருந்தபடியே யிருந்தால் வட்டிப்பிரகாணத்திற் காட்டிய வட்டியுடனே அந்தச்சரக்கைக்கொடுக்க.

நாரதர்.

சரக்கைக்கொண்டவன் தேசாந்தரத்தில் வாணிகஞ் செய்பவனுல் அவனுக்குச் சரக்கை விற்றுக்கொடாதவன் - அந்தத் தேசவிலாபத்தையும் கொடாமலிருந்ததற்காக அரசனுக்கு நூறுபணந் தண்டத்தையுங் கொடுக்க.

காத்தியாயனர்.

சரக்கைக்கொண்டதையும் விற்றதையுங் குறித்துச் சந்தேகமில்லாதபோது பத்துநாளைக்குமேல் முன்பு சரக்கைக்கொண்டவன் அந்தச்சரக்கை மீளவுங் கொடுக்க நினைத்தால் தான் கொடுத்த விலைப்

பொருளின் பத்திலொருபங்குப்பொருளேயும் கொண்டசரக்கையும் விற்றவனுக்குக் கொடுத்துக் குறைவிலேப் பொருளேத் தானடைக. அப்படியே சரக்குவிற்றவன் சரக்கைக் கொடாமல் பத்துநாளேக்கு மேற் கொடுக்க நினைத்தால் அந்தச் சரக்கின் விலேப்பொருளின் பத்திலொருபங்குடனே யந்தச் சரக்கை கொண்டவனுக்குக் கொடுக்க.

குணங்குற்றங்கள் தெரிந்தவன் சரக்குகளேக்கொண்டு கொடுத்துவிட நினைந்தால் சரக்கின்விலேயி லாறிலொரு பங்குப்பொருளேக் கொடுத்து அந்தச் சரக்குகளே விற்றவனிடத்தில் விடுக.

மனு.

வெளிப்பட்ட குற்றமுடைய சரக்கைக்கொண்டு உள்ள மொப்பாமையினுலே கொடுத்துவிட்டால் அவனுக் கறுநூறுபணங் தண்டமாக விதிக்கப்படும்.

நாரதர்.

சரக்கை வாங்கினவன் கேட்கும்பொழுது விற்றவன் கொடாமலிருந்து விற்கப்பட்ட சரக்கு இராசிக தைவிகங்களாற் கெடுதியடைந்தால் விற்றவன் அந்த நஷ்டப்பொருளேக் கொடுக்க.

யாஞ்ஞவற்கியர்,

விற்றவன் கொடுக்கும்பொழுது கொண்டவன் வாங்காமற்போய் அந்தச் சரக்கு இராசிக தைவிகங்களாற் கெடுதியடைந்தால் அந்த நஷ்டங்கொண்டவ னதேயாம்.

சரக்கு விற்கப்பட்டபின்பு விற்றவன் சரக்கைக் கொடுப்பதற்கும், கொண்டவன் வாங்கிக்கொள்வதற்கும், ஒப்பியிருந்த சமையத்துக்குள் அந்தச்சரக்கு இராசிக தைவிகங்களாற் கெடுதியடைந்தால் அந்த நஷ்டம் அவ்விருவருக்குஞ் சமமாகும்.

விற்றவன் சரக்கைக்கொடுக்கும்போது கொண்டவன் வாங்காமற்போனு லந்தச்சரக்கை மற்றொருவனுக்கு விற்கலாம் கொண்டவன் தான்கொடுத்த விலேப்பொருளே யடைவான்.

நல்லசரக்கை முதலிலே காண்பித்துக்கொடுக்கும்பொழுது கெட்டசரக்கை மனமறிந்து வஞ்சனேயினுலே கொடுத்தால் அவனந்தச் சரக்கின்விலேக் கிரட்டிப்புப் பொருளேக்கொண்டவனுக்கும், அவ்வளவுபொருளேத் தண்டமாக வரசனுக்குங் கொடுக்க.

அப்படிக்கொடுத்தல் தெரியாமையினுலே செய்யப்பட்டால் கோள்கிரயத்தைமாத்திரங் கொடுக்க.

மத்தன் - உன்மத்தன் முதலானவர்களாலேனும், குறைந்த விலையினாலேனும், விற்கப்பட்டது கொண்டவனுக்குச் சித்தியாது.

நாரதர்.

ஒருவன் சரக்கைக்கொள்வதற்காக கொள்கிரயம் எவ்வளவுங் கொடாமல் வார்த்தையினாலேமாத்திரம் உடன்படிக்கை செய்திருந்தபோது உடையவ னந்தச்சரக்கை மற்றொருவனுக்கு விற்றால் அவனுக்குக் குற்றமில்லை.

யாஞ்ஞவற்கியர்.

முன்னாடிச் சரக்கின்விலை பேசிக்கொடுத்த வுண்மைசெய்பொருளை அல்லது அச்சாரத்தை வாங்கிக்கொண்டவன் மற்றொருவனுக்கந்தச்சரக்கைவிற்றால் அவன்முன்புபேசினவனுக்குத் தான்வாங்கின வுண்மைசெய்பொருளுக் கிரட்டிப்பைக் கொடுக்க.

வியாசர்.

விலைபேசி யுண்மை செய்பொருள் கொடுத்தவன் சரக்கை வாங்கிக்கொள்ளாவிடில் அவன் தான்கொடுத்தவுண்மை செய்பொருளையிழப்பான்.

உண்மைசெய்பொருள் கொடுத்தவன் ஏற்படுத்திய காலத்தில் வராவிடில் உடையவ னந்தச்சரக்கை மற்றொருவனுக்கு விற்கலாம்.

விற்றுக்கொடாமை முற்றிற்று.

---

## கொண்டுள்ளமொப்பாமை.

நாரதர்.

சரக்கைக்கொள்பவன் கொள்ளுமுன்னே சரக்கின்வரவு, விலையின்குறைவு, மலிவு, இவற்றினையறிந்தும் தானேபார்த்தும் சரக்கின் குணங் குற்றந்தெரிந்த மற்றொருவருக்குக் காண்பித்துங் கொள்க.

வியாசர்.

சருமம் - விறகு - செங்கல் - நூல் - தானியம் - கள்முதலான மயக்கந் தருபொருள் - உப்புமுதலான சுவைப்பொருள் - பொன் - வெள்ளி - செம்பு - தரா - ஈயமுதலானவைகள் இவைகளை யுடனே பரிசோதிக்க.

பலமுனிவர்.

கறக்கத்தக்கதை மூன்றுநாள்வரையும், சுமக்கத்தக்கதை ஐந்து நாள்வரையும், வச்சிரம் - பவளம் - இவற்றினை யேழுநாள்வரையும்,

அடிமையைப் பதினைந்துநாள்வரையும், வேலைக்காரியை - ஒருமாச வரையும், எல்லாவிதவைகளையும் - பத்துநாள்வரையும், இரும்பு-வஸ்திரம் இவைகளை யொருநாள்வரையும் பரிசோதிக்கும்பொழுது குற்றங்காணப்பட்டாலும், மனமொவ்வாமற்போனாலு மிவைகளை விற்றவனிடத்திற்கொடுத்து கொண்டவன் தான்கொடுத்த விலைப்பொருளை வாங்கிக்கொள்க.

விலையாற்கொள்ளப்பட்ட ஆடையானது அனுபோகிக்கப் பட்டாலும், அழுக்கடைந்தாலும், குற்றமடைந்தாலும், அதினுருவங்கெட்டாலும், அதுகொண்டவனதேயாம்.

கொண்டுள்ளமொப்பாமை முற்றிற்று.

---

## கட்டுப்பாடுகடத்தல்.

பலமுனிவர்.

அரசனானவன் வேத வேள்விமுதலியவற்றாற் சிறந்த அந்தணர் பலரையழைப்பித்து அவர்கள் வாசம்பண்ணுதற்குத் தகுதியான விடங்களிலே யவர்களுக்கு விருத்திகற்பித்து இறைக்கூறொழித்து வீடு விளைநில முதலானவைகளைக் கொடுத்து அப்படிக்கொடுத்தற் குறுதியாக பத்திரபிரகரணத்திற் காட்டியபடி இராசசாசனமெழுதிக்கொடுத்து அவர்கள் தங்களுடைய தருமத்திலிருக்கும்படி செய்க.

அவர்கள் நித்தியநைமித்திய கருமமுதலானவைகளையும், தங்களுக்கும், பட்டணத்தாருக்கும், சந்தேகப்பட்ட பொருளை நிச்சயிப்பதையும், செய்யத்தக்கவர்கள்.

அப்படியே கிராமத்தார் - சிரோணியர் - குலக்கூட்டத்தார்- பாசண்டர்- நைகமர்முதலானவர்க்கும், மற்றவர்களுக்கும் அவரவருக்குத்தக்க விருத்திகற்பித்து நியமத்திலிருக்கும்படி செய்க.

மிருகம் - சோரன் - அரசன் - இவர்களாலுண்டாகின்ற துன்பத்தை நீக்குதலும், தருமசித்தியும், அந்தணர்முதலிய வெல்லாருக்கும் பொதுவாகையால் அவர்களெல்லாரு மிவ்விடத்திற் காட்டுகின்றபடி கட்டுப்பாடுகளைச் செய்துகொள்க.

அவையாவன:—தண்ணீர்ப்பந்தல் - குளம் - தேவாலய மிவை முதலான தருமஞ்செய்வதற்காகக் கிராமத்தில் வீட்டுத்தொகைப்படியேனும், நிலத்தொகைப்படியேனும், வரியேற்படுத்திக்கொள்ளுதலும் சோரர்களுடைய துன்பத்தில் வீடுதோறுந் திறமையுடைய வொவ்

வொருவன் ஆயுதபாணியாகி குறித்த வோரிடத்தில்வந்துகூடுதலும், இராசவுபத்திரவத்தை நீக்கும்பொருட்டு வீடுதோறும் பெரியவனாகிய வொவ்வொருவன்வந்து கூடுதலும் மற்றவைகளுமாம்.

அந்தக்கட்டுப்பாடுகளையும்- அரசனானவன் நமது பகைவர்க்கிடங்கொடுத்தல் முதலானவை செய்யற்கவென்பது முதலாகவேற்படுத்திய கட்டுப்பாடுகளையும், அவரவர்கள்பத்திரத்திலெழுதிக்கொண்டேனும், பிணைவாங்கிக்கொண்டேனு மழிவுறாமல் நடத்தலையும் நடப்பித்தலையுஞ் செய்க.

பொதுவிலே நியமிக்கப்பட்டவன் போர்முதலான காரியத்தைக்குறித்துக் கடனாகவாங்கப்பட்ட பொதுப்பொருளை யழித்தாலும், குறித்தகாரியத்தைச் செலுத்தாமல் தான்தின்றழித்தாலும், அந்தப் பொருளை அவனேகொடுக்க.

வழிச்செலவுக்காகக் கடன்வாங்கப்பட்டால் அந்தக்கடனைக் கூட்டத்தார் பொதுவிலொத்துக்கொள்க.

யாஞ்ஞவற்கியர்.

கூட்டத்தாருளொருவன் பொதுப்பொருளைக்கவர்ந்தாலும், கட்டுப்பாட்டைக்கடந்தாலும், அந்தக்கூட்டத்தார் அவனுடைய பொருளெல்லாவற்றையுங் கவர்ந்துகொண்டு அவனைத் தேசத்தினின்று தூரத்திவிடுக.

அந்தக்கூட்டத்தார் தங்களுடைய காரியத்தைக்குறித்து வேண்டும்பொழுது அரசன் தாமசம்பண்ணாம லதனை யுடனே விசாரிக்க.

அந்தக்கூட்டத்தாராலே நியமிக்கப்பட்டவனுக்கு அரசன்கொடுத்த வெகுமானப்பொருளை அவன் கூட்டத்தாருக்கொடாமல் தானெடுத்துக்கொண்டால் அந்தப்பொருளுக்குப் பதினொருமடங்குப் பொருள் கொடுப்பிக்கத் தக்கவனாவான்.

கட்டுப்பாடுகடத்தல் முற்றிற்று.

---

## நிலவழக்கு.

பிரகற்பதி.

கிராமங்களுக்கு நாலுபக்கங்களிலும் ஏற்படுத்திய வெல்லைக்கடைசியில்வெளிப்பட்டவைகளாகவும், மறைக்கப்பட்டவைகளாகவும், அந்த எல்லைக்கடைசியி னடையாளங்களை நிறுவுக.

அவற்றுள்,

பல்முனிவர்.

வெளிப்பட்ட அடையாளங்களாவன:—திரண்டுயர்ந்தகல் - தூரவு - குளம் - கிணறு - கல்லாற்கட்டப்பட்ட திண்ணை - உயர்ந்தபூமி - தோட்டம் - கோயில் - அகழ் - வெள்ளப்போக்கோடை - நாணல் - சிறுபுதர் - ஆல் - அரசு - முருக்கு - முள்ளிலவு - ஆச்சா - பனை - பலாமரம் - மூங்கில் - புற்று - வழிக்கரை - பள்ளம் இவைகளாம்.

இவற்றினை யடையாளங்களாக வேற்படுத்தி யழியாமலிருக்கும்படி செய்க.

மறைக்கப்பட்ட அடையாளங்களாவன:—காட்டுமுட்டை - எலும்பு - உமி - கரி - சுக்காங்கல் - பானைவோடு - மணல் - செங்கல் - பசுவின்வால் - பருத்திவிதை - சாம்பல் - சிப்பி - சங்கு - கருங்காலிப்பிசின் இவைகளாம்.

இவற்றினை யடையாளங்களாகப் பானையிலிட்டுப் பூமிக்குட்புதைக்க

இவ்விருவகை யெல்லை யடையாளங்களைக் கிராமத்திலிருக்கும் விருத்தர்கள் எல்லைதெரிதற்பொருட்டுச் சிறுவர்க்குத் தெரிவிக்க.

பிரகற்பதி.

எல்லைவழக்கில் வாதியினாலே காண்பிக்கப்பட்ட அடையாளங்களினாலே யவ்வெல்லை நிச்சயஞ்செய்க.

வாதியினாலே காண்பிக்கப்பட்ட அடையாளங்களைக் குறித்துச் சந்தேகமுண்டானபோது ஆகமம் - அளவு - அனுபோகம் - பெயர் - இவற்றையும் நிலப்பிரிவுகளையுந் தெரிந்த சாக்ஷிகளாலே நிச்சயஞ்செய்க.

பல்முனிவர்.

சாக்ஷிகளில்லாதபோது கிராமத்தினாற் பாலெல்லைக் கடைசியிலிருக்கிற கிராமத்தாரான சாமந்தராலே நிச்சயஞ்செய்க.

அவர்கள் பகை - பொருளாசை - பொருண்மிகுதி - இவற்றினாலேதுஷ்டராயினபோது அவர்களுக்கு அடுத்தசாமந்தராலேநிச்சயஞ்செய்க.

அவர்களும் அப்படிப்பட்டவர்களேயானால் அவர்களுக்கடுத்தசாமந்தகராலே நிச்சயஞ்செய்க.

அவர்களுந் துஷ்டராஞல் அவர்களைத்தள்ளி அரசஞனன் ஆததிகாலத்திற் சாமந்தராயிருந்து தேசாந்தரம்போய் நெடுங்காலஞ்சென்று வந்திருக்கிறவர்களாகிய பழமையோரையும், பட்டணத்தாரையும், கிராமத்தாரையும், கணத்தாரையும், எல்லாராலுங் காணப்படுகின்ற நற்செய்கையுடையவராகிய மூப்பினரையும், கேள்வி - அனுபவம் - காரியஞ்சொல்லுதல் இவற்ருற் குறிக்கப்பட்டவர்களான நிலைநிறுத்துவோரையும், காட்டிலிருக்கிறவர்களாகிய வேடரையும், பறவைபிடித்துஜீவனஞ்செய்வோரையும், நெற்பொறுக்கிகளையும், விறகுவெட்டிகளையும் அழைப்பித்து சாக்ஷிக்கேள்விப் பிரகாணத்தில் அவ்வவ்சாதியோர்க்குக்காட்டிய விதிப்படி சபதங்களைச் சொல்லுவித்து எல்லை அடையாளங்களைக் கேட்கும்போது அவர்களால் உண்மையாற்காட்டப்பட்ட வெல்லையை அரசனிறுவுக.

சாக்ஷிகள் முதலானவர்கள் எல்லையடையாளங்களைக் காட்டாமல் எல்லையைமாத்திரஞ் சோன்ஞல் அரசனெல்லையோடும்படி செய்து நிச்சயிக்க.

யாஞ்ஞவற்கியர்.

எல்லையோடுகிறவர்கள் சாமந்தர் முதலானவர்கள் அவர்கள் நால்வர்முதலாக இரட்டித்ததொகையினராகியும் சிவந்த ஆடை-சிவந்தமாலையணிந்தவராகியும் - ஓட்டிலே மண்ணையெடுத்து அதை தலையின்மேல்வைத்துக் கொண்டெல்லையோடுக.

பிரகற்பதி.

மேற்சொல்லிய எல்லையோடுகிறவர்க ளில்லாதபோது உபயவாதிகளுக்குஞ் சம்மதஞன ஒருவன் குணமுடையவஞனல் எல்லையோடலாம்.

எல்லையோடின நாற்பத்தஞ்சு நாளைக்குமேல் நிச்சயம் அறியத்தக்கது.

காத்தியாயனர்.

அதிகம் - குறைவு - பங்குண்மை - பங்கின்மை - அதுபோகத்தினுண்மை யின்மை எல்லை - இவ்வாறும் பூமிவாதத்திற் கேதுக்கள்.

பூமிவாதத்தில் திவ்வியப் பிரமாணங்கூடாது.

மனு.

எல்லை யடையாளமுதலானவை யில்லாமையால் நிச்சயஞ் செய்தல்கூடாத் பூமியை அரசன்மிகவு முதவியாகத் தக்ககிராமத்திற் சேர்க்க.

இரண்டு கிராமத்திற்கு எல்லையைக்குறித்து விவாதம்வந்தபோது பயிரில்லாதகாலங்களில் அணைமுதலிய அடையாளங்களைப்பார்த்து நிச்சயஞ்செய்க.

பிரகற்பதி.

தேசம் - நகரம் - கிராமம் - நிலம் - வீடு - கழனி - தோட்டம் - நந்தனவனம் - தேவாலயம் - கிணறு - தடாகம் - மழைநீர்ப் போக்கிடம் இவை முதலானவைகளின் எல்லை விவாதத்தில் அவ்வவற்றின் சாமந்தர்களாலே நிச்சயஞ்செய்க.

காத்தியாயனர்.

எல்லைச்சாக்ஷிகள் பயத்தினாலேனும் - பேதத்தினாலேனும் - சாக்ஷியுரையாமற்போனாலும்-மாறுபாடாகச்சொன்னாலும்-அவர்களுக்கு உத்தம சாகசதண்டம் விதிக்கப்படும்.

விஷ்ட்ணு.

பொய்ச்சாக்ஷி சொல்லுமவனுக்கு எல்லாப்பொருளையுங் கவர்தல்-தண்டமாக விதிக்கப்படும்.

நாரதர்.

சாமந்தர்கள் பொய்யுரைத்தால் அவர்களுக்குத் தனித்தனி மத்திமசாக சதண்டம் விதிக்கப்படும்.

நாரதர்.

அவர்கள் அறியாமையினாலேவேறுபாடாகச்சொன்னால் அப்படிச்சொன்னதற்கு அவர்களைத் தண்டித்து மீட்டும் அவர்களாலே யெல்லை விசாரணைசெய்க.

வேடர்முதலான இழிந்தோர்கள் பொய்சொன்னால் அவர்களுக்குத் தனித்தனி பூருவசாகசதண்டம் விதிக்கப்படும்.

எல்லையோடுகிறவன் மாறுபாடாகவோடினால்அவனுக்கிருநூறுபணத் தண்டமாகவிதிக்கப்படும்.

சாக்ஷிகளாகிய சாமந்தர்கள் விரோதமாகச்சொன்னால் பத்திரத்தினாலும் - பத்திரம் விரோதப்பட்டால் கிராமத்தாராலும் கிராமத்தார் விரோதப்பட்டால் நகரத்தாராலும் - நகரத்தார் விரோதப்பட்டால் - விருத்தராலும் - விருத்தர் - விரோதப்பட்டால் - சிரேணியராலும் - சிரேணியர் விரோதப்பட்டால் - பத்துவருடத்து அனுபோகத்தினாலும் நிச்சயிக்கத்தக்கது.

பிரகற்பதி.

ஆற்றைத்தானே எல்லையடையாளமாக ஏற்படுத்தப்பட்ட இரு பக்கத்துக் கிராமங்களுக்கு அந்த ஆற்றினால் உண்டாகின்ற நஷ்டமும் இலாபமும் - அந்தந்தக் கிராமங்களுக்கேயாம்—எப்படியெனில் ஒரு நதியினுடைய வடகரை ஒரூருக்கும் - தென்கரையோரூருக்கும்-எல்லையாக நியமிக்கப்பட்டன அப்படியிருக்கையில் ஒருகாலம் அந்த நதியானது வெள்ளத்தின் வேகத்தினாலே கரையை யுடைத்துக்கொண்டு தென்பக்கத்து கிராமத்தெல்லையில் விழுந்துபோயிற்று—அப்பொழுது வடகரையிற் புதிதாகச்சேர்ந்த நிலமெல்லாம் வடகரையெல்லைக் கிராமத்தானுக்கேயாம்.

அரசனாலேனும் - ஆற்றினாலேனும் - எந்தப்பூமி யெவனுக்குக் கொடுக்கப்பட்டதோ - அந்தப்பூமி அவனுடையதேயாம்.

அப்படி புதிதாகச்சேர்ந்தநிலம் பயிருடையதாயிருப்பின் அந்தப்பயிரின்பலத்தைமாத்திரம் பயிர்செய்தவ னடைவன்.

அரசன் உண்மையல்லாத ஏதுக்களினால் அநியாயமாக ஒருவனுடைய பூமியைக்கவர்ந்து மற்றொருவனுக்குக் கொடுத்தால் அது சித்தி அடையாது.

கிராமம் உண்டாக்கிய காலமுதற்கொண்டு பலகணி - சலபபோக்கிடம் இளைப்பாறுமிடமான வீட்டின்முகப்புத்திண்ணை - நாற்சந்தி கூடுமிடம் வீட்டின்மேனின்று மழைநீர் விழுகின்ற தூம்பு வீடு-கடை- இவைகளை வழக்கப்படி அனுபோகிக்க.

அவ்வனுபோகத்தை யொருவருந் தடுத்தல்கூடாது.

மலமூத்திரங் கழிக்குமிடம் நெருப்புக்குழி - எச்சிற்றண்ணீர்விடுமிடம் இவற்றினை அயலவனுடைய சுவருக்கு இரண்டுமுழவிடம் விட்டுச்செய்க.

நாரதர்.

பசுக்களும் மனுஷருந் தடுக்கப்படாமல் நடக்குமிடம் - தேவாலயம் - இராசமார்க்கம் - இவற்றினை யொருவருந் தடுத்தல்கூடாது.

பிரகற்பதி.

எவன் வழிமுதலானவிடங்களிலே பள்ளத்தையும் மாமுதலானவைகளை வைப்பதையும் - மறைவையும் - மலங்கழித்தலையுஞ் செய்கின்றானோ அவனுக்கு ஒருமாடந்தண்டமாக விதிக்கப்படும்.

மனு.

இவற்றை யிராசமார்க்கத்திற் செய்தவனுக்கு இரண்டுபணந் தண்டமாக விதிக்கப்படும்.

விருத்தன் சூலுடையாள் - சிறுவன் - ஆபத்தையடைந்தவனிவர்களி ராஜமார்க்கமுதலான விடங்களில் மலங்கழித்தால் இவர்களுக்கு அந்தத் தண்டமில்லை - வாக்குத்தண்டமாத்திரமுண்டாம் - அந்த மலங்கழித்தவிடத்தைச் சுத்திபண்ணுக.

காத்தியாயனர்.

தடாகம் - பூந்தோட்டம் - தீர்த்தம் - இவற்றில் மலங்கழித்துக் கெடுத்தவன் இவற்றினைச் சுத்திசெய்து அரசனுக்குப் பூருவசாகசதண்டங்கொடுக்க.

பலமுனிவர்.

தீர்த்தமுதலியவற்றை அழுக்காடையைத்து வைத்தல் முதலியவற்றாற் கெடுத்தவனுக்குப் பூருவசாக சதண்டம் விதிக்கப்படும்.

யாஞ்ஞுவற்கியர்.

நிலத்திலே யெல்லையைப்பேதித்தவனுக்குப் பூருவசாக சதண்டமும் - எல்லையைக்கடந்துழுகிறவனுக்கு உத்தமசாகசதண்டமும் - அபகரித்தவனுக்கு மத்திமசாக சதண்டமும் விதிக்கப்படும்.

சங்கிலிதர்.

நீரோடுகூடிய நெற்பயிர் நிலமுதலானவைகளை வலிமையா லபகரித்தால் அவனுக்கு எண்ணூறுபணந் தண்டமாக விதிக்கப்படும்.

காத்தியாயனர்.

எல்லைப் பொதுநிலத்திலிருக்கின்ற மரத்தின்பலன் அவ்வெல்லையாரெல்லார்க்கும் பொதுவாம்.

## கணாயின் விஷயம்.

நாரதர்.

கணாயானது - நீர்ப்போக்குக் கணாயெனவும் - நீர்த்தடைக்கணாயெனவு மிருவகைப்படும்.

அவற்றுள்,

நீர்ப்போக்குக் கணாயாவது பயிருக்கதிகமாயிருக்கிற நீர்போகும்படிவெட்டி விடத்தக்கதாம்.

நீர்த்தடைக்கரையாவது வந்த வெள்ளநீரைத் தாங்குதற்காகக் கட்டப்படுவதாம்.

யாஞ்ஞுவற்கியர்.

இவ்விருவகைக்கரையு நிலத்துக் குடையவனிடத்தில் அயலவன் செய்யும்போது அற்பநஷ்டமும் அதிகவிலாபமு முண்டாகுமேயானல் அந்தச்செய்கையைத் தடுத்தல்கூடாது.

ஒருவன் மற்றொருவனுடையநிலத்தில் தூரவையேனும் - கிணற்றையேனும் - வெட்டும்போது மேற்சொல்லியபடி அற்பநஷ்டமும் - அதிகவிலாபமு முண்டாகுமேயானல் அந்தச்செய்கையைத் தடுத்தல கூடாது.

உடையவனைக்கேளாமல் அவனுடையநிலத்தில் அயலவன்கரை கட்டுதல் பயிரிடுதல் முதலானவை செய்தல்கூடாது.

நிலத்துக் குடையவனில்லாதபோது - மேற்சொல்லிய காரியங்களை அரசனுடைய அனுமதிபெற்றுச்செய்க அனுமதியின்றிச் செய்தவன் தண்டிக்கப்படுவான்.

அதிலுண்டானபலன் உடையவனில்லாதபோது அரசனை யடையும்.

காத்தியாயனர்.

வீடு - தோட்டம் - தடாகம் - இவைகளை - உடையவன் அனுமதியின்றிப் புதுக்கினல் - அவற்றினைப்புதிதாக வித்தவ னடையான் உடையவ னனுமதிபெற்றுச்செய்தால் செலவழித்தபொருளை யடைவன்.

## பயிர்ச்செய்கை.

பிரகற்பதி.

பயிர்செய்பவன் ஆனி-ஆடிமாசத்தில் - நிலமுடையானிடத்தில் நிலத்தை யடைகொண்டு உழுதல் - விதைத்தல் - காத்தல் பயன்கொள்ளுதல் முதலான காரியங்களைச்செய்க.

பயிர்செய்வதற்காக நிலத்தை யொப்புக்கொண்டவன் பயிர்செய்யுங்காலத்திற் பாதி சென்றபின்பு உழவுமுதலானவைகளைச் செய்தால்காலங்கடந்ததற்குத்தக்கபடி யவனுக்குத்தண்டம்விதிக்கப்படும்.

நிலத்தை யொப்புக்கொண்டவன் பயிரிடுங்காலமுழுதும் ஒருகாரியமுஞ் செய்தலையும், செய்வித்தலையுஞ் செய்யாவிடில் அவனிலமூ

டையவனுக்கு நிலப்பலனையும், அரசனுக்குத் தண்டத்தையுங் கொடுக்க.

பயிர்செய்பவன் நெடுநாட் பாழ்பட்டநிலத்தை யொப்புக்கொண்டு பயிர்செய்யாவிடி லவன்பைங்காநிலத்துப் பலத்தொகையிற்பத்திலொரு பங்கின்கிரயத்தை நிலமுடையவனுக்குக் கொடுக்க.

சிலநாளுழப்படாதநிலமானால் நிலமுடையவனுக்கு எட்டிலொருபங்கு கொடுக்க.

பைங்கால்நிலமானால் ஆறிலொருபங்கு கொடுக்க.

நாரதர்.

நிலமுடையவர்கள் பயிர்செய்யத்தக்க திறமில்லாதவர்களும், இறந்தவர்களும், நெடுங்காலம்போனவிடந் தெரியப்படாதவர்களுமானவர்களுடையநிலத்தை யொருவராலுந் தடுக்கப்படாமலுழுகிறவன் அந்த நிலப்பலனை யடைவான்.

நிலமுடையவ னிருக்கும்பொழுது அவனைக்கேளாம லுழுகிறவனுக் குண்டான குற்றம் அவனுக்கில்லை.

மேற்சொல்லிய நிலத்திற் பயிர்க்காரியநடக்கையில் நிலத்துக்குடையவனேனும், அவன்மைந்தனேனும் வந்தால் அவன் பாழ்பட்டுக்கிடந்த தன்னுடைய நிலத்தைச் செம்மைசெய்ததற்காகச் செலவழித்தபொருளைக் கொடுத்து அந்தநிலத்தை யடைக.

காத்தியாயனர்.

நிலமுடையவன் பாழ்ப்பட்டுக்கிடந்த தன்னுடைய நிலத்திற் பயிர்செய்யச்சொன்ன விஷயத்தி லந்தநிலத்தைக்குறித்துச் செலவழிந்த பணத்தை நிலமுடையவன் கொடாதேபோனால் உழுகிறவனந்த நிலப்பலனில் எட்டிலொருபங்கை எட்டுவருடம்வரையுங் கொடுத்து அதற்குமேல் நிலத்தை வுடையவனுக்குக் கொடுக்க.

நிலமானது ஒருவருஷ முழப்படாவிடி லரைப்பாழாம் மூன்றுவருஷத்தில் முழுப்பாழாம் ஐந்துவருஷத்திற் காட்டுக்கொப்பாம்.

நிலவழக்கு முற்றிற்று.

---

## மாதராடவர்தருமம்.

மனு.

மாதர் ஆடவரிடத்தில் அழகையும், பருவத்தையும் விரும்பாமலே ஆண்தன்மையைமாத்திர முக்கியமாகவெண்ணியவர்களைப் புண

ர்கின்றார்கள். கற்புநிலையின்மையும், நிலையாமனமும், நண்புமியற்கை யாக வுடையவராகையால்.

மாதர்கணவராற் காக்கப்பட்டிருப்பினுங், கணவனை விரோதிக் கின்றார்கள்.

படுக்கை - ஆசனம் - அலங்காரம் - காமம் - கோபம் - துரோக சிந்தை யிவற்றினை மாதர்பொருட்டே மனுவானவர் கற்பித்தாராகை யால் ஆடவர்கள் மாதர்கேடுறாம னடப்பதற்காக் அவர்களை யுரிமை யுடையவ ரல்லாராகச் செய்க.

ஆரீதர்.

மனைவி கற்புநிலைதவறினவளானால் குலங்கெடும் குலக்கேட்டினா ற்சந்ததிகெடும் சந்ததிக்கேட்டினால் தேவர்க்கும்பிதுர்க்களுக்குங்கேடு றும், வேள்வியுந் தருமமுங் கெடும், தருமக்கேட்டினால் தனக்குக்கே டுறும், தனது கேட்டினா லெல்லாப்பயனுங் கெடும் ஆகையால் முய ற்சிகொண்டு இல்ல வளையறமுடையவளா யிருக்கும்படி காக்க.

யாஞ்ஞவற்கியர்.

மனைவியானவள் பெருமையுடைய மாமியார் முதலானவர்களா லே யிரவினும் பகலினுஞ் சற்றேனும் அயலாரோடு பேசாதிருக்கும் படி காக்கத்தக்கவள்.

தக்ஷன்.

மனைவியர் - ஆடை - ஆபரணம் - அன்னமிவற்றாற் காக்கப்படி னுங் கணவனை யவமதிக்கின்றார்கள் அட்டைபோலுறிஞ்சுகிறார்கள் அட்டை யிரத்தத்தைமாத்திரங் குடிக்கும், மனைவியரோவெனில் த னம் - மனம் - தசை - வலி இவையெல்லாங் கொள்ளுகின்றார்கள்.

மனைவியர் கணவரிடத்தி லிளமைப்பருவத்தி னுணமும், யௌ வனத்திலூடலும், மூப்பில் மதிப்பின்மையு முடையராவர்.

மனு.

மாதர் இளமைப்பருவத்திற் பிதாவினாலும், யௌவனத்திற் கண வனாலும், மூப்பில் மைந்தனாலுங் காக்கத்தக்கவராகையா லெக்கால மு மாதருரிமை யுடையவரல்லர்.

நாரதர்.

கணவனும் புதல்வனுமில்லாத மனைவியை அவளுடைய கணவ ன்பக்ஷத்தாராகிய கணவனுடைய பிதாமுதல் சபிண்டர்கள்வரையு முள்ளவர்கள் காக்க அவர்களில்லாதபோது அவளுடைய தாய்பக்ஷ த்தார் காக்க அவர்களுமில்லாதபோது அரசன்காக்க.

பல்முனிவர்.

கணவனானவன் மனைவியிடத்தில் வீட்டுக்குவேண்டிய பாத்திரஞ்சம்பாதிப்பதற்காகக் கொடுத்தபொருளைச் சேர்த்தல்-செலவிடல்-வீடுவிளக்கல் - தேவபூசை முதலியவற்றிற்குதவியான காரியஞ்செய்தல் - அடுக்களைக்காரியம்- வீட்டுப்பாத்திர முதலானவைகளைப் பார்த்த லிவைமுதலிய அவசியமானகாரியங்களை மனைவிக்குக்கற்பித்து அவளுடைய மனம் வேறிடத்திற் செல்லாதபடி செய்க.

பிரகற்பதி.

மேற்சொல்லிய காரியங்களைச் செய்தலினாலே மனைவிக்குச் சுத்தியுங் கற்புநிலைமையு முண்டாம்.

மனு.

மாதர்கள் தங்களைத்தாங்களே காக்கவேண்டும் அதுவே யவர்களுக்கு நல்லகாப்பாகும்.

கள்குடித்தல் - துட்டர்கூட்டுறவு - கணவனைவிட் டயலூருக்குப் போகுதல் - கணவனைவிட்டுத் தீர்த்தயாத்திரை முதலானவை செய்தல் - தான் விரும்பியவிடத்திலே தூங்குதல்-அயலகத்தமர்தல் இவ்வறுவகைச்செய்கையும் மாதர்க்கு நிந்தையான செய்கையாம்.

திரிகரண சுத்தியுடையவளாகிக் கணவன்சொற் கடவாம னடக்கு மனைவியானவள் இகத்திற் பெரியோர்களாலே நல்லவளென்று கொண்டாடப்பட்டவளாகிப் பரத்திற் பதியுனுடைய வுலகத்தை யடைவாள்.

கணவன்சொற்படி நடவாதவள் பாவப்பிணியால் வருத்தப்பட்டு நரியாய்ப் பிறப்பாள்.

கற்புநிலைதவறின மனைவி பிராயச்சித்தகாண்டத்தில் விதித்த பரிகாரத்தினாலேசேர்த்துக்கொள்ளத் தகாதவளானா லந்தப்பரிகாரஞ் செய்யுமளவும் அவளைக்காக்க.

நாரதர்.

வெளிப்பட்ட கற்புநிலைக் கேடுடையவளாகிய மனைவியைக்கணவனானவன் சுருதிவிதிக் காரியத்திலும், ஸ்மிருதிவிதிக்காரியத்திலும், அவளுக்குள்ள வதிகாரத்தைநீக்கித் தலைமழித்தலும்,தரைப்படுக்கையுங் கற்பித்து இழிவான ஆடையுணவுகள்கொடுத்து அசுசியான விடங்களைச் சுத்திசெய்யும்படிசெய்து தனதுவீட்டிலோரிடத்தி லிருக்கச் செய்க.

யாஞ்ஞவற்கியர்.

பரிகாரத்தினாற் சேர்த்துக்கொள்ளத் தகாத இழிந்தோனைப் புணர்தல் முதலானவைகளைத் தனது மனப்படி செய்கின்றவள் விலக்கத்தக்கவளேயாவள்..

மனு.

உத்தமமாதருக்குஞ் செல்வத்திற்கும் வேறுபாடில்லை.

பெண்ணானவள் கலியாணமுதலான வுற்சவகாலங்களிலே கணவன் - கணவனுடன்பிறந்தார் - தாய் - தந்தை - மாமி - மாமன் - மற்றைச்சுற்றத்தார் - இவர்களாலே ஆடை - அணி- உணவு இவற்றாலுபசரிக்கத்தக்கவள்.

மாதர்களெந்தக்குலத்திலே துன்பப்படுகின்றார்களோ அந்தக்குலம் நசிக்கும், எந்தக்குலத்தில் மகிழ்ச்சியை யடைகின்றார்களோ அந்தக்குல மேன்மையடையும்.

கணவனானவன் காரியத்தைக்குறித்துத் தேசாந்தரம்போகும் பொழுது தான் போய்வருமளவும் மனைவியினுடைய சீவனத்திற்கு வேண்டிய பொருள் கொடுத்துப் போகுக. அப்படிச்செய்யாவிடில் அவள் மேன்மையுடையவளாயினுஞ் சீவனத்தின்பொருட் டிழிவான காரியஞ் செய்வாளாகையால்.

கணவனை மனைவி பகைத்தால் அவனொருவருஷம்வரையும் பார்த்து அவள் வணங்காவிடில் அவளுக்குத் தான்கொடுத்த ஆடையாபரண முதலியவற்றை வாங்கிக்கொண்டு அவளொடுபேசுதலும், அவளைப் புணர்தலுமொழிக்க சீவனத்துக்காகக்கொடுத்தது கவரத்தக்கதன்று.

உன்மத்தன் - பித்தன் . பதிதன் - மகிழ்ச்சியில்லாதவன் - பாவப்பிணியினன் - இப்படிப்பட்ட கணவனைப் பகைக்கின்ற மனைவியர்க்கு விலக்குதலும், ஆடையாபரண முதலானவைகளைக் கவர்தலுமில்லை.

## மூத்தமனைவிவிஷயம்.

மனு.

கள்குடிப்பவள் - தீயநடையுடையவள் - மாறுபாடு செய்பவள் - தீராப்பிணியினள் - மிகுந்த கொடுமையுடையவள்- பொருளை யழிப்பவள் - மூக்கறை-பெண்ணேபெறுபவள் - மலடி- இனிமையில்லாததைச் சொல்பவள் - கணவனைப்பகைத்தவள்- இவ்வகைமனைவி

யளாவிலக்கி இரண்டாவது கலியாணஞ்செய்க. அப்படிச்செய்யவிரும்பினவன் மூத்தமனைவிக்குச் சீவனத்துக்குப்பொருள்கொடுத்து கலியாணஞ் செய்துகொள்க.

தேவலர்,

மனைவியிருக்கையில் காமமிகுதியினுலே மற்றொருத்தியைக் கலியாணஞ்செய்துகொள்ள விரும்பினவன் இருக்கிறமனைவியைப் பொருளாலே மகிழ்வித்து வேறுவிவாகஞ் செய்துகொள்க.

மனு.

கணவனுடைய நன்மையை விரும்பினவளும், நல்லொழுக்கமுடையவளுமாயிருந்த மனைவி பிணியினளாயிருந்தபோது வேறுவிவாகஞ்செய்ய விரும்பினவன் அந்த மனைவியினுடைய அனுமதிபெற்றுக்கொண்டு செய்க. அவளை யெப்பொழுதும் அவமதித்தல் செய்யற்க.

தேவலர்.

மலடியான மனைவியை யெட்டுவருஷத்திற்குமேலும், சாப்பிள்ளைபெறுபவள்- கருவழிவுடையவள்- நிந்தையுடையவள்- இவர்களைப் பத்துவருஷத்திற்குமேலும் பெண்ணேபெறுபவளைப் பதினொருவருஷத்திற்குமேலும் தீங்குசொல்பவளையும், கணவனுக்குமுன்னே யுண்பவளையும், அப்பொழுதேயும் நீக்கி அந்தமனைவியர்க்கு மனமகிழ்ச்சிப் பொருள்வேருகக் கொடாமலே கலியாணஞ்செய்துகொள்க. அப்படிச் செய்துகொண்டாலும் மூத்தமனைவிக்குப் புணர்ச்சியொன்று தவிர குறை யதிகாரமெல்லா முண்டு.

மனு.

மூத்தமனைவியானவள் கோபத்தினுலே வீட்டினின்று வெளிப்பட்டபோது அவளைக் கணவன்தடுத்துக் காக்க அல்லது அவளையவளுடைய தந்தைமுதலானவர்களிடத்தி லொப்புவித்தாயினுங்காக்க.

நாரதர்.

மனைவியானவள் கணவனுடைய தெரியாமையினுலே வெளிப்பட்டு அயலவனிடத்திற் சேராமலிருந்தால் அவள் சுற்றத்தாராலே கணவனுடையவீட்டிற் சேர்க்கத்தக்கவள்.

யாஞ்ஞவற்கியர்.

இரண்டாவதுகலியாணஞ் செய்துகொள்பவன் மூத்தமனைவிக்கு அந்தக் கலியாணச்செலவுப் பொருளுக்கொத்தபொருளைக் கொடுக்க.

கணவனானவன் தன்னுடைய மூத்தமனைவி தன்னாற்கொடுக்கப்பட்ட சீதனமுடையவளானுல் அந்தச் சீதனப்பொருளைச் சேர்த்துக்

கலியாணச்செலவுப் பொருளுக்குச் சமமானபொருளை யவளுக்குக் கொடுக்க.

## விலக்கத்தகாத மனைவிவிஷயம்.

பலமுனிவர்.

ஒத்திருத்தல் - கடுஞ்சொலின்மை - திறமை - கற்பு - சந்ததியுடைமை - வீரனைப்பெறுதல்- கணவனாணைப்படி நடத்தல்- இன்சொலுரைத்தல் - இவைமுதலான விலக்குதற் கேதுவல்லாத நற்குணமுடைய மனைவியை விலக்குதல்கூடாது. விலக்கினு லவனுக்கந்தப்பாவத்தை நீக்கத்தக்க பரிகாரமில்லை அவனுக்குச் சோரதண்டம் விதிக்கப்படும்.

யாஞ்ஞவற்கியர்.

மேற்சொல்லிய நற்குணமுடைய மனைவியை நீக்கின கணவன் தன்னுடைய பொருளில் மூன்றிலொருபங் கவளுக்குக் கொடுக்கும்படி யரசன் செய்விக்க.

## விலக்கத்தக்க மனைவிவிஷயம்.

நாரதர்.

கலியாணஞ் செய்யப்படாதவளாகிய தாழ்ந்தசாதி ஸ்திரீயைப் புருஷன் விரோதத்தினாலே விலக்கினுற் குற்றமில்லை.

ஸ்திரீகளுக்கு அங்கச்சேதமுங் கொலையுமில்லை விலக்குதலே கொலையாம்.

பலமுனிவர்.

தனது கணவனுடைய மாணுக்கன்-பிதா - பதிதன் - தாழ்ந்த வருணத்தான் - மைந்தனிவர்களைக் கூடுகின்றவளையும், பிள்ளையைக் கொன்றவளையும், மருந்துமுதலியவற்றுற் கருவையழிக்கின்றவளையும், தனதானியங்களை யழிக்கின்றவளையும், அயலாரை வருத்துகின்றவளையும், தீங்குசொல்கிறவளையும், கணவனுக்குப் பணிவிடைசெய்யாதவளையும், கணவர்விலக்கி அவர்களுடனே பேசுதல் புணர்தலொழித்து அவர்களுடைய வதிகாரத்தையு மொழித்து அவர்களுக்கு வேறிடத்திலேனும், தமது வீட்டுக்கடுத்தவிடத்திலேனும், ஓரிடங்கற்பித்து ஆடையும் உணவுங் கொடுக்க.

மனு.

மனைவியுங் கணவனும் ஒருமைப்பட்டு மகிழ்ந்திருந்தால் குலமுழுது மகிழ்ச்சியடையும்.

அறம்பொருளின்பமென்னு மூன்று பயனுமுண்டாம்.

மனைவி யொற்றுமையுடையவளாயிருத்தல் வானுலகத்திலுங் கிடைத்தலரிது அதினாலே குலத்திற்பெண்கள் மிகுதியாய் விளங்குவார்கள்.

## மனைவி யொழுக்கம்.

மனு.

தகாதமொழியுரைத்தல் - தலைக்கடையினிற்றல் - பல கணியிற்பார்த்தல் - மிகுநகைசெய்தல் - பானம்பண்ணுதல்-பகலிற்றுயிலுதல்-காரியஞ்செய்யாமை - ஆக்கினையின்றி வெளிப்போதல் - அயலாரோடுபேசுதல் - கணைக்காலுந் தனமுந்தெரிய வாடையுடுத்தல் - குரு - கணவன்-புதல்வ னிவர்களல்லாதவர்களாகிய வயலாருடையகலத்திலுண்ணுதல் - கூட்டத்துட்புன்னகைசெய்தல் - வேசை-தூரத்தை-கற்புநிலைகெட்டவள்-மாயக்காரி யிவர்களுடன்கூடுத லிவையெல்லா மொழுக்கங்கெடுதற் கேதுவாம்.

அயலவருடைய வாடையணி முதலியவற்றை சுத்திசெய்யாமல் தீண்டுதல் முதலியசெய்கையை மனத்தாலு நினைத்தல்கூடாது.

தேவகாரியங்களிலும் பிதுருகாரியங்களிலும் கள்குடிப்பவள் கற்புநிலைகெட்டவள் பூத்தவளிவர்கள் வீட்டைத்தொட்டால் அந்தக்கருமப்பலன் இராக்ஷதரைச் சேரும்.

உள்ளி - வெள்ளுள்ளி - கள் - கஞ்சா - புலால் - இவை முதலானவை - புசிக்கத் தக்கனவல்ல.

இவற்றை மனைவிபுசித்தால் அவளுக்குமவள் வயிற்றுக் கருவுக்குங் குற்றமுண்டா மவளுடைய கணவனுடலிற்பாதி வீணாம்.

## மனைவியின் செய்கை.

மனு.

வீட்டுப் பாத்திரமுதலானவைகளை விளக்கஞ்செய்தலுங் கணவன் கொடுத்தபொருளை வீணாகச் செலவழியாமையும் - மங்கலச்செய்கையும் - மந்திர முதலியவற்றாற் கணவனை வசப்படுத்தாமையும்-நன்மனையாள் செய்கையாம்.

வைகறை துயிலெழல் - வீடு விளக்கஞ்செய்தல் - தயிர் - மலர் - தளிர்முதலிய பூசைத்திரவியங்க ளமைத்தல் - ஔபாசன முதலான வக்கினிப்பணிவிடை செய்தல் - மாமன் மாமியாரை வந்தித்தல் - பதி

யின் பணிவிடைசெய்த லிவைமுதலியவெல்லா மங்கலவாழ்க்கையை யுஞ் செல்வத்தையும் விரும்பிய நன்மனைவியின் செய்கையாம்.

மனைவியானவள் கணவன் துஷ்டனாயேனும், குணமில்லாதவனாயேனும், பிணியினனாயேனும் இருப்பினும் அவனைத் தெய்வமென்றெண்ணிப் பணிவிடைசெய்க; அவளுக்கதுவே யெல்லாப்புண்ணியப் பலங்களையுங் கொடுக்கும்.

மனைவிக்குத் தனது கணவனுடைய பணிவிடையின் மேலான விரதமொன்று மில்லை; பணிவிடைக்கு வேறானவிரதத்தை மேலானதென்றெண்ணிச் செய்பவள் கணவனுடைய வயதைக் கவர்ந்துகொண்டு நாகத்தை யடைவாள்.

கணவன் தேசாந்தரம்போயிருந்தபோது அவன்கொடுத்தபொருளில்லாவிடில் அவன் வருமளவும் மேற்சொல்லிய நல்லொழுக்கமுடையாள் இழிவல்லாத கோலமிடுதல் முதலிய தகுதிச்செய்கையாற் கற்புநிலைகெடாமல் சீவனஞ் செய்துகொண்டிருக்க.

மாதராடவர் தருமமுற்றிற்று.

---

## தாயபாகம்.

தாரேசுவரர்.

தாயமாவது:—தந்தை வழியாகவேனும் தாய் வழியாகவேனும் தாயினுடைய தந்தைமுதலானவர்களின் வழியாகவேனும் வந்தபொருளாம்; அப்பொருளின்பிரிவே தாயபாகமாம்.

கௌதமர்.

உடைமையானது தொன்றுதொட்டுலகவிளக்கமாகக் காணப்படுகின்ற பிறப்பினாலும் - தானத்தினாலும் - கிரயத்தினாலும் அடையப்பட்டபொருளும், காட்டிலுள்ள நீர் - புல் - விறகு - இவைகளைத் தானே கொண்டுவருதலினாலும் - புதையலெடுத்தலினாலு மடையப்பட்டபொருளும், இன்னும் உலகவழக்கமான யாசகம் - வெற்றி - வாணிகம் - உழவு - சேவித்த லிவைமுதலானவைகளா லடையப்பட்ட பொருளுமாம்.

இப்படி யடையப்பட்டபொருளை அடைந்தவன் தனதிச்சைப் படி தானமுதலானவைகளைச் செய்யலாம்.

இன்னானுக்குடைமை இப்படியாகுமென்கின்ற நிச்சயம் அனாதியான உலகத்தாருடைய புத்தி யனுபவத்தாற் பண்ணப்பட்டது.

யாஞ்ஞவற்கியர்.

தந்தையானவன் தனதிச்சையினலே மைந்தருடன் விபாகஞ் செய்துகொள்ளலாம்.

மனு.

தந்தையுந் தாயுமிறந்தபின்பு மைந்தர்விபாகம் பண்ணிக்கொள்க.

பலமுனிவர்.

தந்தையானவன் பொருட்கெடுதிக் கேதுவாகிய ஆருச்சின முடையவனுகியும், சில மைந்தரிடத்திலும் - மனைவியிடத்திலும் மிகுந்த விருப்பமுடையவனுகியும் - தீராப்பிணியினனுகியும் - தருமவிரோதமாக விபாகஞ்செய்பவனுகியும் - பொருளாசை விட்டவனுகியும் - சன்னியாசியாகியும்-பதிதனுகியும் - காமவிருப்பில்லாதவனுகியும்-தாய் பூப்பொழிந்தவளாகியு மிருந்தபோது தந்தை விபாகஞ் செய்வதிலே விருப்பமில்லாதவனு யிருப்பினும் மைந்தர் தங்களுக்கிச்சையானகாலத்தில் விபாகஞ் செய்துகொள்ளலாம்.

சங்கிரககாரர்.

தந்தையிருக்கும்பொழுது தாயிறந்தால் அவளுடைய பொருளையும், தாயிருக்கும்பொழுது தந்தையிறந்தால் அவனுடையபொருளையும் மைந்தர் பிரித்துக்கொள்க.

ஆரீதர்.

தந்தையானவன் மேற்சொல்லிய ஆருச்சின்முதலிய குற்றமில்லாதவனு யிருக்குங்காலத்தில் மைந்தனுனவன் பொருளையாளுதல் - செலவழித்தல் - அடிமையானவர்கள் பிழைசெய்தபோ தவர்களைத் தண்டித்தல்-தடாகப்பிரதிஷ்டை முதலான புண்ணியகாரியஞ்செய்த லிவற்றி லதிகாரமுடையவ னல்லன்.

சங்கிலிதர்.

தந்தையானவன் தன்னுடைய குடும்பத்தைக் காத்தற்குச் சத்தியில்லாதவனுகி யிருக்குங்காலத்தில் அவனுடைய மூத்தமைந்தனுக்கு அந்தக் குடும்பங்காக்கு மதிகாரமுண்டாகும்.

இளையமைந்தர்கள் மூத்தமைந்தன் சொற்படி கேட்டுநடக்க.

மூத்தவன் திறமில்லாதவனுகி யிருந்தபோது அவனுடைய சம்மதியினலே யிளையவர்களிலே திறமுடைய வெவனுக்கானுலு மவ்வதிகாரமுண்டாம்.

பிரகற்பதி.

அவிபத்தராயிருக்கிற வுடன்பிறந்தார்க்குத் தேவபூசை - பிதுர் பூசை - பிராமணபூசை முதலானவைக ளொன்றாயிருக்கும்.

சங்கிரககாரர்.

விபத்தரா யிருப்பவர்க்குந் தேவபூசை முதலானகாரியம் வேறு வேறாகும்.

கௌதமர்.

ஆகையால் விபத்தருக்கும் புண்ணியமிகுதியாம்.

## பிதாவிருக்கையிற் பங்கிடும் வகை.

பலமுனிவர்.

பிதாவிருக்கையில் தான் விபாகம் பண்ணநினைத்தால்- மறைவாகவேனும் - சுற்றத்தார் முன்பாகவேனும் - தன்னிச்சைப்படி அதிகமாகவேனும் - குறைவாகவேனும் - சமமாகவேனும் - சாஸ்திரவிரோதப்படாமல் மைந்தர்க்குத் திரவியத்தைப் பங்கிடுக.

நாரதர்.

பிதாவிருக்கையில் அவன் சமபாகம்பண்ணநினைத்தா லப்போது புத்திரனைப்போலவே தனது பத்தினிகளுக்குஞ் சமபாகங்கொடுக்க ; அந்தப்பத்தினிகள் சீதனமில்லாதவர்களாயிருந்தால் அவளுக்கு மைந்தரோடு சமபாகமும் சீதனமுடையவர்களாயிருந்தா லந்தச்சீதனப் பொருளுடனே சமபாகமு முண்டாம்.

பிரகற்பதி.

இப்படி தந்தையினால் சாஸ்திரவிரோதமில்லாமல் சமமாகவேனும் ஏற்றங்குறைவாகவேனும் பண்ணப்பட்ட விபாகத்தைக்குறித்து மைந்தர்கள் விவாதப்படில் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

ஆரீதர்.

மிகவு மூப்படைந்தவனாகிய பிதாவானவன் தன்னாலீட்டப்பட்ட பொருளை விபாகஞ்செய்யும்போது தன்னிச்சைப்படி மைந்தர்க்கு அற்பமான பாகங்கொடுத்து மிகுந்த பொருளெல்லாவற்றையு மெடுத்துக்கொள்ளலாம்.

இப்படிப் பாகம்பண்ணிக்கொண்ட பின்பு தந்தை ஆடையு முணவுமில்லாமல் மெலிந்தவனானால் அவன் மிகுந்த பொருளுடையவரா யிருக்கின்ற மைந்தரிடத்தில் தனது குடும்பத்திற்கு வேண்டிய பொருள் வாங்கிக்கொள்க.

மைந்தருள் எவனேனும் ஆடையுணவில்லாமல் மெலிவுற்றால் தந்தையானவன் முன்போல அவர்கட்குத் தன்னுடைய பொருளிற் பாகஞ்செய்து கொடுக்க.

யாஞ்ஞவற்கியர்.

மைந்தருள், பொருள்சம்பாதிக்கத்தக்க திறமிருப்பதால் விவாகப் பொருளை விரும்பாதவனுக்குச் சிலபொருள்கொடுத்து விபாகபத்திரம் பிறப்பிக்க.

காத்தியாயனர்.

தந்தையிருக்கையில் மைந்தர்களே பாகஞ்செய்யும்பொழுது அவர்களெல்லாருஞ் சமபாகமாகப் பிரித்துக்கொள்க.

## பிதாவுக்குப்பின்பு மைந்தர் பங்கிடும்வகை.

ஆரீதர்.

தந்தைக்குப்பின்புமைந்தர்கள்சமமாகப்பாகம்பண்ணிக்கொள்க.

யாஞ்ஞவற்கியர்.

புத்திரர் பாகம்பண்ணிக்கொள்ளும்பொழுது அவர்கள் தங்களிலே பிராமணனுக்குத் தனது சாதி மனைவியிடத்திற் பிறந்த மைந்தனுக்கு நாலுபங்கும், க்ஷத்திரியசாதி மனைவியிடத்திற்பிறந்த மைந்தனுக்கு மூன்றுபங்கும், வைசியசாதி மனைவியிடத்திற்பிறந்த மைந்தனுக்கிரண்டுபங்கும், சூத்திரசாதி மனைவியிடத்திற்பிறந்த மைந்தனுக்கொருபங்குமாகப் பிரித்துக்கொள்க.

க்ஷத்திரியனுக்கு தனது சாதிமுதலான மூன்றுசாதி மனைவியரிடத்திற்பிறந்த மைந்தர்கள் - பாகம் - மூன்றும், இரண்டும், ஒன்றுமாகப் பிரித்துக்கொள்க.

வைசியனுக்கு தனது சாதிமுதலான விரண்டுசாதி மனைவியரிடத்திற்பிறந்த மைந்தர்கள் பாகம் இரண்டும் ஒன்றுமாகப் பிரித்துக்கொள்க.

சூத்திரனுக்கு தனது சாதி மனைவியிடத்திற்பிறந்த மைந்தனுக்குப் பாகமொன்றேயாம்.

பிதாவுக்குப்பின்பு மைந்தர் பாகஞ்செய்துகொள்ளும்பொழுது, பிதாவினாலே சாதகருமமுதலான சடங்குகள் செய்விக்கப்படாதவர்களுக்கு முன்பு பிதாவினாலே சடங்கு செய்விக்கப்பட்டவர்கள் சாதகருமமுதலான சடங்குசெய்விக்க.

பிதாவினாலே கலியாணஞ்செய்விக்கப்படாத கன்னிகைகளுக்கு உடன்பிறந்தவர்கள் தங்களுக்குவந்த பாகப்பொருளிலே நாலாவது

பங்குப்பொருளெவ்வளவோ அவ்வளவு தொகைப்பொருளையெல்லாக்கன்னிகைகளுக்குந் தனித்தனி கலியாணத்திற்காகக் கொடுக்க.

உதாரணம்.

பிராமணசாதி மனைவி புத்திரனொருவன், அவனுடன்பிறந்த கன்னிகையொருத்தி, வந்த பாகப்பொருள் ஐஞ்ஞூறுபொன்: அதில் புத்திரனுக்குப் பாகம் நானூறுபொன்னும் கன்னிகைக்குப்பாகம் நூறுபொன்னுமாம்.

புத்திரரிருவர், அவருடன்பிறந்த கன்னியரைவர், வந்தபாகப்பொருளாயிரத்துமுந்நூறுபொன்: அதில் புத்திரரிருவர்க்கும்பாகம் நானூறு நானூறுபொன்னும், கன்னியரைவருக்கும் பாகந்தனித்தனி நூறு நூறு பொன்னுமாம்.

க்ஷத்திரியசாதிமனைவி புத்திரனொருவன், அவனுடன்பிறந்த கன்னிகையொருத்தி, வந்த பாகப்பொருள் முந்நூற்றெழுபத்தைந்து பொன்: அதில் புத்திரனுக்குப்பாகம் முந்நூறுபொன்னும், கன்னிகைக்குப் பாகம் எழுபத்தைந்து பொன்னுமாம்.

வைசியசாதி மனைவி புத்திரனொருவன், அவனுடன்பிறந்த கன்னியொருத்தி, வந்த பாகப்பொருள் இருநூற்றைம்பதுபொன்: அதில் புத்திரனுக்குப்பாகம் இருநூறுபொன்னும், கன்னிகைக்குப்பாகம் ஐம்பதுபொன்னுமாம்.

சூத்திரசாதி மனைவியின் புத்திரனொருவன், அவனுடன்பிறந்த கன்னிகையொருத்தி, வந்தபாகப்பொருள் நூற்றிருபத்தைந்துபொன்: அதில் புத்திரனுக்குப் பாகம் நூறுபொன்னும், கன்னிகைக்குப் பாகம் இருபத்தைந்து பொன்னுமாம்.

பிராமணசாதி மனைவியின் புத்திரனொருவனும், க்ஷத்திரியசாதி மனைவியின் புத்திரியொருத்தியுமிருந்தபோது, இருந்தபொருளை காலே முக்காற்பாகம்பண்ணி அதிலே நாலுபங்கு அந்த புத்திரனெடுத்துக் கொண்டு மிகுந்த முக்காற்பங்கை அந்தப்புத்திரிக்குக் கொடுக்க.

பிராமணசாதி மனைவியின் புத்திரனொருவனும், வைசியசாதிமனைவியின் புத்திரியொருத்தியும் இருந்தபோது, இருந்தபொருளை காலரைப்பங்கு பண்ணி அதிலே யந்தப்புத்திரன் நாலுபங்கும் புத்திரி அரைப்பங்குங் கொள்க.

பிராமணசாதிமனைவி புத்திரனொருவனும், சூத்திரசாதி மனைவியின்புத்திரியொருத்தியுமிருந்தபோது, இருந்தபொருளை நாலேகாற்பங்காக்கி அந்தப்புத்திரன் நாலுபங்கும் புத்திரி காற்பங்குங்கொள்க.

புத்திருடையதொகையும் புதல்வியருடைய தொகையும் ஏற்றங்குறைவாக விருக்குமிடத்திலும் இம்முறையே பாகமறிக.

பிராமணனுக்கு க்ஷத்திரிய சாதிமனைவி முதலானவர்களிடத்திற் பிறந்த மைந்தர்க்கு தானத்தினால்வந்த பூமியிலே பாகமில்லை.

நான்குவருணத்தாராகிய புத்திரர்கள் பாகம்பண்ணிக்கொள்ளும் பொழுது அவருள் கலியாணம் பண்ணிக்கொள்ளப்படாத சூத்திர வருணத்தாளுடைய மைந்தனுக்குப் பாகமில்லை.

யாஞ்ஞவற்கியர்.

சூத்திரன் தனக்குத் தன்னுடைய வீட்டடியாளிடத்திற் பிறந்த மைந்தனுக்குத் தன்னிச்சைப்படி பாகங்கொடுக்கலாம்; அவனிறந்த பின்பு அவளுடைய புத்திரர்கள் தங்களி லொருவனுக்குவந்த பாகப் பொருளிற் பாதியவனுக்குக்கொடுக்க; அந்தச்சூத்திரனுக்குபுத்திரன் முதல் மகளுடையமகன்வரையு முள்ளவர்க ளில்லாதபோது அந்த வீட்டடியாளுடைய மைந்தனே தன்னுடையபிதாவின் பொருளெல்லாவற்றையு மெடுத்துக்கொள்ளலாம்.

சங்கிரககாரர்.

உடன்பிறந்தாருள் எந்தவேதுவினாலேனும் சிலர் பாகத்திற்குரியரல்லாதவர்களாயிருக்கும்பொழுது அவருள் பாகத்திற்கதிகாரியான திறமுடையவெவனேனும் தாய்ப்பொருளெல்லாவற்றையுங் கொள்க.

நாரதர்.

உடன்பிறந்தாருள் இளமைப்பருவங் கடந்தவர்கள் திறமில்லாதவர்களானால் திறமுடையவெவனேனுந் தன்னுடைய சத்திக்குத்தக்கபடியவர்களைக் காக்க.

பலமுனிவர்.

தந்தையிறந்தபின்பு மைந்தர்கள் தந்தைக்கு உத்தரக்கிரியைசெய்ததற்குமேல் அந்தக்கருமத்திற்குச்செலவாகிமிகுந்ததில் குடும்பங்காத்தற்பொருட்டு உடன்பிறந்தவராலேனும், தந்தையாலேனும், தாயினாலேனும் வாங்கப்பட்ட கடனையும், தந்தைகொடுக்கவேண்டிய கடனையுங் கொடுத்து மிகுந்ததை எல்லாரும் பிரித்துக்கொள்க.

காத்தியாயனர்.

தந்தையினாலே தருமத்தின்பொருட்டு நியமிக்கப்பட்டதும், பிரீதியினாலே வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதும், கொடுக்கத்தக்க இந்தக் கடனை நீங்களே தீர்க்கவேண்டுமென் றொப்புவிக்கப்பட்டதுமாகிய விம்மூவகைக்கடனையும் மைந்தர்கள் பாகப்படி பிரித்துக்கொள்க; அந்தக்கடனை யப்பொழுதே கொடுக்கவேண்டுமென்னு நியமமில்லை.

நாரதர்.

உடன்பிறந்தவர்கள் தங்களுக்குள் எவனதிகமுயற்சியினாலே குடும்பங்காத்தற்பொருட்டுக் காரியத்தைச் செய்கிறவனோ அவனுக்குச் சமபாகங் கொடுத்து அவனை ஆடையுணவு வாகனமுதலானவைகளா லுபசரிக்க.

## எடுகூறு.

பலமுனிவர்.

பொருள் மிகுதியாயிருந்தா லுடன்பிறந்தவர்களில் வேள்விமுதலிய கிரியை செய்யத்தக்கவனுக்கு எடுகூறு கொடுக்க.

மூத்தவனுக் கேதேனும் உத்தமமான வொருபொருள் மேன்மையின்பொருட்டுக் கொடுக்க.

எல்லாரும் வேள்விமுதலிய கிரியை செய்யத்தக்கவர்களானல் எடுகூறில்லை.

பொருள் சீவனத்திற்குமாத்திர மிருக்கின்ற விஷயத்திலு மெடுகூறில்லை

வித்தையினாலுங் குணங்களினாலு முயர்ந்தவர்கள் பிறப்பிலே தாழ்ந்தவர்களா யிருப்பினு மவர்களில் முதற்றரத்தினர்க்குப் பாக மிருபதிலொன்றும், நடுத்தரத்தினர்க்குப் பாகம் நாற்பதிலொன்றும், கடைத்தரத்தினர்க்குப் பாகமெண்பதி லொன்றும் எடுகூறாகக்கொடுத்து மிருந்தபொருளை யவர்களெல்லாருஞ் சமமாகப் பிரித்துக்கொள்க; அல்லது மூத்தவ னிரண்டுபாகமும், இளையவ னொன்றரைபாகமும், மற்றையெல்லாரு மோவ்வொரு பாகமுமாகப் பிரித்துக்கொள்க.

இந்த எடுகூறு கலியுகத்தி லில்லையென்று விஞ்ஞானேசுவரர் முதலானவர்களாலே தள்ளப்பட்டது.

பின்னும்,

வசிஷ்டர்.

தந்தையிறந்தபின்பு மைந்தர் தம்முடைய விச்சையாற் பங்கிட்டுக்கொள்ள முயற்சிசெய்யும்பொழுது, தந்தையின்மனைவிகள் கருப்பமுடையவராயிருந்தால் அவர்களுடைய மகப்பேறுகண்டு பாகம்பண்ணிக் கொள்க.

தந்தைக்கு உத்தரக்கிரியை செய்தவுடனே பாகம்பண்ணத்தக்கதென்னு நியம மிவ்விடத்திலில்லை.

பலமுனிவர்.

தாயமாகிய பொருளிலே புத்திரரிருக்கிற வுரிமையைப்போலத் தந்தையினுடைய மனைவிகளுக் குரிமையில்லை; ஆனால், அந்தமனைவியர்கள் மைந்தர்க்கொப்பான தலைமையுடையவர்களாகையால், புத்திராலே பிரிக்கத்தக்க திரவியத்திற் றங்களுடைய விரதமுதலானவைகள் செய்தற்பொருட்டு அந்தப் புத்திரரோடு சமபாகத்தை யடையத் தக்கவர்கள்.

யாஞ்ஞவற்கியர்.

அந்த மனைவியர்கள் சீதனமுடையவரானால் சமமான பாகத்திற்குள்ளே குறைவாகவே யுதவிக்குவேண்டியதை யடையத் தக்கவர்கள்.

உடன்பிறந்தா ளொருவளாகவும் பொருள் மிகுதியாகவு மிருந்தால் செல்வத்திற்குத் தக்கபடி உடன்பிறந்த மாதர்க்குக் கலியாணஞ்செய்விக்க.

பாகம்பண்ணிக்கொள்ளாம லிருக்கும்பொழுதும் செல்வத்துக்குத்தக்கபடி கலியாணஞ் செய்விக்க.

யாஞ்ஞவற்கியர்.

தந்தையினாலே சடங்குசெய்விக்கப்படாத பெண்களுக்கு அவசியஞ் செய்விக்கவேண்டிய கலியாணவரையுமுள்ள சடங்குகளையும், மைந்தர்க்கு உபநயனம்வரையுமுள்ள சடங்குகளையும், தந்தையாற் சடங்கு செய்விக்கப்பட்டிருக்கின்ற மூத்தவன் தந்தையினுடையபொருளாற் செய்விக்க; தந்தையினுடையபொரு ளில்லாவிடில் தன்னுடையபொருளாற் செய்விக்க.

சங்கன்.

உடன்பிறந்தவர்கள் பாகம்பண்ணிக்கொள்ளும்பொழுது - கலியாணத்திற்கு முன்பு கன்னிப்பருவத்தி லணியத்தக்கனவாக வணிந்திருந்த வாபரணங்களையும்,அவர்களுக்குத் தந்தைமுதலானவராற்கொடுக்கப்பட்ட சீதனத்தையும், தாயானவளுக் கவளுடைய தாயின்வழிமுறையாகவந்தஅலங்காரத்தையும் பெண்களே யடைவர்கள்; அவை பிரிக்கத்தக்கனவல்ல.

## தாயபாகத்திற்குரிய ரல்லாதவர்கள்.

பலமுனிவர்.

தந்தையானவ னிருந்தபோதேனு மிறந்தபோதேனும் பண்ணப்படுகிற தாயபாகத்தில் நபுஞ்சகன்- குஷ்டரோகி- பயித்தியம்பிடித்தவன் - மூடன் - பிறவிக்குருடன் - பிறவிச்செவிடன் ஊமை பதிதன் அந்தப் பதிதனுடைய மைந்தன்- துறவி - துறவுநிலை கெட்டவன்-நைஷ்ஷகப்பிரமசாரி - வானப்பிரஸ்தனிவர்கள் முதலானவர்கள், சமணனானவன் - பாசுபதனானவன் - இவர்கள் முதலானவர்கள் நோயினாற் சுவைப்புலன் கெட்ட நாக்குமுதலான விந்திரியமுடையவர்கள், தந்தையைப் பகைத்தவன்- பெரும்பிழை செய்ததனாற் சுற்றத்தாராலே புறம்புபண்ணப்பட்டவன் - தீராப்பிணியினன் - வருணமுறையுஞ் சனனமுறையுங் கடந்தவளாகி மணஞ்செய்யப்பட்டவளுடைய மைந்தன்-சமானகோத்திரத்தாளைக் கலியாணஞ்செய்தவனுக் கவனிடத்திற்பிறந்தவன் - கலியாணஞ்செய்தவனுக்குப் பெற்ற பிள்ளையுடையவளிடத்தி லவளுடைய மைத்துனனாலே பிறந்தவன் - இவர்களெல்லாருந் தாயபாகத்திற் குரியரல்லாதவர்கள்.

பிரகற்பதி.

சமானவருணத்தாளிடத்திற் பிறந்தவனானாலும், தந்தைக் கிதபாதகமான காரியஞ்செய்யாத குணமுடையவனானால் அவன் பாகத்திற் குரியனல்லன்.

யாஞ்ஞவற்கியர்.

தருமத்தின் பொருட்டேனுஞ் சீவனத்தின்பொருட்டேனு மொருகாரியமுஞ்செய்யத் திறமில்லாத பிறவிக்குருடன் - மூடன் - நபுஞ்சகன் - இவர்கள்முதலான பாகத்திற்குரிய ரல்லாதவர்களை தாயபாகத்தை யடைந்திருக்கிறவர்கள் உணவாடைகொடுத் துயிருள்ளளவுங் காக்க.

காத்தியாயனர்.

அவர்களில்லாதபோது அவர்களுடைய தந்தையின் பொருளைப் பற்றிக்கொண்ட மாமன்முதலான சுற்றத்தார் அவர்களைக்காக்க.

அந்தச் சுற்றத்தாருமில்லாதபோது அந்தப்பிறவிக்குருடன் முதலானவர்களே தங்களுடைய பொருளைக்கொள்க.

போதாயனர்.

பதிதனும்- அவனுடைய மைந்தனும்- துறவுநிலை கெட்டவனும்-மாமன் முதலானவர்களாலே காக்கத்தக்கவர்க ளல்லர்.

தேவலர்.

குருடுமுதலான குற்றத்தினாலே பங்குக்குரிய ரல்லாதவர்களாகிக் காத்தற்குமாத்திர முரியவர்களாயிருந்த குருடன் முதலானவருடைய குற்றமில்லாத மைந்தர்கள் தங்கள் தங்களுடைய தந்தையர்க்குள்ள தாயபாகத்தை யடைவர்கள்.

வசிஷ்டர்.

பதிதனுடைய மைந்தனும்-பிரதிலோமையினுடைய மைந்தனும் தந்தைபாகத்தை யடையார்கள்; அவருள் பதிதனுடைய மைந்தனும் பதிதனே யாகையால்.

மேற்சொல்லிய பங்குக்குரிய ரல்லாத பிறவிக்குருடன் முதலானவர்களுடைய மைந்தரும் அந்தக் குற்றமுடையவர்களானால் அவர்கள் தங்களுடைய தந்தையைப்போலக் காக்கத்தக்கவர்கள்.

யாஞ்ஞவற்கியர்.

பிறவிக்குருடன் முதலானவர்களுடைய புதல்விகள் நன்னடையுடையவரானால் கலியாணவரையுங் காக்கத்தக்கவர்கள்.

பிறவிக்குருடன் முதலானவருடைய மனைவிகள் நல்லொழுக்கமும் மைந்தரின்மையு முடையவரானாற் காக்கத்தக்கவர்கள்.

அந்தமனைவியர் கற்புநிலை கெட்டவராயேனும் மாறுபாடு செய்பவராயேனு மிருந்தால் தூரத்திவிடத் தக்கவர்கள்.

## பிரிக்கத்தக்கபொருள்.

காத்தியாயனர்.

விளக்கமாகக் காணப்படுகிற பாட்டனுடையதாகவும் பிதாவினுடையதாகவும் தனது தந்தைமுதலானவர்களுடையதாகவு மிருக்

கிற பொதுப்பொருளுதவிகொண்டு, தன்னு லீட்டப்பட்டனவாகிய வீடும் - பாத்திரமுதலான உபகரணமும் - பசுமுதலிய காலிகளும் - ஆபரணங்களும் - பெட்டிமுதலானவைகளும்- அடிமைமுதலானபொருள்களும் பிரிக்கத்தக்க பொருளாம். இவைகளை பிதாவினுலே வாங்கப்பட்ட கடனிருந்து அந்தக்கடன் ஐயமின்றிச் சுற்றத்தாராலேயுள்ளதென்று தெரிவிக்கப்பட்டாலதைத்தீர்த்து உடன்பிறந்தார் பிரித்துக்கொள்க.

பிரித்துக்கொள்ளத்தக்க பொருளைக்குறித்து வஞ்சனையேனும் - திருட்டேனும் - பண்ணப்பட்டதாகத் தோற்றினுல் அந்தச்சந்தேகத்தை கோசப்பிரமாணத்தினுலே தீர்க்க.

## பிரிக்கத்தகாதபொருள்.

### பலமுனிவர்.

பங்குக் குரியவனல்லாத அயலவனிடத்தில் தந்தையினுடைய பொருளுதவியின்றிக் கற்றகல்வியினுலும் - சிற்பத்தினுலும் - சௌரியத்தினுலும் - வேள்விக்காரியஞ் செய்வித்தலினுலும் - பாவஞ்செய்தவர்க்குப் பரிகாரஞ் செய்வித்தலினுலும் - வாதியெதிர்வாதிகளுடைய சந்தேகத்தைத் தீர்த்தலினுலும் - அவையகத்து நன்கு மதித்தற்பொருட்டுத் தனது கல்வியறிவை விளக்குதலினுலும் - ஓட்டத்தை முன்னிட்டு கல்வியாலயலவனை வெல்லுதலினுலும் - மாணுக்கன் செய்த குருபூசையினுலும்- உபதேசஞ்செய்தல் முதலானவைகளாலு மடையப்பட்டபொருள் பிரிக்கத்தகாத பொருளாம்; இவைபிரிக்கத்தக்கனவல்ல.

வேதனமேற்றுக்கொண்டு வித்தைகற்பித்தலில் அந்த வேதனத்தையன்றி யடையப்பட்டதும் - பெரியோரைப்பூசிக்குமிட முதலானவைகளில் வித்தையா லடையப்பட்டதும் - உபநயனமுதலான - வைதிககாரியஞ் செய்வித்தலிலே மாணுக்கனிடத்தில் உபகாரமாக வடையப்பட்டதுங் கல்விப்பொருளாம்; இந்தப்பொருள் தாயத்தாராலே பிரிக்கத்தக்கதன்று.

### காத்தியாயனர்.

பொதுப்பொரு ளுதவிகொண்டு கல்வியினுலும்-சௌரியத்தினுலும் - சிற்பத்தினுலு மடையப்பட்ட பொருள் பிரிக்கத்தக்கதாம்.

நாரதர்.

உடன்பிறந்தாருள் கல்விகற்கின்றவனுடைய குடும்பத்தைக் காத்தவன் கல்வியில்லாதவனானலுங் கல்விப்பொருளிற் பாகத்தையடைவன்.

காத்தியாயனர்.

பொதுப்பொருளுதவிகொண்டு அப்பன் - சிற்றப்பன் - பெரியப்பன் - இவர்களாற் கற்பிக்கப்பட்ட வித்தையினலே யடையப்பட்ட கல்விப்பொருள் பிரிக்கத்தக்கதாம்.

வசிஷ்டர்.

பிரிக்கத்தக்க கல்விப்பொருளிலே சம்பாதித்த வித்துவானுக்கிரண்டுபாகமுண்டு.

கௌதமர்.

பிரிக்கத்தகாத கல்விப்பொருளிலே சம்பாதித்த வித்துவானனவன் கல்வியுடையராகிய தன்னுடன் பிறந்தார்க்குப் பாகங்கொடுக்க விரும்பினல் பாகங்கொடுக்கலாம்.

காத்தியாயனர்.

பொதுப்பொருளாகியவாகனம் ஆயுதம் இவைமுதலானவைகளாலுதவியின்றி பிராணசந்தேகநேரிடத்தக்கபோரிலேசெய்த வலிய செய்கைமுதலானவைகளை மகிழ்ந்த தலைவனலே கொடுக்கப்பட்டதும்; தலைவன் காரியப்பொருட்டுப் போரிலே பகைவரை வலியசெயலால் துரத்தி உயிரைவிட்டதற்காகக் கொடுக்கப்பட்டதும் சௌரியதனமாம், அது பிரிக்கத்தக்கதன்று.

வியாசர்.

பொதுப்பொருளுதவியாற் சம்பாதித்த சௌரியப்பொருள் பிரிக்கத்தக்கதாம், அந்தப்பொருளில் சம்பாதித்தவ னிரண்டுபாகத்தையடைவன்.

பலமுனிவர்.

கன்னிகாதானத்திலே தனக்குக்கொடுக்கப்பட்டதும் மனைவியுடனே தனக்குவந்ததும், பாட்டனலேனுந்தந்தையாலேனு மன்பினற் கொடுக்கப்பட்டதும் தாயினு லவள்பொருளி லன்பினலே கொடுக்கப்பட்டதும் - உழவுமுதலிய தன்னுழைப்பினலே சம்பாதிக்கப்பட்டதும், - நண்பினனலே கொடுக்கப்பட்டதும், கலியாணத்தில் வரபூசையிலடையப்பட்டதும் பிரிக்கத் தக்கனவல்ல; ஆனல் இவற்றுளெவ்வ

கைப்பொருளேனும் பொதுப்பொருட் செலவினற் கிடைத்ததாயின் அது பிரிக்கத்தக்கதாம்.

யாஞ்ஞவற்கியர்.

தொன்றுதொட்டுவந்த பூமி முதலியபொருள்க ளயலவனுற்கவரப்பட்டிருந்தபோது பங்குக்குரியாருளொருவன் அவர்களனுமதி பெற்றுச்சாதித்தா லப்பொருள் பிரிக்கத்தக்கதன்று.

சங்கன்.

அனுமதி யில்லாவிடில் சாதித்தவன் பிரயாசத்துக்குத்தக்கபடியிரண்டுபங்கையேனும் நாலிலொருபங்கையேனு மடைவன்.

பலமுனிவர்.

தகுதிப்படி யெப்போதும் வழக்கமாகத்தரிக்கின்ற ஆடையாபரணம் - பக்குவான்னம் - பத்திரத்திலெழுதப்பட்ட கடன்பொருள் - ஆணடிமை பெண்ணடிமை - சதுக்கம் - அங்கணம்-மாடுசஞ்சரிக்குமிடம் - வீடு - நிலம் வாகனம் - காலிகள் - புரோகிதகாரியம் - கடவுளருளாற்பெற்றபேறு - இவையெல்லாம் பிரிக்கத்தக்கனவல்ல. ஆனல் பிரிவுசெய்யாததினலே யொருவருக்கும் பயன்படாமையும்- பகையும் - அழுக்காறுமுண்டானபோது ஆடை முதலானவைகளை விற்றல் - கிணறுமுதலானவைகளை முறைப்படியாளுதல்- பெண்ணடிமை முதலினேரை வீடுதோறும் பிரிவின்படி விளக்குதல்முதலிய வேலை செய்வித்துக்கொள்ளுதல் இவைமுதலாக உத்திகளினலே அவ்வவ் பொருள்களை யெப்படிப் பங்கிட்டால் விரோதமின்றி யுபயோகப்படுமோ வப்படிப் பாகஞ்செய்துகொள்க.

காத்தியாயனர்.

தாயுந்தந்தையும் மைந்தர்க்குக்கொடுத்த வாடையாபரணங்களவரவர்க்கேயாம்.

## புத்திரர் பௌத்திரர்முதலினேர் பங்கேற்பாடு.

யாஞ்ஞவற்கியர்.

அவிபக்தர்களாயிருந் திறந்துபோனவர்களுடைய புத்திரர்கள் - பாட்டன் - முற்பாட்டனிவர்களுடைய பொருளைப் பிரித்துக்கொள்ளும்பொழுது தங்கள் தங்களுடைய தந்தையர்க்குள்ள பாகத்தைத் தாங்களெடுத்துச் சமமாகப் பிரித்துக்கொள்க. எப்படியெனில், உடன்பிறந்தார் மூவர்- அவருளொருவனுக் கோர்மைந்தனும் மற்றொருவ

னுக்கு மைந்தரிருவரும் மற்றொருவனுக்குமைந்தர் மூவருமிருந்தனர்: பாட்டனுடையதாகியிருந்த பொதுப்பொருள் தொண்ணூறுபொன்: அந்தப்பொருளை மூன்றுபங்காக்கி முறையே யொருவன் முப்பதும், இருவர் பதினைந்தும் பதினைந்தும், மூவர் பத்தும்பத்துமாக வெடுத்துக் கொள்க.

காத்தியாயனர்.

பொருளைச் சம்பாதித்தவனாகிய மூலபுருடனொருவன் அவனுக்கு மைந்தரிருவர் - அம்மைந்தரிருவருக்கும் புத்திரரோவ்வொருவரு மிருந்தபோது, மூலபுருடனுடைய மைந்தரிலொருவனிறந்துபோனால் அவனுடைய மைந்தன் தனது பிதாவினுடைய பாகத்தையே தனது தந்தையுடன்பிறந்தவனிடத்திலேனும், அவனுடைய மைந்தரிடத்தி லேனும் வாங்கிக்கொள்க.

மூலபுருடனொருவன் அவனுக்குப் புத்திரரிருவர் அவருள் மூத்தபுத்திரனுக்குப் புத்திரனும், பௌத்திரனும் பௌத்திரனுடைய புத்திரனு மிருக்கின்றார்கள் இளையபுத்திரனுக்குப் புத்திரனும், பௌத்திரனுமிருந்து அந்தப்பௌத்திரன் றவிர அவ்விருவரு மிறந்துபோனார் இப்படியிருக்கையில் மூலபுருடன் பாகஞ்செய்ய விரும்பினால் அவன் றன்னுடைய திரவியத்தில் மூத்தமைந்தனுக்கு வந்தபாகத்திற்குச் சமமாகக்கொடுக்கவேண்டிய இளையமைந்தனுடைய பாகத்தை யவ்விளையமைந்தனுக்குப் பௌத்திரனாகியும் தனக்குப் பௌத்திரனுடைய புத்திரனாகியுமிருக்கின்ற அவனுக்குக் கொடுக்க.

தேவலர்.

மூலபுருடனுடைய பௌத்திரனுடைய பௌத்திரனுக்குப் பிண்டாகரும மற்றுப்போகும்; ஆகையா லந்தமூலபுருடனுடைய தனபாகமு மற்றுப்போம்.

வியாசர்.

பாட்டனாற்சம்பாதிக்கப்பட்ட தாவரசங்கமப் பொருள்களை அவனுக்குப் பின்பு பிதாவும் புத்திரனுஞ் சமமாகப்பிரித்துக்கொள்க.

பாட்டனுடைய தாவரப்பொருளிலே புரிமை பிதாவுக்கும் புத்திரனுக்குஞ் சமமாயிருக்கும்.

தந்தை குற்றமின்றி பிழைத்திருக்கையில் அவனாற்சம்பாதிக்கப்பட்டபொருளிலே மைந்தனுக்குப் பாட்டன்பொருளி லுண்டாயிருக்கிற வுரிமையைப்போல வுரிமையில்லை.

ஒருவன் தன்னுடைய புத்திர னனுமதியில்லாமற் றனது தந்தையினுடைய பொருளில் தானமுதலானவை செய்தல்கூடாது.

பிரகற்பதி.

ஒருவன் தன்னுடைய கல்வி சௌரியமுதலானவைகளாற் சம்பாதித்தபொருளிற் புத்திரனுடைய வனுமதியில்லாமல் தானமுதலானவை செய்யலாம்.

## சீதனம்.

பலமுனிவர்.

சீதனமாவது:—அங்கி யெதிர்க்கொடைப்பொருள் முதலாகப் பலவகைப்படும்.

அவற்றுள்,

காத்தியாயனர்.

அங்கி யெதிர்க்கொடைப்பொருளாவது:—கலியாண சமயத்திலக்கினிக்கெதிரில் பெண்ணின்பொருட்டுத் தந்தைமுதலானவர்களாலே கொடுக்கப்படும் பூமிமுதலான பொருளாம்.

அழைக்கொடைப்பொருளாவது:—பிறந்தகத்தினின்று கணவனகத்திற்குப் போம்பொழுது கொடுக்கப்படும் பொருளாம்.

அன்புகொடைப்பொருளாவது:—சீவனத்தின்பொருட்டு மாமி மாமனிவர்களாற் கொடுக்கப்படுவதும், வந்தனம் பண்ணும்பொழுது தந்தை - தாய் - கணவனிவர்களாற் கொடுக்கப்படுவதும், தமையன் - தம்பி - மைந்தர் - சுற்றத்தாரிவர்களாற் கொடுக்கப்படுவதுமாம்.

மூத்தமனைவி யொப்புக் கொடைப் பொருளாவது:—வேறொரு பெண்ணைக் கலியாணம்பண்ணும்போது கணவனாலே மூத்தமனைவி யொப்பின்பொருட்டு அவளுக்குக் கொடுக்கப்படுவதாம்.

மணப்பின் கொடைப்பொருளாவது:—பெண்ணுக்குக் கலியாணஞ்செய்தபின்பு பெண்ணின்கணவன் கணவன் குலத்தினர் - தாய் - தந்தை - இவர்களாற் கொடுக்கப்படுவதாம்.

### வியாசர்.

கன்னியாசுற்கமாவது:—பெண்ணைக் கொள்ளுகிறவன் பெண்ணின்றந்தையிடத்தி லந்தப்பெண்ணுக்காகக் கொடுப்பதாம்.

### காத்தியாயனர்.

மூலியமாவது:—தந்தைமுதலானவர்களால் இல்விற்குவேண்டிய பாத்திரமுதலானவைகளின் விலைக்காகக் கொடுக்கப்படுவதாம்.

இணைக்கோடைப்பொருளாவது:—மணவாளனும் மணவாட்டியுமாகிய விருவரு மோரிடத்திற் கலியாணமுதலான சுபகாரியங்களிற் கூடியிருக்கும்போது அவர்களுக் கெவர்களாலேனுங் கொடுக்கப்படுவதாம்.

சீவனப்பொருளாவது:—வருடமொன்றிற்கிரண்டாயிரம் பணம் வரையுஞ் சத்திக்குத்தக்கபடி கொடுக்கப்படுவதாம்.

### பலமுனிவர்.

சௌதாயிகமாவது:—வாக்குத்தத்தம்பண்ணின நாள்முதல் கணவனகம்புகுமளவும் பெண்ணின் தந்தை - தாய் - அண்ணன் - தம்பி - ஞாதியரிவர்கள் முதலானவர்களாற் கொடுக்கப்படுவதும், தந்தையகத்தேனுங் கணவனகத்தேனும் அண்ணன் - தம்பி - தாய் தந்தை இவர்களால் மேற்சொல்லப்பட்ட அங்கி யெதிர்முதலான நிமித்தமின்றிக்கொடுக்கப்படுவதும், விரதங்களிலே பார்வதிதேவி முதலாயினோரைக்குறித்து ஏவராலேனுஞ் சுமங்கலிபூசையிற் கொடுக்கப்படுவதுமாம்.

இவை முதலானவைகளெல்லாஞ் சீதனமெனப்படும்.

### காத்தியாயனர்.

உற்சவகாலத்திலேமாத்திரந் தரிக்கத்தக்கதென்பது முதலிய நிமித்தத்தினலே பெண்ணுக்குக் கொடுக்கப்படும் ஆபரணமுதலானவைகளும் பங்காளிகளை வஞ்சித்தற்பொருட்டு பெண்ணுக்கென்று கொடுக்கப்படுவதுஞ் சீதனப்பொருளல்ல.

## சீதனச்செய்கை.

### வியாசர்.

மேற்காட்டிய பலவகைச் சீதனப்பொருளையும் மனைவி யெப்பொழுது மனுபோகிக்கலாம்.

கணவனுக்கு வேருனவர்களாற் கொடுக்கப்பட்ட சௌதாயிகமாகிய பூமிமுதலியபொருளை மனைவி யெப்பொழுதுந் தன்னிச்சைப்படி ஒற்றி - தானம் - விக்கிரயமுதலானவை செய்யலாம்.

அந்தச் சௌதாயிகம் கணவனாற் கொடுக்கப்பட்டதானால் அவனிருக்கும்பொழுது அதை அவனுக்கினைப்படி செய்க.

கணவனிறந்தபின்பு முன்பு அவனாற்கொடுக்கப்பட்டதை மனைவி தன்னிச்சைப்படி யனுபோகித்தலும், தாவரமொழிந்த பொருளைக் கொடுத்தலுஞ் செய்யலாம்.

மற்றைச் சீதனப்பொருளிலே மனைவிக்குரிமையில்லை.

காத்தியாயனர்.

கணவனேனும் - தந்தையேனும் : உடன்பிறந்தானேனும் - சீதனப்பொருளைக் கொள்ளுவதற்குங் கொடுத்தற்கு முரியவரல்லர்.

இவருள் எவனேனுஞ்சீதனப்பொருளை வலிமையாலனுபோகித்தால் அவனவளுக்கு வட்டியுட னந்தப்பொருளையும், அரசனுக்குத் தண்டத்தையுங் கொடுக்க.

அந்த மனைவியினுடைய வனுமதிபெற்று அந்தப்பொருளை யனுபோகிப்பவன் பொருளுடையவனானால் அவன் முதற்பொருளை மாத்திரங் கொடுப்பிக்கத் தக்கவன்.

பொருளில்லாதவனாற் கொடுப்பிக்கத்தக்கவ னல்லன்.

கலியாணம்பண்ணப்பட்ட மனைவியானவள் கணவனுடைய திரவியத்திற் குடையவளாயினும் கணவனுடையவனுமதியின்றி தானமுதலானவைகளொன்றுஞ் செய்தல்கூடாது.

தேவலர்.

கணவனானவன் தனக்கு ஆபத்துநேரிட்டகாலத்தில் மனைவியினுடைய சீதனப்பொருளை யவளுடைய சம்மதியில்லாமலு மெடுத்துக் கொள்ளலாம்.

எப்படிப்பட்ட கொடி ஆபத்திலுங் கணவனுக்கு வேறானவர்களாகிய வுடன்பிறந்தவர்கள் சீதனப்பொருளைக் கொள்ளுதற் குரியவரல்லர்.

யாஞ்ஞவற்கியர்.

வறந்தகாலம் - பிணி - கடன்காரர்செய்யும் வருத்தம்- துயரம் - இவைகளைப் போக்குதற்கும், தருமகாரியத்தைச்செய்தற்கும், வேறு கதியில்லாதபோது கணவன் மனைவியினுடைய சீதனப்பொருளை யெடுத்துக்கொண்டால் அதனை யவன்மீட்டுங்கொடுக்கத்தக்கவனல்லன்.

காத்தியாயனர்.

மனைவி கணவனுடையவருத்தத்தை யெண்ணித் தனது சீதனப் பொருளை அன்பினாற்கொடுத்தால் அவனப்பொருளை மீட்டுங்கொடுக்க விரும்பினாற் கொடுக்கலாம்.

காத்தியாயனர்.

கணவனானவன் மேற்சொல்லிய வேதுக்களினாலே வருத்தப்பட்டவனும், பின்பு வேறொரு மனைவியையுடையவனுமாகி முன்பு தனக்குப் பொருளுதவிசெய்த மூத்தமனைவியைச் சேராமலும், அவளுக்கு ஆடையுணவுகொடாமலும், அவளைத்தள்ளினால் அந்தமனைவி முன்பு தான் அன்பினாலே கொடுத்ததானாலும், அரசனுக்கறிவித்து வலிமையா லந்தப்பொருளை வாங்கிக்கொள்க.

மனைவியானவள் கணவனுக்கு அபகாரநினைப்பவளும், தகுதியுடையவளல்லாதவளும், பொருளை மிகவுமழிப்பவளும், விபசாரஞ் செய்ய விரும்புகின்றவளுமானால் அவள் தனது சீதனப்பொருளைச் செலவழித்தற் குரியவளல்லள்.

கணவனானவன் தனது மனைவிக்குக் கொடுக்கிறேனென் றுண்மையாகச்சொன்னதைப் புத்திரனேனும் பௌத்திரனேனுங் கடன் போலக் கொடுக்க.

## மனைவிவழிவரு பொருட்பங்கீடு.

மனு.

கலியாணத்திலும் - அன்பினாலும் கொடுக்கப்பட்ட விருவகைச் சீதனப்பொருளும், கணவனிருக்கையில் மனைவியிறந்துபோனவுடனே யிருக்கின்றமக்களை யடையும்.

பிரகற்பதி.

மேற்சொல்லிய விருவகைச் சீதனப்பொருளையும், புத்திருங் கன்னிப்பெண்களும் பிரித்துக்கொள்ளும்பொழுது சீதனப்பொருளுடையவளுடைய புத்திரியின்மக்களுக்கும், சுமங்கலிகளான பெண்களுக்கும் அன்புடனே சிலபொருள் கொடுத்துத்தாங்கள் சமமாகப் பிரித்துக்கொள்க.

மனு.

தாயினுடைய சீதனப்பொருள் இணைக்கொடைப்பொருளானால் அந்தப்பொருளைக் கன்னிப்பெண்கள்மாத்திரஞ் சமமாகப் பிரித்துக்கொள்க.

மேற்கூறப்பட்ட மூவகைப்பொருளுக்கு வேறான அங்கியெதிர்க்கொடைப் பொருள்முதலான சீதனப்பொருள்களிருந்தால் தாயினாலே வாங்கப்பட்ட கடனைத்தீர்த்து மிகுந்துள்ளதைக் கன்னிப்பெண் மைந்தனில்லாதவள் - பொருளில்லாதவள் - அழகில்லாதவள் - விதவை இவர்களெல்லாருஞ் சமமாகப் பிரித்துக்கொள்க.

கௌதமர்.

இந்தப்பொருளை மேற்சொல்லிய பெண்களே யடைவார்கள்.

பலமுனிவர்.

மேற்சொல்லப்பட்ட பெண்க ளில்லாவிடி லந்தப்பொருளை அந்தப்பெண்களுடைய புத்திரிகளும், அந்தப்புத்திரிக ளில்லாவிடிற் புத்திரரும், அந்தப் புத்திரரில்லாவிடிற் சீதனமுடைய புத்திரரும், அவர்களில்லாவிடிற் பௌத்திரரு முறையே யடைவர்கள்.

பிராமியம் - தைவம் - ஆருஷம் - பிராசாபத்தியம் - காந்தருவமென்னும் ஐவகை விவாகங்களினாலேவந்த மனைவியர்க ளிறந்தபின்பு அவர்களுடைய சீதனப்பொருளை அவர்களுக்குப் புத்திரிமுதல் பௌத்திரர்வரையுமான சந்ததியில்லாவிடில் அவர்களுடைய கணவரடைவார் தாய்மார் முதலானவர்க ளடையார்கள்.

காத்தியாயனர்.

ஆசுரம் - இராக்ஷதம் - பைசாசமென்னு மூவகை விவாகங்களினாலே வந்த மனைவியர்கள் மேற்சொல்லியபடி புத்திரிமுதல் பௌத்திரர்வரையுமான சந்ததியில்லாதவர்களா யிறந்தபின்பு முன்பு அந்த மனைவியர்களுக்குத் தாய் - தந்தை - பெரியப்பன் - சிற்றப்பன் - உடன்பிறந்தவன் - அம்மானிவர்கள் முதலானவர்களாலே கொடுக்கப்பட்ட சீதனப்பொருள் கொடுத்தவர்களையே யடையும் அவர்களில்லாதபோது கணவனையு மடையும்.

கௌதமர்.

கன்னியர் சுற்கமென்னும் பொருளானது கன்னியிறந்துபோனால் அந்தக் கன்னியினுடைய அண்ணன் தம்பியரை யடையும்.

அவர்களில்லாதபோது தாயை யடையும்.

யாஞ்ஞவற்கியர்.

கலியாணப்பொருட்டுச் சுற்கமென்னும் பொருள் கொடுக்கப்பட்டுக் கலியாணமுடிவதற்கு முன்னமே கன்னிகையிறந்துபோனால் அந்

தச் சுற்கப்பொருளில் கொடுத்தவனும் வாங்கினவனும் கலியாணஞ் செய்வதற்காகச் செலவழித்ததுபோய் மிகுந்திருந்தா லதையும் அந் தக் கன்னிகைக்குக்கொடுத்த ஆபரணத்தையுங் கொடுத்தவனே வா ங்கிக்கொள்க.

கன்னியினுடைய பொருளை அந்தக் கன்னியிறந்துபோனபின்பு முதலில் அவளுடைய அண்ணன் தம்பிமார்களும், அவர்களுக்குமேல் தாயும், அவளுக்குமேல் தந்தையு முறையேயடைவார்கள்.

பிரகற்பதி.

ஒருவன் தனது தாயுடன் பிறந்தவளுக்கேனும், நன்மாமன்மனை விக்கேனும், தந்தையுடன் பிறந்தவருடைய மனைவியர்க்கேனும், அத் தைக்கேனும், மாமிக்கேனும், அண்ணன்மனைவிக்கேனும், ஔரசன் - தத்தன் - புத்திரியினுடையபுத்திரன் - அவனுடைய மைந்தனிவர்க ளில்லாவிடி லவர்களுடைய பொருளையடைவன்- இப்படியே மாற்று ந்தாய்க்குஞ் சந்ததியில்லாதபோது அவளுடையபொருளையும் அடை வன் - மேற்சொல்லப்பட்ட தாயுடன்பிறந்தவள் முதலானவர்களெல் லாருந் தாய்க்கொப்பானவர்க ளென்று சொல்லப் பட்டார்களாகை யால்.

ஒருவனுடைய அந்தணச்சாதி முதலான பலசாதிமனைவியருள் சந்ததியில்லாம லிறந்தவளுக்கு அவளுடைய தந்தைமுதலானவர்க ளாலே கொடுக்கப்பட்ட சீதனப்பொருள் அவளுடையகணவன் சாதி மனைவியையேனும், அவளுடைய புதல்வி முதலானவர்களையேனு மடையும்.

அந்தச் சீதனப்பொருளைப் புத்திரி முதலானவர்களுக்குக் கொ டுக்குமதிகாரங் கணவனுக்கே யுண்டு.

## கௌணபிதாக்களின் வழிவரு பொருட்பங்கீடு புத்திரரிலக்கணம்.

மனு.

சம்பாதித்தவனுடைய பொருளை அவனுடைய புத்திரரே ய டைவர்.

ஔரசன் - க்ஷேத்திரசன்- தத்தன் - கிருத்திரிமன் - கூடோற்ப ன்னன் - அபவித்தன்- கானீனன் - சகோடசன்-கிரீதன்-பௌநர்ப்ப வன் - சுவயந்தத்தன் - பாரசவன் எனப் புத்திரர் பன்னிருவர்.

இந்தப் புத்திரருட் சமசாதி மனைவியிடத்திற்பிறந்த ஔரசன் முக்கியபுத்திரன்.

க்ஷேத்திரசன் முதலான பதினொருவருங் கௌணபுத்திரர்கள்.

இவருள் ஔரசன் - தத்தன் - இவர்களல்லாத புத்திரர் பதின்மரையுங் கலியுகத்திலே கௌணபுத்திரராகவுங் கொள்ளுதலில்லை.

தத்தன்மாத்திரங் கௌணபுத்திரனுகக்கொள்ளப்பட்டான் ஔரசபுத்திரனில்லாதபோது தத்தபுத்திரனுக்குப் பிதாவினுடைய தனத்தைக்கொள்ளுதல் முதலானவைகளிலே ஔரசனுக்குள்ள அதிகாரமுண்டு.

தத்தபுத்திரனானவன் தன்னைத் தானமாக வேற்றுக்கொண்டவனுடைய கோத்திரத்தையுந் தனத்தையும் அடைவன். தன்னைப்பெற்றவனுடைய கோத்திரத்தையுந் தனத்தையும்விட்டு நீங்குவான்.

தருமவசனம்.

தனது சாதி மனைவியிடத்தில் கிரமமாகச் சடங்குசெய்யப்பட்டுப் பிறந்த புத்திரனே ஔரசனுவான்.

இருபிறப்பாளராகிய மூன்றுவருணத்தாரும் இக்கலியுகத்தில் வேறுசாதி ஸ்திரீகளை விவாகஞ்செய்தல் தள்ளப்பட்டது.

வசிஷ்டர்.

தத்தபுத்திரனை யேற்றுக்கொண்ட வொருவனுக்கு ஔரசன் பிறந்தால் அந்தத் தத்தபுத்திரன் கௌணபிதாவினுடையபொருளிலே நாலிலொருபாகத்தை யடைவன்.

## புத்திரரில்லாதவன் பொருட்பங்கீடு.

பிரகற்பதி.

ஔரசபுத்திரனேனுந் தத்தபுத்திரனேனு மில்லாதவனும், விபத்தனுமாயிருந்து இறந்துபோனவனுடைய பொருளை அவனுடைய தந்தைமுதலானவர்க ளிருப்பினும், அவனுடைய தருமபத்தினி யென்னுங் கற்புடையமனைவியே யடைவள் - எதனுலெனில் மனைவியானவள் கணவனுடைய சரீரத்திற் பாதியும், அவனுடையப் பாவபுண்ணியபலத்திற் பாதியுமுடையவளென்று வேதங்களிலும், தருமசாத்திரமுதலியநூல்களிலும், உலகநடையிலும் வழங்கிவருகிறபடியால்..

பலமுனிவர்.

கணவனிறந்தபின்பு தருமபத்தினியானவள் கணவனுடைய அசையும் பொருள் - அசையாப்பொருளிவை யெல்லாவற்றையும் அடைந்து தனது கணவனுக்குத் தன்னாலே பொருளுதவி கொண்டு செய்யத்தக்க மாசிகம் - ஊனமாசிக முதலான சிரார்த்தங்களையும், தடாகப்பிரதிஷ்டை முதலானவைகளையுஞ் செய்யும்போது கொடுக்கும் பொருள்களினாலேயும், கணவனுடைய நன்மை மேன்மைகளைக்குறித்துத் தானமாகக்கொடுக்கும் பொருள்களினாலேயும், தக்ஷிணைகளினாலேயும், கணவனுடைய பெரியப்பன் - சிற்றப்பன் - குருபுத்திரியினுடைய புத்திரர்-கணவனுடன்பிறந்தவனுடைய மைந்தன்-நன்மாமனிவர்களையும், விருத்தர்களையும், அதிதிகளையும் போற்றல் செய்க. கணவனுடைய நன்மை மேன்மைக் கேதுவல்லாத காரியங்களைக்குறித்து அவள் வீணாகக்கொடுத்தல் கூடாது.

காத்தியாயனர்.

அவிபத்தனாகியிருந் இறந்துபோனவனுடைய கற்புடையமனைவியை அவளுடைய மாமன்முதலானவர்கள் தமது குடும்பத்தோடுவைத்துக் காப்பதற் கொவ்வாதபோது அவளுடைய சீவனத்திற்கும், நித்திய நைமித்திகமான விரத முதலியவற்றிற்குங் கொடுத்தபொருள்களை அவள் தானுள்ளளவுந் தன்னிச்சைப்படி செய்யலாம்.

நாரதர்.

வைப்பாட்டியானவள் நிலைமையுடையவளானால் மேற்சொல்லிய மாமன்முதலானவர்கள் அவளுக்கு உணவு ஆடையின்பொருட்டு வருஷமொன்றிற்கு நூற்றுத் தொண்ணூற்றிரண்டுபடிகொண்ட மரக்காலால் தானியமிருகலமும், அந்தந்தத்தேசவழக்கமான பணம் நாற்பதுங்கொடுக்க அல்லது அந்தத் தானியமும் பணமுங் கிடைக்கத்தக்க பூமியையேனுங் கொடுக்க.

வைப்பாட்டிக்கும் மனையாட்டிக்குஞ் சீவனப்பொருட்டுக் கொடுத்த பொருளை அப்பொருள்கொடுத்த மாமன்முதலானவர்களிறந்தபின்பு எவனேனுங் கவர்தல் கூடாது.

பலமுனிவர்.

மேற்சொல்லிய மனையாட்டியும்- சீவனப்பாகமுடைய வைப்பாட்டியும் - கணவனுடைய பிதாவாகிய மாமன்முதலான பெரியோர்க்குப் பணிவிடை செய்யாதவர்களாயேனும், ஒழுக்கங்கெட்டவர்களா

யேனும், நாணமில்லாதவர்களாயேனும், மிகவும் பொருளையழிப்பவர் களாயேனும், பரபுருஷனை யிச்சிப்பவர்களாயேனு மிருந்தாலும், இளமைப்பருவம்-கொடியவஞ்சகச்செய்கை - விபசாரசங்கை-இவைகளையுடையவர்களா யிருந்தாலும், அவர்களுடைய சீதனப்பொருளையுஞ் சீவனப் பாகப்பொருளையுங் கவர்ந்துகொண்டு அவர்களுடைய ஜீவனத்திற்காக அவர்களுக்கு உணவு ஆடைமாத்திரங் கொடுக்க.

யாஞ்ஞுவற்கியர்.

விபத்தனும்புத்திரனில்லாதவனுமாகியிருந்து இறந்துபோனவனுடைய பொருளை முதலிலே மேற்சொல்லிய குலம் - குணம் - கற்பு நிலை இவற்றால் மேம்பட்டவளாகிய அவனுடைய தருமபத்தினியடைவாள்.

பத்தினிகள் பலரிருந்தால் அவர்களெல்லாரும் கணவனுடைய பொருளைச் சமமாகப் பிரித்துக்கொள்க.

பத்தினிகளில்லாவிடில் மேற்சொல்லிய தருமபத்தினியினுடைய புதல்வியருள் கன்னிப்பெண் ணடைவள்.

அந்தக் கன்னிப்பெண் ணில்லாவிடில் கலியாணஞ்செய்யப்பட்டவளும், வறுமையுடையவளுமாகிய பெண்ணடைவள்.

மேற்சொல்லிய விருவகை புதல்விகளு மில்லாவிடில் புத்திரியினுடைய புத்திரனடைவன்.

அவனில்லாவிடில் மேற்சொல்லிய புத்திரனில்லாம லிறந்துபோனவனுடைய பிதாவடைவன்.

அவனில்லாவிடில் மாதாவடைவள்.

அவளில்லாவிடில் சகோதரரடைவர்.

அவரில்லாவிடில் பின்னோதரரடைவர்.

அவரில்லாவிடில் சகோதரருடைய புத்திரரடைவர்.

அவரில்லாவிடில் பின்னோதரருடைய புத்திரரடைவர்.

அவரில்லாவிடில் மாதாவினுடைய தாயாகிய பாட்டியடைவள்.

அவளில்லாவிடில் தந்தையினுடைய தந்தையாகிய பாட்டனடைவன்.

அவனில்லாவிடில் பாட்டனுடைய புத்திரனடைவன்.

அவனில்லாவிடில் அவனுடைய புத்திரனடைவன்.

அவனில்லாவிடில் சபிண்டர்க ளடைவர்கள்.

சபிண்டர்கள் புத்திரனில்லாம லிறந்துபோன புருஷன்முதல் ஏழாந்தலைமுறைப் புருஷன்வரையு முள்ளவர்கள் அவர்கள் ஞாதியென்றுஞ் சொல்லப்படுவார்கள்.

அவர்களில்லாவிடில் சமானோதகரடைவர்.

சமானோதகர் எட்டாந்தலைமுறைப் புருஷன்முதற் பதினாலாந்தலைமுறைப் புருடன்வரையுமுள்ளவர்கள் அவர்கள் குல்லியரென்றுஞ் சொல்லப்படுவார்கள்.

இந்தப் பதினாலுதலைமுறை புருஷர்வரைக்கும் பாட்டனுக்குக் காட்டிய முறைப்படியே மேலுமேலுந் தாயப்பொருளைக்கொள்ளு மதிகாரமுண்டு.

அவர்களில்லாவிடில் தன்னுடைய சுற்றத்தாரடைவர் தனது சுற்றத்தார் தன்னுடைய அத்தைமைந்தரும், சிறியதாயின் மைந்தரும், நன்மாமன் மைந்தரு மாவார்.

அவர்களில்லாவிடில் தனது தந்தையின்சுற்றத்தாரடைவர், தந்தையின்சுற்றத்தார் தந்தையினுடைய அத்தைமைந்தரும், சிறியதாயின்மைந்தரும், நன்மாமன்மைந்தரு மாவார்.

அவர்களில்லாவிடில் தனது தாயின்சுற்றத்தாரடைவர் தாயின் சுற்றத்தார் தாயினுடைய அத்தைமைந்தரும், சிறியதாயின் மைந்தரும், நன்மாமன் மைந்தருமாவார்.

இம்மூவகைச் சுற்றத்தாரு மில்லாவிடில் அவனுடைய ஆசாரியனடைவன்.

அவ்வாசாரியனில்லாவிடில் அவனுடைய மாணாக்க னடைவன்.

அவனில்லாவிடில் அவனுடனே வேதமோதின்வ னடைவன்.

அவனில்லாவிடில் சுரோத்திரியப் பிராமணனடைவன்.

அவனில்லாவிடில் அந்தத் தேசத்திலிருக்குங் குணவானாகிய சாமானியப் பிராமணனடைவன் - இந்தவிதி பிராமண தனவிஷயத்தில்லாதிக.

விபத்தனும் புத்திரனில்லாதவனுமாயிருந்து இறந்துபோன க்ஷத்திரியன் முதலானவனுடைய தனத்தை அவனுடைய தருமபத்தினி

முதல் சாமானியப்பிராமணன்வரையுமுள்ளாரொருவருமில்லாவிடில் அரசன் சேர்த்துக்கொள்க.

'சந்ததியில்லாமல் இறந்துபோனவனுடைய பொருளை யடையத்தக்கவர்களில்லாவிடில் அந்தப்பொருளைக் கொள்ளுந் தகுதியினரல்லாத மனைவியருடைய சீவனத்திற்குவேண்டிய பொருள்கொடுத்து மற்றைப் பொருளை யரசன் சேர்த்துக்கொண்டு அவர்களைக்காக்க.

யாஞ்ஞவற்கியர்.

நைஷ்டிகப் பிரமசாரியினுடைய பொருளை அவனுடைய ஆசாரிய னடைவன்.

சன்னியாசியினுடைய பொருளை அவனுடைய நன்மாணுக்க னடைவன்.

வானப்பிரஸ்தனுடைய பொருளை ஏகாச்சிரமியடைவான்.

## பிரிந்துகூடிய வுடன்பிறந்தவர் முதலாயினோர் விஷயம்.

பிரகற்பதி.

பாகம்பிரித்துக்கொண்டவன் இஷ்டத்தினாலே தன்னுடைய தந்தையுடனேனும், சிற்றப்பன் - பெரியப்ப னிவர்களுடனேனும், உடன்பிறந்தவர்களுடனேனுங் கூடித் தனதுபொருளை அவர்களுடைய பொருளோடு சேர்த்து அவர்களுட னொன்றாய்ச் சீவனஞ்செய்பவன் பிரிந்து கூடினவனாவான்.

அப்படிக்கூடுதலை மேற்சொல்லிய தந்தை முதலானவர்களுடன் மாத்திரஞ் செய்க.

மனு.

அப்படிக்கூடினவர்கள் மீளவு முன்போலப்பிரிந்திருக்க விரும்பினால் அவர்களெல்லாருஞ் சமமாகப் பிரித்துக்கொள்க.

அவர்கள் கூடும்பொழுது தங்களுடைய பொருளிவ்வளவென்று தொகையேற்படுத்தி யொன்றாகச் சேர்த்துவைத்திருந்தால் அந்தத் தொகைப்படி பாகம்பிரித்துக்கொள்க.

பிரகற்பதி.

ஒன்றாகச்சேர்ந்துசம்பாதித்த பொருளுதவியில்லாமலே தானே வித்தை - சௌரியம்- இவைமுதலானவைகளால் எவனேனும் பொரு

ளைச் சம்பாதித்தால் அந்தப் பொருளில் அவனுக் கிரண்டுபாகமும், மற்றையெல்லார்க்குஞ் சமபாகமு முண்டாம்.

கூடினவருள் இறந்துபோனவருடைய ஸமைந்தர்க்கு அவர்களுடைய தந்தையர்க்குள்ள பாகமுண்டாம்.

பலமுனிவர்.

மேற்சொல்லியபடி கூடினவருள் ஒருவன் இறந்துபோனாலும், துறந்துபோனாலும், தேசாந்தரம்போனாலும், அவனுடைய பாகமானது முதலாவது விவாகத்திற் கெடுவதுபோலக்கெடாது மற்றென்னெனில் அவர்கள் பாகம்பண்ணுங்கால்த்தில் அவனுடையபாகத்தை வேருகவைத்து அதனைத்தாங்களெடுத்துக்கொண்டு அவனுடையமனைவியர் தகுதியுடையவரானால் அவர்களை அவர்களுள்ளளவாயும் புதல்வியரிருந்தால் அவர்களை யவர்களுக்குக்கலியாணஞ்செய்யுமளவுங்காக்க.

பிரிந்து கூடியிருப்பவருள் புத்திரனில்லாதவனாகியிருந்து இறந்துபோனவனுடைய பொருளை யடையத்தக்கவர்களின் கிரமம்.

முதலில் அவனுடன்கூடியிருந்த சகோதரர்க ளடைவர்கள்.

அவர்களில்லாவிடில் கூடாமலிருந்த சகோதரர்க ளடைவர்கள்.

அவர்களில்லாவிடில் கூடியிருந்தபின் னேதரர்க ளடைவர்கள்.

அவர்களில்லாவிடில் கூடியிருந்த தந்தையேனும், தந்தையுடன் பிறந்தவர்களேனு மடைவர்கள்.

அவர்களில்லாவிடில் கூடாதபின்னேதரராகியவுடன்பிறந்தவர்க ளடைவர்கள்.

அவர்களில்லாவிடில் கூடாத தந்தையடைவன்.

அவனில்லாவிடில் தாயடைவள்.

அவளில்லாவிடில் நற்குண நற்செய்கையுடையவளாகிய அவனுடைய தருமபத்தினி யடைவள்.

பிரகற்பதி.

அவளில்லாவிடில் அவனுடைய வுடன்பிறந்தவ ளடைவள்.

அவளில்லாவிடில் அடுத்த சபிண்டர்க ளடைவர்கள்.

அவர்களில்லாவிடில் சமானேதர்க ளடைவர்கள்.

சகோதரரும் பின்னேதரருங் கூடியிருக்கையில் மேற்சொல்லியபடியிருந்து இறந்துபோனவனுக்குத் தாவரப்பொருளுஞ் சங்கமப்பொ

ருளுமிருந்தால் அவற்றுள் தாவரப்பொருளை அவனுடைய சகோதரரும், சங்கமப்பொருளைப் பின்னோதாருமெடுத்துக்கொள்க. இவ்விருவகையாருந் தங்களுடன்பிறந்த மாதர்க்குப் பங்குகொடுக்க.

## பிரிவுக்குமேற்பிறந்த மைந்தர்முதலாயினோர் விபாகம்.

### விஷ்டுணு.

மைந்தர் தந்தையொடு பாகம் பண்ணிக்கொள்ளுங் காலத்தில் தாய் கருப்பமுற்றிருப்பது தெரியப்படாதிருந்து பாகத்திற்குப் பின்பு பிறந்த புத்திரனுக்கு அவர்கள் தங்களுடையபாகத்திற்குச் சமமான பாகம் தங்களுடைய பாகப்பொருளிலெடுத்துச் சேர்த்துக்கொடுக்க. பிதாவானவன் அந்தப் புத்திரனுக்குத் தன்னுடையபாகத்திலே பாகங்கொடுக்கவேண்டுவதில்லை. அந்தப்புத்திரனுடைய பிதாவானவன் முதலாவதுபாகம் பண்ணிக்கொள்ளும்பொழுது பிரிந்து பின்புகூடினவனேயானால் அவனுடன் கூடியிருந்த புத்திரர்கள்மாத்திரமே அந்தப் புத்திரனுக்குப் பாகங்கொடுக்க.

தந்தையானவன் மைந்தராற்கொடுக்கப்பட்ட அந்தப்புத்திரனுடைய பாகத்தை வாங்கிக்கொண்டு அவனைக்காக்க.

### கௌதமர்.

மேற்சொல்லியபடி பிறந்த புத்திரனுக்கு மேற்சொல்லியபடி பாகங் கொடுப்பதற்கு முன்னமே பிதாவிறந்துபோனால் அந்தப் பிதாவினுடைய பாகத்தையே அந்தப் புத்திரனடைவன்.

### பிரகற்பதி.

சகோதரர்களும் பின்னோதரர்களும் பிதாவுடன் பாகம்பண்ணிக்கொண்ட பின்பு கருவுற்றுப்பிறந்த புத்திரர்கள் தங்களுடைய பிதாவின் பொருளில்மாத்திரம் பாகத்தை அடைவர்கள்.

மைந்தர்க்குந் தந்தைக்கும் விபாகமானபின்பு பிதாசம்பாதித்த பொருள் விபாகத்திற்குப் பின்பு பிறந்தவனதேயாம். முன்பு பிறந்தவர்களுக் கில்லை.

### யாஞ்ஞவற்கியர்.

பிதாவிறந்தபின்பு புத்திரர் விபாகம்பண்ணிக்கொள்ளும்பொழுது தாய்கருப்பமுற்றிருப்பது தெரியப்படாதிருந்து விபாகத்திற்குப் பின்பு பிறந்தபுத்திரனுக்கு அந்தப் புத்திரரெல்லாருந் தங்களுடைய பாகப்பொருளி லெடுத்துப் பாகங்கொடுக்க. அல்லது காணப்படுகிற

வீடு - பாத்திரம் - விளைநிலமுதலானவர்கள் - எருது - பசு- ஆபரணம் - அடிமைமுதலானவைகள் இவற்றி லாதாயத்தைக்கூட்டிச் செலவைத்தள்ளி விபாகத்திற்குப் பின்பு பிறந்த புத்திரனுக்குப்பாகத்தை யேற்படுத்துக.

அப்படிப் பண்ணப்பட்ட விபாகமானது முன்புபிரித்துக்கொண்டவர்களுக் கேற்பட்டிருக்கிற பாகப்பொருளுக்கு குறைவாயிருந்தாலும் அதுவே யவனுக்குப் பாகமாம்.

விபாகம் பண்ணிக்கொண்டவர்களிலே விபாகத்திற்குப் பின்பு உடையவனையன்றி மற்றொருவனுக்கு தனத்திலும் - கடனிலும்- தானத்திலும் - ஒற்றிவைத்தலினும்-விற்றலினும் அதிகாரமில்லை. ஆனால் அவனுக்குச் சூதகம் தருப்பணம் இவற்றிலேமாத்திரந் தொடர்புண்டு.

பிரகற்பதி.

தாயபாகத்திற்குரிய வொருவன் தன்னுடைய குலத்தினரிருக்குமிடத்தைவிட்டு நீங்கிப்போய் நெடுங்காலந் தூரதேசத்தை யடைந்திருந்து விபாககாலத்திற்குப் பின்புவந்தால் அவனுக்குப் பங்காளிகள் தங்களுடைய பாகப்பொருளி லெடுத்துத் தங்களி லொருவனுக்குவந்த பொருளின்பாதிக் கொப்பானபொருள் சேர்த்துக்கொடுக்க.

மேற்சொல்லியபடி தேசாந்தரம்போயிருந்து விபாககாலத்திற்குப் பின்பு வந்தவன் பௌத்திரனானால் அவனுக்கு அவனுடைய பாட்டன்பொருளாகிய் கடன்பத்திரம் - வீடு - விளைநில மிவைமுதலிய வெல்லாவற்றிலும் முன்புகாட்டிய பாதிப் பாகமுண்டு.

தேசாந்தரம்போயிருந்து நெடுங்காலஞ் சென்று விபாககாலத்திலேனும், அதற்குப் பின்னேனும் வந்தவன் தன்னுடைய பாட்டன் முதலான வேழு தலைமுறைப் புருஷராலே சம்பாதிக்கப்பட்டபொருளிலே தனக்குப் பாகமுண்டென்று தானுடையவனென்பதைப் பிரமாணங்களினாலே சாதித்தால் அவனுக்குக் குலமுறையில்வந்தபொருளிலே பூமியில்மாத்திரந் தகுதியான பாகங் கொடுக்க.

## மறைத்தபொருளின்விபாகம்.

மனு.

எல்லாப் பொருள்களையும் பிரித்துக்கொள்ளும்பொழுது சில பொருள் அயலவனுடைமையென்று வஞ்சனையினாலே மறைக்கப்பட்டனவாயேனும் கவரப்பட்டனவாயேனு மிருந்து காலாந்தரத்தில் வெளிப்பட்டாலும், விபாகக்காலத்தில் தெரியாமலிருந்து பின்பு தெ

ரியப்பட்டாலும், சாஸ்திரத்துக்கு விரோதமாக விபாகம் பண்ணப்பட்டாலும் அந்தப் பொருள்களை யெல்லாரு மீளவுஞ் சமபாகமாகப் பிரித்துக்கொள்க.

காத்தியாயனர்.

விபாகத்திற்குப் பின்பு அவனவன் சம்பாதித்த பொருள் அவனவனதேயாம்.

இவ்விடத்திற் காட்டிய ஏதுக்களினாலே யிரண்டாவது விபாகம் பண்ணப்பட்டாலும் முதலாவது விபாகத்தினாலேதானே விபத்தராயினர்.

## பிரிந்தோர்செய்கை.

நாரதர்.

விபாகஞ்செய்தவுடனே விபத்தரானவர்கள் தேவபூசை முதலான வைதிக கருமங்களையும், உழவு முதலான லௌகிக காரியங்களையும் அடுக்களைப்பாகமுதலானவைகளையும் ஒருவனுக்கொருவனுடைய அனுமதி வேண்டாமலே வேறுவேறாகத் தங்க ளிச்சைப்படி செய்யலாம்.

தங்களுடைய பாகப்பொருள்களிலே தானம்-விக்கிரயம்-போக்கிய மிவற்றைத் தங்க ளிச்சைப்படியே செய்யலாம்.

பிரகற்பதி.

விபாகம் பண்ணிக்கொள்ளும்பொழுது ஒருவன் தன்னுடைய சம்மதத்தினாலே குறைவான பாகத்தை வாங்கிக்கொண்டு பின்பு விவாதப்பட்டால் அரசனவனைக் காவலில் வைத்துத் தண்டித்து முன்பு அவன் சம்மதித்த பாகத்தையே அவனுக்குக் கொடுப்பிக்க.

யாஞ்ஞவற்கியர்.

விபாகஞ்செய்தது பொய்யென்றுசொல்லுமிடத்து பங்காளிகள் சுற்றத்தார்-சான்றினரிவர்களாலும் பிரிக்கப்பட்டவீடு-நிலம் விபாகபத்திரமுதலான சாசனங்கள் தனித்தனி காரியஞ்செய்தல் கடன் கொடுத்தல்-வாங்கல் பிணைப்படுதல் - வாணிக முதலானகாரியஞ்செய்த லிவை முதலாகக்காணப்படுகின்ற பலவகை யேதுக்களினாலும் விபாகம் பண்ணப்பட்டதென்று நிச்சயஞ்செய்க.

தாயபாக முற்றிற்று.

———

## வன்செய்கை.

### பிரகற்பதி.

வன்செய்கையானது மானுடக்கொலை-திருட்டு-அயலவன் மனைவியைத் தீண்டல் இவைமுதலாகப் பலவகைப்படும். அது மீட்டும் முதல் வன்செய்கையெனவும், நடு வன்செய்கையெனவும்-உயர் வன்செய்கை யெனவும் மூன்றுவகைப்படும்.

அவற்றுள்,

முதல் வன்செய்கையாவது:—கனி-கிழங்கு - கலப்பை-நீர் - இவைமுதலியவற்றிற்குக் கேடு செய்தலாம்.

நடு வன்செய்கையாவது :—ஆடை-அன்னம்-பானம்-பசு-வீட்டு பகாணங்கள்-இவற்றிற்குக் கேடுசெய்தலாம்.

உயர் வன்செய்கையாவது:—விஷம்-ஆயுதமிவைமுதலியவற்றாற் பலவகைத்துன்பஞ்செய்தலும், உயிர்க்கொலை செய்தலுமாம்.

கொலையேனுந் திருட்டேனுஞ் செய்தவ னின்னனென்று தெரியப்படாதபோது அவனை முன்னுண்டான பகை இரத்த முடைய அடையாளங்கள் கொலைக் குதவியான கருவி - துஷ்டர் கூட்டுறவு - இவற்றா லறிக.

தகுதியான ஏதுக்கள் காணப்படாதபோது ஐயந் தோற்றப்பட்டவனை அவ னெந்தச்சாதியா னனாலும் பிரமாணஞ்செய்வித்தறிக.

கொலைசெய்தவனென்று நிச்சயமானால் அவனுக்கும், யானை - குதிரைகளைக் கவர்ந்தவர்களுக்கும் சூலத்தி லேற்றுதலாகிய சித்திரவதையே தண்டமாக விதிக்கப்படும்.

கொல்லப்பட்டவன் அந்தணனானால் கொன்றவனுக்கு எல்லாப் பொருள்களையும கவர்தல் தண்டமாக விதிக்கப்படும்.

பலர்கூடி யொருவனைக் கொன்றபோது, அவருள் உயிர்நிலையிலடித்தவனுக்குக் கொலையும், காரியத்தொடக்கஞ்செய்தவனுக்கும் உதவிசெய்தவனுக்கும் அரைக்கொலையும், வழிகாட்டினவனுக்கும் - இடங்கொடுத்தவனுக்கும்- உணவளித்தவனுக்கும்-காரியஞ் சொல்லுவித்தவனுக்கும் - குற்றஞ்செய்தவனை மகிழ்ந்தவனுக்கும்-திறமுடையவனாயிருந்து தடைசெய்யாதவனுக்கும் அவரவர் குற்றத்திற்குத் தக்க தண்டமும் விதிக்கப்படும்.

கொலையல்லாத வன்செய்கை செய்த குற்ற முடையவனுக்குத் தகுதியாக விதிக்கப்படுந் தண்டத்திற் கிருமடங்கு தண்டமும், இத

னைச்செய்தாற் பொருள்கொடுப்பே னென்றவனுக்கு அதற்கு நான்கு மடங்கான தண்டமும் விதிக்கப்படும்.

தன்னைக் காத்தற்பொருட்டும் - பசுக்கவர்ச்சி நேரிட்டபோதும் மாதர்க்கும் மறையவர்க்குந் துன்பமுற்றபோதும் - சாதிசங்கரப்படும் போதும்-தடாகம் - தோட்ட மிவை முதலியவற்றிற்குக் கேடுறும் போதும்-திறமில்லாதவனை வருத்தும்போதும்-திறமுடைய அந்தண ரும்-வைசியரும் ஆயுத மெடுக்கலாம்.

அந்தணரும் வைசியரும் ஆயுத மெடுத்தல் மேற்சொல்லிய விட ங்களிலன்றி மற்றொன்றிற் கூடாது.

ஆயுதம் பிடித்துக் கொல்லவருகின்றவன்-நெருப்பையும்-விஷத் தையும் இடுகின்றவன் - பொருளைகவர்கின்றவன் நிலத்தையும்- மனை வியையுங்கவர்கின்றவன்-சாபஞ்செய்யவெடுத்த கரத்தினன்-மந்திரத் தால் மரணஞ் செய்கின்றவன்-அரசனிடத்திற் கோட்சொல்லுகின்ற வன்-இவர் முதலாயினோர் ஆத்தாயிகளாவார்கள்; இவர்களைக் கொல் பவர்க்குக் குற்றமில்லை.

மனைவி முதலானவர்களுக்கு ஆத்தாயினாலே துன்பநேரிட்ட போது அவனைக் கொல்லுக.

தன்னைக் கொல்லவந்த பசுவையேனும்-பார்ப்பானையேனுங்கொ ன்றால் அவன் அந்தப் பாவநீங்கும்பொருட்டுப் பரிகாரஞ் செய்க.

தன்னுயிரைக் காத்தலின் வேறாகிய புண்ணிய மொன்றுமில்லை.

யானைமுதலான மிருகங்களேனும், கழுகுமுதலான பறவைக ளேனுந் தன்னைக் கொல்லவந்தபோது அவைகள் கொல்லப்பட்டால் கொன்றவனுக்குக் குற்றமுந் தண்டமுமில்லை.

## வன்திருட்டு.

மனு.

பலராற் காக்கப்படுகின்ற பொதுப்பொருளை வலிமையாற் கவர் தல் வன்திருட்டெனப்படும்.

யாஞ்ஞவற்கியர்.

சோர்பாயிருக்கிற வேளையிற் கவர்தலும், எதிரிலே கவர்ந்தில்லை யெனலுந் திருட்டெனப்படும்.

பிரகற்பதி.

விளைநிலத்தினுபகாரணம்:—களை-கிழங்கு-மலர்-பூ-பழமிவற்றை வலிமையாற் கவர்ந்தவனுக்கு நூறுபணத்திற்கு மேற்படத் தண்டம் விதிக்கப்படும்.

ஆடை-அன்னம்-பான மிவை முதலானவைகளையும் வீட்டுபகரணங்களையும் கவர்ந்தவனுக்கு இருநூறு பணத்திற்கு மேற்படத் தண்டம் விதிக்கப்படும்.

பெண்-புருடன்-பொன்-வெள்ளி-செம்பு-அந்தணனுடைய பொருள்-பட்டு-இவை முதலிய வுத்தமப்பொருளைக் கவர்ந்தவன் அந்தணனால் அவனுக்கு அப்பொருளின் விலைக்குச் சமமான தண்டம் விதிக்கப்படும்.

நாரதர்.

வன்செய்கையோடு திருடினவன் அந்தணனுக்கு வேறானவனால் அவனுக் கிருமடங்கு முதலான தண்டம் விதிக்கப்படும்.

இயமன்.

திருடினவன் அந்தணனுந் தண்டங்கொடுக்கச் சத்தியில்லாதவனுமானால் அவன்செய்தகுற்றத்திற்குத் தக்கபடி யொருமாதமேனும் ஒன்றரைமாதமேனும் பசுமேய்த்தல் வாசற்காத்த லிவைமுதலிய இழிவானகாரியஞ் செய்யும்படியேனும், அன்னங்கொடுத்து அவனைச் சிறைச்கூட்டத்தில்வைத் தலையேனுஞ் செய்க.

## தனித்திருட்டு.

மனு.

திருடர் வெளிப்பட்டதிருடரும் வெளிப்படாத திருடருமென விருவகையர்.

வெளிப்பட்டதிருடர் தேசத்திலிருக்கின்ற நல்லவர்கள்போலவும், தகுதியுடையவர்கள்போலவும்,வேஷங்கொண்டு மாதராடவரை மயக்கி வஞ்சனையாற்பொருள்கவர்ச்சிசெய்பவராகிய நைகமரும்-வைத்தியனும் - தூர்த்தனும் - வலிமையாற் கைகூலிவாங்கிக்கொண்டு வஞ்சகஞ்செய்பவனும்,தெய்வத்தை யிகழ்வோனும்,சிற்பந்தெரிந்தவனும், ஒன்றுபோலொன்றைச் செய்பவனும், வேறுபாடான படி தராசுகளையுடையவர்களும் விலைமாதருமாவார்.

வியாசர்.

அவர்கள் செய்தகுற்றத்திற்குத் தக்கபடியாகவும், அவர்களடங்கும்படியாகவுந் தண்டம்விதிக்க.

வெளிப்படாத திருடர் கன்னக்கோல்முதலான கருவிகளோடு கூடினவரும், இரவிற் சஞ்சரிப்பவரும், வெளிப்படாத விருப்பிடத்தையுடையவரும் இன்னாென்றறியப்படாதவரு மாவார்.

அவர்கள் சோர்விற் கவர்வோன் சுவர்க்கட்டிஇடிப்பவன்-வழியி ற்பறிப்பவன்-முடிப்பு அவிழ்ப்பவன் - பெண்திருடன்-ஆண்திருடன்-பசுத்திருடன் - ஆட்டுத்திருடன்- குதிரைத்திருடனென்னு மிவ்வொன்பது வகையினர் முதலான பலவகையினர்.

பிரகற்பதி.

மேற்சொல்லப்பட்ட திருடர்களை துஷ்டர்கூட்டுறவு - கன்னக்கோல்முதலிய வடையாளம் - திருடப்பட்டபொருள் இவை முதலியவற்றால் இராசமனுஷர் கண்டுபிடித்து திருட்டுப்பொருளை யுடையவர்களுக்குக் கொடுப்பித்துத் தண்டிக்கும்படி செய்க.

சோர்வுத்திருடனுக்கு அங்குஷ்டந் தர்ச்சனியென்னும் விரல்களைச் சேதித்தல் தண்டமாம்.

சுவர்க்கட்டி இடிப்பவனுக்கு இரண்டுகைகளையு மறுத்துக்கூரிய சூலத்தேற்றுதல் தண்டமாம்.

பிரகற்பதி.

வழியிற் பறிப்பவனுக்கு கழுத்திற்சுருக்கிட்டு மரத்திலே தூக்குதல் தண்டமாம்.

மனு.

முடிப்புஅவிழ்ப்பவனுக்கு முதலாவது செய்கையில் தர்ச்சனியங்குஷ்ட மென்னும் விரல்களையறுத்தலும், இரண்டாவது செய்கையில் கைகாலிரண்டையுஞ் சேதித்தலும், மூன்றாவதுசெய்கையில் வதைத்தலுந் தண்டமாம்.

வியாசர்.

பெண்திருடனுக்கு நெருப்பைப்போலக் காய்ச்சப்பட்ட இருப்புக்கட்டிலிற் படுக்கச்செய்து சுடுதல் தண்டமாம்.

ஆண்திருடனுக்கு கால்கைகளை யறுத்து அவனை நாற்சந்தியினிறுத்துதல் தண்டமாம்.

பிரகற்பதி.

பசுத்திருடனுக்கு மூக்கையறுத்துக் கட்டி நீரில்அமிழ்த்துதல் தண்டமாம்.

வியாசர்.

ஆட்டுத்திருடனுக்கு பாதிக்காலை யறுத்தல் தண்டமாம்.

குதிரைத்திருடனுக்கு காலையு மிடுப்பையு மறுத்து வதைத்தல் தண்டமாம்.

திருடப்பட்ட ஆடுமுதலிய காலிகளின் உயர்வு - நடுவு - கடை-யிவற்றைநோக்கி முறையே யுத்தம - மத்திம- பிரதமமாகிய தண்டங்களை விதிக்க.

மனு.

பொன் - வெள்ளி - இரத்தினம்- உயர்ந்த ஆடை இவைமுதலான வுத்தமப்பொருள்களைத் திருடினவனுக்கு அந்தப்பொருள்களினுடைய மதிப்பு அவ்வவ்தேசத்தில் வழக்கமாக மதிக்கிற நிட்கமுதலானதிரவியத்தொகையில் நூற்றுக்குமேற்படில்வதைத்தல் தண்டமாம்.

ஐம்பதிற்குமேற்படில் கையையறுத்தல் தண்டமாம்.

ஐம்பதிற்குக் கீழ்ப்படில் திருட்டுப்பொருளின் விலைக்குப் பதினொருமடங்குப் பொருள் தண்டமாக விதிக்கப்படும்.

தானியந்திருடப்பட்டு அது பத்துமிடாவுக்குமேற்பட்டதானால் திருடினவனுக்கு வதைத்தல் தண்டமாம்.

மூன்றுவிரல்களி னுனியாலெடுக்கப்பட்ட நெல்லுக்குச் சாணமென்று பெயர்.

அது நாலுகொண்டது கைத்தலமென்றும், அது நாலுகொண்டது முட்டியென்றும், அது நாலுகொண்டது சிறங்கையென்றும், அது நாலுகொண்டது கூட்டுக்கையென்றும், அது நாலுகொண்டது குடபமென்றும், அது நாலுகொண்டது படியென்றும், அது நாலுகொண்டது மரக்காலென்றும், அது நாலுகொண்டது துரோணியென்றும், அதுநாலுகொண்டதுமாநியென்றும், அது நாலுகொண்டது மிடாவென்றுஞ்சொல்லப்படும்.

புத்தி - திறமை - மாயம் இம்மூன்றினாலே திருடர் பலவகைப்படுவார்கள். அவர்களாலே திருடப்பட்டபொருளை வாங்கிக்கொண்டவர்களுக்குத் தகுதியான தண்டம் விதிக்கப்படும்.

பிரகற்பதி.

பலருக்குந் துன்பஞ்செய்பவனைக் கொல்லுதலினாலே புண்ணியமேயல்லாமற் குற்றமில்லை.

## வன்மைத்தையறபற்று.

பலமுனிவர்.

அயலவனாகிய வொருவன் தன்னை விரும்பாதவளும் கற்புநிலைதவறாதவளும், ஒழுக்கமுடையவளுமாகிய பிராமணஸ்திரீயை வலிமை

யால் அவளுடைய கற்புநிலைகெடும்படி செய்தபோது அவளழிந்த கூந்தலுங்குலைந்த ஆடையணியும் - கலங்கினகண்களும் - அழுந்தியநகக்குறிகளும்-பற்குறிகளுமுடையவளாகி யென்னையின்னனிப்படிசெய்தானென்று பலருமறியக் கூக்குரலிட்டழுதபொழுது அவளை அரசன் சபையிலழைப்பித்துச் சாக்ஷியையுந் திவ்வியத்தையும் விரும்பாமல் அவளுடைய சரீரத்திற் காணப்படுகின்ற நகக்குறிமுதலான அடையாளங்களினாலே அவளுக்கு நேரிட்ட துன்பச்செய்கையை நிச்சயித்து அப்படி அவளைக்கெடுத்தவன் அந்தணனானு லவனுக்காயிரம்பணந் தண்டமாக விதிக்க.

பிரகற்பதி.

க்ஷத்திரியன் முதலானவர்கள் கற்புநிலை தவறாதவளுங் காமவிருப்பில்லாதவளுமாகிய சமசாதி ஸ்திரீயினிடத்தில் மேற்சொல்லியபடி வன்செய்கையைச் செய்தால் அப்பொழுதவர்களுடைய பொருள்களெல்லாவற்றையுங் கவர்ந்துகொண்டு குறியையறுத்து அவர்களைக்கழுதையின்மேலேற்றி யூரைச்சுற்றுவித் தோட்டும்படி செய்க.

ஸ்திரீயானவள் தாழ்ந்தசாதியாளானல் அவளைக் கெடுத்தவனுக்கு மேற்சொல்லப்பட்ட தண்டங்களிற் பாதிதண்டம் விதிக்க.

இந்தவிஷயத்தில் ஸ்திரீயானவள் தனதுவருணத்தானலேயானலும், உயர்ந்த வருணத்தானலேயானலும், மேற்சொல்லியபடி கெடுக்கப்பட்டால் தள்ளத்தக்கவளல்லள். தாழ்ந்தசாதியானலே அப்படிக் கெடுக்கப்பட்டால் தள்ளத்தக்கவள்.

வஞ்சனைச்செய்கையினாலே மேற்சொல்லியபடி கற்பழித்தவனுக்கு எல்லாப் பொருட்கவர்ச்சியும் அவனுடைய நெற்றியிற் யோநிமுத்திரையிடுதலும் தண்டமாக விதிக்கப்படும்.

தாழ்ந்தசாதியாளானல் அவளைக் கெடுத்தவனுக்கு அதிற் பாதி தண்டம் விதிக்க.

உத்தமசாதியாளானல் அவளைக் கெடுத்தவனுக்கு கொலைதண்டம் விதிக்க.

ஸ்திரீயும் புருஷனு மொப்பினவிஷயத்தில் கற்பழித்தவன் சம சாதியானானல் அவனுக்கு உத்தமசாகசதண்டமும், ஸ்திரீ தாழ்ந்த சாதியாளானல் அவனுக்கு மத்திமசாகசதண்டமும், ஸ்திரீ உயர்ந்த சாதியாளானல் அவனுக்கு கொலைத்தண்டமும் விதிக்கப்படும்.

ஸ்திரீக்கு புருஷனுக்குக்காட்டிய தண்டங்களிற் பாதியும், கொலைக்குப் பாதியான காது - மூக்கு மூதலானவைகளைச் சேதித்தலுந் தண்டமாக விதிக்கப்படும்.

யமன்.

பிராமணஸ்திரீயானவள் மதங்கொண்டு சூத்திரனைப் புணர்ந்தால் அரச னவளைக் கொன்று நாய்க் கிரையாகச்செய்க.

அவள் க்ஷத்திரியனையேனும் வைசியனையேனும் புணர்ந்தால் அவளை கோவின் மூத்திரத்தையேனுங் கழுதையின் மூத்திரத்தையேனும் வார்த்துத் தலையை முண்டனம்பண்ணித் தூரத்தும்படி செய்க.

ஒருத்தி தானே யொருவனைத் தொடுதல் முதலியவற்ருலாசையுண்டாக்கிப் புணர்ந்தால் அவளுக்கு மேற்சொல்லிய வஞ்சனைச் செய்கையில் புருஷனுக்கு விதித்த தண்டமும் அந்தப்புருஷனுக்கு அதிற்பாதிதண்டமும் விதிக்கப்படும்.

உயர்ந்தசாதி கன்னிகையினுடைய குறியை ஒருவன் விரல்முதலியவற்ருல் வடுப்படுத்தினல் அவனுக்கு அவ்விரலையறுத்தலும், அறுநூறு பணம் வாங்குதலும் தண்டமாகவிதிக்கப்படும்.

வன்செய்கை முற்றிற்று.

---

## சொற்கொடுமை.

நாரதர்.

சொற்கொடுமையாவது:—தேசம் - சாதி-குலம் இவை முதலானவைகளைக் குறித்தும் வித்தை முதலானவைகளைக் குறித்தும் நிந்தித்தலாம்.

தேசநிந்தையாவது:—கலகவிருப்பினரன்ருே கௌடர்களென்பதாம்.

சாதிநிந்தையாவது:—மிகுந்த வித்தையுடையரானருே வேதியரென்பதாம்.

குலநிந்தையாவது:—கொடிய நடையினரன்ருே விசுவாமித்திர கோத்திரத்தா ரென்பதாம்.

வித்தைநிந்தையாவது :— முற்றக்கற்றவனன்ருே வென்பதாம்.

சிற்பநிந்தையாவது:—நல்ல வேலையாளனன்றே வென்பதாம்.

குருடனைக் குருடனென்றும் கண்ணுடையவனைக் கண்ணில்லானென்றும் குணமில்லாதவனேனும் அவனை நற்குணமுடையவனென்றும் உயர்ந்தசாதியானை நிந்தித்தால் அவனுக்குப் பதின்மூன்றரைப்பணந் தண்டமாக விதிக்கப்படும்.

மேற்சொல்லிய தேச முதலியவற்றைக் குறித்த நிந்தை முதல் நிந்தை நடுநிந்தை உயர்நிந்தை யென மூவகைப்படும்.

அவற்றுள்,

மூர்க்கனே சீ போ வென்பது முதலானவை முதல்நிந்தையாம்.

உன்னுடன்பிறந்தாளோடு நான் போனேன் என்பதும், தாய்-தந்தை மாமன் முதலினோரைக் குறித்து இழிவு கூறுதல் முதலானவையும் நடு நிந்தையாம்.

தின்னத் தகாததைத் தின்றாய், குடிக்கத்தகாததைக் குடித்தாய் என்பது முதலான மகாபாதகத்தால் நிந்தித்தலும் உயிர்நிலை நடுங்கவைதலும் உயர் நிந்தையாம்.

அவற்றுள்,

முதல் நிந்தைக்கு நூறுபணம் வரையும், நடுநிந்தைக்கு நூற்றைம்பதுபணம் வரையும், உயர்நிந்தைக்கு ஆயிரம்பணம்வரையுந் தண்டமாம்.

காத்தியாயனர்.

உங்காரத் தொலியாற் பயமுறுத்தல், காட்டத் தகாத இழிவான ஆண்குறி முதலியவற்றைக் காண்பித்து அவற்றைச் சொல்லுதல் இவைமுதலிய இழிவானசொற்களால் நிந்தித்தலுஞ் சொற்கொடுமையாம். அவ்வவற்றிற்குத் தக்கபடி தண்டம் விதிக்கப்படும்.

பிரகற்பதி.

சொற்கொடுமையில் முன்னேவைதவனின்னுனென்றுதெரியப்படாதபோது இருவர்க்குந்தனித்தனி பன்னிரண்டுபணந் தண்டமாக விதிக்கப்படும்.

நாரதர்.

முன்னேவைதவனுக்கிருமடங்கு தண்டமாம்.

உசனர்.

வைதவன் நானறியாமையால் வைதேன் - வாய்தவறிச் சொன்னேன் - அல்லதுரிமைபற்றிச் சொன்னேன் இனி யிப்படிச்சொல்லே னென்றால் அவனுக்கதனாலே நேரிடுந் தண்டத்திற் பாதியாம்.

சொற்கொடுமை முற்றிற்று.

---

## தண்டக்கொடுமை.

பலமுனிவர்.

சராசரப்பொருள்களி னுடல்களிலே கையாலடித்தல் - இழுத்தல் - நகத்தாற்கிள்ளுதல் - காலா லுதைத்தல் - கல் - செங்கல்லிவற்றாலெறிதல் - சங்கிலி - கயிறு இவற்றாற்கட்டல் - வாளால்வெட்டல் - தடியாலடித்தல் - துணியாற்சுற்றுத லிவை முதலியவற்றால் துன்பப்படுத்தலும், சாம்பல்முதலியவற்றால் துன்பப்படுத்தலுந்தண்டக்கொடுமையாம்.

நாரதர்.

அந்தக்கொடுமை முதற்கொடுமையெனவும் - நடுக்கொடுமையெனவும் - உயர்க்கொடுமையெனவு மூவகைப்படும். அவற்றுள் முதற்கொடுமையாவது அடிப்பதற்கோங்குதல் நடுக்கொடுமையாவது அடித்தல் உயர்கொடுமையாவது இரத்தங்காண வடித்தல்.

பிரகற்பதி.

சாம்பல் - சேறு - புழுதி யிவற்றை யுடலின்மே லெறிந்தவனுக்கு ஒருமாடந் தண்டமாக விதிக்கப்படும்.

கோழை - மலம் - மூத்திரம் - எச்சி லிவைமுதலியவற்றை யுடலின்மேலெறிதல் முதலானவை செய்தவனுக்கு இரண்டுமாடந் தண்டமாக விதிக்கப்படும்.

வாந்தி - சுக்கிலம் - இரத்தம் - கொழுப்பு - தசையிவற்றைக் காலிலெறிந்தால் நாற்பதுபணமும், மற்றை யுடலிலெறிந்தா லறுபதுபணமுஞ் சிரத்திலெறிந்தா லெண்பதுபணமுந் தண்டமாக விதிக்கப்படும்.

யாஞ்ஞவற்கியர்.

கை - கால் - மயிர் - ஆடையிவற்றைப்பற்றி யிழுத்தல் ஆடையைக் கையிற்சுற்றிக்கொள்ளுதல் இவற்றைச்செய்தவனுக்கு நூறுபணந் தண்டமாக விதிக்கப்படும்.

பலமுனிவர்.

விறகுமுதலியவற்றால் இறத்தங்காணுதபடி யடித்தவனுக்கு முப்பதுபணந் தண்டமாக விதிக்கப்படும்.

மனு.

இரத்தங்காண அடித்தவனுக்கும் - தோலறும்படி யடித்தவனுக்கும் நூறுபணந் தண்டமாக விதிக்கப்படும்

தசைதெறிக்க வடித்தவனுக்கு ஆறுநிஷ்கந் தண்டமாகவிதிக்கப்படும்.

எலும்புமுறிய அடித்தவனுக்கு தேசத்தினின் றோட்டுதல் தண்டமாக விதிக்கப்படும்.

காத்தியாயனர்.

கை - கால் - கண் - காது - உதடு - நாக்கு - குறி யிவையறும்படி யடித்தவனுக்கு மத்திமசாகசதண்டமும், துண்டுபடும்படி யடித்தவனுக்கு உத்தமசாகச தண்டமும் விதிக்கப்படும்.

புண்பட அடித்தவன் அந்தப் புண்ணை யாற்றுதற்கும் பத்தியத்திற்குஞ் செலவழிந்த பொருளையும் விதித்த தண்டத்தையுங் கொடுக்க.

யாஞ்ஞவற்கியர்.

உலக்கை முதலானவைகளால் வீட்டுச் சுவரை யதிர அடித்தவனுக்கு ஐந்துபணந் தண்டமாம்.

சுவரை விரிய அடித்தவனுக்குப் பத்துப்பணமும், அது இரண்டாகப்பிளக்க அடித்தவனுக்கு இருபதுபணமும் தண்டமாக விதிக்கப்படும்.

சுவர் விழும்படி செய்தவன் அந்தச் சுவரை வைத்தற்குச் செல்லுஞ் செலவை வீடுடையவனுக்கும் தகுதியான தண்டத்தை யரசனுக்குங் கொடுக்க.

வீட்டிலே கல்லையு முள்ளையும் போட்டவனுக்குப் பதினறுபணமும், விஷத்தையும் பாம்பையும் போட்டவனுக்கு மத்திம சாகசமும் தண்டமாக விதிக்கப்படும்.

பலமுனிவர்.

யானை-குதிரை-பசு இவைமுதலான பெரிய மிருகங்களின் கால் முதலான பெரிய உறுப்புகளறும்படி யடித்தாலும், அவ்வுறுப்புகளிலிரத்தம் பெருக அடித்தாலும் மத்திமசாகசதண்டம் விதிக்கப்படும்.

வெட்டப்பட்டால் மீட்டுந் தளிர்க்கத்தக்க மரங்களின் கிளைக ளை வெட்டினவனுக்கு இருபது பணமும், அடிமரத்தை வெட்டினவ னுக்கு நாற்பதுபணமும் வேரறவெட்டினவனுக்கு யெண்பதுபண மும் தண்டமாக விதிக்கப்படும்.

வெட்டப்பட்டால் மீட்டுந் தளிர்க்கத்தகாததும் சீவனத்திற் கே துவானதுமாயிருக்கின்ற மரமுதலானவைகளின் கிளையை வெட்டின வனுக்கு நாற்பதுபணமும்; அடிமரத்தை வெட்டினவனுக்கு எண்ப துபணமும் வேரற வெட்டினவனுக்கு நூற்றறுபதுபணமுந் தண்ட மாக விதிக்கப்படும்.

தண்டக்கொடுமை முற்றிற்று.

---

## சூது.

மனு.

சூதாடுதலிலே மிகுந்த திருட்டுக்குற்ற முண்டாகும். ஆகை யால் அரசன் அந்தச் சூதாடுதல் தனது தேசத்தில் நடவாதபடிச் செய்க.

பிரகற்பதி.

சில முனிவர் சூதாடுதலும் உண்டென்று கொண்டனர்.

மனு.

மேற்சொல்லிய சூது - கருவிச்சூதெனவும், உயிர்ச்சூதெனவு மி ருவகைப்படும்.

அவற்றுள்.

கருவிச்சூது - கவறு சதுரங்கமுதலியவற்ரு லாடுதலாம்.

உயிர்ச்சூத் - ஆடு - கோழி - கடா - மல்லன் முதலியவற்ருற் போர்பொருத்தலாம்.

பிரகற்பதி.

சூதுச்சாலையதிகாரி இறைக்கூறுகொடுக்க வுடன்பட்டு அரசன னுமதிபெற்று சூதாடுகருவிமுதலானவைகளை அமைத்துவைப்பதற் காக வொருசாலையை நியமிக்க.

சூதாட விரும்பினோர் இறைகூறுகொடுத்துத் தாங்கள்வேண்டிய விஷயங்களிற் சூதாடலாம்.

காத்தியாயனர்.

அந்தச்சாலையில்வந்து பந்தயம்வைத்துச் சூதாடுகிறவர்களிலே சூதில் வென்றவனிடத்திலே நூற்றுக்கைந்தும், தோற்றவனிடத்திலே நூற்றுக்குப் பத்தும், சூதுச்சாலையதிகாரி வாங்கிக்கொள்க.

அவ்வதிகாரி உடன்படிக்கைசெய்தபடி அரசனுக்குப் பொருளைக் கொடுக்க.

அரசன் அவ்வதிகாரிக்கு சூதாடுகிறவர்களாலே துன்பமடையாதபடி செய்க.

சூதாடுகிறவர்களிலே தோற்றவன் பணங்கொடாதபோது அரசனந்தப்பணத்தை யவன் கொடுக்கும்படி செய்க.

நாரதர்.

விளையாட்டினிமித்தஞ் சூதாடினால் அரசனுக்குப் பகுதி கட்டவேண்டியதில்லை.

காத்தியாயனர்.

சூதுச்சாலை யதிகாரியானவன் சூதிலேதோற்றவன் பந்தயப்பணங்கொடுப்பதற்காக அவனுடைய திறத்துக்குத்தக்கபடி ஒன்றினைமாதத்திற்குட்பட வொரு காலவளவையேற்படுத்துக.

சூதிலே விவாதப்பட்டால் சூதுச்சாலையதிகாரி அவரவருடைய ஏற்பாட்டின்படி வழக்குதீர்மானஞ் செய்க.

ஏற்படுத்திய காலவளவிற் பணங்கொடாவிடில் நூற்றுக்குப் பத்துவட்டி கூட்டிக்கொடுக்கும்படி செய்க.

வஞ்சனையான கவறுமுதலியவற்றாலும், மதிமயக்கஞ் செய்தலினாலும், சூதிலே புரட்டுப்பண்ணினவனைத் தலையை மழித்துச் சூதாடுகருவியை மாலையாக அவன்கழுத்திலிட்டுத் தேசத்தினின்று துரத்தும்படி செய்க.

சூது முற்றிற்று.

---

## பொதுவான சிலதண்டங்கள்.

மனு.

தண்டமானது உடல்தண்டம் பொருள்தண்டமென விருவகைப்படும்.

அவற்றுள்,

உடல்தண்டம் அடித்தல்முதல் கொலைவரையுமாம்.

பொருள்தண்டம் பலகறைமுதல் எல்லாப்பொருள் அபகரித்த ல்வளாயுமாம்.

உடல்தண்டத்துக்குத் தானங்கள் கண் - காது - மூக்கு-நாக்கு-கை - வயிறு - குறி - கால்முதலானவையாம். இந்தத் தானங்களில் எதனாலே செய்யத்தகாதகாரியஞ் செய்யப்பட்டதோ அந்தக்குற்றத்திற்குத் தக்கபடி காதையறுத்தல் முதலானவை சிட்சையாக விதிக்கப்படும்.

உயர் வன்செய்கை-நடுவன்செய்கை - முதல் வன்செய்கை யென்னு மூவகைச்செய்கைகளிலே நான்குவருணத்தார்க்கும் மேற்கூறிய விருவகைத்தண்டங்களுள் அவரவர்செய்தகுற்றத்திற்குத் தக்கபடி திக்காரசிட்சையும் - எல்லாப் பொருகள்கவர்ச்சியும்-கட்டுதல்-அடித்தல் - சிறைச்சாலையிற் போடல் - வேலை செய்வித்தல் - நெற்றியிற் குறியிடுதலிவைமுதலாகஇராசநீதியிற்காட்டிய தண்டங்களும்விதிக்க.

ஆனால் உத்தமனான அந்தணனுக்குக் கொலைவிதிக்கும்படி நேரிட்டவிஷயத்தில் அவனுக்கு தலைமழித்தல் - கண்ணைமறைத்துக் கட்டல் - தேசத்தினின்று துரத்திவிடுதல் - நெற்றியிற்குறியிடுதல் - கழுதையின்மே லேற்றிப்போகுத லிவைமுதலானவைகளையே சிட்சையாக விதிக்க, வதையில்லை.

அரசனானவன் காலம் - தேசம் - குற்றம் - சாதி - வலி-வயது - கருமம் - பொருள் இவைகளையறிந்து தண்டனைவிதிக்க. அஃதெப்படியென்னில் தரித்தானுக்கு ஒருபணந் தண்டமாகவும் தக்க விஷயத்தில் மிகுந்த செல்வமுடையவனுக்கு ஆயிரம்பணந் தண்டமாகவும் விதிக்க. சூத்திரனுக்கு ஒருபணந் தண்டமாகவிதிக்கும் விஷயத்தில் வைசியனுக் கிரண்டுபணமும், க்ஷத்திரியனுக்கு நாலுபணமும், அந்தணனுக்கு எட்டுபணமு மிரட்டிப்பாக விதிக்க.

## தண்டப்பொருளின் தொகையும் பெயரும்.

| | |
|---|---|
| இருநூற்றைம்பது அல்லது இருநூற்றெழுபதுபணத் தொகைக்கு. | பிரதம சாகசமென்று பெயர். |
| ஐந்நூறு அல்லது ஐந்நூற்று நாற்பது பணத் தொகைக்கு | மத்திம சாகசமென்று பெயர். |
| ஆயிரம் அல்லது ஆயிரத்தெண்பது பணத் தொகைக்கு | உத்தம சாகசமென்று பெயர். |

மனு.

பொய்ப்பத்திரம் உண்டாக்குதல்-அரசன்-அமைச்சன்-நண்பினனிவ்வனையும் - அரண் - கோசம் - தண்டம் - இராச்சியம் - இவற்றையுமிகழ்தல் - ஸ்திரீயைச் சிறுவனைக்கொல்லுதல் - பிரமவதைமுதலியமகாபாதகம் - பகைவரிடத்திற் சேவித்தலிவற்றை அந்தணனல்லாதவன் அறிந்துசெய்தால் அவன் கொல்லத்தக்கவனுவான். அறியாமையாற் செய்தவனுக்கு எல்லாப் பொருளையு மிழத்தல் சிட்சையாக விதிக்கப்படும்.

பிரகற்பதி.

அறிந்துசெய்தவன் அந்தணனு லவனுக்கு தேசத்தினின்று நீக்குதல் - காரியத்திற்குத்தக்க அடையாளஞ்செய்தல்-தலைமழித்தல் - பந்திபோசனம்-பேசுத லிவற்றைநீக்குதல் - இடமில்லாமற்செய்தல் - வைதிககருமத்தினீக்குத லிவைமுதலானவை செய்வித்து தேசமெங்குஞ் சுற்றும்படி துரத்தல் சிட்சையாம்.

அறியாமையாற்செய்தவன் பரிகாரஞ்செய்துகொண்டால் அவனுக்கு மத்திமசாகசமேனும், பொருளொடு தேசத்தினின்று நீக்குதலேனுந் தண்டமாக விதிக்கப்படும்.

வாள் தடிமுதலிய ஆயுதம்பிடித்தவர்களாகி உங்காரம்பண்ணிக்கொண்டு மனிதரில்லாவிடத்திலே துன்பஞ்செய்பவர்கள் கொல்லத்தக்கவர்கள்.

மந்திரத்தினுலும்- மயக்கத்தினுலும்- மயக்கம் வசீகரமிவற்றைச் செய்பவனுக்கு தேசத்தினின்று துரத்தல் தண்டமாம்.

யாஞ்ஞவற்கியர்.

வாணிகஞ்செய்பவ ரொன்ருய்ச்சேர்ந்து தேசாந்தரச் சரக்கைக் குறைந்தவிலையிற்கொண்டு மிகவு மதிகவிலையில்விற்ருல் அவர்களுக்கு உத்தமசாகச தண்டம் விதிக்கப்படும்.

ஐந்துநாளேனும் - ஐந்துபக்ஷமேனும் - ஐந்துமாதமேனுஞ்சென்றபின்பு அரசன் வாணிகஞ்செய்பவரை யழைப்பித்து அவர்கட்கெதிரே சரக்குகளின் விலையி னேற்பாடுசெய்க.

தனதுதேசத்துச் சரக்கைக்கொண்டு விற்கிறதில் நூற்றுக்கைந்தும் அன்னியதேசத்துச் சரக்கைக்கொண்டு விற்கிறதில் நூற்றுக்குப்பத்து இலாபமுண்டாகும்படி அரசன் விலையினேற்பாடு செய்க.

மனு.

வண்ணானவன் தன்னிடத்தில் வெளுக்கக்கொடுத்த ஆடையைமுருக்கம்பலகையிலே துவைத்துலர்த்தி மடித்துக்கொடுக்க.

அப்படி வெளுக்கப்பட்ட ஆடைகளை வண்ணானுடுத்தினல் அவனுக்கு மூன்றுபணந்தண்டமாக விதிக்கப்படும்.

அந்தவண்ணான் அவ்வாடைகளை விற்றாலும் - ஈடாகவைத்தாலும் - வாடகைக்குக்கொடுத்தாலும் - அவனுக்குப் பத்துபணந் தண்டமாக விதிக்கப்படும்.

நாரதர்.

வண்ணான் - ஒருதரம்வெளுக்கப்பட்ட ஆடையைக் கெடுத்தால் அவனதின்விலையி லெட்டிலொருபங்கு குறைவாகவும், இரண்டுதரம்வெளுக்கப்பட்ட ஆடையைக்கெடுத்தா லதின்விலையி னாலிலொரு பங்கு குறைவாகவும் - மூன்றுதரம் வெளுக்கப்பட்ட ஆடையைக் கெடுத்தா லதின்விலையின் மூன்றிலொருபங்கு குறைவாகவும், நாலுதரம் வெளுக்கப்பட்ட ஆடையைக்கெடுத்தா லதின்விலையிற் பாதி குறைவாகவும் அதற்குமேற்பட்டதற்குத் தகுதியாகவுங் கொடுக்க.

யாஞ்ஞவற்கியர்.

ஒருவன் அரசனுடைய ஆக்கினையின்றி குற்றமில்லாதவனைக் கட்டினாலும், குற்றமுடையவனாகிக் கட்டப்பட்டிருந்தவனை விட்டாலும், அவனுக்கு உத்தமசாகசதண்டம் விதிக்கப்படும்.

ஒருவன் பழுதானசரக்கை விலைப்படுத்துதற்காக நல்லசரக்கோடந்தச் சரக்கைக்கலந்துவிற்றா லவனுக்குப் பதினாறுபணந்தண்டமாக விதிக்கப்படும்.

ஒருவன் தாழ்ந்தவிலையுடைய மண்முதலானவைகளில் வாசமேற்றி கந்தப்பொடிபோலவும், பூனைத்தோலில் வண்ணமேற்றிப் புலித்தோல்போலவும், படிகக்கல்லில் வண்ணமேற்றி மாணிக்கம்போலவும், பருத்திநூலைப் பட்டுநூற்போலவும், இரும்பை வெள்ளிபோலவும், வில்வக்கட்டை முதலானவைகளைச் சந்தனக்கட்டைபோலவும், பருத்திநூலாடையைப் பட்டுநூலாடைபோலவும், இன்னுமிவைபோன்ற பொருள்களை எண்ணம் வாசமேற்றுதலினாலும், மற்றைச்செய்கைகளினாலும், உயர்ந்த சரக்குகளைப்போலவுஞ் செய்துவிற்றால் அவனுக்கு அந்தச்சரக்கின் விலைப்பொருளுக்கு எண்மடங்குபொருள்தண்டமாக விதிக்கப்படும்.

ஒருவன் முத்துப்பெட்டியையும் - கஸ்தூரிப்பெட்டியையும்-காண்பித்து அவைகளை விற்கும்பொழுதேனும், ஈடாகவைக்கும்பொழுதேனும், கைவினாவினாலே சரக்கை மாறுபடுத்தினாலும், பெயர்க்கத்தகாத பெட்டியின்முத்திரையைப் பெயர்த்தாலும், அவனுக்கு அந்தப்பெட்டியிலிருக்கின்றசரக்கு ஒருபணத்திற்குக் குறைந்தவிலையுடையதானாலதற்கைம்பது பணமும், ஒருபணவிலையுடையதானால் அவனுக்கு நூறுபணமும், இரண்டுபணவிலையுடையதானாலதற்கிருநூறுபணமும் தண்டமாகவிதிக்கப்படும். இப்படியே ஒன்றுக்கு நூறாக மூன்றுமுதலான தொகைகளிலு மறிந்துகொள்க.

பிணத்தின்மேலே தரித்த பூமாலை வஸ்திர மிவைமுதலானவைகளை விற்றவனுக்கும், அரசனுடைய சிங்காசனம் - யானை - குதிரையிவைகளிலேறினவனுக்கும், பிதா - குருமுதலானவர்களை யடித்தவனுக்கும் உத்தமசாகசதண்டம் விதிக்கப்படும்.

குருமுதலானவனல்லாதவன் அரசனுக்குத் தீங்குகளைச்சொன்னாலும், ஒருவன் கோபத்தினாலே மற்றொருவனுடைய கண்ணைப்பிடுங்கினாலும், குபவ்ன் முதலானவன் உணவுக்காகப்பிராமணனைப்போல வுபவீதமுதலான அடையாளங்களைக் காட்டினாலும், அவர்களுக்குத் தனித்தனி யெண்ணூறுபணந் தண்டமாக விதிக்கப்படும்.

ஒருவன் தந்தைக்கும் மைந்தனுக்குமுண்டான விவகாரத்தையேனும், கணவனுக்கும் மனைவிக்குமுண்டான விவகாரத்தையேனும் பெருக்கினாலும், அதிலேஉடன்பட்டவனானாலும் அவனுக்கு இருபத்துநாலுபணந் தண்டமாக விதிக்கப்படும்.

வாக்குத்தத்தம்பண்ணின பொருளைக் கொடாதவனுக்கும், முத்திரையிட்ட வீடுமுதலானவைகளைத் திறந்தவனுக்கும், தனது குலத்தினர்முதலான வுரியவர்களுக்கு அபகாரஞ்செய்கிறவனுக்கும், தன்னுடன் பிறந்தவர்களுடைய மனைவியரை யடித்தவனுக்கும் ஐம்பது பணந் தண்டமாக விதிக்கப்படும்.

திருடர் முதலானவர்களுக்கு அஞ்சிக்கூக்குரலிட்டழைத்தபோது வாராதவனுக்கும், ஏதுவில்லாமற் கூக்குரலிட்டவனுக்கும், பிராமணன்முதலானவர்களைத் தீண்டினசண்டாளனுக்கும், பெருங்காய முதலான மருந்துகளையிட்டு மரங்களின் மலர்களும் கனிகளும் உதிரும்படி செய்தவனுக்கும், வேலைக்காரியினுடைய கருவையழித்தவனுக்கு

ம், நல்லவர்களாகிய பிதாமுதலானவர்களைவிட்டுப் பிரிந்த புத்திரன் முதலானவர்களுக்கும் தனித்தனி நூறுபணந் தண்டமாக விதிக்கப்படும்.

துலாக்கோல் - படி இவைகளிலே தேசவழக்கத்திற்கு மாறுபாடாக ஏற்றங்குறைவை யுண்டாக்கினவனுக்கும், முத்திரைபதிக்கப்பட்ட பணமுதலான நாணயங்களிலே தாம்பிரத்தையிடுதல் முதலானவைகளைச் செய்தவனுக்கும் உத்தமசாகசதண்டம் விதிக்கப்படும்.

வாகடசாஸ்திரந் தெரியாதவன் பசுமுதலானவைகளுக்குச் சிகிற்சைபண்ணினால் அவனுக்குப் பூருவசாகசதண்டமும், மனிதருக்குச் சிகிற்சைபண்ணினால் மத்திமசாகசதண்டமும், அரசனுக்குச் சிகிற்சைபண்ணினால் உத்தமசாகசதண்டமும் விதிக்கப்படும்.

## ஒழிபு.

நாரதர்.

ஒழிபாவது:—மேற்சொல்லிய கடன்கோடன்முதலானபதினேழுபதங்களினுஞ் சொல்லப்படாதனவற்றைக் கூறுதல்.

எழுதப்பட்ட இராசசாசனத்தை வேறுபாடாக வெழுதினவனையேனும், அயலவனுடைய ஸ்திரீயைப் பற்றினவனையேனும், திருடனையேனும் பிடித்து அரசனுக்கறிவியாமல் விட்டவனுக்கு உத்தமசாகசதண்டம் விதிக்கப்படும்.

இராசபண்டாரத்தைக் கவருகிறவனையும், இராசவிரோதிகளையும், பகைவர்க்கு ஆலோசனை சொல்லுகிறவர்களையும், எல்லாப்பொருளுங் கவர்ந்துகொண்டு அங்கச்சேதஞ்செய்து கொல்லுக.

யாஞ்ஞவற்கியர்.

எல்லாப் பொருட்கவர்ச்சியிலே ஆயுதங்களா லுய்பவர்க்கு ஆயுதங்களையும், வாத்தியங்களா லுய்பவர்க்கு வாத்தியங்களையும், வேசைமாதர்க்கு அலங்காரங்களையும், கீதாதிகளையறிந்தோர்க்கு வீணைமுதலானவாத்தியங்களையும் மற்றும் அவருடைய சீவனசாதனங்களையும் அரசன் கவராமற் கொடுத்துவிடுக.

பண்டிபெருதின் மூக்காங்கயிறறுதலினாலும், நுகத்தடி யொடிதலினாலும், அச்சுத்தெறித்தலினாலும், சக்கரமுறிதலினாலும், பண்டிபின்னிடைதலினாலும், குறுக்காகத்திரும்புதலினாலும், எதிராகவருதலினாலும், விலகிப்போ விலகிப்போவென்று சொல்லியும், விலகாமை

யால் மனுஷன்முதலான பிராணிகட்குச் சேதம்வந்தால் பண்டியை யுடையவனுக்குஞ் சாரதிக்குங் குற்றமில்லை.

பண்டிமுதலான் வாகனங்களில் அகப்பட்டவன் நான்சாகிறேன் சாகிறேனென்று கூப்பிடவும், திறமையுடையசாரதிமுதலானவன் விலக்காதேபோனால் அவனைநூறுபணந் தண்டங்கொடுக்கத் தக்கவன்.

அரசன் தன்னாலேநியமிக்கப்பட்டுந் தன்னுடையதேசத்தில் அங்கங்கேயிருக்கிற அதிகாரிகளின் செய்கைகளை சாரணராலறிந்து நல்லவர்களை யுபசரித்து துஷ்டர்களைத் தண்டிக்க.

கைக்கூலிவாங்கினவன் அரசன்பொருளைக்கெடுத்தவனுகையால்அவனுக்கு எல்லாப்பொருட்கவர்ச்சியைத் தண்டமாகவிதித்துஅவனைத் தேசத்தினின்றுந் துரத்திவிடுக.

இன்னும் இந்நூலுள் கடன்கோடன்முதலிய பதினெண்பதங்களிற் சொல்லப்படாதவையெல்லாம் மனுஸ்மிருதிமுதலிய பெருநூலுட் கண்டு உணர்க.

ஒழிபு முற்றிற்று.

விவகாரசாரசங்கிரகம் முற்றிற்று.

# விவகாரசாரசங்கிரகம்.

## அருமபதப்பொருள்.

அழுக்காறு=பொறாமை. [ன்.
அதிகிருதன்=அதிகாரம்பெற்றவ
அபியோகம்=எதிர்த்துப்போதல்
வியாஜ்ஜியம்தொடுத்தல்.
அப்பிரதிஷ்டிதை = ஸ்தாபனமி
ன்மை.
அருத்தாபத்தி=பொருள்குறிப்பு
ள்ளது.
அனுமானம்=ஐயம் சந்தேகம்.
அனுலோமன்=உயர்ந்தஜாதிபு
ருஷனுக்கும் தாழ்ந்தஜாதி ஸ்திரீ
க்கும் பிறந்தவன்.
அபூபம்=பணியாரம்.
அயர்ச்சி=மறதி.
அக்ஷதை=மஞ்சள்கலந்த அரிசி.
அவதூதன்=ஓர் சன்னியாசி.
ஆகமம்=உறுதிபத்திரம்.
அங்கணம்=ஆகாசம்.
அதிதி=பரதேசி.
அடுக்களை=மடைப்பள்ளி.
அங்குஷ்டம்=பெருவிரல்.
அரண்=கோட்டை.
அவிபத்தர்=பாகம்பிரித்துக்கொ
ள்ளாதவர்.
ஆசாரம்=ஒழுக்கம்.
ஆக்கினை=கட்டளை.
ஆச்சிரமம்=நிலை. [வன்.
ஆசாரவீனன்=ஒழுக்கங் கெட்ட
ஆவாகனம்-எழுந்தருளச்செய்தல்
ஆததாயிகள்=கொலைசெய்வோர்
இலிகிதம்=எழுதப்பட்டது.
இலேக்கியம்=பத்திரம்.
இலேக்கன்=எழுதுகிறவன்.
இருது=காலம்.
இல்லறம்=சமுசாரவாழ்க்கை.

இரணியம்=சுவர்ணம்.
இறைக்கூற்று=அரசனுக்குகொ
டுக்கும் பணம்.
உலோபம்=ஈயாமை. [ருவர்.
உபயவாதி=வாதிபிரதிவாதியி
உன்மத்தன்=பையித்தியக்காரன்
உவக்கம்=மனோ உற்சாகம்.
உன்மத்தசித்தின்=பைத்தியக்
காரன். [ம்
உத்தரம்=மறுமொழி, பிரதிவாத
உத்தரப்போலி=உத்தரத்தை
போன்ற.
உய்பவன்=ஜீவிப்பவன்.[வோன்.
உத்தரன் = உத்தரவு சொல்லு
உபயானுமதன்=இரண்டு பக்ஷ
த்திற்கும் வேண்டியவன்.
உத்தரீயம்=வேஷ்டி.
உபவீதம்=பூணூல்,
உபவாசம்=ஆகாரமின்மை.
உத்தரக்கிரியை=அசுபக்கிரியை.
உபகரணம்=துணைக்கருவி.
ஊனமாசிகம்= மாசக்குறைவி
ல்இறந்தார்க்குச்செய்யுங்கிரியை
ஏகாச்சிரமி=ஓரே வகைப்பட்
ட நிலையிலுள்ளவர்.
ஒற்றி=கொதுவை.
ஒழிபு=மிச்சம்.
ஔபாசனம்=அக்கினிகாரியம்
ஓமம் முதலியவை செய்தல்.
காப்பீடு=பெட்டி முதலியவை
களில் வைத்து காப்பற்றத்தக்கது
கடல் வாணிகன்=கப்பல்வியா
பாரி.
கணகலேக்கர்=கணக்கு எழு
துவோர்.

## அரும்பதப்பொருள்.

கறவைப்பசு=பால்கொடுக்கும் பசு.
கங்கணம்=காப்பு.
குலிகர்=மூங்கில்வேலைசெய்பவர்
கூட்டுறவு=சேர்க்கை.
கோத்திரம்=குலம்.
கோடல்=கொடுத்தல்.
கௌணபிதாக்கள்=ஒப்பாரிபிதாக்கள்.
சழக்கன்=பொய்சொல்பவன்.
சந்திரிகை=திரட்டு.
சங்கிரகம்=சுருக்கம்.
சவசம்=சுசியாயிருக்கை.
சமாவர்த்தனம்=கலியாணத்திற்கு முன்பு செய்யும் சடங்கு.
சமுதாய தக்ஷிணை=பொது தக்ஷிணை.
சதுக்கம்=நான்கு தெருகூடுமிடம்.
சங்கம்=கூடுதல்.
சபிண்டர்=ஞாதியர்.
சதுரங்கம்=ரதம், கஜம், துரகம்,பதாதிஎன நால்வகை யுள்ளது
சண்டாளர்=பஞ்சமர்.
சாரணர்=வேவுக்காரர்.
சாரம்=சத்து.
சாசனம்=பத்திரம்.
சாத்திரவிருத்தம்=சாஸ்திர விரோதம்.
சான்றினர்=சாட்சிகள்.
சிரோணியர்=இடையர்.
சினத்தன்=கோபி.
சிகிற்சை=பரிகாரம்.
சுற்கம்=பரியம் மூலதனம்.
சுரோத்திரன்=வேத மோதினவன்
சூதகம்=ஆசூசம், தீட்டு.
செக்கான்=எண்ணை வாணிபன்.
சேவிப்பவள்=பணிபவள்.
சொரூபம்=தன்மை.
சோர்வு=சோம்பல்.
சோரன்=திருடன்.
சோம்பு=சோம்பல்.
சோத்தியன் = சோதிக்கப்பட்டவன்.
தனிகன்=கடன்காரன்.
தருமநூல்=தருமசாஸ்திரம்.
தசாங்கம்=பத்தங்கம்.
தகையப்பட்டவன் = நீக்கப்பட்டவன்.
தண்டுலம்=அரிசி.
தடாகப் பிரதிஷ்டை =குளம் வெட்டல்.
தாயாதன்=பங்காளி.
திக்காரசிக்ஷை=சீயென்றேசுதல்
தீக்கோள்=குரூரக்கிரகம்.
துருக்கம்=மலை.
தூர்த்தன்=விபசாரம்செய்வோன்.
தையலார்=ஸ்திரீகள்.
தொன்றுதொட்டு= வெகு காலமாய்.
நயிட்டிகன் -நிஷ்டைதவறாதவன்
நபுஞ்சகன்=பேடி.
நாடுபுறப்பவர்=நாட்டைகாப்பவர்.
நிருபன்=அரசன்.
நியமம்=விரதம்.
நிக்ஷேபம்=புதையல்.
நைஷ்டிகப் பிரமசாரி = ஸ்திரீமுகம் பாராதவன்.
பரபுருஷர்=அன்னிய புருஷர்.
பக்குவான்னம்= சமையலான அன்னம்.
பணசிதன்=பந்தயத்தால்தோற்றவன்.
பதிதன்= பிரஷ்டன் கெட்டுப்போனவன்.
படலம்=பாகம்.
பஞ்சாயத்தார்=மத்தியஸ்தர்.
பண்ணியங்கள் கடைசரக்குகள்.
பாசண்டர்=வேதவிதிக்கு புறம்பானவர்.

## அரும்பதப்பொருள்.

பாசனம்=பாத்திரம்.

பாசுபதன்=பாசுபதத்தை அநுசரித்தவன்.

பிரகரணம்=அத்தியாயம்.

பிணை=உடன்பாடு, ஜாமீன்.

பிறந்தகம=தாய்வீடு.

பிறிதுவிதி=விதிவிலக்கு.

பின்னோர்=மாற்றாந்தாய் பிள்ளைகள்.

பிணியாளன்=நோயாளி.

பிராட்டுவிவாகன்=நியாயாதிபதி

பிராயச்சித்தம்=சாந்திபரிஹாரம்

பிணையினர்=ஜாமீன்தார்.

பிரதிக்கினை=உறுதிமொழி.

பிரதிட்டிதை=நிலையானது.

பிரதிலோமன்=உயர்ந்த ஜாதி மனைவிக்கும் தாழ்ந்தஜாதி புருஷனுக்கும் பிறந்தவன்.

பீடை=துன்பம்.

புறம்பு=வெளியே.

புலால்= மாம்ஸம்.

புளகம்=சந்தோஷம்.

புனல்=ஜலம்.

புனைந்து=சூடி அலங்கரித்து.

பூருவபக்கம்=ஆக்ஷேபித்தல்.

பூத்தவள்=மாத ருதுவானவள்.

பொதுவிதி - பொதுவான ஏற்பாடு

பொருட்கவர்ச்சி = பொருளை யபகரித்தல்.

மலைவுறுமல்=சந்தேகம் அடையாமல்.

மத்தன்=மதம்பிடித்தவன்.

மறையவன்=பார்ப்பான்.

மாவுரி=மரப்படைகளால் செய்தவுடை.

மாபினர்=சுற்றத்தார்.

மிண்டர்கள் பல சாலிகள்.

மிருதி=தருமசாஸ்திரம்.

முப்பிணி=நரை திரை மூப்பு.

முண்டனம்=மழித்தல்.

மேம்பட்டவன்=மேலானவன்.

வருணம்=ஜாதி.

வரைந்தவன்=எழுதினவன்.

வரந்தகாலம்=கருப்புகாலம்.

வாகடசாஸ்திரம்-வைத்தியநூல்.

வானப்பிரத்தன்=மனைவியோடு வனத்தில் தவம் செய்வோன்.

வாணிகம்=வர்த்தகம்.

விபத்தர்=பாகம்பிரித்துக்கொண்டவர்.

விவகாரம்=நியாயம்.

வியாக்கியானம்=உரை, அருத்தம்.

வியந்து=புகழ்ந்து.

வெள்ளுள்ளி=வெள்ளைப்பூண்டு.

வேள்வி=யாகம்.

வேதாங்கம் = வேதத்தின் பிரிவுகள்

வேதனம்=சம்பளம்.

வைகறை=விடியற்காலம்.

## அரும்பதப்பொருள் முற்றிற்று.

---

ஔரசன் முதலிய சில பதங்களுக்கு அருத்தம் விரிவாக எழுதியிருப்பதை பின் வருமாறு கண்டுகொள்க.

ஔரசன்—தன் ஜாதி ஸ்திரீயை கன்னிகையாக விருக்கும்போது விவாகஞ்செய்து அவளிடத்தில் எந்தப் பிள்ளையைத் தானேபெறுகிறானோ அவனே முக்கியமான ஔரஸபுத்திரனென்று அறியவேண்டியது.

க்ஷேத்திரசன்—பிள்ளை பிறக்கிறதற்குமுன் இறந்துபோனவன் - பேடி - பிள்ளைபிறக்க விரோதமான பிணியுள்ளவன் இவர்களின்மனைவிகளிடத்தில் மைத்துனன் மூதலானவர்களால் மேற்சொன்ன விதிப்படி யுண்டுபண்ணப்பட்ட பிள்ளையை க்ஷேத்திரஜனென்று சொல்லுகிறார்கள்.

தத்தன்—தந்தையுந் தாயும் சம்மதித்து இருவரும் கூடியேனும், ஒருவராயேனும், தங்கள்வயிற்றிற் பிறந்த பிள்ளையை தன் ஜாதியாயும், பிள்ளையில்லாமல் துன்பப்படுகிறவனுயும் இருக்கிற ஒருவனுக்கு பிரீதியுடன் இந்தப்பிள்ளை யுனக்கே சொந்தமென்று சொல்லி ஜலத்தைவிட்டு தானஞ்செய்யப்பட்டவனே தத்தனென்று சொல்லுகிறார்கள்.

கிருத்திரிமன்—தன்ஜாதியாயும் பிதுர்க்களுக்குச் சிரார்த்தஞ்செய்வதாலும், விடுவதாலும் வரும் குறைகுணங்களை யறிந்தவனுயும், தாய்தந்தைகளைப் பூசிக்கிறவனுயுமிருக்கிற எந்தப்பிள்ளையை தானே பிள்ளையாக வைத்துக்கொள்ளுகிறானோ அவனைக் கிருத்திரிம புத்திரனாகச் சொல்லுகிறார்கள்.

கூடோற்பன்னன்—ஒருவன்மனையாள்கணவன் வீட்டிவிருக்கும்போது அவனுக்குத் தெரியாமல் எந்தஜாதி புருஷனேனும், அவளிடத்தில் ஒருபிள்ளையை யுண்டுபண்ணினால் அப்பிள்ளையை அந்தக்கணவனுக்கு கூடோற்பன்ன புத்திரனென்று சொல்லுகிறார்கள்.

அபவித்தன்—தாய் - தந்தை யிருவராலாவது அல்லது ஒருவராலாவது எறிந்துவிடப்பட்ட பிள்ளையை எடுத்துக் கொள்ளுகிறவனுக்கு அபவித்த புத்திரனென்று சொல்லுகிறார்கள்.

கானீனன்—எந்தப்பெண் விவாகத்துக்குமுன் தகப்பன் வீட்டிவிருக்கும்போது யாருக்குந் தெரியாமல் இரகசியமாக ஒருவனைப்புணர்ந்து ஒருபிள்ளையைப் பெற்றுக்கொள்ளுகிறாளோ, அந்தப்பிள்ளையை பின்பு அவளைக் கலியாணஞ்செய்து கொள்ளுகிறவனுக்கு கானீன புத்திரனென்று சொல்லுகிறார்கள்.

ஸஹோடசன்—எவன் ஒருபெண்ணை கருப்பமா யிருக்கிறாளென்று அறிந்தாவது - அறியாமலாவது விவாகஞ் செய்துகொள்ளுகிறா

ஞே அவனுக்கு அந்தக் கருப்பத்தினற் பிறந்தபிள்ளையை ஸகோடச புத்திரனென்று சொல்லுகிருர்கள்.

கிரீதன்—எவன் தனக்குப்பிள்ளையில்லாமையால்ஒருபிள்ளையை அவன் தாய்தகப்பனிடத்து விலைக்கு வாங்கிக்கொள்ளுகிருனே, அவன் குணத்தினல் தனக்குத் தக்கவனுயினும், தகாதவனுயினும் வாங்கினவனுக்கு கிரீத புத்திரனென்று சொல்லப்படுகிருன்.

பௌநர்ப்பவன்—எந்த ஸ்திரீயானவள் கணவனுல் நீக்கப்பட்டாவது கணவனிறந்தபின்பாவது, மற்ருெருவனை சுவேச்சையாகவே புணர்ந்து எந்தப்பிள்ளையைப் பெறுகிருளோ அந்தப்பிள்ளையையுண்டுபண்ணினவனுக்குப் பௌநற் புத்திரனென்று சொல்லுகிருர்கள்.

பிராமியம்—வேதமோதினவனுயும், நல்லொழிக்கமுள்ளவனுயுமிருக்கிற பிரமசாரியைத் தானுகவே அழைப்பித்து அவனை நூதனவஸ்திரத்தாலலங்கரித்து கன்னிகையை வஸ்திராபரணங்களாலலங்கரித்து அவனுக்கு அக்கன்னிகையைத் தானஞ்செய்வது பிராமவிவாகம்.

தைவம்—சோதிஷ்டோமாதி எக்கியத்தில் தனக்குப் புரோகிதனுக விருப்பவனுக்குத் தன்பெண்ணை அலங்கரித்துக் கொடுப்பதை தெய்வவிவாகமென்று சொல்லுகிருர்கள்.

ஆருஷம்—தான் செய்யவேண்டிய யாகாதிதர்மத்துக்காக வரனிடத்தில் நின்றும் ஒரு ரிஷபம் - ஒருபசு அல்லது இரண்டு ரிஷபம் - இரண்டுபசு - இவைகளைவாங்கிக்கொண்டு கலியாணஞ்செய்துகொடுப்பதை ஆருஷவிவாகமென்று சொல்லுகிருர்கள்.

பிராசாபத்தியம்—ஒரு பிரமசாரியை யழைத்துப் பூசித்து தன் பெண்ணைத் தானம்பண்ணும்போது நீங்களிருவருமாய் தருமங்களைச் செய்யுங்கோளென்று சொல்லிக்கொடுப்பதை பிராஜாபத்தியமென்று சொல்லுகிருர்கள்.

ஆசுரம்—பெண்ணின் தகப்பனுக்கு கேட்கும்பணத்தைக்கொடுத்துப் பெண்ணுக்கும் பூஷணங்களைப்போட்டு பெண்ணைவாங்கிவிவாகஞ்செய்து கொள்ளுவதை ஆசுரவிவாகமென்று சொல்லுகிருர்கள்.

காந்தர்வம்—ஸ்திரீயும்புருஷனும் ஒருவர்க்கொருவர் புணர்ச்சியின் ஆசையால் மனமொத்து தாங்களாகச்சேர்தலே காந்தருவமென்று சொல்லுகிறார்கள்.

இராக்ஷசம்—ஒருவன் பலத்தினாலே ஒருகன்னிகையை அழும்போது அவள்வீட்டில் நின்றும், அவளது பந்துக்களையடித்தும், கொன்றும், பிளந்தும், வலிமையாற்கொண்டுபோகிறதை இராக்ஷசவிவகாமென்று சொல்லுகிறார்கள்.

பைசாசம்—ஒருகன்னிகை தூங்கும்போதும், குடியினால் மயங்கியிருக்கும்போதும், பித்துக்கொண்டவளாயிருக்கும்போதும் அவளுடனே புணர்ச்சிசெய்வது முன்சொன்ன ஏழுவிவாகங்களுக்குத்தாழ்ந்ததான பைசாசவிவாகமென்று சொல்லுகிறார்கள்.

இத்தருமநூலில் எவ்விதமாக வேனும் பிழைகளுளதாய் காணப்படில் வாசிப்போர் அவைகளை நூல் வெளியிட்டவர்க்கு தயைசெய்து அறிவிப்பதுமன்றி அதினாலுண்டாகுஞ் சிரமத்திற்கு மன்னிக்கக் கோருகின்றேன்.

சி. சே. - சி.